
கல்கி



KALKI 24.12.1961 30 காச

இக்கால இல்லங்களிலே ஸர்ப்...

"வீட்டிலே புதுமைக் கண்ணோட்டமா?"

என்று கேட்கிறார் செயலாளர் ஸ்ரீமதி சந்திரமோகினி ஸரீன், புதுடில்லி.





'வீட்டிலே புதுமைக் கண்ணோட்டம்: எதையுமே ஆசைதீர வெள்ளோட்டம் பார்ப்பதிலே நமக்குக் கொண்டாட்டம்!' என்று கூறும் ஸ்ரீமதி ஸரீன், ஸர்ப் பவுடரின் தன்மையை நன்கு பரிசீலித்துப் பார்த்தவர். அதன் அளவுகடந்த ஆற்றலினால், சலவையிலே கண்ணைப்பறிக்கும் வெண்மையினைக் கண்டுகொண்டவர்.

'என்னவென்பேன் அதன் நுரையை! சட்டை, கவுன், விரிப்பு...எல்லாத் துணிமணிகளுக்கும் நான் உபயோகிப்பது ஸர்ப்' என்கிறார். நீங்களும் ஸர்ப் உபயோகித்துப் பார்த்தால் என்ன?

ஸர்ப் மூலம் உங்களுக்கு வெள்ளை வெளேரென்ற சலவை

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

SU.20-X52 TM



மலபார்

லிம்டா

டாய்லெட் சோப்

"உற்சாகமும் குளிர்ச்சியும் அளிக்கிறது"

என்கிருர், சினிமா புது முகம் விஜயா. மிகுந்த நறுமணம், அபரிமிதமான நுரை, வேப்பெண்ணெயின் உயர்ந்த குணங்கள் கலந்த லிம்டா உங்களுக்கும், உங்களுடைய குடும்பத்திற்கும் உகந்த சோப்பாகும்.

வெஜிடபிள் சோப் ஒர்க்ஸ், கோழிக்கோடு



Ladies Nylon Strap
Model No: 164
Price: Rs 5.25
Ladies gold plated Bracelet
Model No: 156
Price: Rs. 12.00
THERE IS ALWAYS A
"Bentex"
STRAP OR BRACELET
TO SUIT YOUR
REQUIREMENT
Gents Nylon Strap
Model No: 171
Price:
Gents Leather Strap
Model No: 130
Price: Rs. 3.50
SOLE AGENTS:
"Bentex" SALES CORPORATION, BENTEX BLDG., BOMBAY 7.
MANUFACTURERS:- COLLINS & CO., BOMBAY 7.
AVAILABLE AT ALL WATCH DEALERS

பிலவ, மார்கழி 9

கல்கி

டிசம்பர் 24, 1961

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

'அனாஸின்'

நான்கு மருந்துகள் அடங்கியுள்ளதால்

வலி நிவாரணத்திற்கு மிகச் சிறந்தது

1. 'அனாஸின்' அதிவிரைவில் வலிகளுக்கு சமனமூட்டுகிறது. ஒரு டாக்டர் குறித்துக் கொடுக்கும் பாதுகாப்பான மருந்துக்கு ஒப்பாக இதில் விஞ்ஞான முறையில் நான்கு மருந்துகள் ஒன்று கலந்துள்ளதால் 'அனாஸின்'—தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, தசைவலி ஆகியவற்றிலிருந்து அதிவிரைவில் பூரண நிவாரணம் அளிக்கிறது.

2. 'அனாஸின்' பதட்டத்தைப் போக்கி சமனமளிக்கிறது. அமைதியிழந்து பதட்டப்படும் வேதனையை அடியோடு அகற்றி இதமுடன் இளைப்பாறிய பலனை உடல்களுக்கு அளிப்பது 'அனாஸின்'.


3. 'அனாஸின்' சோர்வை விரட்டுகிறது. வலிகளுடன் அடிக்கடி தோன்றும் சோர்வை வென்றுவிடுவது 'அனாஸின்'.

4. 'அனாஸின்' ஜுரத்தைத் தணிக்கிறது. 'அனாஸினில்' கொயினா கலந்திருப்பதால், ஜுர வேகத்தைக் கட்டுப்படுத்த மிகவும் சிறந்ததாக இருக்கிறது.




★ செல்லோபேன் தாள்களில் சுகாதார முறையில் பாக்கிங் செய்யப்பட்டு கிடைக்கிறது. 2 வில்லைகள் 13 காசு

Registered Users: GEOFFREY MANNERS & CO. LIMITED



புகையிலையின் உற்பத்தி, உபயோகம், ஏற்றுமதி இவைகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகளும், சீனாவும் இந்தியாவுமே தலைமை வகிக்கின்றன. இன்று உலகிலேயே புகையிலை விளைச்சலில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் அடுத்தபடியாக மூன்றாவது ஸ்தானம் பெற்றிருப்பது இந்தியா தான். பதப்படுத்தப்பட்ட வர்ஜீனியா புகையிலையின் ஏற்றுமதி 1959—ல் பிற நாட்டு நாணயச் செலாவணியாக 16 கோடி ரூபாய்க்குச் சற்று அதிகமாக இந்தியாவுக்குத் தேடித் தந்தது.

புகையிலையின் வரலாறு... 7



பனாமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

GOLDEN TOBACCO COMPANY PRIVATE LTD.

பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT.707 TM

Greens' Advtg



மலர் 21 | இதழ் 21

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இன்றைய பிரச்னை

ராஜாஜி

சில பேரைப் போல எனக்கு வெளிநாட்டு அநுபவம் கிடையாது. ஆனால் கடந்த சில ஆண்டுகளாகக் காங்கிரஸ் ஆட்சியில் நான் கண்ட அநுபவங்களும், பெற்ற பாடங்களுமே அரசாட்சியைக் குறித்து எனக்கு உறுதியான ஒரு கருத்தைத் தந்திருக்கின்றன. மக்களின் தொழிலையும், பொருளாதாரத்தையும் கட்டுப்படுத்தி அடக்கி ஆளும் அதிகாரம் அரசியல் கட்சி ஒன்றிடம் இருந்தால் நாடு சர்வநாசம் அடைய வேண்டி வரும் என்பதுதான் அந்தக் கருத்து. சர்வாதிகாரி ஒருவரிடம் இந்த அதிகாரம் இருப்பதைவிட ஓர் அரசியல் கட்சியினிடம் இருப்பது அபாயகரமானது என உணருகிறேன். அதிலும், ஆளும் கட்சிக்குச் சமதையான பலம் பெற்ற எதிர்க்கட்சி இல்லாவிட்டால்—ஆளும் கட்சியானது விவேகத்துடனும், அடக்கத்துடனும் நிர்வாகம் செய்யாத பட்சத்தில் தன்னால் அதிகாரத்தை ஏற்று நடத்த முடியும் என்ற அச்சத்தை உண்டாக்கும் எதிர்க்கட்சி இல்லாவிட்டால்—இந்த நாசப் பாதையில் நாடு மிகவும் வேகமாகச் செல்ல வேண்டியதுதான் !

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு விதமான குண இயல்பு பெற்றிருக்கிறான். எனவே சர்வாதிகாரி ஒருவர் எப்படி நடந்து கொள்வார் என்று ஊகிக்க முடியாது. ஆனால் பலர் கூட்டுச் சேர்ந்து கட்சி அரசாங்கம் நடத்தும்போது அவர்கள் இப்படித்தான் நடந்து கொள்வார்கள் என்று ஊகம் செய்யலாம். இது சராசரி கணித நியாயம். அவர்கள் சுயநலத்தோடும், பேராசையோடும் சுய காரியத்தையே பார்த்துக் கொண்டு போவார்கள் என்பதை எளிதில் அநுமானம் செய்யலாம். சர்வாதிகாரியாகவுள்ள தனி மனிதர் நல்லவராக இருந்தால் பிடிவாதமாக மக்களுக்கு நன்மை செய்ய அவரால் முடியும். ஆனால் சுயநலமும் தீய நோக்கமும் கொண்டவர்கள் ஒரு கட்சியில் பெருமளவில் இருந்தால் அந்தக் கட்சியின் ஆட்சி அவர்களுடைய அபிலாஷைகளையும் பூர்த்தி செய்து தர வேண்டி யிருக்கும். ஆனபடியால் தனியொரு சர்வாதிகாரி பூரண ஆதிக்க உரிமை பெற்றிருப்பதை விட, ஓர் அரசியல் கட்சி வரம்பற்ற அதிகாரம் படைத்திருப்பது பயங்கரமானதாகும். இதனால்தான் சுதந்திரக் கட்சியானது அரசாங்கத்தின் அதிகாரத்தையே குறைக்க வேண்டும் என்கிறது. இதனால், எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ஆட்சிப் பொறுப்பு துஷ்பிரயோகமாகாமல் காப்பாற்ற முடியும்.

ஆள்கிற கட்சியின் தலைவர் (அல்லது தலைவர்கள்) எப்போதும் மற்ற அங்கத்தினர்கள் விதிக்கும் நிர்ப்பந்தங்களின் கீழ்தான் இருக்கிறார்கள். இவர்கள் உண்மையில் மற்றவர்களுக்கு வழிகாட்டி இட்டுச் செல்வதில்லை. தாங்கள் வழிகாட்ட வேண்டியவர்களின் பொதுவான நோக்கங்களுக்கு அநுகூலமாக இந்தத் 'தலைவர்'களின் பிரத்தியேகக் குணங்கள் அமுங்கிப் போகின்றன; அவர்களுடைய மனப்பான்மை கோணல் வழிகளில் திருப்பப்படுகிறது. இவ்வாறு நடப்பதற்கு இந்தத் தலைவர்கள் இடம் தரா விட்டால் அவர்கள் வகிக்கும் தலைமை ஸ்தானம் பறி போய் விடும். இது மறுக்க முடியாத ஓர் உண்மையாகும். ஸ்ரீ நேரு அவர்கள் இப்போது நடந்துகொள்ளும் விதத்துக்கு இதுவே விளக்கம். உதாரணமாக, ராஜ்ய முதன் மந்திரி ஒருவர் பல தவறான காரியங்கள் செய்திருப்பதாக நேரு அவர்களின் நெருங்கிய சகாக்கள் எடுத்துக் காட்டிய

பின்னரும் அந்த முதன் மந்திரியைப் பிரதமரவர்கள் அவர் போக்கிலேயே விட்டு வைத்திருக்கிறார் என்று சொல்லப் படுகிறது. இதற்குக் காரணம் கட்சியின் பொதுவான அபிப்பிராயத்துக்குத் தலைவர் அடங்கி நடக்க வேண்டி யிருப்பது தான். ஆனாலும் கட்சியிலுள்ள மதிப்புக் குகந்த பலர் உன்னதமான இலட்சியங்களிலிருந்து விலகிச் செல்வதைப் பார்க்கும்போது அது எதனால் என்று புரியவில்லை அல்லவா? தலைமை தாங்கி மற்றவர்களை இட்டுச் செல்ல வேண்டியவர்களே அந்த மற்றவர்கள் இட்டுச் செல்லும் வழியில் செல்ல வேண்டி யிருப்பது தான் இந்தப் புதிருக்கு விடை.

பொதுவாக இன்றைய காங்கிரஸ்காரர்களின் நடத்தையும், இலட்சியமும் இன்னதென்று நம் எல்லோருக்கும் தெரியும். அந்தரங்கமாகப் பேசும் போது அவர்களுடைய முக்கியமான தலைவர்களே அவற்றை வெளியிடுகிறார்கள். இந்த 'அந்தரங்க'ப் பேச்சுகள் அதிகரித்ததாலேயே இப்போது பொது மக்களுக்கும் காங்கிரஸ்காரர்களைப் பற்றிய உண்மை தெரிந்து விட்டது. இன்று காங்கிரஸிலுள்ளவர்கள் தங்களுடைய பிழைப்பே குறியாக உள்ளவர்கள்தான். அதிகாரத்தையும், சுக ஜீவன சாதனங்களையும் பெறுவதுதான் அவர்களுடைய குறிக்கோள்.

காங்கிரஸ் அக்கிராசனராக இருந்த ஒருவரே (சுதந்திரக் கட்சி ஆரம்பிக்கு முன்பு) என்னிடம் சொன்னார்: 'காங்கிரஸ்காரர்கள் எல்லாரும் அரசியலைப் பிழைப்பாகக் கொண்டு சுய முன்னேற்றமடைய எண்ணுபவர்கள்தான். இதற்கு நாம் என்ன செய்ய முடியும்?' என்று. பிறகு எத்தனையோ தலைவர்கள் இதே விஷயத்தை என்னிடம் சொல்லி யிருக்கிறார்கள்; தங்களுக்குள்ளும் விவாதம் செய்திருக்கிறார்கள். அரசியலை ஜீவனோபாயமாகச் செய்து கொள்ளுவதைக் கண்டு 'வருந்திய' இவர்களில் சிலரும் அந்தக் குற்றச்சாட்டுக்கு அப்பாற்பட்டவர்களல்ல.

எல்லா அரசியல் கட்சிகளின் இலக்கும் மக்களின் நன்மைதான். இதை அடையும் மார்க்கத்திலேயே ஒவ்வொரு கட்சியும் மாறுபடுகிறது. காந்திஜியின் கொள்கைக்கு நேர் விரோதமான முறையில், எல்லாத் துறைகளையும் சர்க்கார் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதால்தான் மக்களுக்கு நன்மை உண்டாகும் என்று நேருஜியும் சில காங்கிரஸ் தலைவர்களும் திடமாக எண்ணுகிறார்கள். பலாத்கார முறையின் திறமையிலும், அது நியாயமானது என்பதிலும் அவர்கள் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். கட்டுப்பாடுகளாலும், அடக்குமுறையாலும் எதிர்பாராத விளைவுகள் தோன்றும் போது இந்தப் பலாத்கார வாதிகள் விபரீத விளைவுகளைச் சரி செய்வதற்காக மேலும் பல கட்டுப்பாடுகளையும், அடக்குமுறைகளையும் கண்டுபிடிக்கிறார்கள். முதலில் அநுசரித்த பாதையிலிருந்து மாறுபடும் ஒரு வழியை ஏற்க முடியாமல் அவர்களுடைய அறிவுக் கதவு மூடிக் கிடக்கிறது. கண்ட்ரோல் களினால் கள்ளச் சந்தை பெருகி, விலைவாசிகள் உயர்ந்தால் அதை மாற்ற மேலும் தடைகளை விதிக்க வேண்டும், போலீஸ் நடவடிக்கை எடுத்து அடக்குமுறையைக் கடுமையாக்க வேண்டும் என்றுதான் அவர்கள் எண்ணுகிறார்கள். சுதந்திர வழியைப் பின்பற்றிப் பார்க்கலாமே என்ற எண்ணம் அவர்களுக்கு உதயமாவதில்லை.


பேராசையும், ஒழுக்கக் குறைவும் மலிந்த ஆளும் கட்சி இன்று மதிப்பற்ற ஒரு ஸ்தாபனமாகி விட்டது. பெர்மிட், லைசென்ஸ், கோட்டா இவை காங்கிரஸ்காரர்களின் அதிகார வேட்கையையும், சுக ஜீவன தாகத்தையும் தணிக்கச் செய்யும் வற்றாத ஊற்றுக்களாகும். எனவேதான் அவர்கள் பொருளாதாரக் கட்டுப்பாடுகளை மேலும் மேலும் இறுக்க வேண்டுமென்று வாதாடுகிறார்கள். இவர்களைத் திருப்தி செய்தாலொழியத் தாங்கள் பதவியில் இருக்க முடியாது என்பதைத் தலைவர்களும் கண்டு கொண்டு விட்டார்கள்; ஆனபடியால் இவர்கள் இஷ்டப்படியே ஆடுகிறார்கள். முடிவில் கஷ்டங்களை அநுபவிப்பதெல்லாம் மக்கள் தான். இதுபோன்ற நிலவரம் முற்றிப் போனால் பார்லிமெண்டு நிர்வாகம் அழிந்துபோகும். முடிவில் ஒரு தனி மனிதரின் அப்பட்டமான சர்வாதிகாரம் ஏற்படும். பல நாடுகளில் இப்படித் தான் நடந்திருக்கிறது. வரப்போகும் தேர்தலில் இன்று எழுந்துள்ள இந்தப் பெரிய பிரச்னைக்கு மக்கள் சரியானபடி பதில் கூறிவிட்டால் இந்தியாவிலும் இப்படியே முடியும். இன்றைய காங்கிரஸ், சுய நலத்தையே நாடும் ஒரு கூட்டம். மனச் சாட்சிப்படி நடப்பவர்கள் என்று முன்பு புகழ் பெற்றிருந்த காங்கிரஸ்காரர்கள் இன்று நியாய - அநியாயத்தைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. எனவே காங்கிரஸ் கட்சியின் தலைமையில் குருட்டு நம்பிக்கை வைத்து மீண்டும் அதைப் பதவியில் அமர்த்தி விட்டால் அது சர்வாதிகார ஆட்சிக்கு வரவேற்பு அளிப்பதாகவே ஆகும்.

வெண்ணெயும் சுண்ணாம்பும்

'நான் சொல்வதற்கும், ராஜாஜி சொல்வதற்கும் உள்ள வேறுபாடு வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் உள்ள வித்தியாசம் போன்றது' என்று காந்திஜி கூறியிருப்பதாகவும் எனவே சுதந்திரக் கட்சி காந்திஜியின் பெயரால் மக்களை ஏய்ப்பதாகவும் பிரசாரம் செய்து வாக்காளர்களை ஏய்க்கிறது காங்கிரஸ்.

காந்திஜிக்கும் ராஜாஜிக்கும் பல விஷயங்களில் கருத்து மாறுபாடு இருந்ததை உலகம் அறியும். உள்ளத்தை ஒளிக்கும் கள்ளத்தைப் பயிலாத தீரரான ராஜாஜி, அடிகளுடன் தாம் உடன்பாடு காணாதபோது அதனை வெளிப்படக் கூறியிருக்கிறார். அதனாலேயே அண்ணல் உட்பட யாவர் மதிப்பிலும் உயர்ந்து விளங்கியிருக்கிறார். எனவே ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட ஒரு விஷயத்தில் இருவருக்கும் இடையே நிலவிய அபிப்பிராய பேதத்தைப் பற்றி மகாத்மா இவ்வாறு கூறியிருப்பது ஒரு பெரிய விஷயமல்ல. 1942-ல் இப்படிக் கூறிய அதே காந்தி அடிகள், அதற்கு முன்னும் பின்னும், பல அடிப்படையான கருத்துக்களில் ராஜாஜியுடன் எவ்வளவு இசைவு பெற்றிருந்தார் என்பதற்கும் அத்தாட்சி பகர மகாத்மாவின் வாக்குகளே ஏராளமாக உள்ளன. இன்று காந்திஜியின் வார்த்தைகளை அவை வெளியான சந்தர்ப்பத்திலிருந்து பிரித்தெடுத்துப் பெரிதுபண்ணும் காங்கிரஸ்காரர்களைப் பற்றிக் காந்திஜி கொண்டிருந்த கருத்தையும் வாக்காளர்கள் மறக்கலாகாது. 1946ல் ராஜாஜியின் தலைமையை அவர்கள் எதிர்த்தபோது மகாத்மா கூறினார்: 'தலைமைப் பதவியை அளிக்கும் அதிகாரம் மட்டும் என்னிடம் இருந்தால் அதை நானே ஏற்றுக்கொள்ளொழிய ராஜாஜியிடம் தான் ஒப்படைப்பேன்' என்று. 1942ல் பாகிஸ்தான் பிரிவினை குறித்தும், பலாத்காரப் புரட்சி குறித்தும் ராஜாஜி தெரிவித்த மாறுபட்ட கருத்துக்கள் தாம் சரியானவை என்பதைப் பலத்த உயிர்ச் சேதத்துக்கும் பொருட் சேதத்துக்கும் பின்தான் காங்கிரஸ் தலைவர்கள் புரிந்து கொண்டார்கள் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

ஏதோ ஒரு சமயத்தில் காந்தியடிகள் கூறிய வார்த்தைகளைக் கொண்டு சுதந்திரக் கட்சி காந்திய நெறியைப் பின்பற்றவில்லை என்று துணிந்து புளுகுகிறது காங்கிரஸ். பொய்ப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள இந்தக் காங்கிரஸ் அன்பர்கள் அண்ணல் எழுதியுள்ளதையெல்லாம் படித்துப் பார்த்தால் தாங்களும் பயனடைவார்கள்; அதோடு, சுதந்திரக் கட்சி கூறும் தனி மனிதனின் மாண்பு, பொருளாதார சுதந்திரம், பணக்காரர்கள், தர்மகர்த்தர்கள்



போலிருந்து தமது செல்வததை நாட்டுக்கு உபயோகப்படுத்த வேண்டுமென்ற கோட்பாடு, அரசாங்கத்தின் அதிகாரம் குறைய வேண்டும் என்ற கருத்து — இவையே காந்தியத்தின் ஜீவநாடி என்றும் அறிவார்கள்.

இன்று காங்கிரஸின் தனிப் பெரும் தத்துவமாக விளங்கும் நேருஜியின் சோஷலிஸத்தைக் காந்திஜி தொடக்கத்திலிருந்து இறுதி வரையில் தொடர்ந்து கண்டித்திருக்கிறார் என்பதையும் அவர்கள் அப்போது தெரிந்து கொள்வார்கள். காங்கிரஸ் ஆட்சியில் தாம் நெஞ்சுடைந்து போனதால் தம்மை அழைத்துக் கொள்ளுமாறு ஆண்டவனுக்கு மனுப் போட்டார் என்பதைக் காண்பார்கள். மறைவதற்கு மூன்று தினங்கள் முன்பு கடைசி கடைசியாக அவர் எழுதிய ஒரு கட்டுரையில் கூட, காங்கிரஸ் கட்சியைக் கலைக்க வேண்டுமெனக் கூறி யிருப்பதை அறிவார்கள்; அறிவு பெறுவார்கள்; சுதந்திரக் கட்சி அசல் காந்தியம், காங்கிரஸ் கட்சி அந்த வெண்ணெயைப் போல வண்ணம் மட்டுமுள்ள சுண்ணமே என்றும் புரிந்து கொள்வார்கள்.

தேர்தலுக்கு முன் தேறுதல்

பதினைந்து ஆண்டு காங்கிரஸ் ஆட்சியால் மனம் வெதும்பிப் போயிருக்கும் மக்களுக்கு ஆளும் கட்சி தேறுதல் கூற வேண்டிய தருணம் வந்து விட்டது. இல்லாவிட்டால் பிப்ரவரி 25ந் தேதிக்கு மேல் அக்கட்சிக்குத் தேறுதல் கூறவேண்டிய நிலை அல்லவா ஏற்பட்டு விடும்? எனவே கண்துடைப்பு வேலைகளும் வாக்குறுதிகளும் பெருக்கெடுத்திருக்கின்றன; கேட்டதெல்லாம் கொடுக்கும் கற்பகத் தருவாகிவிட்டது சர்க்கார்.

மானாமதுரை - விருதுநகர் ரயில் இணைப்பு வேண்டுமா? சேலத்திலிருந்து பெங்களூருக்குப் புது இருப்புப் பாதை தேவையா? திருநெல்வேலி கன்னியாகுமரி மார்க்கத்தில் ரயில் விடவா? ஹொக்கேனக்கல்லில் அணை கட்ட வேண்டுமா? எல்லாவற்றையும் இதோ கவனிக்கிறோம் என்கிறது தில்லி.

தமிழ்நாட்டு சர்க்கார்மட்டும் தில்லிக்குப் பின்தங்கி விடுமா என்ன? சந்தேகம் இருந்தால் நிதி மந்திரியவர்கள் சமர்ப்பித்துள்ள இடைக்கால பட்ஜெட்டில் ஒரு கண்ணோட்ட மிட்டால் போதும். அடுத்த தேர்தலில் ராஜ்ய சட்ட சபையை நீத்து லோக சபைக்குப் போட்டியிட இருக்கும் ஸ்ரீ சி. எஸ். அவர்கள் தமது இந்தக் கடைசி பட்ஜெட்டில் நூறு புதிய திட்டங்களையாக்கும் வகுத்தளித்திருக்கிறார்! வரிப்பளுவினால் முதுகெலும்பு முறிந்துபோன மக்களிடமிருந்து நூறு கோடி ரூபாய் வரி வசூலிப்பதற்குத் தம்மால் இயலவில்லையே என்று குறைப்பட்டுக் கொண்ட நிதி மந்திரியவர்கள் திட்டங்களின் எண்ணிக்கையில் சதமே எடுத்துவிட்டார்! இந்த நூறு திட்டங்கள் தவிர வேறு பல பொது நலப் பணிகளும் நடக்க விருக்கின்றன.

தொண்டு கிழவர்களுக்கு பென்ஷன் அளிப்பதிலிருந்து பச்சிளம் பாலகர்களுக்குக் குறைந்த விலையில் புத்தகப் பை அளிப்பது வரையில் பல அம்சங்கள் சர்க்காரின் கவனத்துக்கு வந்துள்ளன. புதிது புதிதாகத் தொழிற்கல்வி நிலையங்கள் எழுப்பப் போகிறார்கள். ஏழை மாணவர்களுக்கு இப் பள்ளிகளில் பயிற்சி பெறுவதற்காக வட்டியில்லாக் கடன் அளிக்கப் போகிறார்கள். ஆசிரியர்களின் இன்னலைத் தீர்ப்பதற்கான ஒரு நிதியில் ராஜ்ய சர்க்காரும் பங்கெடுத்துக் கொள்ளப்போகிறது. சலவைத் தொழிலாளர், முடி திருத்துபவர்கள் எல்லோருக்கும் வட்டியில்லாமல் கடன் கிடைக்கப் போகிறது.

ஆனல் வெளிப் பார்வைக்குத் தோன்றுவது போல் இவை அவ்வளவு பெரிய 'க்ஷேமாபிவிருத்தி'ப் பணிகள் அல்ல என்பது கூர்ந்து கவனித்தால் தெரியும்.

இந்த ராஜ்யத்தில் அறுபத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்கள் மொத்த ஜனத் தொகையில் இரண்டு சதவிகிதத்தினர் தாம். இவர்களிலும் நிராதரவான நிலையில் உள்ளவர்கள் சிறிய ஒரு பங்கினரே. இந்த ஆதரவற்றவர்களிலும் பிச்சையெடுத்துப் பிழைப்பவர்களுக்கு சர்க்கார் பென்ஷன் கிடையாது. இதை மனத்தில் கொண்டு பார்த்தால் முதியோர் உபகாரம் என்ற பெயரில் எவ்வளவு அற்பமான சமூக நலச் சேவையையே சர்க்கார் பிரமாதப் படுத்தி யிருக்கிறது என்பது புரியும்.

மேலும் தொழிற் கல்வி நிலையங்கள் ஏற்படுத்துவதோ அவற்றில் பயிலுபவர்களுக்குக்கடன் அளிப்பதோ அவசியமற்ற காரியம். ஏனெனில் இன்று நாட்டில் ஆயிரக்கணக்கான தொழிற்கல்வி மாணவர்கள் வேலையில்லாமல் தவிக்கிறார்கள் என்று 'இந்தியா 1961' என்ற நூல் தெரிவிக்கிறது. பள்ளி ஆசிரியர்களின்

ஊதியத்தை அதே படிப்புப் படித்த சர்க்கார் குமாஸ்தாக்கள் ஊதியத்துக்குச் சமமாக உயர்த்தாமல் 'இன்னல் தீர்க்கும் நிதி' தொடங்குவதில் பொருள் என்ன இருக்கிறது? கல்வித் திட்டத்துக்கான செலவை இரு மடங்குக்கு மேல் உயர்த்தியிருப்பது காரியசாதகமற்ற ஒரு கனவு. ஏனெனில் பள்ளிகளைப் பெருக்குவதற்கேற்பப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கையையும் திடுமென இருமடங்காக்குவது மாயக் கற்பனைதானே? மாவட்டம் ஒவ்வொன்றிலுமுள்ள சலவையாளர், முடி திருத்துவோர் ஆகியோரில் நூறு பேரைத் தேர்ந்தெடுத்து, தலா ஐம்பது ரூபாய் கடன் தரப் போகிறார்கள் என்னும் போதே இந்த நூறு பேர்கள் எந்த அடிப்படையில் இந்தச் சலுகை பெறப் போகிறார்கள் என்ற ஐயமும் எழுகிறது.

நூறு கோடி ரூபாய் பட்ஜெட்டில் இருபத்தெட்டு லட்சம் ரூபாய்தான் தொழிலாளரின் விசேஷ முன்னேற்றத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதையும், தங்களுக்கு முதலீடு, அபிவிருத்திப் பலன் இவற்றில் உரிமை அளிக்கச் சுதந்திரக் கட்சி முன்வந்திருப்பதையும் தொழிலாளர் பெருமக்கள் யாவரும் ஒப்புநோக்க வேண்டும். நிலத்திலிருந்து மேலும் 38 லட்சம் ரூபாய் வரி ஈட்ட உத்தேசித்திருக்கிறது இந்தப் பட்ஜெட். சுதந்திரக் கட்சியோ நில வரியையே ரத்து செய்ய வேண்டுமென்கிறது. உழவர் குடியின் வளம் செழிக்க எந்தக் கட்சி உதவும் என்பதற்கு இதைவிட என்ன சான்று வேண்டும்?


ஒரு முக்கியமான விஷயம். எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அபிவிருத்தித் திட்டங்களை வகுக்காமல் போகாது. ஆனால் மக்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதாகச் சொல்லும்போதே அவர்களுடைய ஆன்மாவைப் பறித்து அவர்களை வாயில்லாப் பூச்சிகளாக்குகிறது காங்கிரஸ். சுதந்திரக் கட்சியோ அவர்களுக்குப் பூரண சுதந்திரம் அளித்தே சுபிட்சப் பாதையில் இட்டுச்செல்ல முன்வருகிறது.

நவம்பர் மாத மத்தியிலிருந்து ஒரு மாத காலமாக ராஜஸ்தானம், பஞ்சாப், உத்தரப் பிரதேசம் ஆகிய ராஜ்யங்களில் சுற்றுப் பயணம் செய்து சுதந்திரக் கட்சியின் வெற்றிக் கொடியை நாட்டிய ராஜாஜி அவர்கள் டிசம்பர் 13-ந் தேதியன்று சென்னை திரும்பினார். கட்சித் தலைவர்கள், ஊழியர்கள், ஸ்ரீ சசிவர்ணத்தேவர், 'எக்ஸ்பிரஸ் குரூப்' பத்திரிகைகளின் அதிபர் ஸ்ரீ ராமநாத கோயங்கா, 'கல்கி' அதிபர் ஸ்ரீ சதாசிவம் ஆகியோர் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் குழுமியிருந்து அவருக்கு உற்சாகமான வரவேற்பளித்தார்கள். வரவேற்புக் காட்சிகளையும், 'கிறிஸ்டியன் ஸயன்ஸ் மானிட்டர்' என்ற அயல்நாட்டுப் பத்திரிகைப் பிரதிநிதி தம்மை ராஜாஜிக்கு அறிமுகம் செய்து கொள்ளுவதையும் கீழே காணலாம்.



இசைவிழாத் தலைவர்கள்

மார்கழி மாதம் பிறந்ததும் கூடவே சங்கீத ஸீஸனும் பிறந்து விடுகிறது. இதை அறிவிப்பது போல் சங்கீத வித்வத் சபை 'புதுமனைப் புகு விழா' நடத்தி யிருக்கிறது. இவ்வாண்டுமுதல் அகாடமியின் நிகழ்ச்சிகள் சொந்தக் கட்டடத்திலேயே நடக்கும். இந்த மண்டபம் இசை அரங்கு எப்படி இருக்கவேண்டுமென்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு. ரசிகர்கள் வெகு நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த இந்த மண்டபம் இவ்வாண்டு நிகழ்ச்சிகளுக்கு ஒரு தனி சோபை அளிக்கும்.



திரு வீருசாமிப் பிள்ளை

இசைக் கலையை வளர்ப்பதில் உயர்ந்த பணியாற்றி வரும் தமிழ் இசைச் சங்கமும், இந்தியன் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைடியும், சங்கீத வித்வத் சபையும் இந்த ஆண்டு மிகச் சிறப்பாக இசைவிழா ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றன.

ஒவ்வோர் ஆண்டிலும் விழாவுக்குத் தகுந்த தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்பதனை இம்முயற்சிகளில் ஈடுபட்டவர்களே அறிவர். ஆனால் தலைவர்களின் பெயர்கள் அறிவிக்கப் பட்டதும் ரசிகர்கள் எல்லோரும் ஆமோதிக்கும் வண்ணம் அவை இருந்துவிட்டால் நிர்வாகிகள் அடையும் சந்தோஷம், கச்சேரியில் 'அப்ளாஸ்' வாங்கும் வித்வானுக்குக் கூட இருக்காது. இப்படிப் பட்ட அற்புதத்தை ஆண்டுக்கு ஆண்டு நடத்தி வருகின்றனர் சபை நிர்வாகிகள்.



திரு ராமையாப் பிள்ளை

வித்வத் சபைக்கு இவ்வருஷம் தலைமை தாங்கி சங்கீத கலாநிதி விருது பெறும் பெருமை நாதசுர வித்வான் திரு வீருசாமிப் பிள்ளை அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டின் சிறப்புக்களில் ஒன்று நாதசுரம். இதைப் பயின்று கீர்த்தி பெற்று ரசிக மக்கள் உள்ளத்தில் நிரந்தரமான ஸ்தானம் வகிக்கும் வித்வான்கள் பலர் இருந்திருக்கின்றனர். இப்போதும் இருந்து வருகின்றனர். இவர்களில் வித்வான் வீருசாமிப் பிள்ளை அவர்கள் நம்மைப் பல ஆண்டுகளாகத் தமது இசை வழியே மகிழ்வித்துக் கொண்டிருக்கிறார். திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் ஆஸ்தான வித்வானாகவும் அவர் பணியாற்றி வருகிறார். கர்நாடகத்தமான பாணிக்கும், ஸ்வரசுத்தமான சஞ்சாரங்களுக்கும் கம்பீரமான நடைக்கும் பெயர் பெற்றது திரு பிள்ளை அவர்களின் சங்கீதம். நவீன உத்திகளைக் கையாளுவதில் நெறிது பயந்தவர் அவர்.



திரு சுப்ரமணிய சாஸ்திரி

தமிழிசைச் சங்கத் தலைமைப் பொறுப்பை நடன ஆசிரியர் நாட்டிய கலா கேசரி வழுவூர் திரு ராமையாப் பிள்ளை அவர்கள் ஏற்றிருக்கிறார். பரத நாட்டியக் கலையில் சாஸ்திரீயமும், அசாஸ்திரீயமும் எவை என்பதை நடன ஆசிரியர்கள்தான் நிர்ணயித்து விளக்க வேண்டும். இத்துறையில் திரு ராமையாப் பிள்ளை அவர்களின் பங்கு அதிகம். அழகு அம்சம் எங்கெல்லாம் தோன்றுமோ அதையெல்லாம் நாட்டியத்தில் அமைத்துக் கலைக்குச் சோபையூட்டும் ஆர்வமுள்ளவர். அவருடைய சமீப காலப் படைப்பான சிலப்பதிகார நாட்டிய நாடகம் அவருடைய கலை உணர்ச்சிக்கு ஓர் எடுத்துக் காட்டு. இவரே இன்று பிரபலமாக விளங்கும் பல நடனமணிகளின் குரு ஆவார்.

இந்தியன் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைடிக்குத் தலைமை தாங்கும் கௌரவத்தை வைணிக வித்வான் சேர்மாதேவி சுப்பிரமணிய சாஸ்திரிக்கு அளித்திருக்கின்றனர். இருபத்தைந்து ஆண்டுகளாக இசைத் துறையில் அநுபவமுள்ளவர் அவர். வித்வத் சபையினால் கௌரவிக்கப் பட்டவர். உயர்ந்த லட்சண ஞானம் பெற்றவர். இம் மூன்று கலைஞர்களுக்கும் நமது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அகில உலகமும் அமைதியைத் தேடித் தவிக்கும் இன்று அன்பை உபதேசித்த இயேசுநாதரின் ஜயந்தி நன்னாளை நினைவு கூர்ந்து போற்றுவோம்! இவ்வாறு எண்ணத்துக்கு இனிமை கூட்டிக் கொள்வதோடு, அகக் கண்ணால் நாம் காணும் கிறிஸ்து ஜனனத்தைப் புறக்கண்ணுக்கும் இனிக்குமாறு இவ்விதழ் அட்டையில் வழங்கியுள்ள ஓவியர் கல்பனாவின் சித்திரத்தையும் கண்டுகளிப்போம்.



சோமு எழுதும்
புதிய தொடர் கதை
நந்தவனம்
கல்கி
ஜனவரி 14
பொங்கல் மலரில் ஆரம்பமாகிறது

தொல்லைக்கு இடம் இல்லை



ப்ரௌன் & போல்ஸனின்

பேடண்ட் கார்ன்ப்ளவர் உபயோகித்தால்





விருந்து இனிதே தொடங்குகிறது: ப்ரௌன் & போல்ஸனின் பேடண்ட் கார்ன்ப்ளவர் உபயோகித்துச் செய்த, சத்துள்ள, ருசியான சூப்புடன், ஆம், சூப்புகளின் முழு ருசியை வெளிக்கொணர்ந்து, நாவில் ஜலம் ஊறச் செய்வதில் அதற்கு ஈடேது? சைவ, அசைவ சூப்புவகைகளைக் கெட்டிப்படுத்த ஏற்றது ப்ரௌன் & போல்ஸனின் பேடண்ட் கார்ன்ப்ளவர். அவற்றிற்குச் சத்தூட்டுவதுடன், சாப்பிடத் தூண்டும் கவர்ச்சியையும் அளிக்கிறது. ஒரு பவுண்டு டின்களில் கிடைக்கிறது.

கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ. (இந்தியா) ப்ரை. லிட்.,

இலவசம் இக்கூப்பனைப் பூர்த்திசெய்து, ப்ரௌன் & போல்ஸன் பேடண்ட் கார்ன் ப்ளவர் அல்லது வெனிலா கஸ்டர்ட் பவுடர் பாக்கெட்டிலுள்ள 5 உள்ளுறைகளை இத்துடன் இணைத்து அனுப்பி, ஆங்கிலம், ஹிந்தி, தமிழ், தெலுங்கு, குஜராத்தி, மலையாளம், உருது, வங்காளி அல்லது மராத்தி மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள கலைமிக்க சமையல் புத்தகம் ஒன்றை, மொழியைக் குறிப்பிட்டுப் பெறவும்.

ஸ்ரீ/ஸ்ரீமதி/குமாரி ....

....

விலாசம் ....

....

டிபார்ட்மெண்ட் நெ. KLK: 7

கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ. (இந்தியா) ப்ரை. லிட்.,
தபால் பெட்டி நெ. 994, பம்பாய்—1.
இச் சலுகை இந்தியாவிலுள்ளவர்களுக்கு மட்டுமே.

சுதந்திரத்தின் வழியே சுபிட்சவாழ்வு

தேர்தல் அறிக்கை

8. பண்பாடு, கல்வி, மதம்

57. பல்வேறு இனங்களையும், மதங்களையும், மொழிகளையும் சேர்ந்த பிரிவினர் கலந்து வாழும் நாடு இந்தியா; அதன் ஒருமைப்பாடு உருவாகி வரும் நிலையிலுள்ளது எனச் சுதந்திரக் கட்சி நம்புகிறது. தேசியக் கட்டுக்கோப்பு குலையாமலிருக்க வேண்டுமானால் நாட்டின் அங்கமாகிய ராஜ்யங்கள், இப்போது உருவாகி வரும் ஐக்கியத்தைச் சீர்கேடுறும்படியான எக்காரியத்தையும் செய்யாமலிருக்க வேண்டும்; மாறாக, ஒன்றோடொன்று அவை இசைவு பெறுவதற்கு ஒவ்வொரு ராஜ்யமும் உதவ வேண்டியது அவசியம் என்பது சுதந்திரக் கட்சியின் கருத்து.

58. வெளியாரும், காங்கிரஸ் கட்சியிலேயே விவேகமுள்ளவர்களும் எவ்வளவோ எச்சரித்தும் பொருட்படுத்தாமல் காங்கிரஸ் கட்சி பிடிவாதமாகப் பின்பற்றிய கொள்கைகளின் விளைவாகப் பிரிவினை மனப்போக்குகள் நாட்டில் ஏற்பட்டுள்ளன. அக்கட்சி கடைப்பிடிக்கும் மொழிவாரிக் கொள்கை ஒரு பிரிவினை சக்தியாகிவிட்டது. ஒவ்வொரு ராஜ்யத்திலுமுள்ள பெரும்பான்மை மொழியினர் இதர சிறுபான்மை மொழியினர் யாவரையும் நிரந்தரமான அந்நியர்கள் நிலைக்கு ஒடுக்கவும், ராஜ்ய மக்கள் யாவரும் இயற்கையாக இணைந்து வாழும் போக்கைத் தாமதப்படுத்தவும், தடை செய்யவும் காப்பளிக்கும் ஒரு கவசமாகி விட்டது இந்தக் கொள்கை. இந்தச் சீரழிவைத் தடுத்து நிறுத்தச் சுதந்திரக் கட்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.



சுதந்திரக் கட்சியின்
தேர்தல் சின்னம்

சிறுபான்மையினரும் பின்தங்கிய வகுப்பினரும்

59. பிரதிகூலமான சூழ்நிலையில் உள்ள ஹரிஜனங்கள், ஆதிவாசிகள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் ஆகிய எல்லாச் சிறுபான்மையினரின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதற்காக அரசியல் நிர்ணயச் சட்டம் கூறும் விதிகளைச் சுதந்திரக் கட்சி சற்றும் பிறழாமல் காரியத்தில் நடத்திக் காட்டும்.

60. குறிப்பிட்ட ஒரு வகுப்பு அல்லது சமூகத்தின் நலன்களைப் பாதுகாப்பதற்கென உள்ள சங்கங்கள் வகுப்புவாத அமைப்புகள் என்று கூறி அவற்றுக்கு இடமளிக்கக் கூடாது என்றும் அவற்றைத் தடை செய்ய வேண்டும் என்றும் கருதுவதைச் சுதந்திரக் கட்சி ஆட்சேபிக்கிறது.

கல்வி

61. நாட்டில் பிரிவினைச் சக்திகளைத் தடுத்து நிறுத்துவதற்காகச் சுதந்திரக் கட்சி,

(i) வருங்காலப் பிரஜைகளுக்கு மானுடப் பண்புகள் குறித்துத் தக்க அடிப்படை அறிவு கிட்டுமாறு, இலக்கியக் கலைகள், அறிவுக் கலைகள் இவற்றோடு கல்வி முறையில் ஆன்மீக அம்சத்தையும் சேர்க்கும்.

(ii) சுயேச்சையாகப் பணியாற்றும் ஸ்தாபனங்கள், சிறுவர்களுக்குச் சுதந்திரமாக தார்மீக, சமயக் கல்வி புகட்ட வாய்ப்பு அளிக்கும்; ஸ்தாபனம் எந்தப் பிரிவைச் சேர்ந்ததோ அதனைச் சேராத பகுதியினரின் மீது இவ்விதக் கல்வி முறை திணிக்கப்படாமல் அது பார்த்துக் கொள்ளும்.

62. கீழ்க்கண்ட கொள்கைகளுக்காகச் சுதந்திரக் கட்சி உறுதியாக நிற்கிறது:

(i) பல்கலைக் கழகங்களும், மற்றுமுள்ள கல்வி ஸ்தாபனங்களும் சுய ஆட்சி உரிமை உள்ளனவாக இருத்தல் வேண்டும்.

(ii) அதிகார பூர்வமான உத்தரவுகளுக்கு உட்படாமல் ஒவ்வொரு பிரஜையும் சுதந்திரமான சூழ்நிலையில் தனது குழந்தைகளுக்குத் தன் விருப்பப்படி கல்வி அளிக்கும் ஆதார உரிமையை அளிக்க வேண்டும்.

(iii) இனம் தலைமுறையினரின்மீது குறிப்பிட்ட சில சித்தாந்தங்களைப் புகுத்துவதற்காகத் திட்டமிட்டு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை— உதாரணமாக, பாட புத்தகங்களைத் தேசியமயமாக்குவதை—தடுக்க வேண்டும்.

(iv) நாடு முழுவதற்கும் பொதுவான ஒரு கல்வித் தரத்தை நிலை பெறச் செய்வதற்காக மத்தியப் பல்கலைக் கழகங்களை நிறுவ வேண்டும்.

(v) ஆசிரியர்களின் அந்தஸ்திலும் ஊதியத்திலும் வித்தியாசமில்லாமல் அவற்றை ஒரே சீராக உயர்த்த வேண்டும். பேராசிரியர்களுக்கும் அப்படியே.

இதனால் அவர்கள் ஒரு பிராந்தியத்தி லிருந்து வேறொன்றுக்குத் தங்கு தடையின்றி மாற வசதி ஏற்படும்.

பொதுஜனத் தொடர்புச் சாதனங்கள்

63. மக்கள் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ள உதவும் பல விதச் சாதனங்களில் ஏகபோகமான உரிமை ஏற்படுத்தவோ, அவற்றை அதிகாரபூர்வமாகக் கண்காணித்துக் கட்டுப்பாடு செய்யவோ முயலுவதைச் சுதந்திரக் கட்சி எதிர்க்கும்.

(i) இன்று அரசாங்கத்தின் ஏக போக்கியத்திலுள்ள அகில இந்திய ரேடியோவை பி. பி. ஸி. (பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கார்ப்பரேஷன்) போன்ற சுய நிர்வாகப் பொறுப்புள்ள ஒரு கார்ப்பொரேஷனுக மாற்ற வேண்டும். வேறு வானொலி இணைப்பு நிலைய ஸ்தாபனங்கள் அதனுடன் போட்டியிட்டுத் தொழில்பட அநுமதிக்கவேண்டும்.

(ii) இன்று இந்திய செய்தித் திரைச் சுருள் குறிப்பிட்ட ஒரு கட்சியின் பிரசாரத்துக்குக் கையாளாகவே உள்ளது. இதனை சுய நிர்வாகப் பொறுப்புள்ளதாக்கிச் செய்தியையும், அறிவையும் பரப்புவதற்குரிய ஸ்தாபனமாக்க வேண்டும்.

(iii) அரசாங்கச் சலுகை அல்லது அச்சுறுத்தல் மூலம் ஆட்சியிலுள்ள கட்சியின் செல்வாக்குக்குப் பத்திரிகை உலகை உட்படுத்துவதற்காகச் செய்யப்படும் எல்லா முயற்சிகளையும், மன உறுதியுடன் எதிர்த்துத் தனது சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதில் இந்நாட்டுப் பத்திரிகைகள் காட்டி வரும் மன உறுதி பாராட்டுக் குரியதாகும். இப்பத்திரிகை உலகமானது ஜீவனுடன் விளங்கச் சுதந்திரக் கட்சி சகலமும் செய்யும்.

மதம்

64. ஒவ்வொரு பிரஜையும் தான் அநுஷ்டிக்க விரும்பும் மதத்தைத் தேர்ந்தெடுக்கலாம் என்பதையும், அரசியல் நிர்ணயச் சட்டம் உறுதி கூறியுள்ள மத சுதந்திரத்தைத் தங்கு தடையின்றி அநுபவிக்க ஒவ்வொரு பிரஜையும் உரிமை பெற்றிருக்கிறார் என்பதையும் சுதந்திரக் கட்சி ஒப்புக்கொள்கிறது. எனினும் மதம் என்பது அரசாங்கமும் முக்கியமாகக் கருதவேண்டிய ஒன்றாகுமென அது கருதுகிறது. ஏனெனில் மதம்தான், சர்க்காருடைய சட்டத்தாலும், ஒழுங்குப்பாட்டாலும் செயலாக்க முடியாத நன்னடத்தையைத் தோற்றுவிக்கிறது. நேர்மையாக நடப்பதற்கு ஒரு நோக்கத்தையும், ஆதாரத்தையும் அளிக்கும் தார்மீக, ஆன்மீகப் பண்புகளைப் பலப்படுத்துவதற்கு உத்வேகமுள்ள ஒரு சக்தியைத் தருவது மதமே.

65. எனவே சுதந்திரக் கட்சியானது வாழ்க்கையில் மதம் அதற்குரிய இடத்தை மீண்டும் பெறுவதற்காக எவ்வளவு செய்ய முடியுமோ, அவ்வளவும் செய்யும். முக்கியமாக,

(i) மத ஸ்தாபனங்கள், தர்ம ஸ்தாபனங்கள் இவற்றின் வருமானத்துக்கும், நன்கொடைகளுக்கும் வரி விலக்களிக்கும்.

(ii) ஒவ்வொரு மதமும் அதற்கென எழுதி வைக்கப்பட்ட சொத்துக்கள், இதர உடைமைகள் இவற்றின் முழுப் பலனையும் சர்க்கார் தலையீடின்றி அநுபவிக்க வசதி ஏற்படுத்தித் தரும்.

(iii) எல்லாச் சமூகத்தினருக்கும் தமது மத அநுஷ்டானங்கள் மதிக்கப்படும் என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்தும்.

(iv) ஒவ்வொரு மதமும் அதனைச் சார்ந்த சமூகத்தினர் தார்மீக ஆன்மீக நெறியில் நிலைத்து நிற்பதற்கு வழி ஆட்டி, அதன் வழியே பொது நலனுக்கு உதவுவதற்கேற்ற சூழ்நிலையை உண்டாக்க சுதந்திரக் கட்சி பிரயாசைப்படும்.

66. அறநெறிகளிலும் ஆன்மீகத்திலும் தலைசிறந்ததொரு சமுதாய, நாகரிகத்தைப் பெற்ற நமது மக்கள்— ஏனைய நாடுகள் இந்நாட்டோடு ஒப்பு நோக்கும் நிலையைப் பெறுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்த நாகரிகத்தைப் பெற்ற மக்கள்— அதே வாழ்முறையைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும். இந்த வாழ்முறையில் ஒவ்வொரு தனி மனிதனும் சமுதாயத்துக்குச் சுதந்திரமாகத் தனது பங்கென ஒன்றை அளிக்கிறான்; அரசாங்க நிர்ப்பந்தத்தின் மூலமும், அரசாங்க அதிகாரிகளின் உத்தரவுக்கு உட்பட்டும் வெறும் பொருளாதார முன்னேற்றம் என்ற மாயத்தை அடைவதற்காக, உயிரற்ற ஓர் இயந்திரத்தின் விளிம்பில் ஒன்றையொன்று பற்றுமாறு வெட்டப்பட்ட பற்களாக மக்கள் வாழக் கூடாது என்பது சுதந்திரக் கட்சியின் கருத்து.

9. முடிவுரை

67. கடந்த சில ஆண்டுகளாகக் காங்கிரஸ் கட்சியானது சோஷலிஸம், க்ஷேமநல அரசாங்கம் என்ற பெயர்களில் கடைப்பிடித்துவரும் கொள்கைகளால் அது மக்கள் வாழ்வின் எல்லா அம்சங்களையும் நெருக்கிப் பிடித்து வைத்துக் கொள்ளும் நிலையை அடைந்துள்ளது. கம்யூனிஸ நாடுகளில்போல ஏக கட்சி

"சொந்த வாழ்விலும் பொது வாழ்விலும் எப்படியோ அதேபோல நாம் உற்பத்தி செய்யும் சரக்குகள் விஷயத்திலும் ஒழுங்கான கண்டிப்புமிக்க தாரதரக்கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்தல் அதிமுக்கியமான கடமையாகும்...'

பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு.



இந்த இலட்சியத்திற்காகவே தம்மை அர்ப்பணித்துக்கொண்டுள்ளது இந்தியன் ஸ்டான்டர்ட்ஸ் இன்ஸ்டிட்யூஷன் (ISI). தேசிய அடிப்படையிலும் சர்வதேச அடிப்படையிலும் தாரதரக் கட்டுப்பாடுகளை வகுத்த பொறுப்பு இதனுடையதே. நாட்டின் தாரதர நிர்ணயிப்புகளுக்கான இந்த ஸ்தாபனம், அரசினரும் தொழிற்றுறையினரும் இணைந்து துவக்கிய கூட்டமைப்பாக 1947-ல் நிறுவப்பெற்றது.

விஞ்ஞான நிபுணர்கள், தொழில்துறை வல்லுநர்கள், தவிர, தொழிலியல், அரசாங்கம் மற்றும் பிற நிறுவனங்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழுக்கள்வாயிலாகச் செயலாற்றிவருகிறது ஐ.எஸ்.ஐ; அக் குழுக்களுக்குத் துணைபுரிகின்றனர் ஐ.எஸ்.ஐ ஊழியர்கள்.

ரசாயனப் பண்டங்கள், சிறு நுகர்வுப் பண்டங்கள்முதல் கோட்பாட்டு நெறி முறைகள், குறிப்புப் பெயர் வரிசைகள்வரை இதுவரை ஐ.எஸ்.ஐ.யின் தாரதர நடவடிக்கைகளுக்கு உட்பட்ட உருப்படிகள் 1600-க்கு மேற்பட்டவை. நம் நாட்டின் அபிவிருத்தித் திட்டத்தை ஒட்டி வளரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மேன்மேலும் புதுப்புதுப் பொருள்கள் மேற்கூறிய கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகி வருகின்றன. ஏனெனில், தாரதர ஒருமைப்பாடே நாட்டின் பொருளாதார நலனுக்கு அடிப்படை.

ISI இந்தியன் ஸ்டான்டர்ட்ஸ் இன்ஸ்டிட்யூஷன்

புது டெல்லி . பம்பாய் . கல்கத்தா . சென்னை . கான்பூர்.

இவ் விளம்பரத்திற்கு இடமளித்து உதவியவர்கள்
தி அத்துல் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்.
போஸ்ட் அத்துல், மேற்கத்திய ரெயில்வே, ஸூரத் மாவட்டம்.

ஆட்சியை விதைப்பதற்கு நிலத்தை நன்றாகத் தயார் செய்தாகிவிட்டது.

68. ஜனநாயகத்துக்கு இப்படி ஓர் ஆபத்து நேரிடும் என்று வெளிப்படத் தெரிந்தபோதுதான், 1959ம் ஆண்டு மத்தியில் சுதந்திரத்தைக் காத்துத் தருவதற்காக ஒரு கட்சி ஏற்பட வேண்டுமெனக் கருதிச் சுதந்திரக் கட்சி தொடங்கப்பட்டது. அது தனது பணியைத் தன்னால் எளிதில் ஆற்ற முடியவில்லை எனக் கண்டுள்ளது; இதற்குக் காரணம் அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போராடிய ஒரு ஸ்தாபனத்தின் பெயரையும், கொடியையும் கொண்டுள்ள ஒரு கட்சியிடம் பற்று செலுத்தப் பழக்கப்பட்டுவிட்ட மக்களை வேறுபுறம் திருப்புவது கடினம் என்பது மட்டுமல்ல; காங்கிரஸ் கட்சியும் அதன் மந்திரிகளும் கட்சியின் பலத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்தி வருவதும் ஒரு முக்கியமான காரணமாகும். அரசாங்க நிர்வாகத்துக்குரிய காரியங்களில் எல்லாவிதமான சமூக சேவைகளையும் உட்படுத்தி, அந்தச் சேவைகளுக்கும், பஞ்சாயத்துக்கள், கூட்டுறவுச் சங்கங்கள் இவைகளுக்கும் கட்சிக்காரர்களை நியமித்திருப்பதால் ஆளும் கட்சி வேறு, அரசாங்கம் வேறு என்று புரியாமல் இன்று சாமானிய மக்கள் குழம்பியிருக்கிறார்கள்; ஆளும் கட்சியும் அரசாங்கமும் ஒன்றே என எண்ணுமாறு அவர்கள் நடத்திச் செல்லப்பட்டிருக்கிறார்கள்.

69. எத்தனையோ தடைகள் இருந்த போதிலும் சுதந்திரக் கட்சி எடுத்துக் கொண்டுள்ள நோக்கம் நியாயமான தாகையால் அதுவே தடைகளைத் தகர்த்து இக்கட்சி முன்னேறத் திறன் அளித்துள்ளது. பெர்மிட் — லைசென்சு ஆட்சியின் விளைவாகத் தாங்கள் அநுபவித்த சிறுமைகளும், கொடுமைகளும், அநீதிகளும் மக்களுடைய கண்களைத் திறந்துள்ளன. மிகவும் மந்தமான அறிவு பெற்றவர்களும் கூட வெளிப்படக் காணுமளவுக்கு இன்றைய ஆட்சி சர்வாதிபத்தியத்தை நோக்கிச் செல்கிறது. கம்யூனிஸத்தின் போக்கிலேயே காங்கிரஸ் கொள்கைகள் செல்வதும், அந்நிய ஆக்கிரமிப்பு குறித்துக் காட்டப்படும் அலட்சியபாவமும் நம் முன்புள்ள பேராபத்தை மக்களுக்கு உணர்த்தியுள்ளது. பிரம்மாண்டமான திட்டங்களுக்கு நிதி சேகரிப்பதற்காகத் தீர்க்க முடியாத அந்நியக் கடன்களில் நாட்டைச் சிக்க வைத்திருப்பது மக்களின் பீதியை அதிகரித்துள்ளது.

70. இன்றைய நிலையில் உள்ளடங்கி யிருக்கும் ஆபத்தை உணருபவர்கள் காட்டும் வழியை வாக்காளர்கள் பின்பற்றுவார்கள்; மீண்டுமொருமுறை காங்கிரஸ் கட்சிக்கு வரம்பற்ற அதிகாரப் பட்டாவைப் புதுப்பித்துக் கொடுப்பது ஏக கட்சி ஆட்சியை வேரூன்றுவதற்கொப்பாகும் என உணர்வார்கள்; எனவே காங்கிரஸ் கட்சிக்கு வோட்டளிக்க மாட்டார்கள்; காலத்தின் தேவையை உணர்ந்து அதை நிறைவேற்றும் எழுச்சியைப் பெறுவார்கள்; சுதந்திரக் கட்சி அபேட்சகர்கள் தேர்தலுக்குப் போட்டியிடும் இடங்களிலெல்லாம் சுதந்திரக் கட்சிக்கே தங்கள் ஆதரவைத் தருவார்கள்; அதன் மூலம் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவார்கள் எனச் சுதந்திரக் கட்சி நம்புகிறது. **(முற்றும்)**

மாளாப் புகழ் கொண்ட மாளவியா

கிறிஸ்து பிறந்த டிசம்பர் 25ந் தேதி, சநாதன ஹிந்துவான பண்டித மதன மோகன மாளவியாஜியின் பிறந்த நாளுமாகும்.

அலகாபாத்தைச் சேர்ந்த மாளவியா வாழ்வின் தொடக்க காலத்தில் பள்ளி ஆசிரியராகவும் பல பத்திரிகைகளின் ஆசிரியராகவும் இருந்தார். அரசாங்கப் பள்ளி ஒன்றின் ஆசிரியராக இருந்தபோதே 1887ம் ஆண்டு காங்கிரஸில் கலந்து கொண்டவர். 1909ம் ஆண்டு லாகூரில் நடைபெற்ற காங்கிரஸ் மகா சபைக்கே தலைவரானார். மாளவியா மொத்தம் மூன்று முறை காங்கிரஸ் அக்கிராசனராக இருந்திருக்கிறார்.

1919ம் ஆண்டு நடைபெற்ற பஞ்சாப் படுகொலையைத் தில்லி சட்ட சபையில் வன்மையாகக் கண்டித்து உலகறியச் செய்தவர் மதன மோகனர்தான். காந்தி அடிகள் உப்பு சத்தியாக்கிரகம் தொடங்கியபோது இருபதாண்டு வகித்த சட்டசபை அங்கத்தினர் பதவியை உதறி விட்டுத் தாமும் சத்தியாக்கிரகம் செய்து சிறை புகுந்தார்.

தீவிர மதப்பற்று கொண்ட மாளவியா தான் 1928ல் இந்துமகா சபையைத் தோற்றுவித்தது. கல்வியோடு சமயத்தையும் அளிக்கவே 1910ம் ஆண்டு காசி இந்து சர்வகலாசாலையை அவர் எழுப்பினார். தர்மப் பணிகளுக்கு நிதி சேகரிப்பதில் மாளவியா நிபுணர். தமக்கென வாழாத இவர், வசதியுள்ள மற்றவர்களையும் பிறர்க்குரியாளராக்கும் தம் தொண்டு என்றென்றும் முடிவு பெறக் கூடாதென்பதற்காகக் காயகல்பம் செய்துகொண்டார். அவரது காயம் என்னவோ 1946ம் ஆண்டு மறைந்து விட்டது; அவர் புகழ்மட்டும் என்றும் மறையாது என்பதற்கடையாளமாகவே இப்போது அவரது நூற்றாண்டைக் கொண்டாடி மகிழ்கிறோம்.

மியூஸிக் அகாடமி, சென்னை

35 - வது சங்கீத மகாநாடும், கச்சேரிகளும் — 22-12-1961 முதல் 5-1-1962 வரையில்

சென்னை, 115 E, மௌபரேஸ் ரோட், மியூசிக் அகாடமி புதிய கட்டிடத்தில் - *தினசரி நிகழ்ச்சி விவரங்கள்* (D. V.)

ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரி சங்கீத மகாநாட்டைத் தொடங்கி வைப்பார். நாகஸ்வர வித்வான் ஸ்ரீ வீருசாமி பிள்ளை மகாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்

சங்கீத கலாநிதி முசிரி ஸ்ரீ சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ஜனவரி 4ஆ தேதி சதஸுக்குத் தலைமை தாங்குவார்

சங்கீத சர்ச்சைகளும், விமர்சனங்களும் காலை 8 மணி முதல் 10 மணி வரை, போட்டிகள் 12 மணி முதல் 2 மணி வரை

22 - 12 - 61 மாலை 5 மணிக்கு

திறப்பு விழா

மாலை 6 மணிக்கு

நாகஸ்வர வித்வான் ஸ்ரீ வீருசாமி பிள்ளை - நாகஸ்வரம்

பிற்பகல் 2 - 30 மணி | பிற்பகல் 3 - 30 மணி | **23 - 12 - 61** சனி | மாலை 5 - மணி | இரவு 9 மணி

23 - 12 - 61 சனி

லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி -பாட்டு
வி. ரங்கம்மாள் -வயலின்
கே. நாராயணன் -மிருதங்கம்

டி. ஏ. ஜெயராமன் -பாட்டு
எல். வைத்தியநாதன் -வயலின்
ஆலப்புழை ராகவன் -மிருதங்கம்

மகாராஜபுரம் விசுவநாத அய்யர் -பாட்டு
கோவிந்தசாமி நாயக்கர் -வயலின்
சிவராமன் -மிருதங்கம்
ஆலங்குடி ராமச்சந்திரன் -கடம்

எம்பார் விஜயராகவாச்சாரியார் -ஹரிகதை

24 - 12 - 61 ஞாயிறு

வத்ஸலா & வைதேகி -பாட்டு
சாவித்திரி சத்தியமூர்த்தி -வயலின்
ராமமூர்த்தி -மிருதங்கம்

போழக்குடி சகோதரர்கள் -பாட்டு
கோபாலகிருஷ்ணன் -வயலின்
ஆர். நடராஜன் -மிருதங்கம்

கமலா & ராதா -பரதநாட்டியம்

பிருந்தா & முக்தா -பாட்டு
அன்னவரப்பு ராமசாமி -வயலின்
டி. ரங்கநாதன் -மிருதங்கம்

25 - 12 - 61 திங்கள்

கீதா & காயத்ரி -பாட்டு
ஆர். கமலா -வயலின்
ஏ. ஜெயலக்ஷ்மி -மிருதங்கம்

முடிகொண்டான் கிருஷ்ணமூர்த்தி -பாட்டு
திருப்பாப்புலியூர் ராஜம் -வயலின்
ராமச்சந்திரன் -மிருதங்கம்
ராமகிருஷ்ணன் -கடம்

எம். எல். வசந்தகுமாரி -பாட்டு
சுப்பிரமணியம் -வயலின்
கிருஷ்ணமூர்த்தி ராவ் -மிருதங்கம்
வில்வாத்ரி ஐயர் -கடம்

செம்மங்குடி சீனிவாச ஐயர் -பாட்டு
கோபாலகிருஷ்ணன் -வயலின்
பாலக்காடு மணி ஐயர் -மிருதங்கம்
சுவாமிநாத பிள்ளை -கஞ்சிரா

26 - 12 - 61 செவ்வாய்

சித்தூர் வெங்கடேசன் -புல்லாங்குழல்
சிக்கில் பாஸ்கரன் -வயலின்
மோகன் ராம் -மிருதங்கம்

மகாராஜபுரம் நாகராஜன் -பாட்டு
கும்பகோணம் கிருஷ்ணசுவாமி -வயலின்
கும்பகோணம் என். கணேசன் -மிருதங்கம்

செம்பை வைத்தியநாத பாகவதர் -பாட்டு
டி. சௌடையா -வயலின்
சி. எஸ். முருகபூபதி -மிருதங்கம்
விசுவநாத ஐயர் -கடம்

கே. வி. நாராயணசுவாமி -பாட்டு
வி. தியாகராஜன் -வயலின்
பாலக்காடு ரகு -மிருதங்கம்

27 - 12 - 61 புதன்

செங்கல்பட்டு ரங்காநாதன் -பாட்டு
சித்தூர் குமரேசன் - வயலின்
பி. ஸ்ரீநிவாசன் -மிருதங்கம்

உடையாளூர் ராஜகோபால சர்மா -ஹரிகதை

பாலசரஸ்வதி -பரதநாட்டியம்

துவாரம் வேங்கடசாமி நாயுடு & துவாரம் மங்கைதாயார் -வயலின்
கணேசன் -மிருதங்கம்
கிருஷ்ணமூர்த்தி ராவ் -கடம்

28 - 12 - 61 வியாழன்			
பழமனேரி நடராஜன் -பாட்டு பி. ராமசந்திரய்யா -வயலின் மாஸ்டர் சுவரன் -மிருதங்கம்	மைசூர் டி.ஆர்.சீனிவாசன் -பாட்டு திருக்கோடிகாவல் கிருஷ்ணமூர்த்தி -வயலின் கோபால கிருஷ்ணன் -மிருதங்கம்	ஆலத்தூர் சகோதரர்கள் -பாட்டு டி. என். கிருஷ்ணன் -வயலின் பாலக்காடு மணிஐயர் -மிருதங்கம் சுவாமிநாத பிள்ளை -கஞ்சிரா	ராமநாதபுரம் கிருஷ்ணன் -பாட்டு திருப்பாற்கடல் வீரராகவன் -வயலின் வேலூர் ராமபத்திரன் -மிருதங்கம்
29 - 12 - 61 வெள்ளி			
சங்கரி -பாட்டு டி. என். ராமமூர்த்தி -வயலின் சிமோகா ஸ்ரீகண்டன் -மிருதங்கம்	ஆர். வேதவல்லி -பாட்டு ஆலந்தூர் நடராஜன் -வயலின் கனகாம்புஜம் -மிருதங்கம்	டி. கே. பட்டம்மாள் -பாட்டு வி. வி. சுப்பிரமணியம் -வயலின் பாலக்காடு குஞ்சுமணி -மிருதங்கம் கிருஷ்ணமூர்த்தி ராவ் - கடம்	ஜி.என்.பாலசுப்பிரமணியம் -பாட்டு லால்குடி ஜெயராமன் -வயலின் பழனி சுப்பிரமணிய பிள்ளை - மிருதங்கம்
30 - 12 - 61 சனி			
ஏ. சீனிவாச ராகவன் -பாட்டு புதுக்கோட்டை ராமநாதன் -வயலின் சேகர் -மிருதங்கம்	சத்தியநாராயணா -பாட்டு வி. வி. நாகராஜ் -வயலின் நாகூர் அம்பி ஐயர் -மிருதங்கம்	மதுரை மணி ஐயர் -பாட்டு கோவிந்தராஜ பிள்ளை -வயலின் சுப்பிரமணிய பிள்ளை -மிருதங்கம் கோதண்டராம ஐயர் -கடம்	டி.ஆர்.மகாலிங்கம் -புல்லாங்குழல் டி. என். கிருஷ்ணன் -வயலின் வேலூர் ராமபத்ரன் -மிருதங்கம் ஆலங்குடி ராமச்சந்திரன் -கடம்
31 - 12 - 61 ஞாயிறு			
எஸ். ராஜேசுவரி -பாட்டு கே. வி. சாந்தாரத்தினம் -வயலின் பாலக்காடு ரமணி -மிருதங்கம்	வித்தியா சங்கர் -வீணை வெங்கடேசன் -மிருதங்கம்	ராமாயணம் (நாட்டிய நாடகம்) —இந்திய நடனங்கள் ராகினி கோஷ்டி	உஸ்தாத் நஹீம் ஜாபர் -சித்தார் சதாசிவ் பாவர் -தபேலா
1 - 1 - 62 திங்கள்			
செல்லா அனந்தலட்சுமி -பாட்டு கனக துர்கா -வயலின் எஸ். லலிதா -மிருதங்கம்	ஸ்ரீரங்கம் கோபாலரத்னம் -பாட்டு பாபநாசம் பாலசரஸ்வதி -வயலின் தாயுமானவர் -மிருதங்கம்	எம். எஸ். சுப்புலக்ஷ்மி -பாட்டு டி. என். சுந்தரேச ஐயர் -வயலின் டி. கே. மூர்த்தி -மிருதங்கம் கோதண்டராம ஐயர் -கடம்	ராஜேசுவரி & ரங்கநாயகி - வீணை குருவாயூர் துரை -மிருதங்கம்
2 - 1 - 62 செவ்வாய்			
எஸ். தங்கவேலு -பாட்டு திருவனந்தபுரம்ஹரிஹரன்-வயலின் மேலக்காவேரி கிருஷ்ணமூர்த்தி -மிருதங்கம்	சேலம் ஜயலட்சுமி -பாட்டு வசந்தா கோபாலன் -வயலின் கண்டதேவி ஸ்ரீனிவாசன் - மிருதங்கம்	குமார் கந்தர்வா (தேவாஸ்) ஹிந்துஸ்தானி பாட்டு	டி. எம். தியாகராஜன் -பாட்டு கோவை நடேசமூர்த்தி -வயலின் ராமச்சந்திரன் -மிருதங்கம் குருமூர்த்தி -கடம்
3 - 1 - 62 புதன்			
திருவெண்காடு செல்வரத்தினம் -பாட்டு வைத்தியநாதன் -வயலின் ஸ்ரீனிவாச ராகவன் -மிருதங்கம்	எட்டயபுரம் சகோதரர்கள் -பாட்டு சாலக்குடி நாராயணசாமி -வயலின் கமலாகரராவ் -மிருதங்கம்	மாயூரம் ராஜம் -பாட்டு லால்குடி ஜெயராமன் -வயலின் கோயமுத்தூர் ராமஸ்வாமி - மிருதங்கம்	எம். டி. ராமநாதன் -பாட்டு கண்டதேவி அழகிரிசாமி -வயலின் ராமநாதபுரம்ராகவன் -மிருதங்கம் நாராயணஸ்வாமி -கடம்
4 - 1 - 62 வியாழன்			
பிற்பகல் 3 மணி நடராஜன் & ஜெயராமன் —நாகஸ்வரம் பி. ஜி. அங்கமுத்து & சுப்பிரமணியம் -தவில்	மாலை 4-30 மணி சதஸ்	மாலை 6 மணி சித்தூர் சுப்ரமணியபிள்ளை -பாட்டு வி. சேதுராமய்யா -வயலின் கிருஷ்ண அய்யங்கார் -மிருதங்கம் விநாயகராமன் -கடம்	இரவு 9 மணி அண்ணாஸ்வாமி பாகவதர் — ஹரிகதை

5–1–62 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சமஸ்கிருத ரங்கா அளிக்கும் காளிதாஸரின் சாகுந்தலம் —நாடகம்

சீஸன் டிக்கெட்டுகள்: ஸ்பெஷல் ரூ. 250; ஸ்பெஷல் ரிஸர்வ்டு ரூ.100; முதல் வகுப்பு ரூ. 40; 2-வது வகுப்பு ரூ. 25; கன்ஸெஷன் ரூ. 10 (முதல் வகுப்புட்பட்டு)

சீஸன் டிக்கெட்டுகள் கிடைக்குமிடம்: மியூஸிக் அகாடமி ஆபீஸ், 115-E, மௌப்ரேஸ் ரோடு, சென்னை-14; ரசிக ரஞ்சனி சபா, மயிலாப்பூர், சென்னை-4; ஸாயிகான ஸபா, சென்னை-4

மைக் & லவுட்ஸ்பீக்கர் ஏற்பாடுகள்: அசோசியேட்டட் ரேடியோ எஞ்ஜினீயர்ஸ், 20, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை-4

வரிசையும்—
கோர்வையும்!

ஆல்வின் ஸ்டீல் ராக்குகளை, அடிக்கடி கையாளுவதற்கு ஏற்றவகையில், கடிதங்கள் தஸ்தாவேஜுகள் ஆகியவற்றை வரிசைக்கிரமத்தில் கோர்வையாகச் சேர்த்து வைப்பதற்கும் ஆபீஸ்களின் இன்றியமையாத சிறிதளவு இடத்தையும் வீணாக்காமல் உபயோகித்துக்கொள்வதற்காக அமையுங்கள்! அறைகள் கொண்டதும் அறை இல்லமாலும் கிடைக்கின்றன. அவற்றை சுலபமாகப் பொருத்துவதற்கும் கழற்றுவதற்கும் முடியும். தனித்தனி ஆபீஸ்களுக்குப் பொருத்தமான எந்த திட்டத்திற்கும் ஏற்றவாறு அவற்றை அமைத்துக் கொள்ளலாம். இந்த ராக்குகளை அமைப்பது மூலம் அலுவலாளரின் வேலைத்திறன் அதிகமாகும்: சீக்கிரமும் சௌகரியமுமான வழி உண்டாவதுடன் தாமதமும் தவிர்க்கப் படும். நீடித்து உழைக்கும் கவர்ச்சி கொண்ட தோற்றமுள்ள ஆல்வின் ஸ்டீல் ராக்குகள், பைல்களைக் கோர்வையாக வைப்பதற்கும், முக்கியமான காகிதங்களையும் தஸ்தாவேஜுகளையும் சேகரம் செய்வதற்கும் சிறப்பு மிகு-இன்றியமையாத சாதனங்களாகும்.



திட்ட அமைப்பிற்கும் நீடித்த உழைப்பிற்கும்

ஆல்வின்

ஹைதராபாத் ஆல்வின் மெட்டல் ஒர்க்ஸ் லிட்.,
சனத்நகர், ஹைதராபாத்-18.

AIP/HAMW-5/61 TM

ஷோ ரூம்: (1) ஸ்வராஜ் மான்ஷன்ஸ், மவுண்ட் ரோடு, சென்னை
(2) B-216, கன்பவுண்டரி ரோடு, ஹைதராபாத்

டீலர்கள்

ரெப்ரிஜிரேடர்ஸ் & ஹோம் அப்ளையன்ஸஸ் (மைசூர்) ஏஜன்ஸீஸ், 5, ரெஸிடென்ஸி ரோடு, பெங்களூர் * ரெப்ரிஜிரேடர்ஸ் & ஹோம் அப்ளையன்ஸஸ் (மைசூர்) ஏஜன்ஸீஸ், 1124, ஸ்ரீராம்பேட்டை, மைசூர் * அமார் ஏஜன்ஸீஸ், மெயின் ரோடு, ஹிந்துபூர் K. B. பிரதர்ஸ் கர்னூல் * சீதாராம் டிரேடர்ஸ், 286/816, மெயின் ரோடு, சேலம் பாபுலர் எக்யூப்மெண்ட் கம்பெனி, 7/330, அவனாசி ரோடு, கோயமுத்தூர் * செண்பகம் மோட்டார்ஸ் 38, டி.பி.கே. ரோடு, மதுரை * ஏ.ஆர். ஏ. செண்பகநாடார் பிவிபி. வால சுப்ரமணிய நாடார் & கம்பெனி, 3/14, மக்'டொனால்ட் ரோடு, திருச்சிராப்பள்ளி சித்தூர் யுடிலிட்டி ஏஜன்ஸீஸ், நெடுஞ்சாலை, சித்தூர் * ஜெனரல் ஏஜன்ஸீஸ், காந்தி பஜார், பாலக்காடு * ஸ்ரீபாத நரசிம் நரசிம்ஹம் பிரதர்ஸ், ந. பெ. நெ. 10, ஜவஹர் தெரு, காக்கிநாடா * இந்தியன் ஏஜன்ஸீஸ், முகரம்ஜாஹி ரோடு, வாரங்கல் பாரத் இன்ஜினியரிங் கார்ப்பரேஷன் (விசாக்), மெயின் ரோடு, விசாகப்பட்டினம்

மணிபல்லவம்

10- காவியத்தில் கற்ற காதல்



நா. பார்த்தசாரதி

'நீங்கள் ஆசைப்படுகிற புதிய துறைகளில் உங்கள் நாட்கள் பெருக வேண்டும்'-என்று தன் தலைவி சுரமஞ்சரியை வாழ்த்திவிட்டு அப்பாற் சென்ற வசந்தமாலை சில நாழிகைகள் கழித்து மீண்டும் திரும்பி வந்தபோது சுரமஞ்சரியை முற்றிலும் புதிய சூழ்நிலையில் புதிய கோலத்தில் பார்த்தாள். அவளைச் சுற்றிலும் அந்தப் பெரு மாளிகையிலிருந்த பழைய ஏட்டுச் சுவடிகள் குவிந்துக் கிடந்தன.

சுரமஞ்சரியின் மாடத்தில் விதம்விதமான ஓவியங்கள் வகை வகையான காவியங்களின் ஏட்டுச் சுவடிகள், சீனத்துப் பட்டுக்கள், யவனக் கைவினைநயம் மிக்க நுண் பொருள்கள், பாண்டி நாட்டுச் சிற்பிகள் ஐம்பொன்னிற் செய்த அழகிய சிற்பங்கள் எல்லாம் நிறைய இருந்தன. ஒவ்வொரு வகைப் பொருளை ஒவ்வொரு காலத்தில் விரும்பித் தேடிச் சேர்த்திருந்தாள் அவள். இந்த வகையில் அவள் ஆசையோடு தேடிச் சேர்த்த கடைசிப் பொருள் அல்லது பொருளோடு தேடிச் சேர்த்த கடைசி ஆசை இளங்குமரனின் ஓவியம் தான். அந்த ஓவியத்துக்கு ஆசைப்

பட்ட பின் வேறு எதையும் தேடிச் சேர்க்கிற ஆசையே அவளுக்கு ஏற்படவில்லை. தொடர்ந்து வேறு ஆசைகளுக்கு மனம் தாவி விடாதபடி தன் எல்லையிலேயே மனத்தை நிற்கச் செய்யும் பரிபூரணமான ஆசைகளும் உலகத்தில் உண்டு. மலை உச்சியிலிருந்து உருண்டு விழுகிற கல் கடைசியாக 'இனிமேல் இதற்கு அப்பால் உருள முடியாது' என்பதுபோல ஒரு நிலையாகத் தங்கிவிடுகிற எல்லையும் உண்டு அல்லவா? இளங்குமரன் என்ற எல்லையில் சுரமஞ்சரியும் அப்படித்தான் கடைசியாகவும் நிறைவாகவும் தன் நினைவைத் தங்க விட்டு விட்டாள். அந்த எல்லைக்கு அப்பால் அதைவிட நிறைவாகவோ அதை விட அழகாகவோ ஆசைப்படுவதற்கு வேறு எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை அவளுக்கு. பண்ணோடு கலந்து நின்று இனிமை தரும் இசையைப் போல் அதற்கப்பால் விலகாமல் அதிலேயே பொருந்தி விட்டது அவள் ஆசை. தன்னுடைய பேதைப் பருவத்தில் உடம்பை அழகு செய்யும் பட்டுக்களுக்கும், அணிகலன்களுக்கும் வகை வகையாக ஆசைப் பட்டிருக்கிறாள் அவள். நினைவு தெரிந்து அறிவு வளர்ந்த பின் சுவடிகளுக்கும் ஓவியங்களுக்கும் ஆசைப் பட்டிருக்கிறாள். இந்த ஒவ்வொரு வகை ஆசையிலும் மனம் பித்தேறி அழுந்தியதைப் போலவே ஒரோரு சமயங்களில் சோர்ந்து சலித்துப் போகிற அநுபவமும் அவளுக்கு ஏற்பட்டிருக்கிறது. வீதி யெல்லாம் சுற்றிவிட்டு நிலைக்கு வந்த தேரின் சக்கரத்தில் அப்போது தரையைத் தீண்டிக் கொண்டிருக்கிற பகுதி எதுவோ அதுவே நிற்குமிடமாகி விடுவது போல் முன்பு சேர்த்த சுவடிகளை யெல்லாம் ஊன்றிக் கற்க வேண்டுமென்ற ஆவலை அன்று அவள் அடைந்திருந்தாள். இளமையில் காவிரிப்பூம் பட்டினத்திலேயே புகழ் பெற்ற பெரும் புலவர் ஒருவரைக் கொண்டு தந்தையார் அவளுக்கும் வானவல்லிக்கும் இலக்கியங்களையும், காவியங்களையும் கற்பிக்க ஏற்பாடு செய்திருந்தார். அப்போது அவற்றைக் கற்ற காலமும் குறைவானது. கற்பிக்கப்பட்ட சுவடிகளும் குறைவானவை. தகடாக அறுத்து இழைத்த யானைத் தந்தத்திலும் மெல்லிய சந்தனப் பலகைகளிலும் உறையிட்டுப் பட்டு நூல்களால் இறுக்கிக் கட்டி அடுக்கப்பட்டிருந்த அந்த ஏட்டுச் சுவடிகளின்மேல் இன்று மறுபடியும் சுரமஞ்சரியின் கவனம் சென்றது. பெரு மாளிகையின் சூழ்ச்சிகளையும் தந்திரங்களையும் மறந்துவிட்டு நினைவுகளின் தரத்தையும் எண்ணங்களின் உயரத்தையும் வளர்த்துக் கொள்வதற்காகக் காவியங்களிலும், இலக்கியங்களிலும் தன் மனத்தைச் செலுத்த வேண்டுமென்று தோன்றியது சுரமஞ்சரிக்கு. தான் ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறவருடைய மனத்தின் உயரத்துக்குச் சமமாக இல்லாவிட்டாலும் மிகவும் குறைவா யில்லாமல் தன்னுடைய எண்ணங்களை வளர்த்துக் கொள்வதற்கு நினைத்தாள் அவள்.

மிகச் சிறிய கிளையில் தொங்கும் கனமான பெரிய பழத்தைப்போல் அவள் மனம் தாங்கிக் கொண்டிருக்கிற ஆவல் அவளுடைய ஆற்றலைக் காட்டிலும் பெரிதா யிருந்தது. அந்த ஆசைக்கு உரியவனோ, 'பெண்ணே! உன்மேல் கருணை செலுத்த முடியும். அன்பு செலுத்த முடியாது' என்று இறுமாப்போடு மறுமொழி சொல்கிறவனாக இருக்கிறான். அந்த இறுமாப்பை இளக்குவதற்குத் தன்னால் முடியுமா என்று அவள் பயந்த காலமும் உண்டு.

முதன் முதலாகக் காவிரிப்பூம் பட்டினத்துக் கடற்கரையில் யவன மல்லனை வெற்றி கொண்ட வீரனாக அவனைச் சந்தித்தபோது காவிரிப்பூம் பட்டினத்திலேயே இமிர் மிகுந்த அழகனாக அவனை உணர்ந்தாள் அவள். அடுத்த முறை கப்பல் கரப்புத் தீவின் தனிமையில் சந்தித்தபோது தன்மானம் நிறைந்த இளைஞனாக அவனை உணர்ந்தாள். அதற்குப் பின்பு நெடுங்காலத்துக்கு அப்புறம் நாளங்காடியில் சமய வாதம் புரியும் ஞானச் செல்வனாகச் சந்தித்தபோது, 'பிறருடைய துக்கத்துக்கு இரங்கும் மனம் தான் செல்வம்' என்று கூறி அருள் நகை பூக்கும் கருணை மறவனாகச் சந்தித்தாள். அதற்கும் அப்புறம் தன்னுடைய பூக்குடலையிலிருந்து அவனைக் கொல்லப் புறப்பட்ட பாம்பைக் கண்டு எல்லாரும் தன்மேல் சீறியபோது புன்னகையோடு தன்னைப் பொறுத்த அவனிடம், 'நீங்கள் மகாகவிகளுக்கு உத்தம நாயகனாகிக் காவியங்களில் வாழ வேண்டிய பேராண்மையாளர்' என்று தானே அவனைப் புகழ்ந்து கூறியதையும் நினைத்துக் கொண்டாள் சுரமஞ்சரி. அந்தக் கருணை மறவன்மேல் தான் கொண்டிருக்கிற காதல் காவியங்களில் வருகிற அன்பைப் போல் அழியாததாகவும் நிலையான தூய்மை உடையதாகவும் இருக்க வேண்டும் என அவள் மனத்தில் உறுதி பிறந்திருந்தது. அந்த உறுதி ஒன்றுதான் அவள் மனத்தின் ஆசை நிரந்தரமாக நின்ற கடைசி எல்லையாக அவனை ஆக்கி யிருந்தது.

இலக்கியங்களையும், காவியங்களையும் தங்கள் உறவையும் எண்ணிப் பார்த்துப்

பழகிய காரணத்தால் ஏட்டுச் சுவடிகளில் வாழும் அந்த உணர்வுகளின் மணத்தில் திளைத்துத் திளைத்துத் தன் மனம் நிற்கும் எல்லையைத் தனது தவமாகவே ஆக்கிக் கொண்டு விடவேண்டும் என்ற பிடிவாதம் பிறந்தது அவளுக்கு. இந்தப் பிடிவாதம் பிறந்த பின்னர் தான் இருக்கும் மாடம், தன்னோடு துணையிருக்கும் வசந்தமாலை, தன் தந்தை, நகைவேழம்பர் எல்லாரும் எல்லாமும் அவளுக்கு மறந்தே போயினர்.

அன்று காலையில் சுரமஞ்சரியின் கையிற் கிடைத்த முதற் சுவடியில் அவள் மனத்தின் தவிப்புக்களையே மேலும் வளர்ப்பது போல ஒரு பழைய பாடல் வந்து வாய்த்தது.

"வைகல்தோறும் இன்பமும் இளமையும்
எய்கணைநிழலின் கழியும், இவ் உலகத்துக்
காணீர் என்றலோ அரிதே அதுநனி
பேணீர் ஆகுவிர்..."

ஒரு தலைவனிடம் அவனாற் காதலிக்கப்படும் காதலியின் தோழி ஒருத்தி சொல்வதாக இப்பகுதி அமைக்கப்பட்டிருந்தது. "வேகமாகத் தொடுக்கிற அம்பின் நிழல்போல இந்த வாழ்க்கையும் இதன் இளமைப் பருவத்துச் சுகங்களும் உண்டாகிய வேகம் தெரிவதற்கு முன்பே மறைந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய உலக வாழ்வின் நிலையை நீங்கள் காணாதவர் இல்லை. இதை உணர்ந்து என் தலைவியை விட்டுப் பிரியாமல் அவள் மேல் நீங்கள் அன்பு செலுத்த வேண்டும்" என்று தன் தலைவியின் சார்பில் அந்தப் பாடலில் வருகிற தோழி தலைவனிடம் கூறிவேண்டிக் கொள்வதாக இருந்த இப் பகுதியை ஏட்டிலிருந்து சுரமஞ்சரி படித்துக் கொண்டிருந்த போதுதான் வசந்தமாலையும் அவளருகே வந்து நின்றாள்.

'வில்லில் நாணேற்றி வேகமாகத் தொடுக்கப்பட்டுச் செல்கிற அம்பின் நிழலைப் போல் இந்த வாழ்க்கையும் இதன் இளமைப் பருவத்துச் சுகங்களும் வேகமாக உண்டாகிய சுவடு தெரிவதற்கு முன்பே அழிந்து கொண்டிருக்கின்றனவே!' என்ற கருத்துள்ள பகுதியை இரண்டாம் முறையாகப் படிக்கும் போது சுரமஞ்சரிக்குக் கண் கலங்கி விட்டது. இதை இப்படியே அவரிடம் யாராவது போய்ச் சொல்ல மாட்டார்களா? இதையும் சொல்லி என் துக்கத்தையும் விவரித்து அவரை என் மேல் அநுதாபம் கொள்ளச் செய்யும் திறமை வாய்ந்த தோழிகள் யாருமே எனக்கு இல்லையா?' என்று எண்ணி எண்ணி அந்தப் பகுதிக்கு மேல் பாடலில் மனம் செல்லாமல் இளங்குமரனுடைய முகத்தை நினைத்துக் கொண்டாள் சுரமஞ்சரி.

மூன்றாவது முறையாக இதே பகுதியைத் தன் தோழி வசந்தமாலைக்கும் படித்துக் கூறிவிட்டு, "இப்படித் திறமையாக அவரிடம் பேசி என் உணர்ச்சிகளையெல்லாம் அழகான உவமானத்தினால் விளக்குவதற்கு உன்னைப் போல் ஒரு தோழியால் முடியுமோ, வசந்தமாலை!" என்று ஏக்கத்தோடு அவளைக் கேட்டாள் சுரமஞ்சரி.

வசந்தமாலை இதற்கு என்ன மறுமொழி கூறுவதென்று அறியாமல் திகைத்தாள். சுரமஞ்சரி அவளுடைய திகைப்பைப் பார்த்து விட்டு, "நான் சொல்லியதே உனக்குப் புரியவில்லை போலிருக்கிறதே வசந்தமாலை!" என்று தோழியைக் கேட்டாள்.

"புரிகிறது அம்மா! ஆனால் உங்கள் துன்பத்தை அவரிடம் திறமையாக எடுத்துச் சொல்வதற்காகவாவது நான் ஒரு கவியாகப் பிறந்திருக்க வேண்டும். ஏனென்றால் துன்பங்களையும் தவிப்புக்களையும் ஏக்கங்களையும் கூட அழகாகச் சொல்லுகிற திறமை கவிகளுக்கு மட்டும்தான் இருப்பதாகத் தெரிகிறது. அடுத்த பிறவியிலாவது உங்களுக்குத் தோழியாகப் பிறந்து கவியாகவும் விளங்கி நீங்கள் அன்பு செலுத்துகிறவரிடம் போய் உங்களுக்காக உவமைகளையும், உருவகங்களையும் கூறி அவருடைய மனத்தை இளக்க வேண்டும் போல எனக்கு ஆசையாயிருக்கிறது."

"போடீ! வேலையற்றவளே. இந்தப் பிறவியின் ஆசைகளே இன்னும் தீர்ந்தபாடில்லை. அதற்குள் நீ அடுத்த பிறவிக்குப் போய்விட்டாயே?" என்று தோழிக்குப் பதில் கூறியபோது சுரமஞ்சரியின் கண்களில் தெரிந்த அழுகை குரலிலும் ஒலித்தது. அப்போது அவள் கையிலிருந்த அந்த ஏடு கண்ணீரில் நனைந்து கொண்டிருந்தது. தன் தலைவியை அழச் செய்த அந்த ஏடுகளின் மேல் கோபம் கோபமாக வந்தது வசந்தமாலைக்கு. அதே சமயத்தில் தலைவி எதற்காக அழுகிறாள் என்ற சந்தேகமும் அவளுக்கு ஏற்பட்டது. ஏட்டிலே கண்ட பாட்டுக்காக அழுகிறாளா, பாட்டிலே திகழும் கருத்தால் தன் மனம் எவனை நினைவு கூர்ந்ததோ அவனுக்காக அவனை எண்ணி அழுகிறாளா, என்று ஒன்றும் தெளிவாகப் புரியாமல் மருண்டாள் வசந்தமாலை. இதுவரை என்றும் ஏற்பட்டிருக்க முடியாத நிறைந்த அநுதாபம் அன்று வசந்தமாலைக்குத் தன் தலைவிமேல் ஏற்பட்டது.

பண்டிட் டி.கோபாலாச்சார்லுவின்

ஜீவாம்ருதம்

ஆரோக்யத்துக்கும் பலத்துக்கும்

ஆயுர்வேதாஸ்ரமம் (பிரைவேட்) லிட்.
மதராஸ்-17

பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிட்.

M. S. "மொகம்மதி"

சென்னையிலிருந்து	நாகப்பட்டினத்திலிருந்து
1 ஜனவரி, 1962	2 ஜனவரி, 196.

பங்க் வசதியுள்ள டிக்கட்டுகள் சாப்பாட்டுடனோ அல்லது சாப்பாடின்றியோ கிடைக்கும்.

பிரயாணக் கட்டணங்கள் :

	உணவுடன்	உணவு இல்லாமல்
சென்னை/பினாங்கு	ரூ. 135/-	ரூ. 110/-
சென்னை/சிங்கப்பூர்	ரூ. 167/-	ரூ. 132/-
நாகப்பட்டினம்/பினாங்கு	ரூ. 130/-	ரூ. 105/-
நாகப்பட்டினம்/சிங்கப்பூர்	ரூ. 159/-	ரூ. 127/-

பிரயாணக் கட்டணங்களுடன் கீழ்க்கண்ட கட்டணங்களும் வசூலிக்கப்படும்

குவாரண்டைன் கட்டணம் :	வயது வந்த நபர்	...	ரூ. 69/-
	மைனர்	...	ரூ. 36/-
	குழந்தை	...	ரூ. 20/-
சென்னை துறைமுக பாக்கேஜ் கட்டணம்	பிரயாணி ஒன்றுக்கு		ரூ. 1/-

படகு வாடகை (நாகப்பட்டணத்திலிருந்து கப்பல் ஏறும் பிரயாணிகளுக்கு)

வயது வந்தவருக்கு	ரூ. 2.50
சிறுவர் ஒவ்வொருவருக்கும்	ரூ. 1.25

பினாங்கு, போர்ட்ஸ் வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா மற்றும் நியூஜிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

இதர விவரங்களுக்குத் தயவுசெய்து ஏஜண்டுகளுக்கு எழுதவும்

பின்னி & கோ. (மதராஸ்) லிமிடெட்
7. அரமனைக்காரத் தெரு, சென்னை - 1
டெலிபோன் : 29171

மதுரா கம்பெனி பிரைவேட் லிட்.
முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்
டெலிபோன் : 56

ஸ்லோன்ஸ் பாமை உபயோகித்து வலியை உடனே நிறுத்துங்கள்



தசைவலிகள், சுளுக்கு, கழுத்துப்பிடிப்பு, முதுகுவலி, கீல்வாதவலி, நரம்புவலி மற்றும் இடுப்புப்பிடிப்பு முதலானவைகளுக்கு ஸ்லோன்ஸ் பாமை வலிக்கும் பாகத்தின் மேல் தடவவும். உடனே இதமளிக்கும் இதன் ஆவி உள்ளே சென்று வலியுள்ள பாகங்களில் பரிசுத்தமான ரத்த ஓட்டம் இருப்பதற்கு உதவுகிறது. உடனடி நிவாரணம் பெற வீட்டில் எப்பொழுதும் ஒரு ஜாடி ஸ்லோன்ஸ் பாமை கைவசம் வைத்திருங்கள்.

கீல் வாதம் * சுளுக்கு
தசைவலிகள் இவற்றிற்கு ஏற்றது

வார்னர்-லாம்பர்ட் பார்மஸியூடிகல் கம்பெனி
(யு.எஸ்.ஏ.வில் வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.)

பருக்கள் தீராத பிரச்னையாயிருந்தன...



எல்லா கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்

DZ-929 TM

11. தேடிக் குவித்த செல்வம்

பொழுது புலர்ந்ததும் புலராததுமாக வந்து நகைவேழம்பர் நினைவுபடுத்திய பழைய நினைவுகளால் பெருநிதிச் செல்வர் சாகின்ற காலத்து வேதனைகளையெல்லாம் உயிருடனேயே அப்போது அடைந்தவராக நடுங்கி நின்றார். ஆந்தை விழிப்பது போல அவருடைய கண்கள் புரண்டு உருண்டு விழித்தன. முகத்திலும் பிடரியிலும் வேர்த்துக் கொட்டியிருந்தது. மனத்தின் கருத்தோடு ஒத்துழைக்காத நலிந்த குரலில் அவர் நகைவேழம்பருக்குப் பதில் கூறினார்.

''புரிந்து கொள்ளாமலே நான் இத்துணை நாட்களாகப் பாம்புக்குப் பால் வார்த்து விட்டேன்.''

''கடைசி கடைசியாக அந்தப் பாலில் நஞ்சைக் கலந்து வார்த்துக் கொடுத்த நானையும் சேர்த்துத் தான் சொல்கிறீர்களென்று நினைக்கிறேன். நஞ்சுடையதனைக் கொல்வதற்கு இன்னொரு நஞ்சு பயன்படாதுஎன்பதைநீங்கள் மறந்திருக்கக் கூடாது. சொந்த உயிரையும் அந்த உயிரின் நம்பிக்கைகளையும், உங்களிடம் கொடுத்து விட்டு ஏமாறுவதற்கு எல்லாருமே காலாந்தகனாக இருக்க மாட்டார்கள் ஐயா! மேலும் நஞ்சுடைய பொருளுக்குப் புதிய நஞ்சைக் கலந்து கொடுப்பதனால் நலிவு ஏற்படுவதற்குப் பதில் பலம்தான் பெருகும்.''

''உண்மைதான்! பலம் பெருகியிருப்பதை இதோ இப்போது நீங்கள் எனக்கு முன்னால் வந்து நிற்கிற விதத்திலிருந்தே நான் தெரிந்து கொள்கிறேன், நகைவேழம்பரே!''

இதைக் கேட்டு நகைவேழம்பர் அந்தப் பெருமாளிகைக் கட்டிடமே அதிர்ச்சி அடைகிறாற்போல இடி இடியென்று சிரித்தார்.

''தெரிந்து கொள்ளுங்கள்! தெரிந்து கொள்ளுங்கள்! நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள். இன்னும் நான் உங்களைத் தெரிந்து கொள்ளச் செய்ய வேண்டியவை நிறைய மீதமிருக்கின்றன. கொலையும், கொள்ளையும், துரோகமும், வஞ்சகமும் குறைவில்லாமல் புரிந்து உங்களுடைய நிலவறையில் நீங்கள் தேடிக் குவித்திருக்கிறீர்களே அந்தச் செல்வம் ஒன்று மட்டும்தான் உங்களுடைய வலிமை.''

''ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் உன்னைப்போல் ஓர் அசுரப் பிறவியின் கொடிய நட்பு எனக்குக் கிடைத்திருக்கவில்லையானால் நான் நியாயமானவனாகவும், இந்த வஞ்சகமான வலிமை இல்லாது ஏதோ ஒரு வகையில் பலவீனனாகவும் எல்லாரையும் போல வாழ்ந்திருக்கலாம்.'' — எதிரே நிற்கிற ஒற்றைக் கண்ணனிடம் பெருநிதிச் செல்வருக்கு மதிப்புக் குறைந்துபோய் விட்ட காரணத்தினால் 'நீ உன்னை' என்று ஏக வசனத்தில் அலட்சியமாகப் பேசத் தொடங்கி விட்டார். அதனால் இந்தப் பேச்சு எதிராளியைக் கொதித்தெழச் செய்தது.

''இந்த அசுரப் பிறவியின் சூழ்ச்சிகள் கற்பித்த வழியில் போய்த்தான் சோழ மன்னரிடம் பெருமதிப்புக்குரிய எட்டிப் பட்டம் பெற்றீர்கள். இந்த அசுரப் பிறவியின் சூழ்ச்சியைக் கேட்டுக் கேட்டுத் தெரிந்து கொண்ட வழிகளில் போய்த்தான் உங்களுடைய அந்தரங்க நிலவறையில் தாழிதாழியாகப் பொன்னும் மணியும் முத்தும் குவித்திருக்கிறீர்கள். இந்த ஒற்றைக் கண்ணால் நான் உலகத்தைப் பார்த்துத் தெரிந்து கொண்ட அநுபவங்களிலிருந்துதான் இரண்டு கண்களால் கூடப் பார்த்து முடிக்க இயலாத அவ்வளவு செல்வத்தை உங்களுடைய நிலவறையில் நிறையக் குவித்திருக்கிறேன்.''

எதிரி திரும்பத்திரும்பத் தன்னுடைய செல்வத்தைப் பற்றியே நினைவூட்டிப் பேசியதைக் கேட்டுப் பெருநிதிச் செல்வருக்குப் பொறுமை போய்விட்டது. அளவற்ற ஆத்திரம் பிறந்தது அவருக்கு.

''பேயே! செல்வம் செல்வமென்று பறக்கிறாயே. நிலவறையைத் திறந்து விட்டுவிடுகிறேன். உனக்கு வேண்டியதை அதிலிருந்து வாரி எடுத்துக் கொண்டு போய் விடு. மறுபடி நீ என் முகத்தில் விழிக்காதே...'' என்று கூறியவராகத் தம்முடைய பள்ளியறையிலிருந்தே நிலவறைக்குள் போவதற்குரிய வழியாகக் கீழே இறங்கும் படிக்கட்டில் நகைவேழம்பரையும் கைப்பற்றி இழுத்துக் கொண்டு வேகமாகப் பாய்ந்து இறங்கினார் பெருநிதிச் செல்வர்.

''கையை விடுங்கள். நான் வாரிக் கொண்டு போவதற்கு உங்களுடைய அநுமதி எதற்கு? நானே அதைச் செய்து கொள்கிறேன்'' என்று தன் கையைப் பெருநிதிச் செல்வருடைய பிடியிலிருந்து உதறிக் கொண்டு அவரைப் பின் தொடர்ந்தார் நகைவேழம்பர். நிலவறைக்குச் செல்லுவதற்காக ஒவ்வொரு படியாய் மிதித்துக் கொண்டு கீழே இறங்கியபோது, மிதிக்கின்ற ஒவ்வொரு மிதியும் நகைவேழம்பருடைய கழுத்தில்

படுவதுபோல் பாவித்துப் பல்லைக் கடித்துக் கொண்டு சென்றார் பெருநிதிச் செல்வர். பெருநிதிச் செல்வரையே அழுத்தி மிதிப்பதாக நினைத்துக்கொண்டு சென்றார் நகைவேழம்பர். கீழே நிலவறை வந்தது. செல்வம் குவிந்திருக்கிற இடத்துக்கே மணமும் உண்டு போலும். சந்தனமும், அகிற் புகையும், பச்சைக் கற்பூரமும் அந்தப் பகுதியிற் குவிந்திருக்கிற செல்வத்தின் மிகுதியை எடுத்துச் சொல்லுவன போல் நறுமணம் பரப்பிக் கொண்டிருந்தன. தரையில் விலைமதிப்பற்ற சீனத்துப் பட்டுக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது.

என்றாலும் அப்போது அந்த நிலவறைக்குள் புகுந்த இருவருக்கும் நறுமணத்தை உணர்கிற எண்ணமோ, பட்டுக் கம்பளத்தின் மென்மையை உணர்கிற நளின உணர்வோ சிறிதும் இல்லை. அந்த இருவருடைய நிலையையும் கண்டு சந்தர்ப்பம் தெரியாமல் பெரியவர்கள் முன்னால் சிரித்து அவர்களுடைய கோபத்தைக் கிளறிவிடுகிற சிறு பிள்ளைகளைப் போல் அங்கே குவிந்திருந்த முத்துக்களும், மணிகளும், பொற்காசுகளும் ஒளி மின்னிச் சிரித்தன. அந்த இரண்டு பேருடைய கோபத்துக்கும் நடுவே அவை இயல்பாக மின்னுவது கூட அதிகமான துடுக்குத்தனமாகத் தோன்றுவது போலிருந்தது. அவர்கள் இருவருக்கும் வழக்கமான நெஞ்சுத் துடிப்பை விட அதிகமான விரைவோடு மூச்சும் இதயமும் அடித்துக் கொண்டன. விநாடிக்கு எத்தனை முறை துடிக்கிறது என்று நினைக்கவும் முடியாத வேகத்தோடு இதயம் துடித்தது. அறையில் மூலைக்கு மூலை இறைந்து கிடந்த தனித்தனி மாணிக்கக் கற்கள் எல்லாம் செக்கச் செவேரென்று மின்னியபோது அவை அத்தனையும் தனித்தனியே நகைவேழம்பரின் ஒற்றைக் கண்ணைத் தோற்றின பெருநிதிச் செல்வருக்கு. 'நிலவறையின் நான்கு புறமும் எவராவது முரட்டுக் கொலையாளிகளை மறைவாக இருக்கச் செய்துவிட்டுத் தம்மைத் தீர்த்து விடுகிற அந்தரங்க எண்ணத்தோடு அங்கே அவர் அழைத்து வந்திருப்பாரோ?' என்று சந்தேகம் கொண்டவராய் ஒற்றைக் கண்ணினால் நான்கு புறமும் கூர்மையாகப் பார்த்துக் கொண்டே ஒவ்வோர் அடியாகப் பாதம் பெயர்த்து வைத்து உள்ளே நடந்தார் நகைவேழம்பர். 'பாம்பின் கால் பாம்பறியும்' என்பதுபோல் பெருநிதிச் செல்வரின் சூழ்ச்சிகள் நகைவேழம்பருக்கு மனப்பாடம். எப்போதும்





54 வருடங்கள் நிகரற்ற சேவை

இந்தியன் பாங்க்

லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ் :

இந்தியன் சேம்பர் பில்டிங்ஸ், சென்னை-1

- கரண்டு அக்கவுண்டுகள்
- ஸேவிங்ஸ் பாங்க் அக்கவுண்டுகள்
- ரிக்கரிங் டிபாஸிட திட்டம்
- நீடித்த, குறைந்த கால டிபாஸிட்டுகள்
- 3 வருட காஷ் ஸர்டிபிகேட்டுகள்

டைரக்டர்கள் போர்டு:

L. அழகுசுந்தரம் செட்டியார், மில் அதிபர், மதுரை

P. V. RM. குழந்தையன் செட்டியார், பாங்கர், ராயவரம்

K. பாலசுப்பிரமணிய அய்யர், அட்வகேட், சென்னை - 4

ராவ் ஸாஹேப் E. M. முத்தப்பா செட்டியார், பாங்கர், புதுவயல்

குமாரராஜா M.A.M. முத்தையா செட்டியார், "செட்டிநாடு ஹவுஸ்", சென்னை

R. K. வெங்கடாசலம், மர்ச்செண்ட், கோயமுத்தூர்

Dr. P. V. ராஜமன்னார், ரிட்டயர்ட், பிரதம நீதிபதி, சென்னை ஹைகோர்ட், சென்னை

ராவ்பகதூர் T. S. கச்சாபிகேச முதலியார், கீழ்ப்பாக்கம், சென்னை

O. M. SP. L. M. மெய்யப்ப செட்டியார், பாங்கர், தேவகோட்டை

Dr. ராஜா சர் M. A. முத்தையா செட்டியார், "செட்டிநாடு ஹவுஸ்", சென்னை

C. ராமசுப்பன், முன்னாள் சேர்மன் டாரிப் கமிஷன், சென்னை

ராமதாஸ் புருஷோத்தம தாஸ், மர்ச்செண்ட் & பாங்கர், சென்னை

ஜி. எஸ். சுந்தரம்
காரியதரிசி

இயல்பிலேயே வேறு வழியின்றி நிரந்தரமான கோழையாக இருப்பவனைக் கண்டு பயப்பட வேண்டுவதில்லை. சில சந்தர்ப்பங்களைச் சமாளிப்பதற்காக மட்டும் கோழைபோல நடித்து விட்டுப் பின்பு எதிரியைக் கருவறுக்க நேரம் பார்க்கும் நடிப்புக் கோழைகளை நம்பக் கூடாது. இத்தனை ஆண்டுகள் பழகியும் பெருநிதிச் செல்வர் முதல் வகைக் கோழையா, இரண்டாவது வகைக் கோழையா என்பதை முடிந்த முடிவாக அறிந்து கொண்டுவிட முடியாமல் தினறினார் நகைவேழம்பர். காரணம் அவர் இரண்டு வகைக் குணங்களையும் மாற்றி மாற்றிச் செயல்படுத்தி யிருக்கிறார். அதில் எது மெய், எது போலி என்று புரிந்து கொள்வது தந்திரத்தில் தேர்ந்தவராகிய நகைவேழம்பருக்கே அரிதாயிருந்தது. அதனால்தான் அன்று காலை நேரத்தில் அவரோடு நிலவறைக்குள் புகுந்தபோது மிக நுணுக்கமான தற்காப்பு நினைவுடனேயே அங்கு நுழைய வேண்டி யிருந்தது நகைவேழம்பருக்கு.

செல்வக் களஞ்சியமான காவிரிப்பூம் பட்டினத்தையே சோழ மன்னனிடமிருந்து விலைபேசி வாங்கினாலும் அதற்கு அப்புறமும் மீதமிருக்கக்கூடிய அவ்வளவு செல்வம் வேறு வேறு வடிவில் அங்கே குவிந்து கிடந்தது. இருவரும் அவற்றை எதிரெதிர்த் திசைகளிலே இருந்து பார்த்தபடி இருந்தனர். இருவருடைய நெஞ்சுத் துடிப்பையும் கேட்டு முத்துக்கள் மின்னுவதற்குப் பயந்தனவோ என இருந்தன. இருவரும் மூச்சு விடுகிற ஒலி வெகுண்டெழுந்த சர்ப்பங்கள் சீறுவது போல் ஒலித்தது.

ஒவ்வொரு விநாடியும் தன்னைக் கொல்லப் பாயும் முரட்டுக் கரங்களையே நான்கு புறத்திலிருந்தும் எதிர்பார்க்கிற தற்காப்போடு நின்றார் நகைவேழம்பர். பல விநாடிகள் ஒரு விளைவும் இல்லாமல் மௌனமாகக் கழியவே தான் எதிர்பார்த்தது போல எதுவும் நடக்கிற சூழ்நிலை அங்கு இல்லை என்று அநுமானம் செய்து கொண்டு தைரியம் அடைந்தார் நகைவேழம்பர். மெல்லத் தொண்டையைக் கனைத்து விட்டுக் கொண்டு கை விரல்களைச் சொடுக்கினார். அப்போது எதிரேயிருந்து பெருநிதிச் செல்வருடைய குரல் ஒலித்தது.

''செல்வம் செல்வம் என்று நீ பறந்த பேராசை திரும்படி உனக்கு வேண்டியதை வாரிப் போகலாமே இங்கிருந்து?''

''என்ன சொல்கிறீர்கள்?''

தனக்குக் காது கேட்காதது போல் அதை மீண்டும் சொல்லும்படி பெருநிதிச் செல்வரைக் கேட்டார் நகைவேழம்பர். (தொடரும்)

காஸ்ட்ரால் பராமரிப்பு

உங்கள் எஞ்சினைப் பாதுகாக்கிறது



பியட், அம்பாஸ்டர் மற்றும் ஸ்டாண்டர்ட்
கார்கள் சொந்தக்காரர்களுக்கு

இலவசம்!

லூப்ரிகேஷன்
அட்டவணை



எப்பொழுதும்
காஸ்ட்ரால்
என்று பெயர்
சொல்லிக்
கேளுங்கள்.

Castrol
MOTOR OIL

இப்பொழுதே இந்தக் கூப்பனைத் தபாலில் அனுப்புங்கள்:

தயவு செய்து.............லூப்ரிகேஷன அட்டவணைப்
பிரதியை அனுப்பவும்

பெயர்...

விலாசம்...

கூப்பனை அனுப்புமிடம் காஸ்ட்ரால் லிட்.,
G. P. O. பெட்டி நி. 430, பம்பாய்—6.



பேசிப் பயன் என்னடி?

[முதல் தேதி.

குடும்ப பட்ஜெட்டைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கும் ராகவனுடைய மூளை குழம்பிக் கொண்டிருக்கிறது.

கொத்தாக ஒரு பிடி மயிரைக் கரத்தில் சிக்க வைத்துக் கொண்டு, பால் கணக்குப் பார்க்கிறான் அவன்.

கடிகாரத்தின் பெண்டுலத்தைப் போல அசைந்து அசைந்து ஒய்யாரமாக நடந்து வருகிறாள் அவன் மனைவி. மேஜைமேல் ஊன்றியிருந்த அவன் முழங்கையை உரிமையுடன் ஒரு தட்டுத் தட்டி அப்பால் நகர்த்துகிறாள். இடுப்புக்கு ஒரு நொடிப்புக் கொடுத்து நாளெல்லாம் கண்டு மகிழக் கூடிய கவர்ச்சியான மேனியை மேஜைமேல் இறக்குகிறாள்.

ஆழாக்குகளைக் கூட்டிக் கொண்டிருக்கையில் அசந்தர்ப்பமாகக் குறுக்கே புகுந்த அலமேலுவை ஏறிட்டுப் பார்க்கிறான் ராகவன்.

அவள் மூக்கு நுனியில் அவனுடைய ஆள் காட்டி விரல் பதிந்து அழுந்துகிறது.]

அலமேலு: ஞாயிற்றுக்கிழமையாச்சே, சற்று நேரம் பேசிக் கொண்டிருப்போம்னு பார்த்தால், அதுக்குள்ளே மூணுக்குன்னு மூக்குக்கு மேலே கோபம் வருதே!

[சிரிக்கிறாள்]

ராகவன்: பால் கணக்காவது பாகற்காய் கணக்காவது; பின்னால் பார்த்துக் கொள்ளுகிறேன். இப்போ விட்டால் இந்தச் சிரிப்பு மறுபடியும் சுலபத்தில் கிடைக்குமா?....அலமேலு! நீ சிரிக்கறச்சே எவ்வளவு அழகாக இருக்கே தெரியுமா?

அல: நிஜமாவா?

ராக: ஆமாம்! யாராவது 'டூத்பேஸ்ட்' விளம்பரக்காரன் பார்த்தால் போதும்! டக்குன்னு ஒரு போட்டோ பிடிச்சுண்டு போயிடுவான், பார்த்துக்கோ!

அல: ஐயே! உங்களுக்குன்னு தோணறதே, யோசனை!

ராக: அப்புறம் நியூஸ் பேப்பரைப் பிரிக்கிறவனையெல்லாம் பார்த்து உன் முகம் இளித்துக் கொண்டிருக்கும்!

அல: [முகம் சிவக்க] கிருஷ்ணா! கிருஷ்ணா! உங்களோடே பேச ஆரம்பிச்சதே தப்பு போல இருக்கே! ஒரே பிதற்றல்...!

ராக: அம்மணியின் முகம் ஏன் இன்னிக்கு இவ்வளவு பிரசன்னமா இருக்கு?

அல: ஏதேது! மேலேமேலே சர்டிபிகேட்டு கொடுத்துண்டே போறேளே! எல்லாம் அந்தச் சோப்பு செய்த வேலே!

ராக: அப்படின்னு?

அல: ஒண்ணேகால் ரூபாய் சோப்பு தேச்சுண்டால் அதுக்கேத்த பலன் இல்லாமெ போகுமா? உங்க வாயிலிருந்தே பாராட்டு கிடைச்சுடுத்தே இன்னிக்கு!

ராக: என்ன!

[சரேலென்று அவன் எழுந்திருக்க நாற்காலி பின்னல் சரிந்து விழுகிறது.]

ராக: இந்த மளிகைக் கடை பில்லிலே ஒண்ணேகால் ரூபாய் சோப்பும் சேர்ந்திருக்குன்னு சொல்றே?

[அலமேலு நாற்காலியைச் சரி செய்து அவன் தோள்களைப் பற்றி உட்கார வைக்கிருள்.]

அல: ஒண்ணேகால் ரூபாய் சோப்புக்காக ஒன்பது ரூபாய் நாற்காலியை ஒடிச்சுடாதீங்கோ!

ராக: உளருதே! புதுக்குடித்தனம் ஆரம்பிச்ச சமயத்திலே—எட்டு மாசத்துக்கு முன்னடி—ஏலத்திலே எடுத்த மேஜை நாற்காலி தானே? இரண்டுமாய்ச் சேர்த்துத்தான் ஒன்பது ரூபாய்க்குத் தட்டிக் கொண்டு வந்தேன்; கொள்ளை மலிவு!

[அலமேலு தரையில் அவன் காலடியில் உட்காருகிருள். அவன் கைவிரல்களை ஒவ்வொன்ருகத் தொட்டுத் தொட்டுக் குழந்தை போல மனத்துக்குள் எண்ணிக் கொண்டே பேசுகிருள்.]

அல: பாவம்! என்ன போதாத காலமோ எவன் வீட்டுச் சாமானே ஏலத்துக்கு வந்துடுத்து. நீங்களென்னடாவென்ருல் பெருமைப் பட்டுக்கறேள். அந்த ஒன்பது ரூபாய்ப் பணமும் வரதட்சிணையிலே யிருந்துதான் வந்ததுங்கிறதை மறந்துட்டேளே!

ராக: [கரங்களைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு] ஏய்! நீ விஷயத்தை விட்டுட்டு வேறே எங்கேயோ போறே, கள்ளி! 'ஒண்ணேகால் ரூபாய் சோப்பு நமக்குக் கட்டி வருமா?' என்பதே இப்போதையப் பிரச்னை!

அல: எப்போ பார்த்தாலுமா அதை உபயோகிக்கப் போறேன்? முகத்துக்கு மட்டும்.... அதுவும் எப்பவாவது வெளியே கிளம்புகிற போதுதான்....

ராக: அப்படிப் பார்க்கப் போனுல் நானும் என்றைக்கோ ஒரு நாளைக்குத் தானே 'பீச் மெல்பா' சாப்பிடணும்னு நினைக்கிறேன்? ஒண்ணேமுக்கால் ரூபாய் பண்டம் வாங்கித் தின்ருல் கட்டி வராதுன்னு என் ஆசையைத் தியாகம் செய்து விடவில்லையா?

அல: யார் உங்களைத் தியாகம் பண்ணச் சொல்ரு? ஒண்ணுக்கு இரண்டா வேணுமானுலும் தாராளமாய்ச் சாப்பிடுங்கோ. என்னையும் பின்னேடு அழைச்சுண்டு போகணும்னு தானே சொல்றேன். பதினேஞ்சு ரூபாய் எடுத்துண்டு புறப்படுங்கோ. ஆளுக்கு இரண்டு பீச்மெல்பா அடிச்சுட்டு ஹாய்யா ஒரு இங்கிலீஷ் பிக்சரும் பார்த்துட்டு வந்துடலாம்; புடவை மாத்திண்டு கிளம்பவா?

ராக: அதிகப் பிரசங்கி! செலவைக் குறைக்க வழி சொல்லுவியா....

அல: உங்க 'எகானமி டிரை'வுக்காக என் சோப்பின் தலையிலேதான் கை வைக்க வேணுமாக்கும்? க்ஷவரம் பண்ணிக் கொள்வதை நிறுத்தி விடுங்கள். மாசம் இரண்டு ரூபாய்க்கு மேல் மிஞ்சும்!

ராக: ஐயய்ய! தாடியா வளர்க்கச் சொல்றே?

அல: அதனுல் என்னவாம்? 'பர்ஸனுலிடி' ஒண்ணும் குறைஞ்சு போயிடாது. பார்க்கறத்துக்கும் எவ்வளவோ கம்பீரமா யிருக்கும்.

ராக: அதெல்லாம் அந்தக் காலம்...? இப்போ பட்ஜெட்டில் இருபது ரூபாய் துண்டு விழுகிறதே, என்ன செய்வது?

அல: யார் கிட்டேயாவது கொஞ்சம் கடன் வாங்கிண்டால் போச்சு! அடுத்த மாசம் திருப்பிக் கொடுத்திடறோம்!

ராக: உரக்கப் பேசாதே! கேட்டுண்டே வந்து, நிதி மந்திரியாக்கிவிடப் போகிறார்கள்!

அல: எப்பவும் விதண்டாவாதம்தான். உங்கள் 'பட்ஜெட்'டுக்கும் இதுக்கும் சம்பந்தமில்லேன்னு சொல்ல வந்தேன். பீச்மெல்பாவைக் கண்டு நீங்கள் பயப்படுவதற்கு உண்மைக் காரணம் உடம்பு பருத்து விடுமோ என்று. அப்புறம் நான் கேலி பண்ணுவேனேன்னு கவலை! கல்யாணமான புதுசிலே 'பீச்மெல்பா' மட்டுமென்ன? தினம் ரெண்டு 'பட்டர் மசாலா தோசை' கூடத்தான் மத்தியான டிபனுக்குச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேள். சராசரியா நாளைக்கு ஒரு பவுண்டு எடை கூடிண்டு வந்துதே! சொல்லிச் சொல்லி ஆகாரத்தைக் குறைச்சிருக்கேள் இப்போ.

ராக: நீ சொன்னதனுல் ஒண்ணுமில்லே. என்னேட மனேதிடம்தான் காரணம். எல்லாராலேயும் இருக்க முடியுமா அப்படி? ஆசையை அடக்கிப் பல்லைக் கடிச்சுண்டு ஒரு சுற்று இளைச்சிருக்கேன், தெரியுமா?

அல: தெரியுமே! குளிச்சுட்டு வந்ததும், கண்ணுடி எதிரே பக்கவாட்டில் நின்னுண்டு



வயிற்றை எக்கிண்டு, மார்பை முன்னுலே தள்ளி அழகு பார்த்துப்பேனே! அப்படி வயிற்றை எக்கிக் கொள்ளும்போது சுற்றளவு குறைந்துதான் இருக்கும்!

ராக: நான் விளையாடவில்லே, அலமேலு! நிஜமாகவே தொந்தி இரண்டங்குலம் குறைஞ்சிருக்கு! இன்னேக்குக் கார்த்தாலேதான் கணக்குப் பார்த்தேன். அளவு மறந்து போகாமல் இருக்க இதோ 'இஞ்ச் டேப்'பிலேயே கோடு போட்டு அடையாளமா குறிச்சு வைச்சிருக்கேன். பாரு!

அல: ஏது இந்த 'இஞ்ச் டேப்?' தொந்தியை அளக்க வாங்கிண்டு வந்தேளாக்கும்? இப்போ யாரு காசைக் கரியாக்கறு? இதுக்கு இந்த 'டேப்' என்னத்துக்கு? சணல் கயிறும் ஸ்கேலும் இருந்தால் போதாதோ? அளக்கறது என்ன கஷ்டம்? அதில்லேனு கூட 'பெல்ட்'டிலே எத்தனவது ஓட்டையை உபயோகிக்கிறேன்னு கணக்குப் பார்த்தாலே போதுமே? அதிலே ஒன்னும் முன்னேற்றம் காணும். எட்டுமாசத்துக்கு முன்னுடி நாலாவது ஓட்டை பயன் பட்டது. நாலு, மூணு, இரண்டுன்னு குறைஞ்சுண்டே வந்து இப்போதெல்லாம் முதல் ஓட்டையைத்தான் உபயோகிக்கிறேன். இந்த லட்சணத்தில் இரண்டு 'இஞ்சு' குறைஞ்சிருக்குன்னு சொன்னுல் யாராவது நம்புவாளா?

ராக: நீ இப்போ என்ன சொல்றே? வீட்டிலே குறைச்சுச் சாப்பிடுகிறதாய்ப் பேர் பண்ணிவிட்டு ஓட்டல்லே போய் உனக்குத் தெரியாமல் திமித்திட்டு வருகிறேனென்று சொல்றியா?

அல: சேச்சே! அதெல்லாம் ஒண்ணுமில்லே: வேளைக்குக் கவுளி வெற்றிலையைக் கபளீகரம் பண்ணறதிலே யிருந்தே சாப்பாட்டைக் குறைத்துக் கொண்டிருக்கேன்னு தெரியறதே. எல்லாரும் இரண்டு வெற்றிலே அல்லது நாலு வெற்றிலே போட்டுப்பா. கேட்டால் ஜீரணத்துக்கு நல்லதுங்கறேள். ஆகாரத்தைக் குறைச்சுட்டு ஆடு மாடு மாதிரி யாராவது இலேதழையைத் தின்று வயிற்றை நிரப்பிப்பாளோ?

ராக: உனக்கென்ன தெரியும், நான் படுகிற அவஸ்தை? இரண்டாவது அப்பளாம் போட்டுண்டால் எண்ணெய்ச் சத்து அதிகமாய்ச் சேர்ந்து எடை ஏறிவிடலாம் அல்லவா?

அல: ஓகோ! அதற்காகத்தான் ஒரே அப்பளாத்தை ஒரு நாழிகை வைத்துக் கொண்டு தின்கிறீர்களா?

ராக: ஏன் சொல்ல மாட்டே நீ! இந்த வயிறு வளர்ந்துவிடக் கூடாது என்பதற்காகத் தினம் ஒரு மணிநேரம் 'எக்ஸர்ஸைஸ்' பண்ணறேன் நான். அதையாவது நம்பறயோ இல்லே, அதையும் வெறும் 'புருடா' என்று சாதிப்பையோ?

அல: சேச்சே! 'எக்ஸர்ஸைஸ்' பண்ணறேள். ஒப்புக்கொள்கிறேன். அத்தனை தேகப் பயிற்சியும் சேர்ந்து தொந்தியை முன்னேக் காட்டிலும் உறுதி வாய்ந்ததாக, பலம் மிக்கதாகச் செய்து விடுகிறது. பருத்திருக்கும் தொந்திக்குப் பலம் வேறு சேர்ந்து விட்டால் அதைக் கரைப்பது எப்படிச் சாத்தியமாகப் போகிறது?

ராக: குதர்க்கம் பேசறதே வேலையாய்ப் போயிடுத்து உனக்கு! நீ ஒன்றும் எடையிலே



CF-2TM

தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை - 1

குறைச்சலா இல்லேங்கறதை ஞாபகம் வைச்சுக்கோ. நேத்திக்கு அண்ணாவை 'சென்ட்ரல்லே' ரயிலேத்தி அனுப்பிச்சுட்டு வரச்சே 'வேயிங் மிஷினில்' பத்து பைசா போட்டியே. அந்தச் சீட்டை என்னிடம் காண்பிச்சையா? எத்தனை கெஞ்சிக் கேட்டாலும் முடியாதுன்னு பிடிவாதமா சுக்குச் சுக்காகக் கிழிச்சுப் போட்டியே: அதுக்கு என்ன அர்த்தம்?

அல: [வெட்கப்பட்டு எழுந்தவாறே] அது சரி, பால் கணக்கு பார்த்தாகி விட்டதா? உங்க கணக்குக்கும் பால்காரனுடைய கணக்குக்கும் ஒத்து வருகிறதா?

ராக: எப்படி வரும்? ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு மாதிரிதான் விடை கிடைக்கிறது. இப்படிக் குறுக்கே புகுந்து தொண தொணத்துக் கொண்டே யிருந்தால்?

அல: [நாற்காலியின் கரத்தில் அவனுடன் இணைந்தவாறு உட்கார்ந்தபடியே] பால் கணக்குப் பார்க்கத் தெரியாத உங்களுக்குப் போய் பாங்கியில் வேலை கொடுத்தானே; அதைச் சொல்லணும்!

ராக: உனக்குப் போய் அலமேலுன்னு பேர் வைச்சானே அதைச் சொல்லணும்!

அல: ஏனும், என் பேருக்கு என்ன குறைச்சல்?

ராக: பேருக்கு ஒண்ணும் குறைச்சலில்லே; உனக்குப் பொருத்தமா யில்லே என்பதுதான். அலமேலுங்கிற அந்த நாளையப் பேருக்கு ஏத்தமாதிரி அடக்க ஒடுக்கமாயிராமல் ஆத்துக்காரருக்கு எதிரே உட்கார்ந்துண்டு வாதாடுவேன்னு உன் அப்பா அம்மா எதிர் பார்த்திருந்தால் இப்படிப் பேர் வைத்திருப்பாளா? நல்ல 'நைன்டீன் ஸிக்ஸ்டி டூ மாடல்' பேரா வைத்திருப்பாளே!

அல: மடிசாறு வைச்சுக் கட்டிண்டு [illegible] பொண்ணுட்டம் மண்டையைக் குனிஞ்சுண்டு நிக்கணும்கிறேளா? எனக்கு இந்தக் கட்டுப் பாடெல்லாம் கொஞ்சமும் பிடிக்காது.

ராக: எனக்கும்தான் கட்டுப்பாடெல்லாம் கட்டோடு பிடிக்கலே. வீதியிலே இறங்கினா மென்றும் மூலைக்கு மூலை தந்தைக்கும் தாய்க்கும் அறிவிப்பு நிலையங்கள்தான்!

அல: கண்ணுனி! இப்படி ஒரேயடியாக உன றிக் கொட்டிக்கொண்டே யிருந்தால் நான் போயே போய் விடுவேன்!

ராக: பலே! பிறந்தாத்துக்குத்தானே? பேஷ்! போய் ஒரு மாசம் இருந்துட்டு வா! நான் கேட்பார் யாருமின்றி, ஜாலியாக, நாளைக்கொரு 'பீச் மெல்பா' சாப்பிடுகிறேன்!

அல: [எழுந்து நின்று] இப்படிச் சொல்லிக் கொண்டே யிருந்தால் நிஜமாகவே போய் விடுவேன்!

ராக: பேஷாகப் போயிட்டு வா!

அல: முன்னிருட்டு காலமாயிருக்கு. சரியா ஆறரை மணிக்கு வந்து விடுங்கள். திருப்பி அழைச்சுண்டு வர!

ராக: என்ன?....எங்கே?

[திகைக்கிறான்]

அல: வேறே எங்கே? லேடீஸ் க்ளப்புக்குத் தான்! [போகிறாள்]

ஃ ஃ ஃ

[மாலே சுமார் ஐந்து மணி. மவுண்ட் ரோடு தபால் நிலையத்தருகே பஸ்ஸை விட்டுஇறங்கி, 'காஷ்மீரி ஐஸ்கிரீம் பார்லரை' நோக்கி நடக்கிறான் ராகவன்.]

ராக: [தனக்குள்] அலமேலு! என்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் ஒண்ணேகால் ரூபாய் சோப்புத்தானே வாங்கிக் கொண்டாய்? இதோ பார்! உனக்குத் தெரியாமல் ஒரு 'பீச் மெல்பா'வை அடிச்சுட்டு வந்துடறேன்! [விரைகிறான்]

[காஷ்மீரி ஐஸ்கிரீம் பார்லருக்குள் நுழைந்து, ரோட்டைப் பார்த்தவாறு ஒரு நாற்காலியில் அமருகிறான்.]

ராக: பாய்! இந்தாப்பா!

சர்வர்: என்ன சார் சாப்பிடுறீங்க?

ராக: பீச்மெல்பா ஸ்பெஷல் ஒண்ணு கொண்டு வா.

[சர்வர் அப்பால் நகர்ந்ததும் வாயில் ஊறும் நீரைக் கூட்டி விழுங்குகிறான் ராகவன். அதே சமயத்தில் சாலையில் நடந்து வரும் ஒரு பெண்கள் கூட்டத்தின் மீது அவன் பார்வை விழுகிறது.]

ராக: [தனக்குள்] சிரிச்சுக் கும்மாளம் போட்டுண்டு வராளே. கொஞ்சம் கூடப் பதவிசே கிடையாது இந்த நாளில்....அடேடே அந்தக் கூட்டத்தின் நடுவில் வரது யாரு? ஐயய்யோ! அலமேலுவேதான்! இப்போது என்ன பண்ணறது?

[எழுந்து பின்பக்கமாக ஓடுகிறான். காஷ்மீரி ஐஸ்கிரீம் பார்லருக்குள் நுழையும் லேடீஸ் க்ளப் அங்கத்தினர்கள் ராகவன் காலி செய்த அதே மேஜையைச் சுற்றிலும் உட்காருகிறார்கள். ஸர்வர் பீச் மெல்பா ஒண்ணைக் கொண்டு வந்து வைக்கிறான்.]

அல: யார் பீச் மெல்பா கேட்டது உன்னே?

ஸர்வர்: [திருதிருவென விழித்து] நீங்கதான்..........

அல: நீங்க எப்படிப் பொண்ணுக மாறினீங்க?

அல: [கோபத்துடன்] என்னய்யா பைத்தியமா பிடிச்சிருக்கு?

ஸர்வர்: [தலையைச் சொறிந்து கொண்டு] இல்லே, மன்னிச்சுக்குங்க. தப்பா எடுத்துக்கிடாதீங்க........ [தனக்குள்:] ஒருவேளை பக்கத்து [illegible]னா?...... இருக்காதே!...... [உரக்க:] சரி, இது வேணுமா உங்களுக்கு?

அல: வேண்டவே வேண்டாம்!

[ஸர்வர் அதை எடுத்துக் கொண்டு போய் வைத்து விட்டுத் திரும்புகிறான்.]

ஸர்வர்: என்ன சாப்பிடறீங்க?

அல: ஆளுக்கொரு பீச் மெல்பா கொண்டு வா!

ஸர்வர்: [திகைத்து] இப்போத்தானே வேண்டான்னீங்க!

அல: ஒண்ணு வேண்டாம்னு சொன்னேன்: நாலு பேர் இருக்கோமே, தெரியலேயா?

[தோழிகள் சிரிக்கிறார்கள்]

ஸர்வர்: கொண்டு வரேன். ஆனா தயவு செய்து நீங்கள் நாலு பேரும் மறுபடியும் ஒரே ஆசாமியா மாறிடாதீங்க. ஒரு பீச் மெல்பாவைத் திருப்பி எடுத்துக்கிட்டுப்போனதுக்கே முதலாளி முறைச்சுப் பார்த்தாரு: மூணு மெல்பாக்களைக் கொண்டு போனால் வேலையே போயிடும்! [போகிறான்]

அல: ஒருவேளை கொஞ்சம் ஸ்க்ரூ லூஸா யிருக்குமோ? [சிரிக்கிறார்கள்]

[கொல்லைப்புறமாகச் சென்ற ராகவன் சுற்றி வளைத்துக் கொண்டு சற்று நேரத்தில்

காஷ்மீரி ஐஸ்கிரீம் பார்லரின் வாசலுக்கு வருகிறான். உள்ளே எட்டிப் பார்க்கிறான்.]

ராக: [தனக்குள்] அலமேலு! வகையா மாட்டிண்டயா? எனக்குத் தெரியாமெ பீச் மெல்பாவா சாப்பிடறே?

[உள்ளே நுழைகிறான்.]

ராக: [மேஜையை நெருங்கி] என்ன அலமேலு!.....எங்கே இப்படி?.......

அல: [தூக்கி வாரிப் போட எழுந்து] நீங்க........எப்படி........இங்கே......?

ராக: பாங்க் விஷயமா சிந்தாதிரிப் பேட்டையிலே இருக்கிற என் ஆபீஸரைப் பார்க்க வந்தேன். பஸ் ஏறப் போகிறப்போ தற்செயலா உன் மீது பார்வை விழுந்தது.... என்ன பீச் மெல்பாவா? ஜமாய்த்துத் தள்ளு...! ஆனால் மறுபடியும் வேயிங் மிஷினில் மட்டும் ஏறி நிற்காதே! அது கதறி அழ ஆரம்பிச்சுடும்!

[அலமேலுவுடன் வந்திருந்த அனைவரும் ஒரேயடியாகச் சிரிக்கிறார்கள். அவர்களுள் சற்று வயது முதிர்ந்தவளாகத் தோன்றிய மீனாட்சி சம்பாஷணையில் குறுக்கிடுகிறாள்.]

மீனாட்சி: ரொம்ப 'விட்டி'யா பேசறீரே!

அல: [அசட்டுச் சிரிப்புடன்] எக்ஸ் க்யூஸ் மீ! என் ஹஸ்பெண்டு ராகவன்......இவாளெல்லாம் லேடீஸ் கிளப் பிரண்ட்ஸ். இவர் எங்க பிரஸிடெண்ட் மீனாட்சி.

ராக: பிளீஸ்டு டு மீட் யூ!

[கரம் குவிக்கிறான்]

மீனாட்சி: அந்த டேபிள்ளே யிருந்து ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுண்டு உட்காருங்களேன்.

[ராகவன் அப்படியே செய்கிறான்]

மீனாட்சி: இதோ பாருங்கோ, மிஸ்டர் ராகவன்! நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்கிடப்படாது! ஒரு பீச்மெல்பா கூட வாங்கித் தர நேரமில்லாமே ஆபீஸ் விஷயமா வெளியே அவசரமா போகணும்னு கிளம்பிட்டேளாமே? பாவம்! ஏங்கிப் போயிட்டா! என்னைப்போல் பெரியவா வீட்டிலே இருந்தால் சொல்லிக் கொடுப்பா. ஹூம்! நீங்கள் சிறிசுகள்தானே, தெரியலே! மிஸ்டர் ராகவன் இந்த டயத்திலே அலமேலு ஆசைப்படறது எதுக்கும் நீங்க தடை சொல்லவே கூடாது; டக் டக்குன்னு எல்லா ஆசையையும் பூர்த்தி பண்ணி வைச்சுடணும்!

[அன்போடு அலமேலுவின் தோள்களைத் தடவிக் கொடுக்கிறாள் மீனாட்சி. ராகவன் அலமேலுவைப் பார்த்து விழி பிதுங்க விழிக்கிறான். லஜ்ஜைப்பட்டு அலமேலு தலை குனிகிறாள். ஸர்வர் வருகிறான்.]

ஸர்வர்: வேறே என்ன சாப்பிடறீங்க...... [ராகவனைக் கண்டு] ஸார்! இங்கேதான் இருக்கிறீங்களா? கொஞ்சம் இருங்க. நீங்க ஆர்டர் பண்ணின பீச்மெல்பா அப்படியே இருக்கு; கொண்டு வந்துடறேன்.

ராக: [துள்ளி எழுந்து] என்னப்பா பிதற்றுகிறாய்? நான் இப்போத்தானே உள்ளே நுழையறேன்?

ஸர்வர்: அந்தக் கதையெல்லாம் நம்ப கையிலே வேணும் ஸார்! உங்களுக்குத் தயார் பண்ணினதை வேறே யார் சாப்பிடுவாங்க? ஐஸ்கிரீம் உருகிப்போயிடும்? ஒண்ணே முக்கால் ரூபாய் என் சம்பளத்திலே பிடிச்சுடறதாகப் பயமுறுத்தறார் முதலாளி. நீங்க சாப்பிடாகாட்டி வேண்டாம். பணத்தைக் கொடுத்திட்டுப் போங்க. பீச் மெல்பாவை நான் கவனிச்சுக்கிடறேன்.

ராக: [நஷ்டப்பட மனமின்றி] சரி, சரி கொண்டு வா!

அல: இப்போத்தான் எல்லாம் புரியறது! பாவம்! அந்த ஸர்வரைப் போய் ஸ்க்ரூ லூஸ்னு நினைச்சேன்! அது சரி, எத்தனை நாளா இப்படி எனக்குத் தெரியாமெ பீச் மெல்பாவா விழுங்கிண்டிருக்கேள்?

[தோழிகள் கொல்லென்று சிரிக்கின்றனர்.]

ராக: [பீச் மெல்பாவைச் சுவைத்தபடியே] அதெல்லா மொன்றுமில்லே; இன்னிக்கு மட்டும்தான்.......

மீனாட்சி: அலமேலு! உன்னை வீட்டுக்கு அழைச்சுண்டு போக ஆத்துக்கார் வந்துடுத்து. இனிமே என் கார் உனக்குத் தேவைப்படாது. நாங்க போயிட்டு வரோம்!

[அலமேலுவின் தலையை வாத்ஸல்யத்துடன் வருடி விட்டுச் செல்கிறாள் மீனாட்சி. மற்றவர்களும் பின்தொடருகிறார்கள்.]

ராக: [திடீரென்று விழித்துக் கொண்டு] ஐயய்யோ! பில்லைக் கொடுக்காமல் போகிறாளே, உன் பிரஸிடெண்டு!

அல: [நான்கு தளிர் விரல்களை அவன் வாயில் பதித்து] பேசாமலிருங்கோ; மானம் போகும்!

ராக: போக்கிரிக் கழுதை! என்னிடமிருந்து ஒளிச்சுத்தானே வைச்சிருந்தே! விவரம் இப்படின்னு தெரிஞ்சிருந்தால் பீச் மெல்பா, சாப்பிட நான் அழைச்சிண்டு வந்திருக்க மாட்டேன்?

அல: நீங்கதான் எப்போ பார்த்தாலும் பட்ஜெட்டிலே துண்டு விழறதுன்னு பதறித் துடிச்சுண்டிருக்கேளே!

ராக: அதென்ன பிரமாதம்? ஆபீஸிலே ரொம்ப வேலை இருக்கிறதா ஜாலக் பண்ணி நாலு நாளைக்கு ராத்திரி எட்டு மணி வரை இருந்துட்டு வந்தா 'ஓவர் டைம்' கிடைச்சுட்டுப் போறது.

அல: அப்படி ஒண்ணு இருக்கா! உங்க பாங்கிலே! இன்னிவரைக்கும் தெரியாமல் போச்சே! இனிமே லேட்டா ஆத்துக்கு வர அன்னைக்கெல்லாம் 'ஓவர்டைம்' கிடைச்சதைக் குடும்ப பட்ஜெட்டிலே வரவு வைக்கணும்!

ராக: அட ராகவா! அந்த ரகசியத்தையும் உடைச்சுட்டேனா? தொலைஞ்சது போ!

[பில்லைக் கொடுத்து விட்டு வெளியேறுகிறார்கள்.]

ராக: ஒருத்தர் நிற்க வேண்டிய எடை மிஷினிலே இரண்டு பேரா நின்னேன்னா 'வெயிட்' கூடாமல் என்ன செய்யும்? அப்புறம் வெட்கப்பட்டுச் சீட்டை என்னிடம் காட்டாமல் கிழிச்சுப் போடறது......என்ன திருட்டுத்தனம் இது!

[அலமேலு அவன் கரத்துடன் தன் விரல்களைக் கோத்துப் பிணைத்தபடி நகைக்கிறாள்.]

ராக: திட்சை வேறே வளர்க்கச் சொல்லித் தீர்மானம் போட்டாறது!....இதோ பாரு, அலமேலு! தினம் வேணுமானாலும் ஒரு பீச் மெல்பா வாங்கித் தரேன்! பிறக்கப்போகிற பயல் பீச் மெல்பாமாதிரி சும்மா 'ஜில்'லுன்னு இருக்கணும். புரிஞ்சுதா?

இதோ

"'ஹேஸலின்' ஸ்னோ" தயாரிப்பாளர்களின்
மற்றொரு தயாரிப்பு

'ஹேஸலின்' டால்க்

மழமழப்பான வெல்வெட் போன்ற பவுடர்!



இலேசிலும் இலேசு ... இனிய நறுமணம் ... நயமான தயாரிப்பு ... ஆம், நீங்கள் எதிர் நோக்கியிருந்த பவுடர் இதோ வந்தே விட்டது! மிருதுவான 'ஹேஸலின்' டால்கம் பவுடர் ஈரத்தன்மையை இலேசாக நீக்கி, சருமத்திற்கு இதமூட்டி, நாள் முழுவதும் புது மணம் கமழச்செய்கிறது!

நீலம், வெள்ளை மற்றும் பொன்னிறமான, எடுப்பான டப்பாவில் எங்கும் கிடைக்கிறது. 'ஹேஸலின்' டால்கம் பவுடர்.

'ஹேஸலின்' டால்கம் பவுடர் ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு.

நீங்கள் மறைந்த பின்

உங்கள் குடும்பத்திற்காக

உங்களை நம்பி வாழ்பவர்கள், உங்கள் மறைவிற்குப் பின் எக்கதி ஆவார்கள் என நீங்கள் சிந்தித்ததுண்டா? அவர்கள் கஷ்டங்களுக்கு உள்ளாகாமலிருக்க, அவர்களின் பிற்கால நலனைக் கருதித் தகுந்த திட்டங்கள் வகுப்பது அவசியம்.

அதற்கான ஏற்பாட்டை இதுகாறும் நீங்கள் செய்யவில்லையென்றால் தாமதியாமல் ஒரு உயில் எழுதவோ அல்லது அவர்களின்பேரில் ஒரு ட்ரஸ்ட் ஏற்படுத்தவோ செய்யுங்கள்.

எஸ்டேட் நிர்வாகம் இந்நாட்களில் மிகச் சிக்கலான காரியம். அந்தப் பொறுப்பை ஏற்றுத் திறம்பட நடத்த ஒரு பாங்கியை விட மேலானதொரு எக்ஸிக்யூட்டர் அல்லது ட்ரஸ்டி கிடைப்பது அரிது. ஏனென்றால், ஒரு பாங்கி, அவசியமேற்படும் பொழுதெல்லாம் உங்களால் எளிதில் அணுகக்கூடியதும், பக்ஷபாதமின்றி, வேண்டுவன பார்த்து ஜாக்கிரதையுடன் செயலாற்ற வல்லதுமாகும். ஒரு நல்ல பாங்கி மனிதத் தன்மை படைத்தது. ஆனால் அதற்கு அழிவு கிடையாது.

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா தனியாகவோ அல்லது கூட்டாகவோ, எக்ஸிக்யூட்டர் அல்லது ட்ரஸ்டியாகப் பொறுப்பு ஏற்று உங்களுக்குச் சேவை செய்யக் காத்திருக்கிறார்கள்.

எக்ஸிக்யூட்டர் மற்றும் ட்ரஸ்டிகள் அலுவல் பற்றிய இந்த பாங்கின் புத்தகத்தை வரவழைக்கவோ அல்லது உங்களுக்கு அருகாமையிலுள்ள ஸ்டேட் பாங்க் ஏஜென்டைக் கலந்து ஆலோசிக்கவோ செய்யுங்கள்.



இந்தியாவெங்கும் உங்களுக்குச் சேவை புரியக் காத்திருக்கும் ஸ்டேட் பாங்கின் தொள்ளாயிரத்திற்கு மேற்பட்ட ஆபீஸ்களில் ஒன்றான மவுண்ட் ரோடு மதராஸிலுள்ள கிளை ஆபீஸ்

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா

இந்தியன் ஜாயிண்ட் ஸ்டாக் பாங்குகளில் பெரியது

SISTA'S-SB. 55-TAM

துவெள்ளம்



அத்தியாயம் மூன்று

வாழ்க்கைத் துடிப்பு

தூக்கக் கலக்கம் தீராத நிலையில் நடைபாதையிலிருந்து எழுந்திருந்த முருகையன், தன் கண்களைத் துடைத்துக் கொண்டு தன்னை எழுப்பியவனை முதலில் உற்றுப் பார்த்தான். பிறகு தான் படுத்துக் கிடந்த இடத்தைச் சுற்றிலும் ஒரு முறை கண்ணோட்டம் விட்டான். இரவு நேரத்தில் அந்த இடம் எப்படியிருந்ததென்று கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால் பொழுது புலரும் வேளையில் அது ஒரு குப்பைத் தொட்டியாகவே தோன்றியது.

சாப்பிட்ட இலைகளையும், கந்தல் துணிகளையும், காகிதக் கிழிசல்களையும் சுவர் ஓரமாகப் பின்பக்கத்து வீட்டுக்காரர்கள் போட்டிருந்தார்கள். முருகையனுடைய கால் மாட்டிலோ அழுக்குத் தண்ணீர் தேங்கிக் கிடந்தது. எங்கும் ஒரே நாற்றம்.

'பொழுது விடியாமலே இருந்திருக்கக் கூடாதா? இரவாகவே இருந்து, நேரமெல்லாம் கவலையற்ற உறக்கத்திலேயே கழிந்திருக்கக் கூடாதா?' என்றெல்லாம் நினைத்து ஏங்கினான் முருகையன். தன்னை எழுப்பி விட்டவனைத் திரும்பவும் ஒரு முறை ஏறிட்டுப் பார்க்க அவனுக்கு விருப்பமில்லை.

''என்ன சாமி இது! என்னைத் தெரியலையா....?''

''தெரிகிறது முனியாண்டி!'' என்றான் முருகையன். ஆனால் அவனுடைய முகம் எங்கோ திரும்பிக் கொண்டிருந்தது.

முனியாண்டியின் ரிக்ஷா அருகில் இருந்தது. திடீரென்று அவன் முருகையனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து அவனைக் குழப்பத்தோடு பார்த்தான். முருகையனின் முகம் கடுமையாக மாறியிருந்தது. அப்போது அவன் யாருடைய அன்பையும், அநுதாபத்தையும், உதவியையும் எதிர்பார்க்கும் நிலையிலில்லை.

அகிலன்



''போயும் போயும் உங்களுக்கு இந்த இடந்தானு கிடைச்சுது? எழுந்திருங்க, சாமி!'' என்ருன் முனியாண்டி.

சட்டென்று திரும்பிப் பார்த்து முகம் சுளித்தான் முருகையன். 'எழுந்திருந்து என்ன செய்வது? எதற்காக என்னை எழுப்பினுய்?' என்று கேட்பதுபோல் இருந்தது அவன் பார்வை.

''இதோ பாருங்க, நீங்க வரலேன்னு நான் உங்களை விடப் போறதில்லே. ரிக்ஷாவிலே தூக்கிப் போட்டு இழுத்துக்கிட்டு ஓடப் போறேன். எல்லா விஷயங்களையும் என்னுேட வீட்டிலே போய்ப் பேசிக்கலாம், வாங்க!''

''ஊஹூம்; நான் எங்கும் வரவில்லே. நீ போய் உன் வேலையைப் பார்'' என்ருன் முருகையன்.

''என்னுேட வீட்டுக்கு அடுத்தாப்பிலே இந்த ரிக்ஷாவை வைக்கிற ஒரு தாவாரம் இருக்கு. நீங்க அங்கே வந்து தங்கிக்கலாம். உங்களுக்கு இஷ்டமிருந்தா, எங்களோட, நாங்க குடிக்கிற கஞ்சியை நீங்களும் குடிக்கலாம். இல்லேன்னு நான் உங்களைக் கட்டாயப்படுத்தலே.-'' முருகையனின் கரத்தைப் பற்றி முரட்டுத்தனமாக இழுத்தான் முனியாண்டி.

''இதோ பார், முனியாண்டி! என்னை உனக்கு யாரென்று தெரியாது. நீ யாரோ, நான் யாரோ,...ஏதோ ஒரு நாள் பழக்கத்தை வைத்துக் கொண்டு, எனக்கு உன் சக்திக்கு மீறி உதவி செய்யப் பார்க்கிருய். உன்னுல் அது முடியாது; எனக்கும் தேவையில்லே.''

''நீங்களே இப்படி முகத்தை முறிச்சுப் பேசினு நான் என்ன செய்யறது?'' என்று கண் கலங்கக் கூறினுன் முனியாண்டி. ''நீங்க என்னை வெறுத்துப் பேசுறிங்க; ஆனல் அதுக்காக உங்களைத் தெருவிலே அனுதையா விட்டுட்டு நான் சும்மா இருக்க மாட்டேன்.''

முனியாண்டியின் தழுதழுத்த குரலும் கண்களில் வழிந்த கண்ணீரும் முருகையனை என்னவோ செய்தன.-தன்மீது இத்தனை பற்றுதல் இவனுக்கு எப்படி ஏற்பட்டது?

''சாமி! இதோ பாருங்க, என் வீட்டிலே தங்குறது உங்களுக்கு அவமானமாகத் தோணினு, அதையும் வெளிப்படையாச் சொல்லிடுங்க. இல்லே, இப்பவே புறப்படுங்க!''

''முனியாண்டி! நான் உனக்கு எந்த உதவியும் செய்ததில்லே. நீ இவ்வளவு அன்பு வைத்திருப்பதே எனக்கொரு பெருமை...உன்னுலே என்னுேட பாரத்தைத் தாங்க முடியாது முனியாண்டி.''

மனிதர்களின் உடல் சுமையான பாரத்தைத் தாங்கிப் பழக்கப்பட்ட முனியாண்டிக்கு, முருகையன் ஒரு பாரமாகவே தோன்றவில்லே.

''நீங்க என்ன உதவி செய்திருக்கீங்கங்கறது உங்களுக்கே தெரியாது. மாட்டைவிடக் கேவலமா என்னை மற்றவங்க மதிக்கிற இந்த உலகத்திலே, நீங்கதான் என்னை மனுசனு மதிச்சீங்க....என்னையும் ஒரு மனுசனு நினைச்சு, அன்றைக்கு ரயிலே நிறுத்தினீங்க பாருங்க, அதை நீங்க மறந்திருக்கலாம். இந்த உயிருள்ள வரையிலே நான் மறக்க மாட்டேன். அதுக்காக ஜெயிலுக்குப் போறத்துக்குக் கூடத் தயாருன்னு சொன்னீங்களாமே, அப்படி யார் எனக்காகச் சொல்லப் போருங்க? காசு பணம் கொடுக்கிறது ஒண்ணுதானு உதவி? மனுசனை மனுசனு மதிக்கிறதைவிட வேறே என்ன பெரிய உதவி இருக்குது?....இப்ப நீங்க என்னை மதிக்கிறது உண்மையா யிருந்தா என்னுேட வீட்டுக்குக் கிளம்புங்க!''

முருகையன் எழுந்தான். ரிக்ஷாவில் ஏறிக் கொள்வதற்கு மறுத்து அவனுடன் அவன் வீட்டுக்கு நடந்தான்.

''உனக்குச் சிரமமில்லாவிட்டால்உன் வீட்டிலேயே சில நாட்கள் தங்குகிறேன். ஆனல் தெருவில் உள்ளவர்களிடம் நீ என்னை உன் சொந்தக்காரன் என்று சொல்லிக் கொள்ள வேண்டும். வேலே தேடிப் பட்டணத்துக்கு வந்திருப்பதாய்ச் சொல்ல வேண்டும்.''

பெருமையோடு அதற்கு ஒப்புக் கொண்டான் முனியாண்டி.

முனியாண்டியின் தெரு, கடற்கரையை ஒட்டினுற்போல் மேற்கே ஒரு பர்லாங் தூரத்தில் இருந்தது. நகரத்தின் கழிவுத் தண்ணீரைத் தேக்கிச்செல்லும் வாய்க்கால்கரை ஓரமாகத் தெற்கு வடக்கிலிருந்தது அது. நெருக்கமான கூரை வீடுகளை எதிரும் புதிருமாகக் கொண்ட ஒரு குறுகலான சந்து. பல்வேறு தொழிலாளர்களும்,தொழிலற்றவர்களும், தொழில் தேடிக் கொண்டிருப்பவர்களும் அங்கே நிறைந்திருந்தார்கள். தோட்ட வேலேகள் செய்வோர், கொத்து வேலேக்காரர்கள்,காய்கறி விற்பவர்கள் ரிக்ஷா இழுப்பவர்கள் இப்படிப் பல தரப்பட்டவர்களின் உறைவிடம் அது. ஏழைமை, சுகாதாரக் குறைவு, ஆரோக்கியமின்மை இவ்வளவும் அங்கே நிலவியிருந்தன.

முனியாண்டியின் ரிக்ஷா நிறுத்தும் தாழ்வாரத்துக்குள் புகுந்தான் முருகையன். ரிக்ஷாவைத் தவிர, அவன் படுத்துக் கொள்வதற்கு மட்டிலும் அங்கே இட மிருந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் முனியாண்டியின் மனைவி வேலம்மாள் தன் குழந்தைப் பட்டாளத்துடன் வந்து அவனை வரவேற்ருள்.

கவுரவத்தை கொடுக்கக் கூடிய துணிகள் —



டெட்டினுல் சலவை செய்யப்பட்டதே

- டெட்டினுல் சலவை செய்யப்பட்ட துணிகள் பிரகாசமாகத் தோற்றமளிக்கும்.
  டெட்டின் சிறந்த சுத்திகரிப்புக் கலவை உங்களுடைய ஆடைகளைப் புத்தம்புதியதுபோல் பிரகாசிக்கச்செய்கிறது.
- டெட்டினுல் சலவை செய்யப்பட்ட துணிகள் மிக வெண்மையாகத் தோற்றமளிக்கும்.
  டெட் ஆடைகளைச் சுத்தமாகவும், பிரகாசமாகவும் வெளுக்கும் சிறந்த பரிசுத்தகாரி. டெட்டினுல் துவைக்கப்பட்ட துணிகளுடன் நீலத்தையோ அல்லது வெண்மையாக்கும் பொருளையோ சேர்க்கவேண்டிய தேவையில்லை. காரணம் கண்கவரும் வெண்மையைத்தரும் பொருள் டெட்டில் அடங்கியுள்ளது.
- டெட்டினுல் சலவை செய்தல் என்பது நவீன முறையில் சலவை செய்யப்படுவது என்பது பொருள்.
  வெந்நீரிலும், மென்னீரிலும் டெட்டை உபயோகித்து நன்கு சலவை செய்யலாம். டெட் அபரிமிதமாக நுரை தருகிறது. காட்டன், ஸில்க், ரேயான், கம்பளி வென்னே அல்லது கலர்த்துணிகள்—எல்லாவிதமான ஆடைகளுக்கும் டெட்டைத் தாராளமாக உபயோகிக்கலாம்.



டெட் வெண்மையாகவும் பளபளப்புடனும் சலவை செய்கிறது.

Shilpi Som 21 TAM

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்-31



அவனுடைய தாயார் இறந்து போய் விட்டாளாம். மைத்துனன் கிராமத்துக்கே திரும்பிப் போய் விட்டானாம்.

முருகையனுக்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனித்து அவனுக்குக் காலைச் சிற்றுண்டி வழங்கி விட்டு, ரிக்‌ஷாவுடன் புறப்பட்டான் முனியாண்டி. வெகு நேரம் வரையிலும் அந்தத் தாழ்வாரத்தை விட்டே வெளியில் வருவதற்கு முருகையனுக்கு மனமில்லை. அதற்குள் தங்கியிருக்கவும் பிடிக்கவில்லை. வெளியில் வந்து நின்று அந்தத் தெருவை ஒரு முறை கண்ணோட்டம் விட்டபோது அங்கு வாழ்பவர்கள் அனைவர் மீதுமே அவனுக்கு இரக்கம் பிறந்தது. பிறகு, தனக்குத் தானே சிரித்துக் கொண்டான். அந்தத் தெருவுக்குரிய ஒருவனின் இரக்கத்துக்குள்ளாகும் நிலையில் இருந்து கொண்டு, தெருவைப் பற்றி இரக்கப்படுவது என்ன பேதைமை!

உள்ளே சென்று படுப்பதற்காகச் சட்டையைக் கழற்றி ஆணியில் மாட்டப் போனான் முருகையன். ஏதோ ஒன்று சட்டைப் பையிலிருந்து தரையில் விழுந்தது. குனிந்து எடுத்தான். சாந்தாவின் பெயருக்கு வந்த ஒரு கவர் அது. அது எப்படி அவன் சட்டைப் பைக்கு வந்தது?


திறக்கப்பட்ட கூடாக இருந்ததால் அதை உற்றுப் பார்த்தான். இரண்டு ரூபாய் நோட்டுக்கள் அதில் இருந்தன. எப்படித்தான் சாந்தா அதைப் பைக்குள் வைத்தாள் என்று அவனுக்குத் தெரியவில்லை.

சாந்தாவின் அன்பு அவனுடைய இதயம் முழுவதும் அப்போது நிரம்பியிருந்தது. வீட்டை விட்டு வெளியில் வந்தவன் பையில் காலணாகூடக் இல்லை என்ற எண்ணத்தோடுதான் வந்தான். அதனால்தான் வெகு தூரம் வரையில் முதல் நாள் மாலையில் நடந்தான்.

இரவும் பட்டினியோடு படுத்தான்.- நேரடியாய்க் கொடுத்தால் மறுக்கக் கூடும் என்பதற்காக இப்படிச் செய்திருக்கிறாளா அவள்?

சாந்தாவின் பணத்தைப் பையில் கண்டவுடன் திடீரென்று உடலுக்கு இரு மடங்கு வலிமை வந்து விட்டது போல் அவனுக்குத் தோன்றியது. சோம்பலை உதறி விட்டுச் சுறுசுறுப்போடு தெருவில் நடந்தான். பாரிஸ் முனைக்குச் செல்லும் மோட்டாரில் ஏறினான். அங்கே கடை வீதியின் பல பகுதிகளிலும் சென்று மனிதக் கூட்டத்தை நம்பிக்கையோடு கவனித்தான். 'இத்தனை பேரும் இங்கு பிழைக்காமலா இருக்கிறார்கள்? பெரும்பாலானவர்களுக்கு ஏதேனும் வேலைகள் இருந்து கொண்டுதானே இருக்கின்றன?'

மாலை நேரம் ஆயிற்று. கார்களிலும், டிராம் வண்டிகளிலும், 'டவுன் பஸ்'களிலும் மனிதர்கள் வந்து குவிந்த வண்ணமாகஇருந்தார்கள். நடை பாதையில் திடீர் திடீரென்று பலவிதமான கடைகள் முளைத்தன. பூ விற்பவர்கள், செய்தித்தாள் - பத்திரிகைக்கடை பரப்புபவர்கள், பழம் விற்பவர்கள், இன்னும் எத்தனை எத்தனையோ வகையான சில்லறை வியாபாரிகள் எல்லோரும் தங்கள் வியாபாரங்களைத் தொடங்கினார்கள்.



எங்கும் ஒரே பரபரப்பு, ஒரே வேகம், ஒரே கூக்குரல்கள்; - மனித குலம் சென்னை நகரத்தில் இயங்கியவிதமே முருகையனுக்குப் புதுமையாக இருந்தது. ஒருவரை யொருவர் முட்டித் தள்ளிக் கொண்டு, ஒருவரை யொருவர் விலக்கி ஒதுக்கிக் கொண்டு, ஒருவரை யொருவர் முந்திக் கொண்டு தங்கள் காரியமே கண்ணாகச் சென்றார்கள்.

பெரிய கடை ஒன்றுக்குள் ஒரு வாலிபன் ஏதோ பணத்தை நீட்டிச் சில பொருள்களை மொத்தமாக வாங்கினான். பென்சில்கள், குழந்தைகளின் விளையாட்டுப் பொம்மைகள், சோப்புப் பெட்டிகள், கரண்டிகள்-இவை போன்ற சாமான்கள். பிறகு அந்தக் கடைக்கு எதிரிலேயே ஒரு துணியை விரித்து அதே சாமான்களைக் கொண்டு தன் சிறு கடையைத் தொடங்கி விட்டான்:

''எதெடுத்தாலும் ஓரணா சார்! எதெடுத்தாலும் இரண்டணா சார்! எதெடுத்தாலும் நாலணா சார்!''- வாங்கிய பொருள்களை யெல்லாம் மூன்று வகையாகப் பிரித்துவிலை கூவத் தொடங்கினான் அவன்.

அவனுடைய குரலில்தான் எத்தனை துடிதுடிப்பு! அவனுடைய வியாபாரத் திறமையில்தான் எத்தனை பரபரப்பு!- வழியை மறித்து, மனிதர்களை ஒரு முறை தன்னைத் திரும்பிப் பார்த்து விட்டாவது மேலே போகச் செய்து கொண்டிருந்தான் அவன். அவனைப் போலவே இன்னும் பலப் பலர் ஆங்காங்கே, ''எதை எடுத்தாலும்....'' என்ற பல்லவியைப் பல்வேறு ராகங்களில் பாடிக் கொண்டிருந்தனர்.



முருகையன் தன்னு

டைய பையிலிருந்த பணத்தைக் கையில் எடுத்தான். ஒரு நாள் கடற்கரையில் சாந்தா பேசிய பேச்சு அவனுடைய நினைவுக்கு வந்தது. திருட்டில்லை; ஏமாற்றமில்லை; வஞ்சகமில்லை. எல்லோரும் உழைப்புக்கான லாபம் வைத்து விற்பது போலவே நாமும் விற்ருல் என்ன?

மனிதக் கூட்டத்துக்கு மத்தியில் மனிதன் வாழத் துடித்த துடிப்பு அவனையறியாமலே அவனை ஆட்கொண்டு விட்டது. சரியாக அரை மணி நேரத்துக்குள் முருகையனும் பாதையின் ஒரு பகுதியில் கடை விரித்து விட்டான்.

''எதை யெடுத்தாலும் ஓரணு சார்! எதை யெடுத்தாலும் இரண்டணுசார்! எதை யெடுத்தாலும் நாலணு சார்!''-நிறுத்தாமல் ஆவேசம் கொண்டவன் போல் அவன் கூவத் தொடங்கினுன். கூக்குரலை நிறுத்தினல் அவனுக்கே அழுகை வந்துவிடும் போலிருந்தது. தன் அழுகையை விரட்டுவதற்காக, தான் ஓர் ஆண் பிள்ளை என்ற தன்னம்பிக்கை தன்னிடமிருந்து விடைபெருமலிருக்க, தானும் தன் தந்தையும் வாழ வேண்டுமென்பதற்காக, அவன் அலறினுன்.

அன்றைக்கு லாபம் அவனுக்கு இரண்டு ரூபாய்; நஷ்டம் அவனுடைய தொண்டைத் தண்ணீர் வற்றியது.-அன்றிரவு அவனுடைய குரல் அவனுக்கே கேட்கவில்லை.

அத்தியாயம் நான்கு

எடுத்துக் கொண்டார்கள்

முனியாண்டியின் தெருவில், அவன் ஒதுக்கி விட்ட தாழ்வாரத்தில் வாழும் வித்தையை முருகையன் எப்படியோ கற்றுக் கொண்டு வந்தான். அதேபோல் நடைபாதை வியாபாரப் பழக்கமும் நாளுக்கொருவிதமான அனுபவத்தை அவனுக்குக் கொடுத்து வந்தது.

முனியாண்டிக்கு முருகையனல் எவ்விதச் சிரமமும் இல்லை. அவன் வெளியில் எங்காவது சாப்பிட்டுக் கொண்டு, தங்குவதற்கு மட்டிலும் அந்த இடத்தை வைத்துக் கொண்டான். முனியாண்டியின் குழந்தைகளுக்கு முருகையனல் விளையாட்டுப் பொம்மைகள் கிடைத்தன; தின் பண்டங்கள் கிடைத்தன. வரவிருந்த சுதந்திரத் திருநாளன்றைக்குக் குழந்தைகளுக்குச் சட்டைத் துணிகள் வாங்கித் தருவதற்கும் முருகையன் திட்டமிட்டிருந்தான்.

முனியாண்டியும் அவன் மனைவியும் தங்கள் குடும்பத்தை இழுத்துப் பறித்துக் கொண்டுதான் நடத்தினுர்கள். இரவுச் சாப்பாடுதான் அந்த வீட்டில் வயிறு நிறைந்த சாப்பாடு.வேலம்மாள் ஏதோ ஒரு வீட்டில் வேலை செய்து அவர்கள் கொடுக்கும் மிச்சத்தை வீட்டுக்குக் கொண்டு வந்து குழந்தைகளுக்குக் கொடுப்பாள். நடுப்பகல் உணவுக்குத் தெருக் கடைகளில் தேநீர் குடித்துக் கொள்வான் முனியாண்டி. தினந்தோறும் ரிக்ஷாவுக்கு ஒரு ரூபாய் வாடகை கொடுத்து விட வேண்டுமாம்; அவனுடைய வீட்டுக்கும் தாழ்வாரத்துக்கும் மாத வாடகை ஏழு ரூபாய்.

அடிக்கடி கடன்காரர்கள் வந்து வீட்டு வாசலில் சத்தம் போடுவதைக் கவனித்தான் முருகையன். ஆனலும், ஒரு ரூபாயோ இரண்டு ரூபாயோ முனியாண்டிக்கு அவன் பணம் கொடுத்து உதவ முன்வந்தபோது அவன் அதைப் பெற்றுக் கொள்ளவில்லை.

''சண்டைக் காலத்திலே சுமாராகப் பிழைப்பு நடந்திச்சு. இப்போ, அவ்வளவு சுறுசுறுப்புக் கிடையாது. வயிருரச் சாப்பிட்டா கடனைக் கொடுக்க முடியலே; கடனைக் கொடுத்தாச் சாப்பிட முடியலே. - சமுத்திரமுன்னு இருந்தா அலையில்லாமல் இருக்குமுங்களா? எல்லாம் சரியாப் போகுமுங்க!''

முனியாண்டிக்கு இருந்த நம்பிக்கையும் துணிவும் முருகையனை வியக்கச் செய்தன. அவன் மனைவியோ மாதம் ஐந்து ரூபாய்ச் சம்பளத்துக்குத் தன் கைக் குழந்தையையும் சரிக் கட்டிக் கொண்டு, தினம் ஐந்து மணி நேரத்துக்குக் குறையாமல் வேலை செய்தாள். பையன்கள் இருவரும் பெரியவர்கள்; அவர்கள் பள்ளிக்கூடத்துக்குப் போய் வந்தார்கள். மூன்ருவது பெண்குழந்தை தாயாருடன் வேலை செய்யும் இடத்துக்குப் போய்க் கைக்குழந்தையைப் பார்த்துக் கொண்டாள்.

பொழுது போக்குக்காக அந்தத் தெருவில் இருந்த ஒரு பெட்டிக் கடைக்கு அடிக்கடி சென்று வந்தான் முருகையன். அந்தப் பெட்டிக் கடைக்குள் அரிசி-பருப்பு, உப்பு-புளி முதல் வெற்றிலைப் பாக்கு, பீடி, சிகரெட் முதலிய பல சாமானகளும் இருந்தன. அந்தக் கடைக்காரன் நடேசன் முருகையனுக்கு நண்பனுகி விட்டான். வியாபாரமில்லாத வேளைகளில் . முருகையனை உட்கார

வைத்துக்கொண்டு ஏதாவது பேசிக் கொண்டிருப்பான்.

ஒரு நாள் முருகையன் கடையிலிருந்த சமயத்தில் இடுப்பில் கைலியும், முண்டா பனியனும், காடு போன்ற கிராப்புத் தலையும் கொண்ட் ஒரு நோஞ்சல்பேர் வழி மீசையை முறுக்கி விட்டுக்கொண்டு வந்து சிகரெட் வாங்கிப் பற்ற வைத்தான். பிறகு கடையிலிருந்து முறுக்கு, பழம், மிட்டாய் போன்ற சில தின் பண்டங்களை அவனாகவே எடுத்துக் கொண்டான். காசைக் கொடுக்காமல் மெல்லத் திரும்பினான்.

''என்ன வாத்தியாரே! துட்டுக் கொடுக்க மறந்திட்டியே?'' என்று தயவாகக் கேட்டான் கடைக்கார நடேசன்.

''இருந்தாக் கொடுத்திருக்க மாட்டேனா? என் துட்டு எங்கே போயிடப் போவுது? பேசாமல் எளுதி வச்சுக்க வாத்தியாரே!'' என்று அலட்சியமாய்க் கூறிவிட்டு நடையைக் கட்டினான்.

''கூவத்துத் தண்ணியிலே எழுதி வைக்க வேண்டியதுதான்.-போ, போ! எல்லாம் உன் ராச்சியமாத்தான் இருக்குது'' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான் நடேசன்.

முருகையனுக்கு இந்தக் காட்சி திகைப்பைத் தந்தது. ''கடன் கொடுக்க முடியாதென்றால் கண்டித்துச் சொல்லி விடுவதுதானே?'' என்றான்.

''சொன்னால் பிறகு இந்தத் தெருவில் நான் கடை நடத்த வேண்டாமா? இந்தத் தெருவுக்கு இவன் ஒரு 'பெரிய வாத்தியார்.' இவன் சீடர்கள் இருக்கிறார்களே, அவர்கள் ஒரு தனி ஆட்சியே இங்கு நடத்தக் கூடியவர்கள்....''

''என்ன!''

''திருட்டு, ஏமாற்று, சூது, சாராயம் காய்ச்சுவது, இவையெல்லாம் இவனுடைய வேலைகள். வெட்கம் மானத்துக்குப் பயப்படாதவனுக்கு இங்கே 'ரௌடி' என்று பெயர். இங்கிருக்கும் எல்லோருக்கும் இவனைப்பற்றி எல்லாம் தெரியும்; ஆனால் ஒருவரும் ஒன்றும் பேச மாட்டார்கள். தங்கள் வரையில் தொல்லை வராமல் இருந்தால் போதும் என்ற எண்ணம் அவர்களுக்கு.''

''போலீஸ் இல்லையா? சட்டம் இல்லையா?'' என்றான் முருகையன்.

நடேசன் இதைக் கேட்டுச் சிரித்து விட்டு, ''உங்களுக்கு இன்னும் உலகம் தெரியவில்லை; நீங்கள் எவ்வளவோ தெரிந்து கொள்ள வேண்டியதிருக்கிறது'' என்றான். ''போலீஸ்காரர்களும் இவனை ஒரு முறை பிடித்துக் கொண்டு தான் போனார்கள். சிறைக்குப் போய் விட்டு வந்தவுடன் இவனுக்குக் குளிர் விட்டுப் போய் விட்டது. இவன் ஒரு சில பணக்காரர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இப்போது கையாளாக இருக்கிறான். அந்தத் துணிவில்தான் இவ்வளவும் செய்யச் சொல்கிறது!''

சமுதாயத்தின் கீழ்மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையிலும் தீயவர்கள் வலியவர்களாக இருக்க முடியுமானால், அந்தச் சமுதாயம் எப்படி உருப்படும்? பெரியபாளையத்துக்கு எப்படிக் குமரவேல் 'பெரிய மனிதரோ', அப்படி இந்தத் தெருவுக்கு இந்தக் காலிப்பயலா?

''நான் என்ன செய்கிறது? இவனுக்கெல்லாம் கொட்டி அழுதது போகத் தான் என் பிழைப்பையும் நடத்த வேண்டியிருக்கிறது'' என்றான் நடேசன்.


முருகையனுக்கு ஒரு விஷயம் இப்போது நன்கு புலப்பட்டது. சமூகத்துக்கு நன்மை செய்ய விரும்புகிறவர்களை விட, சமூக விரோதிகளே துணிவு மிகுந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் ஏழைகளாக இருந்தாலும் சரி. பெரும்பாலான மனிதர்கள் எதிலும் பட்டுக் கொள்வதில்லை. பணத்துக்கும் பயத்துக்கும் பணிவதே அவர்களது வாழ்க்கை வழியாக இருந்தது.

மறு நாள் பொழுது விடிந்தால் நாட்டுக்குச் சுதந்திரம்! ஒரு வாரமாகவே ஒவ்வொரு நாளும் அந்தத் திருநாளுக்காக ஏங்கிக் கொண்டிருந்தான் முருகையன். தான் சிறையில் பட்ட துன்பங்கள் அவனுக்கு இப்போது இன்பங்களாகத் தோன்றின. தன் படிப்பு பாதியில் முடிந்தது பற்றியும் தான் சிறைக்குச் சென்ற சமயத்தில் தன் தந்தை சொத்து முழுதும் இழந்தது பற்றியும்கூட அவன் கவலைப் படவில்லை. நாட்டுக்காகப் பலர் தங்கள் உயிரையே இழந்துள்ளபோது, தான் பட்ட கஷ்டங்கள் அவனுக்கு அற்பமாகவே தோன்றின.

அதைக் கொண்டாடுவதற்காக முன்னாலேயே முனியாண்டியின் குழந்தைகளுக்குப் புதுச் சட்டைகள் வாங்கிவிட்டான். மாலை விற்பனைக்குப் பிறகு வீடு திரும்பும்போது, தித்திப்புத் தின்பண்டங்கள் வாங்கி வர நினைத்தான்.

பாரீஸ் முனை நடை பாதையில், தன்னுடைய தகரப் பெட்டியைத் திறந்து சாமான்களை எடுத்து வைத்து வழக்கம் போல் கடை பரப்பினான் முருகையன். ஏற்கனவே அவனிடம் மீதமிருந்த சாமான்களுடன் இன்னும் சில சாமான்களையும் வாங்கி வைத்தான். உற்சாகத்துடன் கூவினான்:'' எதை எடுத்தாலும் ஓர் அணா! எதை எடுத்தாலும் இரண்டணா! எதை எடுத்தாலும் நாலணா!''

சுறுசுறுப்பாக வியாபாரமும் நடந்து கொண்டிருந்தது. வந்து ஒரு மணிப்



தவணை முறைப்படி டிக்கட் வழங்கும் பி. ஓ. ஏ. ஸி:
திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

பயணம் முந்தி—பணம் பிந்தி!

பி. ஓ. ஏ. ஸி. யினால் நியமிக்கப்பெற்ற உள்ளூர்
ட்ராவல் ஏஜெண்டும், தவிர எங்கெங்குமுள்ள
பி. ஓ. ஏ. ஸி. அலுவலகங்களும் உங்களுக்குப்
பணிபுரியக் காத்திருக்கின்றன.

ஏயர் இந்தியா மற்றும் க்வான்டாஸ் அவர்களோடு கூட்டமைந்த

"கட்டணம் இத்தனை
குறைவாயுள்ளபோது
விமானப் பயணம்
செய்யாமலிருக்க
யாரால் முடியும்?"



உலகம்
முழுவதும்
பி. ஓ. ஏ. ஸி.

B·O·A·C

உங்களை
நன்கு
பேணுகிறது.

பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் ஏயர்வேஸ் கார்ப்பொரேஷன்.

பொழுதில் ஐந்தாறு ரூபாய்களுக்கு விற்பனை ஆயிற்று. மக்களுடைய முகங்களை ஆர்வத்தோடு கவனித்தான். தனக்கு நாட்டு விடுதலையி லிருந்த ஆனந்தம் அவர்கள் முகத்திலும் குடி கொண்டிருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது. மறு நாள் உல்லாசமாக விடுதலை விழாக்களில் கலந்து கொள்ள வேண்டுமென்பதற்காக, இரண்டு நாள் வியாபாரத்தையும் அன்றைக்கே செய்து விட வேண்டும்என்று ஊக்கம் காட்டினுன். திடீரென்று நடை பாதைக் கூட்டத்துக்கு மத்தியில் ஏதோ பீதி காணப்பட்டது. அவனைப் போன்ற சில்லறை வியாபாரிகள் தங்கள் தங்கள் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு தலைதெறிக்க எங்கோ ஓடினார்கள். ஒரு பழக்கூடைக்காரி ஒரு சீப்பு வாழைப் பழம் கீழே விழுந்ததைக் கூடப் பொருட்படுத்தாமல் கூடையுடன் கூட்டத்துக்குள் மறைந்தாள். இதெல்லாம் என்ன இது? ஏன் இப்படி ஓடுகிருர்கள்? எங்கே ஓடுகிருர்கள் ?

ஓடியவர்களில் ஒருவன், ''போலீஸ்! போலீஸ்!''என்று எச்சரித்துக்கொண்டே ஓடினுன். முருகையனுக்கு ஒன்றும் புரியவில்லை. போலீஸ் வந்தால் என்ன?

பாவம், முருகையன் அந்த வியாபாரத்துக்குப் புதியவன். நடைபாதையில் நடப்பவர்களுக்கு இடைஞ்சலாக யாரும் வியாபாரம் செய்யக் கூடாது என்ற சட்டம் அவனுக்குத் தெரியாது. 'சட்டம் தெரியாது என்ற காரணத்தால் குற்றத்தி லிருந்து தப்ப முடியாது' என்ற வாதத்தையும் அவன் அறிந்து கொள்ளாதவன்.

இன்னும் சற்று உரத்த குரலில், ''எதை எடுத்தாலும்'' என்று அவன் கூவத் தொடங்கினுன். இடத்தை விட்டு அசையவே யில்லை.

திடீரென்று இரண்டு போலீஸ்காரர்கள் அங்கே ஓடி வந்தார்கள். 'எதையெடுத்தாலும்'என்ற அவனுடைய பல்லவியைக் கேட்டுச் சிரித்துவிட்டு, அவசரம் அவசரமாக எல்லாவற்றையுமே வாரிச் சுருட்டி எடுத்துக் கொண்டார்கள். 'இதென்ன! போலீஸ்காரர்களே இப்படிச் செய்கிருர்களே?' என்று நினைத்தான் முருகையன்.

மற்றவர்களோ எதை எடுத்தாலும் காசு கொடுப்பது வழக்கம்; இவர்களோ எல்லாவற்றையுமே எடுத்துக்கொண்டு, ஒன்றுமே கொடுக்காமல் போய் விட்டார்கள்! பக்கத்திலே ஒரு லாரி நின்றது. அதில் வாரிப் போட்டுக் கொண்டு கிளம்பினுர்கள். முருகையன் ஒன்றும் புரியாமல் சிரித்தான்.

''முட்டாள்! நான் அப்பவே சொன்னேனே?'' என்று சொல்லிக்கொண்டே, கூட்டத்துக்குள்ளிருந்து வெளியில் வந்தான் 'போலீஸ்!' என்று முன்பு எச்சரிக்கை செய்தவன். ''நல்ல வேளை, உன்னையும் தூக்கிப் போட்டுக்கொண்டு போகாமல் இருந்தார்களே, அதுவரையில் நீ தப்பினுய்!'' என்று கூறி, பிறகு அவன் சட்டத்தை விளக்கினுன்.

முருகையனுடைய சிரிப்பு இன்னும் அதிகமாகியது. ''என்னைக் கூட்டிக் கொண்டு போயிருந்தால் தேவலாமே! சிறைக்குள் வேலையும் கொடுப்பார்கள்; சோறும் போடுவார்கள் ! – மனிதர்கள் பட்டினி கிடக்கும் நிலையில் நாடு இருப்பது சட்டப்படி குற்றமில்லையா?''

பின்னர் அவன் சிறிதுகூடக் கவலைப் படாமல் பையிலிருந்த காசைக் கொடுத்துத் தானும் சாப்பிட்டு விட்டு முனியாண்டியின் குழந்தைகளுக்கும் தின் பண்டம் வாங்கிக் கொண்டான். முனியாண்டியின் குடிசையை நெருங்கியபோது அதற்குள் ஏதோ முனகல் சத்தம் கேட்டது. முனியாண்டியின் மனைவி தேம்பிஅழும் குரலும் கேட்டது.

தன்னுடைய தாழ்வாரத்துக்குள் நுழையாமல் அந்த வீட்டின் கதவைத் தட்டினுன். **(தொடரும்)**

விரிஞ்சிபுரம் மடாலயத் திருப்பணி

தமிழகத்தில் தோன்றிய மகான்களுக்குள் ஸ்ரீ அப்பய தீக்ஷிதர் அவர்களுக்கு ஒரு முக்கியமான இடம் உண்டு. கவியாகவும், பண்டிதராகவும், பரம பக்தராகவும், அத்வைத வேதாந்தியாகவும் அவர் ஆற்றிய பணிகள் கணக்கற்றவை. இப்பெரும் பணிகளோடு வட ஆர்க்காடு மாவட்டம், வேலூர் தாலூகாவிலுள்ள விரிஞ்சிபுரத்தில் ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரேசுவரர் மடாலயத்தையும் அவர் ஸ்தாபித்திருக்கிருர். தற்போது பழுதடைந்துள்ள இம்மடாலயத்தைப் பத்தாயிரம் ரூபாய் செலவில் செப்பனிட்டு ஸ்ரீ ஆதிசங்கரர், ஸ்ரீ அப்பய தீக்ஷிதர் ஆகியோரின் பிம்பங்களைப் பிரதிஷ்டை செய்ய உள்ளூர் அன்பர்கள் முயற்சி எடுத்துக் கொண்டுள்ளார்கள். தை மாதம் ஜீரணோத்தாரணத்தைப் பூர்த்தி செய்து கும்பாபிஷேகம் நடத்த உத்தேசித்திருக்கிருர்கள். **ஸ்ரீ வி. மா. முனிரத்னமய்யர், டிரஸ்டி, ஸ்ரீமத் அப்பய தீக்ஷிதர் மடாலயம், விரிஞ்சிபுரம், வேலூர் தாலூகா, வடார்க்காடு மாவட்டம்** என்ற விலாசத்துக்குப் பொருளுதவி செய்து ஆசாரிய புருஷர்களின் அருளுக்குப் பாத்திரராகலாம்.

திருமூலர் தவமொழி

ராஜாஜி சோமு

37

பிறப்பிலேயே கலந்து உயிரை ஆட்டி வருகிற கர்ம பலனை நமது பெரியோர்கள் சஞ்சிதம், பிராரப்தம், ஆகாம்யம் என்று மூன்றாகப் பிரித்துச் சொல்வார்கள். சஞ்சிதம் என்பது முற்பிறவிகளில் செய்த வினைகளின் பயன்கள் சேர்ந்து தங்கியுள்ள குவியல். பிராரப்தம் என்பது சஞ்சிதக் குவியலிலிருந்து இப் பிறவியில் அனுவிப்பதற்கு என்று முனைந்து நிற்கும் வினைப்பகுதி. ஆகாம்யம் என்பது நிகழ்காலத்திலே செய்கிற வினை. அதாவது பிராரப்த வினையை நுகரும் போது நமக்கு ஏற்படுகிற விருப்பு வெறுப்புக்களால் புதிதாக நாம் செய்கிற "நிகழ்வினை"! ஞானிகள் இந்த மூன்று வித வினைகளின் விளைவுகளிலிருந்தும் விடுபட்டு ஜீவன்முக்தர்கள் ஆவதைத் திருமூலர் பாடுகிறார்.

தன்னை அறிந்திடும்
தத்துவ ஞானிகள்

[தன்னை—தனது ஆன்ம சொரூபத்தை. அறிந்திடும் — ஞானத்தால் உணர்ந்து தெளிகின்ற. தத்துவ ஞானிகள்—மெய்யை அறிந்த பேரறிவாளர்கள்.]

முன்னை வினையின்
முடிச்சை அவிழ்ப்பர்கள்

[முன்னை வினையின் முடிச்சை—அநாதிகாலமாகத் தங்களைத் தொடர்ந்து பிணித்து வந்துள்ள சஞ்சித மூட்டையை. அவிழ்ப்பர்கள்—அவிழ்த்து விடுவார்கள். அதாவது அந்த மூட்டையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்கிறார்கள்.]

பின்னை வினையைப்
பிடித்துப் பிசைவர்கள்

[பின்னை வினையை — இனித் தாம் செய்ய நேரிடும் கர்மங்களாகிய ஆகாம்ய வினையை. பிடித்துப் பிசைவர்கள்—அவை சேர்ந்து உயிருக்குப் புதிய பாரமாகாமல் தேய்த்து அழித்து விடுவார்கள்.]

சஞ்சித வினையின் முடிச்சை அவிழ்ப்பதோடு, ஆகாம்ய வினையையும் அழித்து விடுகிறார்கள், ஆன்ம சொரூபம் கண்ட ஞானிகள். இது எப்படி அவர்களுக்குச் சாத்திய மாகிறது என்றால்,

சென்னியில் வைத்த
சிவன்அரு ளாலே

[சென்னியில் வைத்த—தலையிலே சூடிக் கொண்ட. சிவனருளாலே—மங்களமூர்த்தியின் திருவருளாலே.]

முனிவருடைய உபதேசம் என்னவென்றால், இறைவனுடைய திருவருளை நாடிப் பெற்று, ஆன்ம ஞானத்தைத் தேடிக் கண்டால் முன்னைவினை பின்னை வினை எல்லா வினைகளும் நீங்கிவிடும் என்பதே. அனைத்துக்கும் வழி ஆன்ம ஞானம். அதற்கு வழி இறைவன் அருளை நாடுதல்.

தன்னை அறிந்திடும்
தத்துவ ஞானிகள்
முன்னை வினையின்
முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப்
பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த
சிவனரு ளாலே

தத்துவ ஞானிகள் யோகப் பயிற்சியினால் மனம், வாக்கு, காயம் மூன்றையும் அடக்கியாண்டு கர்மத்தின் பிடிப்பிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்கிற ஞான மார்க்கத்தைச் சொன்னார். இனிச் சாமானிய மக்களைப் பார்த்து வினையிலிருந்து மீள்வதற்குரிய கர்ம மார்க்கத்தை உபதேசிக்கிறார்.

ஆசை அறுமின்கள்
ஆசை அறுமின்கள்

[அறுமின்கள் – மனத்திலிருந்து தகர்த்தெறியுங்கள்.]

ஆசைதான் வினைக்கு வித்து. அதனால் ஆசையைக் களையுங்கள் என்கிறார் முனிவர். இதுவே வழி என்பதற்காக இருமுறை சொல்லுகிறார்.

ஆசை அறுமின்கள்
ஆசை அறுமின்கள்
ஈசனோ டாயினும்
ஆசை அறுமின்கள்

[ஈசனோடாயினும் – ஈசனிடத்திலுங் கூட. ஆசை – பலவினை நாடிச் செய்கிற பிரார்த்தனைகளை. அறுமின்கள் – விட்டு விடுங்கள்.]

ஆசைகளைத் தீர்த்துக் கொள்ள வேறு வழிகளை நாடாமல், ஈசனையே பிரார்த்தித்துப் பெறலாம் என்று முயல்வதுங்கூட ஆசைகளைப் பெருக்கும். ஆனபடியால் அதுவும் வேண்டாம் என்கிறார் முனிவர். ஈசனைத் தியானிக்கும்போது அதனுடன் ஆசைகளைப் பிணைத்துப் பிரார்த்தனை செய்ய வேண்டாம் என்கிறார். இதற்காகத் தான் 'ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்' என்கிறார்.

ஆசை படப்பட
ஆய்வரும் துன்பங்கள்

[ஆய் வரும் — முளைத்துத் தோன்றும்.]

ஆசைகளைத் தியானிக்கத் தியானிக்கத் துன்பங்கள் வளர்ந்து பெருகும்.

ஆசை விடவிட
ஆனந்தம் ஆமே

ஆசைகளை ஒவ்வொன்றாக விட்டோமானால், அப்படி அப்படியே ஆனந்தம் தோன்றி வளரும்.

ஆசையே துன்பமாக மாறுகிறது. இதை விட்டொழிக்க வேண்டும். கடவுளிடத்திலும் 'எல்லாம் அவன் செயல்' என்று ஒப்படைத்து விடாமல், அங்கும் ஆசையின் வசத்தில் அழுந்தி அது வேண்டும் இது வேண்டும் என்று கேட்பதும் தவறு என்கிறார் முனிவர். ஆசையை ஒவ்வொன்றாக விடும்போது ஆனந்தம் படிப்படியாக உண்டாவதைப் பாட்டின் கடைசி இரண்டு வரிகளிலும் உள்ள சொல்லடுக்குகள் உணர்த்துகின்றன. இவ்வாறே வள்ளுவரும்.

யாதனின் யாதனின்
நீங்கியான் நோதல்
அதனின் அதனின்
இலன்.


என்று அடுக்குத் தொடர் வைத்துச் சொல்லுகிறார்.

ஆசை அறுமின்கள்
ஆசை அறுமின்கள்
ஈசனோ டாயினும்
ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட
ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட
ஆனந்தம் ஆமே!



CCHO/G/3

அன்பே ஆரமுதே



அத்தியாயம் முப்பத்தெட்டு

சிரிப்பு அடங்கியதும் ருக்மிணி அனந்தசாமியிடம், ''சரி, வாடகை நான் கேட்கும்போது நீங்கள் பாங்கியிலுள்ள பணத்திலிருந்து எடுத்துக் கொடுக்கலாம். சரி... வடவண்டை.... அறைக்குள்...'' என்று கூறிக்கொண்டே அந்த அறைக்குள் போனாள். ''அதோ அங்கேயே குளிக்கிற அறை இருக்கிறது. வெந்நீர் போடுவதற்குச் சுவரிலேயே ஒரு தொட்டி இருக்கிறது. இந்த ஸ்விட்சைப் போட்டுப் பத்து நிமிஷங்களுக்குப் பிறகு இந்தக் குழாயைத் திறந்தால் நல்ல கொதிக்கிற வெந்நீராக வரும். இந்தக் குழாயைத் திருகினால் பச்சைத் தண்ணீர். இஷ்டத்துக்கு விளாவிக் கொள்ளலாம். நான் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுக் கீழே போனாள் ருக்மிணி.

தனியாக விடப்பட்ட அனந்தசாமி இப்படியும் அப்படியுமாக அலைந்தார். ஹாலில் சற்று உட்கார்ந்தார். மீண்டும் எழுந்து தனியாகத் தொங்கின அந்தப் படத்தைப் பார்த்தார். யசோதரை பொன் வர்ணம். புத்தர் வெள்ளை, சுற்றிலும் எங்கும் பச்சை.... நிலையைக் கடந்து மொட்டை மாடிக்குச் சென்றார். ருமானி மாமரம் சாம்பல் சாம்பலாகக் காய்த்திருந்தது. கைப்பிடிச் சுவருக்கு இப்பாலும் வந்து தொங்கிற்று கிளை ஒன்று. அதே போலத் தென்னண்டைக் கோடியில் சீமைப் பலாமரம் ஒன்று பெரும் பெரும் இலைகளாகக் கட்டையை உராய்த்து நின்றது. பின்னால் உள்ள வீட்டுத் தோட்டத்தில் விளாமரம் கரு கருவென்று கரும் பச்சையாக நெடிது வளர்ந்து நின்றது.

ஏறும் வெயிலைத் தாளாமல் உள்ளே வந்தார். தென்னண்டை அறையில் வந்து தாழம்பாயைப் பிரித்துச் சாய்ந்து கொண்டார்.

ஜுரம் அடித்த சோர்வு இன்னும் அவர் உடலை விடவில்லை.

குளித்து விட்டுக் குங்குமமிட்டுக் கொண்டு ஹாலுக்குப் பின்னால் சமையலறைக்கு எதிரே சாப்பிடும் இடத்தில் வந்து தரையில் உட்கார்ந்து முல்லைப் பூவைத் தொடுத்துக் கொண்டிருந்தாள் ருக்மிணி. சமையலை முடித்து விட்ட அவயாம்பாள் எதிரே ஒரு குடலைப் பவழ மல்லிப் பூவை ஊசி போட்டு நூலில் கோத்துக் கொண்டிருந்தாள். மனிதன் சூடாத பவழமல்லியின் மணம் அந்த

தி. ஜானகிராமன்

இடம் முழுவதையும் கோயிலாக மாற்று வது போல் இருந்தது.

சித்தியின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. என்ன சொல்லப் போகி ருளோ! ருக்மிணி மூச்சைக் கையில் பிடிக்காத குறையாகக் காத்துக் கொண் டிருந்தாள்.

ஒரு நிமிஷம் கழித்து மாலையை எட்டப் பிடித்து ஒரு தடவை பார்த்து விட்டுச் சொன்னுள் சித்தி. ''நான் என்னமோ சொல்லி வைச்சேன். அவர் ஏதாவது நினைச்சிண்டிருப்பாரோடி!''

''ம்'' என்று கேட்காதது போல் மாலையைக் கோத்துக் கொண்டே 'ம்' போட்டாள் ருக்மிணி.

''எனக்கு என்ன பேசறதுன்னே புரியலே. பார்த்தவுடனே இவரா, இவரான்னு விக்கிப் போய் நின்னேன். அன்னிக்குச் சாயங்காலம் அந்தப் பிள்ளை திடீர்னு காணுமற் போனது, அப்புறம் நடந்த அமர்க்களம், திகில், ஆத்திரம், அழுகை எல்லாம் குபு குபுன்னு கண் முன்னுல் பொங்கிண்டு வந்தது. உடம் பெல்லாம் வெதவெதன்னுது. தலை முகமெல்லாம் சுட்டுது — படபடன்னு என்னத்தையோ கொட்டி விட்டேன்.''

ருக்மிணி தலை நிமிராமல் புன்னகை பூத்தாள். ''நீ ஒண்ணும் தப்பாகச் சொல்லிடலே, சித்தி! சொன்னுலும் கோபமோ வருத்தமோ படற மனுஷர் இல்லே அவர்....''

அதைக் கேட்டுச் சித்தி அவளை உற் றுக் கவனித்தாள்.

''அவ்வளவு தீர்மானமாகத் தெரி யுமா என்ன உனக்கு? காலம் காலமாப் பழகியிருக்கிருற் போல் சொல்றியே?''

''காலம் காலமாப் பழகுகிறதினுலே தான் மாடியிலே வந்து குடியிருக்க வேணும் என்று சொன்னவுடனே அவர் வந்து விட்டார்.''

சித்தி அதைப் புரிந்து கொள்வதற் காகச் சற்று மௌனமாயிருந்தாள். பூக் கோக்கும் விரல்கூட ஓய்ந்து விட்டது. சற்றுக் கழித்துக் கேட்டாள். ''இத் தனை வருஷமாவா, டில்லியிலேகூடவா?''

''ஏன் இப்படி நம்பாதது போல் கேட்கிறே?''

''என்னத்தை நம்பறது?''

''கூடவே, உடம்போடு, உருவோடு நின்று உட்கார்ந்து பழகணும் என்று அர்த்தமா? அதில்லாமல் எங்கேயோ பழகுகிறதிலே நினைவு, சந்தோஷம் எல் லாம் அதிகம்தான்.''

ருக்மிணி சித்தியிடம் பழகியது சிநேகிதி போலத்தான். பெற்ற தாயா ரிடம் ஏதோ ஒன்றிரண்டு சொல்லக் கூச்சப்பட வேண்டும். ஆனுல் சித்தி, அம்மா, சிநேகிதி — இரண்டு இடங் களையும் பிடித்துக் கொண்டிருந்தாள். ஆதியிலிருந்தே அவளோடு எதையும் மனத்தைத் திறந்து, உணர்ச்சி வசப் படாமல், சங்கோசமில்லாமல் பேசிப் பரி மாறிக் கொள்ளும் ஒரு பழக்கத்தை அவளாகவே ஏற்படுத்திக் கொண்டிருந் தாள். கல்லூரியில் கூட வேலை செய்ப வர்கள், மாணவிகள், இவர்களிடம் பழகி யதைவிட, இன்னும் மனத்தைத் திறந்து கூச்சமில்லாமல் சித்தியிடம் அவளுக்குப் பேச முடியும். சித்தியும் வைத்தியப் புத்தகத்தில் வரைந்த அவயவங்களைப் பார்ப்பது போல் மனசில் கூச்சமின்றி 'என்னமோ' போன்ற தயக்கமெல்லாம் இல்லாமல் ருக்மிணி பேசுவதையெல் லாம் கேட்டுக் கொள்வாள், பேசுவாள். ஆனுல் நேற்று இரவு திடீரென்று ருக்மிணி இந்தச் செய்தியைச் சொன்ன போது சட்டென்று காலை வாரி விட்டாற் போல் இருந்தது அவளுக்கு. ருக்மிணி சென் னைக்கு வந்த காரணம் எல்லாம் நேற்றுத் தான் அவளுக்குத் தெரிந்தது. அந்தச் செய்தி தந்த அதிர்ச்சிக்கும் திகைப்புக் கும்மேல் நாளைக் காலையில் அவர் இங் கேயே இந்த மாடிக்கே குடி வரப் போகி ருர் என்று கேட்டபொழுது அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. பசையில்லா மல், பற்றில்லாமல், எந்த விஷயத்தையும் பற்றிப் பேசுகிற மனப்பான்மை, அப்படி வளர்ந்த பழக்கம் இந்த விநோதமான செயலில் வந்து முத்தாய்ப்பாக வந்து முடியும் என்று அவள் எதிர்பார்க்க வில்லை. வியப்பு, திகைப்பெல்லாம் ஒருவாறு அடங்கினதும் அவளும் மனசை உரப்படுத்திக் கொண்டு ருக் மிணியை என்னென்னமோ கேட்டுவிட் டாள். ருக்குவும் எல்லாவற்றுக்கும் ஈடு கொடுத்துப் பதில் சொல்லிக் கொண்டு வந்தது அவளுக்குத் திருப்தி யாகக் கூட இருந்தது.

''காலம் காலமாப் பழகினேங்கறே! உன்னை நானும் இருபத்தைந்து வருஷ மாகப் பார்த்துண்டு வரேன். ஒண் ணுமே எனக்குத் தெரியலேயே! நீ ஒண்ணும் சொல்லலேயே!''

''தினம் தினம் பழகுகிறவர்களைப் பற்றி என்னத்தைச் சொல்றது?''

''நீ அப்பவே புடிச்சி இப்படித் தான் இருக்கே! முன்னுலே எதையாவது சொல்லுவியா, போவாயா! ஒண்ணும் கிடையாது. பின்னுலே செய்யறது, நடக்கிறது எல்லாத்தையும் பார்த்து, ஓகோ, இதுக்காகத்தான் ஆரமிட்டா ளான்னு அடியைப் புரிஞ்சுக்கணும்.''— சற்றுக் குறையாகவே சொன்னுள் சித்தி.

''இது என்ன பெரிய விஷயம் கலந்து ஆலோசிக்கும்படியாக! ரொம்பக் கால மாக நினைச்சிண்டிருந்தேன். எப்படியா


ஆதரவுடன் சீராட்டி
ஆஸ்டர்மில்க்
பாலூட்டி...
உங்கள் ஆசைக் கண்மணியின்
பாக்கியம்: ஆஸ்டர்மில்க் அளிக்கும்
ஆரோக்கியம். காரணம், தாய்ப்பாலுக்கு
நிகரானது ஆஸ்டர்மில்க். பரிசுத்தமான
பாலிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ள
ஆஸ்டர்மில்க், பாப்பாவின் பச்சிளம் ஜீரண
சக்திக்கேற்பப் பிரத்தியேகமாகப்
பக்குவப்படுத்தப்பட்டுள்ளது. தவிர,
பற்களும், எலும்புகளும் திட வளர்ச்சி
பெறுவதற்கான வைட்டமின் 'டி'யும்
இரத்த சோகை தட்டாமல்
காப்பதற்கான அயச்
சத்தும் அதில் சிறப்புறச்
சேர்க்கப்பட்டுள்ளன.
OSTERMILK
...தாய்ப்பாலுக்கு நிகரானது.
இலவசம்: 'ஆஸ்டர் மில்க் புத்தகம்' (ஆங்கிலப் பிரதி)...
விரிவுமிக்க, குழந்தைப் பராமரிப்பு நூல்... தபால் செலவுக்காக 50 ந.
பைசா தபால் வில்லைகள் இணைத்து எழுதுக: ஆஸ்டர்மில்க்'
தபால் பெட்டி எண் 2120, சென்னை-2.
OS.9-X51-M. TM

வது இவரை ஒரு நாள் பார்த்து விடுகிறது. பார்க்கத்தான் போகிறோம் என்று. கடைசியில் யதேச்சையாகப் பார்க்க நேர்ந்தது. அப்புறம் சேர்ந்தே இருந்தால் என்ன என்று தோன்றியது. கேட்டு விட்டேன். உன்கிட்டே ஒன்றையும் மறைக்கிறதில்லை. இதை மட்டும் அப்புறம் சொல்லிக் கொள்ளலாமே என்று இருந்து விட்டேன்!''

''உங்கப்பா, சித்தப்பாவைத்தான் கொண்டிருக்கே நீ — அவ்வளவு அழுத்தம். கழுத்தை அறுத்தாலும் மனசிலிருக்கிறதை என்னன்னு பார்க்க முடியாது... அதெல்லாம் சரி, எனக்கு என்னமோ 'முணுக் முணுக்' குங்கிறதேடி!''

''என்ன?''

''மாடியிலே கொண்டு அவரைக் குடி வைச்சிருக்கே! அப்புறம்...?''

''அப்புறம் என்ன? அவர் இருக்கிறார். நாம் பாட்டுக்கு இருக்கிறோம்.''

''என்ன இது!'' என்று விழித்தாள் சித்தி.

''ஒன்றுமில்லை.''

''வாடகையும் கிடையாது. சாப்பாடும் அவருக்கு இங்கிருந்து அனுப்பப் போறேங்கிறே?''

''ஆமாம், சித்தி! எனக்கு அகமுடையானா, பிள்ளையா குட்டியா? இருக்கிறது ஒரு சித்தி — சம்பாதிக்கிற காசை என்ன செய்கிறது? ஒரு வைத்தியரைக் காப்பாற்றினால் ஆயிரம் வியாதியஸ்தர்களைக் காப்பாற்றினாற் போல. அதுவும் இந்த வைத்தியர் இந்த உலகத்தில் பரதேசி, ஏகாதசிகளாகப் பார்த்துப் பொறுக்கியிருக்கிறார். அதுகளுக்கு வேறு மருந்துச் செலவு இவர்தான் செய்யணும். அதுக்காகத் தெம்புள்ள நாலு ஐந்து புள்ளிகளாக வைத்துக் கொண்டு அந்தக் காசில் மருந்து வாங்கி நிரந்து கொள்கிறார். வாடகைக்கு வேறு சம்பாதித்துக் கொள்ள வேண்டியிருந்தது. அம்மா ஒருத்தி இருந்தாள். அவளுக்கு வேறு சம்பாதிக்க வேண்டியிருந்தது. இப்பொழுது அந்தப் பொறுப்பில்லை. அதனால் நம்மை அளவுக்கு மீறிப் பிடித்து விடாது என்று நிச்சயமுண்டு.''

''எனக்கென்னமோ இதுக்கெல்லாம் மனசு இல்லாத மாதிரின்னு விஸ்தாரமாப் பேசிண்டிருக்கியே... ஒரு ஆயிசு முழுக்க இப்படிக் கிடந்துருகினதுக்கு, இது சன்னாசி இல்லாம இருந்தால்—'' சித்தி அப்படியே நின்று விட்டாள்.

''இருந்தா?''

''போடி, போ....'' என்று மடக்கின காலை நீட்டி ஒரு தடவை வெட்



டென்று உதறிக் கொண்டாள் சித்தி. 'ம்' என்று சுவையாக ஒரு பெருமூச் செறிந்தான். ''அப்பாட, அப்பாட'' என்று ஊன்றி எழுந்து மாலையை எடுத்து, அதே அறையில் சுவர் ஓர மாக இருந்த சிறு மர மண்டபத்தில் தவக் கோலத்தில் கண்களை மூடி அமர்ந் திருந்த பரமசிவன் படத்தின் மீது போட்டான்.

''அப்ப நடக்காத கலியாணத்தை இப்ப நடத்தியிருக்க முடியும்கிறியா?'' என்றான் ருக்கு.

சித்தி ஒன்றும் பேசவில்லை. நின்ற வாறே குனிந்து மண்டபத்துள் தலையை விட்டு விடுவது போல் நீட்டிக் கொண்டு மாலையை அழுத்திப் பதிய வைத்துக் கொண்டிருந்தாள்.

''என்ன சித்தி?'' என்றாள் ருக்மிணி மீண்டும்.

''ஆமாம். உன் அதிர்ஷ்டம், முப்பது வருஷங்கள் கழிச்சும் சன்னுசி யாகத்தானே பார்க்க முடியறது? மாலை தொடுத்துப் படத்துக்குப் போடறதோட சரியாப் போயிடுத்து... ஜாடையாப் புரிஞ்சிக்கிறவ, என்ன இப் படிக் கிண்டிக் கிண்டிக் கேட்கிறே இதை மட்டும்?...''

''சாய்த்தாற் போல் விடுகிற விஷய மில்லை இது. நீ என்ன நினைக்கிறாய் என்று நிர்த்தாரணமாய்த் தெரிந்து கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.''

''அதுதானே! அபிப்பிராயம்தான் கேக்கறியோன்னு பார்த்தேன், எல் லாத்தையும் செஞ்சு முடிச்சுப்புட்டு!''

''சித்தி! பட்டவர்த்தனமாகச் சொல்லி விடுகிறேனே! உனக்கு இஷ்ட மில்லாவிட்டால்கூட, உன்னை வழிக்குக் கொண்டு வந்துவிடலாம் என்ற நம் பிக்கைதான் எனக்கு. எனக்கு என்று வது ஒரு நாள் இவரைப் பார்க்கப் போகிறோம் என்று திடமான நம்பிக்கை இருந்தது வாஸ்தவம்தான். ஆனால் திடீர் என்று இப்படி, நாகம்மாள் வீட் டில் வந்து ஏதோ லீவுக்காகத் தங்கி யிருக்கும்போது அது நேரும் என்று நான் நினைக்க வில்லை. பார்த்த பிறகு,



அவரைப் பற்றி நாகம்மாள் சொன்னதைக் கேட்ட பிறகு, அவரையும் நன்றுகப் பார்த்துப் புரிந்து கொண்ட பிறகு, இவர் பக்கத்திலேயே இருக்க வேண்டும், பெண்டாட்டியாக இல்லாத குறையை என் கையால் நாலு கவளம் சோறுவது போட்டுத் தீர்த்துக்கொண்டுவிட வேண்டும் என்று ஆத்திரமாக வந்தது. ஆத்திரம் இல்லை — ஏதோ பிரமை — சடசடவென்று இவ்வளவுதூரம் செய்துவிட்டேன். நீ ஒருத்திதான் எனக்கு ஆமாம் போடக் கூடியவள். உனக்கு இஷ்டமில்லையென்றால்.....''

''சை, பேசாமல் இரு'' என்று பாதியில் அவள் பேச்சை நிறுத்தி ருக்மிணியின் கையிலிருந்த மாலையை வாங்கிக் கீழே மெதுவாக வைத்து, அவள் கையைப் பற்றி 'எழுந்திரு' என்று சொல்லி அவளை இடுக்கினாற் போல அழைத்துக் கொண்டு பக்கத்து அறைக்குள் சென்று படுக்கும் பெஞ்சியில் உட்கார வைத்தாள். குழந்தை மாதிரிதான் ருக்மிணி தோன்றினாள் அவளுக்கு அப்பொழுது. ''இத்தனை வருஷமாக வாயை மூடி விட்டுச் சொல்லலேடி நான். உன் துக்கத்தை யெல்லாம் பொதிமாடு மாதிரி இந்த மனசு சுமந்திண்டு வந்திருக்குடி. உன் இஷ்டப்படி நீ இருக்கிறது ஒண்ணுதான் எனக்கு எல்லாம். நீ சந்தோஷமாயிருக்கேன்னு இந்த முகத்திலே ஒரு கணம் நான் பார்த்து விட்டேன்னா, அந்தக்கணமே நான் மோட்சம் கிடைத்தாப்போல் இந்த உடம்பை சந்தோஷமா விட்டுட்டுப் போயிடுவேன்'' என்று படபட வென்று பேசிக்கொண்டு ருக்மிணியின் தோளையும் தலையையும் முதுகையும் தடவிக் கொடுத்தாள் சித்தி. படபடப்பு மட்டுமில்லை; அவள் கண்ணும் கரகரவென்று கண்ணீரைப் பொழிந்தது.

பேச்சு அதோடு நின்று விட்டது. சித்தி அங்கேயே குமாய் நாற்காலியில் உட்கார்ந்தவாறு கலங்கிய கண்களால் ஜன்னலைக் கடந்த தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தோட்டத்தைப் பார்க்க வில்லை. கடந்து போன காலவெளியைப் பார்த்துக் கொண்டிருந்தது மனம். ருக்மிணி பெஞ்சியில் பின்னால் நகர்ந்து சுவர் மீது சாய்ந்து கொண்டாள்.

என்ன பேசுவதென்று இருவருக்குமே புரிய வில்லை.

வாசல் பக்கம் யாரோ விரலால் மரியாதையாகக் கதவைத் தட்டும் ஓசை கேட்டது.

''யாரு?'' என்று கேட்டுக்கொண்டே ருக்மிணி எழுந்து போனாள்.

வழுக்கைத் தலையும் பொக்கை வாயுமாக ஒரு கிழவர். பக்கத்தில் சம்பங்கிப் பூ மாதிரி ஒரு பெண்.

''யாரு?''

''இதுதானே பன்னிரண்டாம் நம்பர்?'' என்றார் கிழவர்.

''ஆமாம்.''

''இங்கே புதுசா யாராவது குடி வந்திருக்கிறார்களோ?''

''நாங்களே புதுசுதான்.''

''நீங்கள் மாத்திரம்தான் இங்கு இருக்கிறீர்களோ! வேறு யாராவது இருக்கிறார்களோ?''

''மாடியில் இருக்கிறார்கள்.''

''வைத்தியரா?''

''ஆமாம்.''

''சாமியார்.''

''ஆமாம்.''

''அனந்தசாமின்னு.....''

''ஆமாம்.''

''மாடியிலா இருக்கிறார்?''

''ஆமாம். நீங்கள் அப்படியே போக வேண்டும்.''

''இங்கேதானப்பா இருக்கிறாராம்'' என்று துள்ளும் மகிழ்ச்சியுடன் கத்தாத குறையாகக் கூறினாள் அந்தப் பெண். உடனே அவருக்கு ஜாடை காட்டிக் கொண்டு இறங்கி வடவண்டையிலிருந்த மாடிக் கட்டின் பக்கம் போனாள். கிழவரும் ருக்மிணியைப் பார்த்துப் புன்னகையை நன்றி யாகச் செலுத்தி விட்டு, அந்தப் பெண்ணைப் பின் தொடர்ந்தார்.


''யாருடி?'' என்று கேட்டாள் அலயாம்பாள்.

''யாரோ அவரைப் பார்க்க வந்திருக்கிறார்கள்'' என்று வாசலைப் பார்த்துக் கொண்டே யோசனையில் ஆழ்ந்து நின்றாள் ருக்மிணி.

''அடே!'' என்று டொக்கியைப் பார்த்து வியப்பும் பூரிப்புமாக எழுந்து நின்று விட்டார் அனந்தசாமி. ''நீயா! எப்படித் தெரிந்தது விடு உங்களுக்கு? வா....வாருங்கள், உட்காருங்கள்'' என்று ராஜாங்கத்தையும் வரவேற்றார்.

''வீடு எப்படிம்மா தெரிந்தது?''

''இரண்டு தடவைகள் கேட்டு விட்டீர்களே மாமா! மங்களப் பாட்டியிடம் விலாசத்தையும் கொடுத்து விட்டு, என்ன கேள்வி இது! காசிக்குப் போனாலும் கர்மம் விடாது என்பார்கள். நீங்கள் சொல்லாமல் கொள்ளாமல் வீடு மாற்றினால்கூட நாங்கள் உங்களைத் துரத்திக் கொண்டே வருகிறோம்.....எப்போது மாமா இங்கு வந்தீர்கள்?'' என்று இடத்தின் மினுமினுப்பையும் குளிர்ச்சியையும் அடக்கத்


பத்திரமாக மோட்டார் ஓட்டுவதற்கு இந்த அடையாளத்தைப் பின்பற்றுவது நல்லது.
உங்கள் மோட்டார் எஞ்சின் சிறப்புடன் இயங்குவதற்கு
MICO
மைகோ ஸ்பார்க் பிளக்குகளை உபயோகிப்பது மிகவும் நல்லது
MC-P/218
மோட்டார் இண்டஸ்ட்ரீஸ் கம்பெனி லிமிடெட், பெங்களூர்.

தையும் கண்டு திருப்தியுடன் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே கேட்டாள் டொக்கி. ராஜாங்கம் எல்லாவற்றையும் தட்சிணாமூர்த்தியிடம் பாடம் கேட்பதுபோல் காதில் ஒரு வார்த்தையும் விழாமல் புரிந்துகொள்ள முயன்று கொண்டிருந்தார்.

''இப்பொழுதுதான் வந்துகொண்டேயிருக்கிறேன். இன்னும் முழுதும் வந்தபாடில்லை. சாமான்களை வண்டியில் ஏற்றி நான் சைக்கிள் ரிக்ஷாவில் வந்தேன். இன்னும் ஒரு மணி நேரம் முழுசாக ஆகவில்லை....நீயும் வந்துவிட்டாய்....''

''பண்டம் பாத்திரங்கள் வருவதற்கு முன்னால் இந்தத் தலைவலிகள் முன்னால் வந்து நிற்கிறதுகள்-இல்லையா?'' என்றாள் டொக்கி.

அனந்தசாமி நிமிர்ந்து சிரித்தார். சற்று மௌனமாக நின்றார்.

'தலைவலி இல்லை கைவலி. இன்னும் கொஞ்ச நேரத்தில் தள்ளு வண்டி வந்து விடும். நீதான் எல்லாவற்றையும் இறக்கி மாடிக்கு ஏற்ற வேண்டும்'' என்றார் அவர்.

''இதோ, நான் தயார். இதுக்குத் தானா கை வலி என்றீர்கள்? ஊரில் வருஷத்துக்கு நாலு தடவைகள் வருகிற வண்டி விறகை மச்சுமேல் ஏற்றுகிறதற்கு இது காணுமா?''

''சரி, சரி, நீ ரொம்பப் பலசாலிதான், தெரியும். பேசாமல் உட்கார். நீ வீட்டில் ஏந்திரம் சுற்றுகிறதே போதும்.''

டொக்கி உடனே உட்காரவில்லை. இடம் முழுவதையும் சுற்றிப் பார்த்தாள். மொட்டை மாடிக்குப் போய் நின்று அப்பாலிருந்த தோட்டங்களைப் பார்த்தாள். பெஞ்சு, மேஜையெல்லாம் தொட்டுப் பார்த்தாள். ஹாலில் மாட்டியிருந்த ஒரே படத்தைப் பார்த்தாள்.

''இது புத்தர் படம்தானே மாமா?''

''ஆமாம்.''

மீண்டும் அதையே பார்த்துக் கொண்டு நின்றாள் அவள்.

''அன்றைக்குப் போனவன், அப்புறம் ஆளையே காணவில்லையே, உன்னை!'' என்றார் அனந்தசாமி.

''உங்களைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்றிருந்து விட்டோம். இன்றைக்கு அப்பா ஊருக்குப் போகிறார். உங்களைப் பார்த்துச் சொல்லிக் கொண்டு போகலாம் என்று வந்திருக்கிறார்'' என்று தகப்பனாரிடம் ஜாடை காண்பித்தாள். உடனே ராஜாங்கம் ஆரம்பித்து விட்டார்.

''ஆமாம். இன்றைக்கு ராத்திரி ஊருக்குப் போகிறேன். டிக்கெட்டு ரிஸர்வ் பண்ணி விட்டேன்...-''

''குழந்தையை ஜாக்கிரதையாக...''

''...நீங்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்...'' என்று அவரைத் தொடர்ந்து கூறி முடித்தாள் டொக்கி.

அனந்தசாமி சிரிப்பை அடக்கி அவளைப் பார்க்காததுபோல் உட்கார்ந்திருந்தார்.

''இனிமே லீவை நீடிக்க முடியாது. இன்று போய்த்தான் ஆகணும். ஞாயிற்றுக்கிழமைகளில் எப்போதாவது வருகிறேன். ஆனால் அடிக்கடி வர முடியாது. குழந்தைகள்-எல்லாரையுமே, நீங்கள் அடிக்கடி போய்ப் பார்த்துக் கொள்ள வேண்டும்.''

''ஆகட்டும்...கவலைப் படாதீர்கள்'' என்ற பாவனையில் தலையை ஆட்டினார் அனந்தசாமி.

''பயந்தாங் கொள்ளி இல்லை இவள். இருந்தாலும் வேண்டும் என்கிறவர்கள் கவனித்துக் கொண்டால் நல்லதில்லையா?'' என்றார் ராஜாங்கம்.

''மாமா! ஊருக்குப் போகிற வரையில் இதையேதான் திருப்பித் திருப்பிப் பேசப் போகிறார் அப்பா. நான் எதற்கும் துணிந்தவள் என்று அவர் எண்ணம். பிறத்தியாரிடமிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று அவர் சொல்லவில்லை. என்னிடமிருந்தேதான் புரிகிறதோ?'' என்று கேட்டாள் டொக்கி.

''நீயாகத்தான் எல்லாம் சொல்லுகிறாய். எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. ஏன் இப்படி உன்னையே காயப்படுத்திக் கொள்ள வேண்டும்?''

''எனக்கு அப்படித்தான் படுகிறது. அவர் அப்படி ஒரு சமயம் நினைத்தாலும் வாஸ்தவம்தானே. என்னை இஷ்டப்படி விட்டிருக்கிறார் அவர். அதனால் என்னைக் காப்பாற்றிக்கொள்கிற பாரமும் என் தலைமேலேயே விழுந்து விட்டது. அதற்காகத்தான் உங்களிடம் அப்படிச் சொல்கிறார்.''

''உனக்குத் தைரியம் இருக்கிறதோ, இல்லையோ?''

''தைரியம் இருந்தால் மட்டும் போதுமா? நல்ல புத்தி வேண்டாமா? அதற்காகத்தான் உங்களைக் கவனித்துக் கொள்ளும்படி சொல்லுகிறார்...அதுவும் ரங்கன் நாலு நாட்களாக ரொம்பப் பிடுங்குகிறார். அவர் என்னைக் கலியாணம் செய்து கொள்ளாவிட்டால் உயிரையே விட்டு விடுவாராம். வருகிறார்; பேசாமல் உட்கார்ந்திருக்கிறார். கோபித்துக் கொண்டிருக்கும் குழந்தை மாதிரி யாரோடும் பேசாமல் உட்கார்ந்திருக்கிறார். பேப்பர் படிப்பார். பத்திரிகை படிப்பார். அவராக எழுந்து

'போய் வருகிறேன்' என்பார். சரி என்றால், ''போய்ட்டு வரேன்னு சொல்லவேண்டியதுதான்...உடனே 'சரி! அதுக்குள்ளியா? கிளம்பியாச்சா?' என்று நீ என்னிக்காவது சொல்லுவியோன்னு பார்க்கிறேன்...ம்.... சரி' என்று பெருமூச்சு விட்டு விட்டு மறுபடியும் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருக்கிறார். பிறகு எழுந்து போகிறார். இன்று காலையில் வந்து 'அப்பாவிடம் கேட்டாயோ, அப்பாவிடம் சொன்னாயோ?' என்று நச்சரித்தார். 'எதை?' என்றேன். அவருக்கு அசாத்தியக் கோபம் வந்து விட்டது. தாலி கட்டினவனுக்குக்கூட அப்படி பாத்தியமாகக் கோபம் வராது மாமா! அதுமாதிரி கோபம். 'சரி, நானாவது கேட்கட்டுமா?' என்றார். 'உங்களுக்கு முடிந்தால் கேளுங்களேன்' என்று மையமாகச் சொல்லி வைத்தேன். பேச வாயெடுத்தார். கடைசியில் நான் என்னமோ அவரை அவமானப் படுத்தினாற்போல் முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டு போய் விட்டார்.''

''ஏன் அவர் கேட்கவில்லை அப்பாவிடம்?''

''அப்பாவுக்குச் சொல்வதானால் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கத்த வேண்டும். இரைந்து சொல்ல வேண்டும்.''

''அப்படியே சொல்கிறது!''

''அவர் சொல்ல மாட்டார். ஏதோ தப்பான காரியம் பண்ண அனுமதி கேட்கிறாற் போல அவருக்குத் தோன்றுகிறது. அதனால் இரைந்து கேட்பது அவருக்கு முடியாத காரியம்.''

''உன் மனசே என்ன வென்று நிச்சயமாக எனக்குத் தெரியவில்லையே?''

''என்ன மாமா இது! சீதைக்கு ராமன் சித்தப்பா என்று ஆரம்பித்து விட்டீர்கள்?'' என்று சிரிப்பும் கோபமுமாகக் கேட்டாள் டொக்கி. ''அன்று தான் நான் தீர்மானமாகச் சொல்லி விட்டேனே, இந்தப் புண்யாத்மா தியாகிகள் எல்லாம் எனக்கு வேண்டாம் என்று.''

''அப்பொழுது ஏன் அவருக்கு நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருக்கிறாய்?''

''ஐய்யோ- என்ன மாமா





இது! நான் அவரைவரக்கூடச் சொல்ல வில்லையே....''

''பகிரங்கமாகச் சொல்லி விடு.''

''சொல்லலாம்-அதற்குத்தான் மனத்தைத் தைரியம் செய்து கொண்டு வருகிறேன். இத்தனை நாட்களாகச் சொல்லி யிருக்கலாம். ஆனால் அப்படிச் சொல்லுகிறபோது அவர் முகம் எப்படி இருக்கும் என்று நினைக்கிற பொழுது மனசு துணிய மாட்டேன் என்கிறது. வேறு ஒன்றுமில்லை.''

''அந்த முக விகாரத்தை ஒரு நாளைக்குப் பார்த்துத்தானே ஆக வேண்டும்?''

''ஆமாம்...அப்புறம்''-என்று மேலே பேச வாயெடுத்தாள் டொக்கி.

''சாமி!'' என்று கத்திக் கொண்டே ஒருவன் நிலைப்படியில் வந்து நின்றான்.

''வண்டி வந்தாச்சா ?'' என்று அனந்தசாமி எழுந்தார்.

வண்டியில் இருந்த பெட்டி, ஒரு மண்ணெண்ணெய் அடுப்பு, இரண்டு கள்ளிப் பெட்டி புத்தகங்கள், ஒரு வெந்நீர் அண்டா, நாலே நாலு டம்ளர்கள், இரண்டு வெண்கலப் பானை, நாலைந்து அலுமினியப் பாத்திரங்கள்-இவ்வளவுதான் சாமான்கள்-எல்லாவற்றையும் கொண்டு வந்து வைத்தான்.

ருக்மிணியும் வந்து சேர்ந்தாள்..

டொக்கி வாங்கி வைப்பதைப் பார்த்து, அவளும் கூடவே சேர்ந்து அவர்கள் இருவரும் எல்லாவற்றையும் அந்தந்த இடத்தில் வைத்தார்கள். அவர்கள் பேசிக் கொண்டிருந்த தென்னண்டை அறைக்கு பீரோ வந்து சேர்ந்தது. கள்ளிப் பெட்டியிலிருந்த புத்தகங்களைத் தட்டித் தட்டி அடுக்கி வைத்தார்கள் நாலு பேருமாக.அரை மணிக்குள் அவ்வளவு வேலையும் முடிந்து விட்டது.

''நீங்கள்தான்—'' என்று டொக்கி ருக்மிணியைப் பார்த்துக் கேட்டாள்.

''வீட்டுக்காரர் இல்லை. குடிதான்.''

அனந்தசாமி அவளைக் கல்லூரி ஆசிரியை என்று அறிமுகம் செய்து வைத்தார். அவள் டில்லியில் இருந்ததைப் பற்றியும் சொன்னார்.

''உன் பேர் என்னம்மா?'' என்று கேட்டாள் ருக்மிணி.

''குஸுமா. டொக்கின்னு அலயஸ்.''

''நான்கூடத்தான் ருக்கு என்கிற ருக்மிணி.''

''அது அலயஸ் இல்லை. சுருக்கு.''

''ஆமாம். படிக்கிறாயா?''

''படித்துக் கரை கண்டாச்சி விட்டது. சம்பாதிக்கத் தயார் செய்து கொண் டிருக்கிறேன்'' என்று கூறிச் சிரித்தாள் டொக்கி.

''என்ன உத்தியோகத்துக்கு? டாக்டர். வாத்தியார்-அது மாதிரியா?''

''இல்லை-சினிமாவில் சேர்வதற்காக! பாட்டு, நாட்டியம் இந்தமாதிரி.''

''ம்! அப்படியா?''

''பார்த்தீர்களா மாமா! சினிமா நட்சத்திரமாக இருக்க வேண்டும் என்றில்லை. அதிலே சேரப் போகிறேன் என்று சொன்னாலே எவ்வளவு பிரமிப்பு. ஆச்சரியம் எல்லாம் உண்டாகிறது பார்த்தீர்களா?'' என்று அனந்தசாமியைப் பார்த்துச் சிரித்தாள் டொக்கி. ''உங்கள் சந்திராவைப் பார்த்து அப்படி யாராவது ஆச்சரியப் படுவார்களா?'' என்றாள் டொக்கி.

''சந்திராவா? எந்தச் சந்திரா?''

''அது எந்தச் சந்திராவோ? மாமாவோடு அன்று வந்து பேசிக் கொண்டிருந்தாள். எங்கேயோ காலேஜில் டெமான்ஸ்ட்ரேட்டராம்....மாமா, சந்திரா அப்புறம் வரவே இல்லையா?''

''இல்லை. காலேஜ் நாட்களில் எப்படி வர முடியும்? இன்று ஞாயிற்றுக் கிழமை. ஆனால் நான் இங்கே ஜாகை மாறி யிருப்பது கூட அவளுக்குத் தெரியுமோ என்னவோ?....தெரிந்தால், வந்து விடுவாள்'' என்று ருக்மிணியைப் பார்க்காமலேயே சொன்னார் அனந்தசாமி.

''மாம்பலத்தில்தானே இருக்கிறாள். என்னிடம் விலாசம்கூடச் சொன்ன ஞாபகம். சரியாக நினைவில்லை......... பாவம்'' என்று தன்னையறியாமல் ஒரு ''பாவம்'' போட்டு முடித்தாள் டொக்கி.

''என்ன பாவம்?'' என்று சாதாரணமாகக் கேட்பதுபோல் ருக்மிணி புன்னகை புரிந்தாள்.

''ஒன்றுமில்லை மாமி!''

''என்ன ஒன்றுமில்லை. ஒன்றுமில்லாததற்கா இப்படி அங்கலாய்ப்பார்கள்?''

''தேவலை மாமா இவர்! இலேசில் என்னை விடமாட்டார் போலிருக்கிறதே ?'' என்று அனந்தசாமியைப் பார்த்துக் கேட்டாள் டொக்கி.

''ஆமாம்-இடீரென்று 'பாவம்' என்று இரக்கப் பட்டால் என்னமோ ஏதோ என்று சந்தேகம் வந்துவிடுகிறது.''

''நான் ஏதோ சும்மாச் சொன்னேன், கலியாணம் பண்ணிக்கொண்டு கவலையில்லாமல் இருக்க வேண்டிய காலத்தில் இப்படி வெயிலில் அலைந்து, திராவகம், அமிலம், காரம் என்று கஷ்டப்படுகிறாளே என்று வருத்தமா யிருந்தது!'' என்றாள் டொக்கி. **(தொடரும்)**

வெள்ளி விழா வைபவம்



வானம் பொழிந்து உயிருள்ள ஜீவ ராசிகள் அனைத்துக்கும் உணவும் நீரும் அளிப்பதுபோல் உண்மையான கலாச்சாரம் இறைவனது அருளை மனிதன் மீது வர்ஷிக்கிறது. இந்த அருளைப் பெறும் மனப் பக்குவத்தை ஒருவன் அடைந்து விட்டால் அவன் உணவும் நீரும் மட்டும் அருந்தி வாழ்வதில்லை. உண்மைகளை உணரும் தன்மையும் தூய அழகினை அனுபவிக்கும் ஆற்றலும் உடையவனாகி அவ்விரண்டும் பரப்பும் அமிர்தம் போன்ற உணர்ச்சிகளையே உண்டு வாழத் தொடங்குகிறான்.

ஸ்ரீமதி ருக்மிணி தேவி அவர்களால் 1936ல் ஆரம்பிக்கப்பட்டு இன்று வெள்ளி விழா கொண்டாடும் கலாக்ஷேத்திரம் இந்த உன்னத லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்று வரும் ஸ்தாபனம்.

கலைத்தேவியை வழிபட்டு அவள் அருளைப் பெற எண்ணி க்ஷேத்ராடனம் கிளம்பும் உண்மைப் பக்தர்கள் கலாக்ஷேத்ராவை மறப்பதில்லை, மறக்கவும் முடியாது.

தமிழ் நாட்டின் பண்பாட்டுக்கு உறைவிடமாகத் திகழ்ந்து பழம் பெருமையைக் காக்கும் இந்தக் கலைக் கோயில் உலகின் பல பாகங்களிலிருந்தும் வரும் கலை ஆர்வமிக்க மாணவ மாணவிகளை ஏற்றுக்கொண்டு தமிழகத்துக்குப் புதுப் பெருமையும் தேடித் தருகின்றது.

நகர்ப்புறத்தின் சந்தடிகள் எட்டிப் பாராத ஒதுக்குப்புறத்தில் விசாலமான ஓர் இடம். சவுக்கு மரங்களினூடே புகுந்து வரும் காற்று எழுப்பும் விநோதமான ஒலி, கப்பும் கிளையுமாகப் படர்ந்து வளர்ந்து நிழல் பரப்பும் மாமரங்கள்; அதன் கிளைகளில் வாழ்ந்து இன்னிசை எழுப்பும் பட்சி ஜாலங்கள்-இந்த இயற்கைச் சூழலில் குருகுல வாசம் செய்யும் மாணவ மாணவிகளின் உள்ளங்களிலே கலையுணர்ச்சி, அருகேயுள்ள அலைகடலைப் போலப் பொங்கிப் பெருகுவதில் ஆச்சரியமில்லைதான்.

குறுகிய காலத்தில் குழந்தைகளைத் தேர்ச்சி பெறச் செய்வதில் ருக்மிணி தேவிக்கு என்றைக்குமே நம்பிக்கை இருந்ததில்லை. ஏட்டுப் படிப்பைக் காட்டிலும் கலைகளைக் கற்றுணர அதிககாலப் பயிற்சி தேவை என்று உறுதியாக எண்ணுகிறவர் அவர். கலை உலகில் பூரணத்துவம் பெறுவதென்பது கிடையாது. முடிவில்லாத ஒன்றான அதில் முன்னுக்கு வர அறிவு மட்டுமிருந்தால் போதாது: கடுமையான உழைப்பும் கட்டுக்கடங்காத ஆர்வமும், கற்பனைத் திறனும் தேவை. மனப் பாடம் செய்யக்கூடியதல்ல அது; மனத்திலிருந்து வெளிப்பட வேண்டிய ஒன்று.

முக்கியமாக, ஆடல் பாடல் கலைகளை வளர்த்துவரும் கலாக்ஷேத்திரம், புகைப் படக் கலை, ஓவியம், நெசவு, சாயத் தொழில் போன்ற கலைகளிலும் கவனம் செலுத்தி வருகிறது.

இவற்றுக்கெல்லாம் இன்னும் அதிகமான இட வசதி தேவையாக இருப்பதால் திருவான்மியூரில் நூறு ஏக்கர் நிலப்பரப்பில் புதிய கட்டடங்கள் எழும்ப ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. கலைகளின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள அனைவரின் ஒத்துழைப்பும் இந்தத் திட்டங்கள் நிறைவேறத் தேவை.

கலை உலகின் மேதைகள் பலரை ஆதரிக்கும் பணியைச் சிரமேற்கொண்டு அவர்களால் பயனடையும் அரிய வாய்ப்பையும் பெற்ற கலாக்ஷேத்திரம் பற்றி நினைக்கும் போது, அந்த மேதைகளின் ஒத்துழைப்புடன் ஸ்ரீமதி ருக்மிணி தேவி தயாரித்து அளித்த ராமாயண நாட்டிய நாடகங்கள், குமார சம்பவம், உஷாபரிணயம், கீதகோவிந்தம், குற்றாலக் குறவஞ்சி ஆகியவையெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாகக் கண்ணெதிரே தோன்றும். இவ்வருஷம் புதிதாகத் தயாரித்து அரங்கேறவிருக்கும் 'ஆண்டாள்' நாட்டிய நாடகத்தை ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

வெள்ளி விழா கொண்டாடும் கலாக்ஷேத்திரம் வாழையடி வாழையாக வளர்ந்து தமிழகத்தின் சிறப்புக்குச் சான்றாக விளங்கி வர வேண்டுமென்று வாழ்த்துகிறோம்.



ஸ்ரீமதி ருக்மிணி தேவி

அவள் குழந்தை



கசப்பு மருந்தை நடுவில் வைத்து அதைச் சுற்றி இனிப்பைப் பூசி இருப்பது போல இருந்தது அனுவின் அந்தரங்க வாழ்க்கை. உள்ளத்தினுள் ஜீரணிக்க முடியாத வேதனையை வைத்துக்கொண்டு வெளியே சிரித்துப் பேசிப் பழகி வந்தாள் அவள். அன்று காரியாலயத்திலிருந்து வரும்போது ரகு வெறுங் கையோடு வரவில்லை. டாக்ஸியில் வந்து இறங்கிய அவனைத் தொடர்ந்து ஆடும் குதிரை, டிரை ஸைகிள், பொம்மைகள், பொட்டணங்கள் எல்லாம் கூடத்தில் கொண்டு வந்து அடுக்கப்பட்டன. ''அனு....உனக்கு நூல் புடவைதான் வாங்க முடிந்தது. குழந்தைக்கு இதெல்லாம் வாங்கியதில் பட்டுப் புடவைக்குப் பணம் போதவில்லை'' என்று சொல்லிக்கொண்டே சட்டையைக் கழற்றினான் ரகு.

''நீங்கள் அன்போடு எது வாங்கிக் கொடுத்தாலும் நான் அதை ஏற்றுக் கொள்ளுகிறேன் கண்ணு! இப்போதெல்லாம் உங்களுக்கு என்னுடன் பேசக்கூட நேரமிருப்பதில்லை. உங்கள் நேரத்தை எல்லாம்தான் ராஜி பகிர்ந்து கொண்டு விடுகிறாளே!'' என்றாள் அனு.

''குழந்தை எங்கே.....?''

''பக்கத்து வீட்டுக் குழந்தைகள் வந்திருந்தன. அவர்களோடு கூடத்தில் விளையாடிக் கொண்டிருப்பாள்'' என்று கூடத்துப் பக்கம் சென்ற அனுவைத் தொடர்ந்தான் ரகு. அருகிலேயே குழந்தைகளின் பேச்சுக் குரல் கேட்டது.

''ராஜி, இந்த பூட்ஸ் நன்னா இருக்கே. உங்கப்பா வாங்கிக் கொடுத்தாரா? எங்கே, காட்டு பார்க்கலாம்'' என்றாள் லலிதா.

''போடி, நீ ஒண்ணும் பாக்கக் கூடாது. பாலுதான் பாக்கணும். பாலு நான் உன் மடியிலே ஒக்காந்துக்கட்டுமாடா?'' என்று அவன் அருகில் போனாள் ராஜி.

''ஐயையோ! ஆம்பிளே மடியிலே தான் போயி உக்காருவாளாக்கும். உன் காது அறுந்து போயிடும், எனக்கென்ன!''

''போனாப் போகட்டும் போ! நான் உன்னோட சேரமாட்டேன். பாலுதான் எனக்கு வேணும்'' என்றாள் ராஜி.

இந்தக் காட்சியும் சம்பாஷணையும் அனுவை அதிர்ச்சி கொள்ளச் செய்து விட்டன. ''ராஜி...!'' என்று வெறி கொண்டவளைப் போலக் கத்திக் கொண்டு முன்னால் சென்றாள். ''அவன் மடியை விட்டுக் கீழே இறங்கு...போ உள்ளே..டேய் பாலு! போடா வீட்டுக்கு'' என்று அதட்டினாள்.

குழந்தையின் மழலைப் பேச்சை ரசித்துக் கொண்டிருந்த ரகுவுக்கோ அனுவின் செய்கை தூக்கி வாரிப் போட்டது. அதோடு ராஜி உதடு வளைய, ''பாருப்பா, அம்மா கோவிச்சுக்கறா!'' என்று கண்ணைக் கசக்கிய போது, ''ஏன் அனு, இப்படி அந்தக் குழந்தைகளை மிரட்டி விரட்டினே? நாளைக்கு அவர்கள் விளையாட வருவார்களா?'' என்றான்.

''இந்த வயசிலேயே இவளுக்கு என்ன நிராமை? பெண் குழந்தைகளோடயே சேரமாட்டேங்கரா. ஆண்குழந்தைகளைக்கண்டா குலாவரா. இதே குணம் தானே வயசானாலும் வரும். இப்பவே அதைத் திருத்தி வளர்ப்பது நமது கடமை இல்லையா?''

அனுவின் விளக்கம் ரகுவின் ஆத்திரத்தைக் கிளப்பியது. ''நீயும் உன் சித்தாந்தமும். பதினெட்டு வயதுப் பருவ மங்கையாயிட்டாளா இப்போது ராஜி? விவரம் தெரியாத குழந்தையோட செய்கைகளிலே விகல்பம் கண்டு பிடிக்கிறயே. ராஜி, நீ அழாதேடா கண்ணு. உனக்கும் புது'லேடி கவுன்' வாங்கி வந்திருக்கேன் பாரு.'' குழந்தையைத் தூக்கிக் கொண்டு உள்ளே போனான் ரகு.

கணவன் போவதைப் பார்த்துக் கொண்டு நின்ற அனுவின் கண்கள் குளமாயின. ஏதோ சொல்ல உதடுகள் துடித்தாலும் வார்த்தைகள் வெளி வரவில்லை.

மற்றொரு நாள்.

வாசல் பக்கம் குழந்தைகளின் கூச்சல் கேட்டது. ''என் பேரு மானம்...என்னைத் தொட்டால் பாவம்! ஐயையே ஐயையே! மாமி.... மாமி,ராஜி கிட்டுவுக்கு முத்தம் கொடுக்கறா.'' அனுவின் தலையைக் கண்ட அடுத்த வீட்டு லலிதா குற்றப் பத்திரிகை படித்தாள்.

''வெவ்வெவ்வெவ்வே! பொறாமையைப் பாரு உனக்குத் தரலேன்னு வயத்தெரிச்சலோ?'' - வாதாடினாள் ராஜி.

''என்ன சண்டை அங்கே?'' என்று அருகில் வந்த அனுவிடம் லலிதா, ''வந்து மாமி.. உங்க ராஜி வந்து அந்தக் கோடி வீட்டுக் கிட்டுவுக்கு முத்தம் கொடுக்கறா. அதை நான் கேலி பண்ணினத்துக்கு எம்மேலே எரிஞ்சு விழறா மாமி'' என்று விளக்கினாள்.

அனுவின் கண்களில் தீப்பொறி பறந்தது. குழந்தைகளை எல்லாம் மிரட்டி விரட்டி விட்டு ராஜியின் முதுகிலே ஓர் அறை வைத்து உள்ளே இழுத்துக் கொண்டு போனாள். அந்தச் சமயம் பார்த்துத் தானா ரகு ஆபீஸிலிருந்து வரவேண்டும். வரும்போதே? ''அங்கே என்ன ரகளை? ராஜி ஏன் அழறா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தான்.

''பாருப்பா, நான் ஒண்ணுமே செய்யல்லே. இந்த அம்மா என்னை அடிக்கறா'' என்று விசும்பினாள் ராஜி.

''என்ன அனு இதெல்லாம்? நான் உள்ளே நுழையும்போது குழந்தைகளெல்லாம் வெளியே ஓடுவதைப் பார்த்தேனே.''

''எல்லாம் காரணமாகத்தான். அப்பற மாச் சொல்றேன். உள்ளே வந்து கைகால் கழுவிக் கொண்டு காப்பி சாப்பிட வாங்க.'' சமையலறையினுள் நுழையப் போனள் அனு.

அவளை ரகுவின் இடியோசை போன்ற குரல் இழுத்துப் பிடித்து நிறுத்தியது. ''காப்பி ஒண்ணுதான் குறைச்சல். என்னன்னு முதல்லே விஷயத்தைச் சொல்லு.''

''ஏன் இப்படிக்கத்தறேள்? உங்கபெண்ணை யாரும் ஒண்ணும் செய்து விடவில்லே. அவள் செய்த காரியத்தைக் கேட்டீர்களானல்...''

''அப்படி என்ன செய்யத் தகாத காரியத் தைச் செய்துட்டா அவ?''

''என்னவா? கோடி வீட்டுக் கிட்டுவைக்கட் டிக் கொண்டு முத்தம் கொடுத்திருக்கா..... போதுமா?''

''இவ்வளவுதானே?'' என்ருன் ரகு அமைதியாக.

''இனிமே அவளை ஆண் பிள்ளைப் பசங்க ளோட விளையாடச் சொல்லாதிங்க, ஆமா! ஜந்திலே வளையாதது...''

''போதும் நிறுத்து உன் பேத்தலே. குழந் தைகளுக்குள்ளே முத்தம் கொடுத்துக் கொண் டால் என்ன?''

கணவனின் அனல் கக்கும் விழிகளைச் சந் திக்க விரும்பாதவளாய் ''என்னவோ எனக் குத் தெரியாது. இந்த வயசிலேயே இந்த மாதிரிப் பழக்கங்களைக் கண்டிச்சு வளர்க்க ணும். அதுதான் எனக்குத் தெரியும்'' என்று சொல்லியபடி தன் கோட்டையை நோக்கி நகர்ந்தாள்.

''கண்டிச்சு வளர்க்கணுமா? அனுசூயா, உனக்கு என்ன பைத்தியமா? இல்லே ராஜி யைக் கண்டால் பிடிக்க வில்லையா? வரவர உன் பேச்சும் போக்கும் விபரீதமா இருக்கு.'' ஆத்திரத்தோடு சட்டையைக் கழற்றி வீசி எறிந்தான்.


''விபரீதம் என் போக்கிலேயா?'' அவனி டம் தன் உள்ளப் போராட்டத்தை விளக்க முடியாத தவிப்போடு தயங்கினள் அனு.

''பின்னே குழந்தையோட போக்கிலா?'' சீறினன் ரகு. பிறகு வெறுப்போடு ''போ.... போ...என் முன்னலே நிக்காதே. உன் அழு கிப்போன எண்ணங்களோடு நீ குழந்தையின் அருகிலேயே போகாதே'' என்று சொல்லி விட்டு மனக் கொதிப்பைத் தணித்துக் கொள்ளத் தெருத்திண்ணைக்குப் போனன்.

சர்க்கரை பூசிய மாத்திரைக்குள் கசப்பு மருந்து இருக்கும் என்பதைத் தெரிந்து கொண்ட குழந்தை மாத்திரையைக் கண்டால் எப்படி முகம் சுளிக்குமோ அப்படி ரகு தன் மனைவியைக் கண்டு கடுகடுத்தான். குழந் தையை ஏனே அவள் வெறுக்கிறுள் என்பது அவனுக்குப் புரிந்துவிட்டது. வரவர அவளது பேச்சும் போக்கும் விபரீதமாகி வருவதைக் கண்டான். வீட்டிலிருக்கும் நேரத்திலெல் லாம் குழந்தையை அவளிடம் விடுவதே இல்லே. அனுவின் உள்ளத்திலோ ராஜியைப் பற்றிய கவலே வர வர வளர்ந்து விசுவரூபம் எடுக்கலாயிற்று.

ஒரு நாள்....

ராஜியைக் காணுது தேடிக் கொண்டுகொல் லேப் பக்கம் போனவள் அங்கு குழந்தைகளின் குரல் கேட்டு அப்படியே நின்று கவனித்தாள். ரா ஜியின் குரல் தான் கேட்டது.



''நான்தான் அம்மாவாம், நீதான் அப்பாவாம்—என்னடா கிட்டு? இந்தப் பொம்மைதான் நம்ம குழந்தையாம்..ம்...நீ வந்து சாதம் போட வான்னு கூப்பிடணும். நான் வந்து, 'குழந்தை அழறான், பால் கொடுத்துட்டு வரேன்'னு சொல்லுவேன்...''

இதற்குமேல் ராஜியால் பொறுமையோடு அந்த மழலைப் பேச்சைக் கேட்க முடியவில்லை. தன் ரவிக்கையை எடுத்து மாட்டிக் கொண்டு கணவனின் மேல்துண்டை மேலாக் காக்கிக் கொண்டு அம்மாவின் ஸ்தானத்தில் நிற்கும் ஐந்து வயதுக் குழந்தை ராஜியையா அங்கு கண்டாள் அனு? இல்லை, மோகனுவின் நினைவுதான் அவளைச் சூறுவளியாக்கியது.

''டேய் கிட்டு, தடிப் பயலே! உன்னை இவளோடு சேராதே, இங்கே வராதே என்று எத்தனை தடவை சொல்லியிருக்கேன்?போடா ம்...'' என்று அவனை விரட்டிவிட்டு மருண்ட பார்வையோடு நிற்கும் ராஜியின் முதுகில் பேயாக ஓர் அறை வைத்து ''என்னடி இதெல்லாம், என்ன விளையாட்டு இது?..வாடி உள்ளே!'' என்று அவள் கையைப் பற்றித்கர தரவென்று இழுத்தாள் அனு. அப்போது ராஜியின் கையிலிருந்த பொம்மை கீழே விழுந்து உடைந்தும் விட்டது. அம்மா அடித்த அடியின் வலியோடு அருமைப் பொம்மை உடைந்ததும் சேரவே ''ஐயோ! என் பொம்மையை ஒடச்சுட்டியே'' என்று கதறினாள் ராஜி.

''போனால் போகட்டும் போ, உதவாக் கரை.'' தரதரவென்று அவளை இழுத்துக் கொண்டு உள்ளே போனாள். போகும் போதே, ''நான் பயந்தபடியே ஆயிடும் போலிருக்கே'' என்று அவள் உள்ளம் பதறத் தவறவில்லை.

''உன்னைக் கண்டாலே எனக்குப் புடிக்கல்லே! எப்பப் பார்த்தாலும் என்னை அடிக்கிறே, திட்டறே நீ. என் பொம்மையை உடைச்சுட்டே'' என்று திமிறிக் கொள்ளக் கதறினாள் ராஜி.

''என் ரவிக்கையை எடுத்து மாட்டிக் கொண்டு...ஐந்து வயதுக் குழந்தை செய்கிற காரியமாடி இதெல்லாம்?''கர்ஜித்தாள் அனு.

''என்னோடு நீ பேச வேண்டாம், போ! உன்னை எனக்குப் பிடிக்கல்லே...என் அழகான பொம்மை உடைஞ்சு போச்சு.'' திமிறிக் கொண்டு விடுபட்டு ஓடினாள் ராஜி.

''ராஜி...ராஜி! எங்கே ஓடறே...? வா, இங்கே'' கத்தினாள் அனு. ஆனால் ராஜி ஓர் அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டு விட்டாள். தொடர்ந்து ஓடிப் பிடிக்க முயன்ற அனு ஏமாற்றத்துடன் மூடிய கதவின் முன்னால் நின்று ''ராஜி...ராஜி கதவைத் திற...உள்ளே புகுந்து இப்படியெல்லாம் தாளிட்டுக் கொள்ளக்கூடாது...ம்..... திற...'' என்று கத்தினாள்.

''திறக்க முடியாது போ.. என்னைக் கண்டாத் தான் உனக்குப் பிடிக்கல்லியே'' என்று விக்கிவிக்கி அழுதாள் ராஜி உள்ளிருந்தபடி.

செய்வதறியாது நின்ற ஆத்திரம் தணிந்த நிலையில் அனுவின் உள்ளம் அவளையே ஏச ஆரம்பித்தது. ''எது எதையோ கற்பனை செய்து கொண்டு என் மூளையும் குழம்பிப் போச்சு. என்ன இருந்தாலும் குழந்தை தானே? அவளுக்கு இத்தனை பெரிய விஷயமெல்லாம் தெரியுமா? புரியக்கூடிய வயசா? இந்த விவேகம் எனக்கு முதலிலேயே ஏன் வரல்லே?''என்று சிந்தித்தவாறே,''ராஜி,என் கண்ணோல்லியோ! கதவைத் திறடாம்மா?'' என்று கொஞ்சினாள். ஆனால் விம்மல்கள்தான் பதிலாக ஒலித்தன. ''உன் பொம்மையை உடைச்சது தப்புத்தான். ஓடியா, நாம்ம கடைக்குப் போயி புதுசா ஒரு பொம்மை வாங்கிண்டு வரலாம்... கதவைத் திற'' என்றாள். பதில் இல்லை. கதவைத் தட்டிப் பார்த்தாள். கேவல்கள்தான் உள்ளிருந்து கேட்டன. அலுப்புடன் ''கொஞ்ச நாழி போனாத் தானே வரே...அப்பா வர நேரமாச்சு. நான் காப்பி போடப் போறேன்'' என்று சொல்லிக் கொண்டே சமையலறைக்குள் புகுந்தாள் அனுசூயா.

ஆனால் நிசப்தமான வீட்டில் ரகு வந்து ராஜி எங்கே என்று கேட்டபோது....?

அனு சமையலறையிலிருந்து வந்து கொண்டே ''ஒரு அசட்டுக் காரியம் பண்ணினா. அதுக்காக அதட்டினேன். கோபித்துக் கொண்டு உங்க ரூமுக்குள்ளே போய்க் கதவைச் சாத்திக் கொண்டு உட்கார்ந்திருக்கா'' என்றாள்.

ரகு எரிமலையானான். அவன் கண்கள் தீத்துண்டங்களெனப் பளபளத்தன. ''குழந்தையை அதட்டினாயா? மூதேவி! ஒவ்வொரு வீட்டிலும் குழந்தைகள் விதம்விதமா விளையாடறதுகள். அதைப் பார்த்துப் பெற்றவள் மகிழ்ந்து போகிறாள். நீ..நீ..'' வார்த்தையை முடிக்காமல் ஒரு நிமிஷம் தடுமாறினான் ரகு. பிறகு, ''குழந்தையின் உள்ளத்தைப் புரிந்து கொள்ள முடியாத ஜடம் நீ. தாயாராக இருக்கவே லாயக்கில்லே....'' என்று சொல்லிக் கொண்டே 'ராஜி' என்று அழைத்தபடி அறைப் பக்கம் ஓடினான்.

கண்களில் நீர் முட்ட அப்படியே கல்லானாள் அனு. கணவனின் வார்த்தைகள் அவள் செவியில் ரீங்காரமிட்டன. ''குழந்தை என் அறையில் இல்லே. அறை திறந்தல்லவா கிடக்கிறது!'' என்று அவள் முன் வந்து படபடத்தான் ரகு.

பதறிப் போனாள் அனு. 'உங்கள் அறையில் இல்லையா? ஐந்து நிமிஷம் கூட ஆகவில்லையே'' என்று அங்குமிங்கும் ஓடினாள். அதற்குள் வீடு முழுவதும் தேடிவிட்ட ரகு, ''இந்த வீட்டிலேயே குழந்தை எங்குமில்லே..'' என்று சொல்லியபடி ''ராஜி...ராஜி'' என்று வெளியில் ஓடினான்.

அனுவிற்குப் பகீர் என்றது. தலை சிதறி விடும்போல் ஒரு வேதனை. ''ஐயோ தெய்வமே, குழந்தை எங்கே போய்விட்டாள்? ராஜி...ராஜி கண்ணே ராஜி'' என்று பித்துப் பிடித்தவள் போல வீதியில் இறங்கி ஓடலானாள். அண்டை அயலிலெல்லாம் தேடினாள். அவளோடு விளையாடும் குழந்தைகளின் வீடுகளுக்கெல்லாம் சென்று தேடினாள். எங்கும் ராஜி இல்லை. ''நீலக் கவுன் போட்டுகொண்டு ஒரு குழந்தை இந்தப் பக்கமாக வந்ததா?'' என்று பைத்தியக்காரியைப் போலத் தெருவில் போவோர் வருவோரையெல்லாம் கேட்டுக் கொண்டே போனாள்.


பொங்கல்
வெளியீடு
தேவி பிலிம்ஸ்
அளிக்கும்
கொஞ்சும் சலங்கை
முழுநீள டெக்னிகலர் (லண்டன்)
தயாரிப்பு & டைரக்ஷன்
M.V.ராமன்

அதே சமயத்தில் வீதியின் மறு கோடியில் ஒரு சிறுகூட்டம் கூடி இருந்தது. குழந்தையைத் தேடிக்கொண்டு சென்ற ரகு, தவிக்கும் உள்ளத்தோடு கூட்டத்தினுள் எட்டிப் பார்த்தான். ''ஐயோ!'' அவன் பயந்தது போலவே ராஜி ரத்த வெள்ளத்தில் பிரக்ஞை இழந்து கிடந்தாள். ''கண்ணே ராஜி!'' கோவென்று கதறியபடி அவளை வாரி எடுத்துக் கொண்டு விம்மலானான் ரகு.

''வீதியைக் கடக்கத் திமிர்னு குறுக்கே பாஞ்சுட்டுதுங்க. சடன் பிரேக் போட்டதினாலே இந்த மட்டுமாவது...'' குற்றம் தன்னுடையதல்ல என்று விளக்கலானான் டாக்ஸி டிரைவர். ரகுவோ பேசும் நிலையிலேயே இல்லை. டிரைவரே பேசினான்: ''மெள்ள அப்படியே தூக்கி ஸீட்டிலே படுக்க வையுங்க சார். ஆஸ்பத்திரிக்குப் போகலாம்'' என்று சொல்லிக் குழந்தையைத் தாங்கியபடியே வண்டியின் கதவைத் திறந்து விட்டான். குழந்தையோடு ரகு டாக்ஸியில் ஏறிக் கொள்ளவும் கார் கிளம்பியது.

அதே நேரத்தில் அனுவும் அங்குவந்தாள். வண்டிக்குள் கணவன் குழந்தையை அணைத்தபடி ஏறுவதைத் தூரத்திலிருந்தே பார்த்தாள். ஓடி வருவதற்குள் கார் பறந்து விட்டது. நடு வீதியில் தேங்கிக் கிடந்த ரத்தம் அவளுக்கு எல்லாவற்றையும் உணர்த்தி விட்டது. அடி வயிற்றிலிருந்து ''ஐயோ ராஜி..ராஜி!'' என்று கதறியபடி நின்றாள். அவள் உடல் புயலில் அகப்பட்ட தளிர் போல நடுங்கியது. அவள் நிலையைக் கண்டு குழந்தையின் தாயார் என்பதை யூகித்துக் கொண்ட ஒருவன் ''பயப்படாதீங்கம்மா. உயிருக்கு அபாயம் ஏதும் இருக்காது. இந்தாங்க அந்தக் குழந்தையோட பொம்மை'' என்று சொல்லி அவள் முன் உடைந்த பொம்மையை நீட்டினான். அதை வாங்கி மார்போடு அணைத்துக் கொண்டவளுக்கு அணையை உடைத்துக் கொண்ட வெள்ளம் போல அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. ''உடைந்த பொம்மையை நேர்செய்ய நீயே கடைக்குக் கிளம்பிவிட்டாயா கண்ணே ராஜி...'' அடைபட்ட குரலில் அரற்றினாள். ''இந்தப் பொம்மையைப் போலவே துவண்டு விட்டாயே?'' விம்மியபடியே வீட்டைநோக்கி நகர்ந்தாள்.



வீட்டிலே முள்ளின்மீது இருப்பது போலக் கிடந்து தவித்தாள் அனு. கணவனின் வருகையை எதிர்பார்த்து என்னதை எண்ணமெல்லாம் எண்ணி இமையோடு இமை மூடாமல் இரவெல்லாம் காத்துக் கிடந்தாள். பொழுது புலர்ந்தது. கணவனும் குழந்தையும் வரவில்லை. அவள் கண்ணீரும் உலரவில்லை. கதவைப் பூட்டிக் கொண்டு தவிக்கும் உள்ளத்தோடு ஆஸ்பத்திரிக்குப் போனவளை வெறுப்போடு, ''இங்கே ஏன் வந்தாய் நீ, கொலைகாரி. பார் உன் கொடுமையின் விளைவை'' என்று சீறினான் ரகு.

அனுசூயாவினால் பேசவே முடியவில்லை. துக்கம் தொண்டையில் கட்டி நின்றது. எதையும் பார்க்க முடியவில்லை. பார்வைக்குக் கண்ணீர் வலை பின்னி இருந்தது. ''என்னை அப்படிப் பார்க்காதீர்கள். குழந்தை எப்படி இருக்கிறாள்?'' என்றாள் நடுங்கியபடியே.

''எப்படி இருந்தால் உனக்கென்ன? குழந்தைக்கு நினைவு வரும் சமயத்தில் நீ இங்கே இருக்காதே. போய் விடு'' என்று கத்தினான். அப்போது ஒரு நர்ஸ் உள்ளே வந்து 'இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் குழந்தையின் தாயார் அருகிலிருப்பது அவசியம் என்று டாக்டர் அபிப்பிராயப் படுகிறார்'' என்று சொன்னாள்.

''குழந்தைக்குத் தாயார் இல்லை'' என்றான் அடைபட்ட குரலில் ரகு. நர்ஸ் போய் விட்டாள்.

''நானில்லையா? குழந்தையின் தாயாரில்லையா நான்?'' என்று விம்மினாள் அனு.

ஏளனமாகச் சிரித்தான் ரகு. ''நீயா? இதைச் சொல்ல உனக்கு வெட்கமாக இல்லை? தாயின் அன்பும் பெற்ற பாசமும் இருந்தால் இந்தக் குழந்தை இன்றைக்கு இப்படி உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருக்குமா?''

''என்னை நீங்கள் எப்படி உதாசீனம் செய்தாலும் சரி. இந்தச் சமயத்தில் குழந்தையிடம் என்னை இருக்க அனுமதியுங்கள்'' என்று விம்மினாள்.

ஒளியும் இடம் ஆனான்..!



ஞாலத்தைத் தீய்த்திடும் பாவத்தை மாய்த்திட
நாயகன் தூதானான் — தே
வாலயக் கள்ளரின் குள்ளத்தனத்தினால்
ஆலைக் கரும்பானான் — தவ
சீலன் ஏசுநாதன் கல்மலைச் சாரலில்
சிலுவைக் கொடியானான் — முடிவில்,
'ஏலோயி! ஏலோயி! லாமா சபக்தானி...?'
என்றலறி முடிந்தான்!
பூவுலகை உயர் பொன்னுலகாக்கிடப்
புத்துணர்வைப் படைத்தான் — தான்
மேவிய லட்சிய மேனிலை பெற்றிட
மேதினியைப் பணித்தான் — முடிவில்,
'தேவனே! தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்...?'
என்றுயிரைத் துறந்தான் — இன்று,
ஒலியமாகிப் போர்க் குண்டு பொழிவார்க்கு
ஒளியும் இடமானான்!

— தங்கமணி

இமைக்காத விழிகளால் அவளைச் சுட்டெரித்து விடுபவன்போல ஒரு விநாடி உற்றுப் பார்த்தான் ரகு. "இந்த உலகத்தில் கொடுமையும் குரோதமும் நிறைந்த ஓர் ஆத்மா இருக்குமானால் அது உன்னைத் தவிர வேறு யாருமில்லை. உன் மனம் கெட்டுக் கிடக்கிறது. எப்போதும் எதிலும் கீழ்த்தரமான எண்ணங்கள். நான் ராஜியிடம் அன்பு காட்டுவது உனக்குப் பிடிக்க வில்லை. தாயின் பவித்திரமான ஸ்தானத்தை அடைய முடியாத மலடி நீ. போய் விடு...என் முன்னால் நிற்காதே" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

'மலடி நீ...' என்ற வார்த்தை மின்சாரம் தாக்குண்டவளைப்போல அவள் உடலை உலுக்கி விட்டது. வாயைப் பொத்திக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதபடியே அந்த இடத்தை விட்டு வெளியேறினாள்.

ஐந்து வருஷங்களுக்கு முன்னால் இதே ரகு அவளிடம் எப்படிப் பேசினான்? அப்போதும் அவள் இப்படித்தான் அழுது கொண்டிருந்தாள். அந்த அழுகையின் காரணம் வேறு.

ஃ ஃ ஃ

"என் ஆசைத் தீ அணைந்து விட்டது. அன்னை என்ற பெருமைக்கு ஆளாக முடியாத பாவியாகப் பிறந்து விட்டேன் நான்" என்று விம்மினாள் அனு.

"இது என்ன அழுகை அனு, விவேகமில்லாமல்? மனத்தைத் திடப்படுத்திக் கொள்ள வேண்டாமா?" செல்லமாகத்தான் கடிந்து கொண்டான் ரகு. ஆனால் அவன் முகத்திலும் மலர்ச்சி இல்லை.

"நான் ஒரு காய்க்காத மரம், பூக்காத செடி. மலர்ந்து மணம் பரப்ப முடியாத மொட்டு என்பதை அறிந்த பிறகு என் மனம் எப்படி ஆறுதலடையும்? அழத்தான் பிறந்தேன், அழுகிறேன்."

"இதற்காகத்தான் டாக்டரிடம் போக வேண்டாம் என்றேன். உண்மை தெரிந்ததினால்தானே உன் மனம் இத்தனை வேதனைப் படுகிறது?"

"உண்மையை அறிந்து கொள்ளாமல் எப்படி இருக்க முடியும், கண்ணா? குழந்தை குழந்தை என்று கொள்ளை ஆசையோடு ஏங்கித் தவிக்கும் உங்களை எத்தனை நாளைக்கு ஏமாறவைப்பது? ஆனால் டாக்டர் இப்படி ஒரு உண்மையைச் சொல்லுவார் என்று நான் நினைக்கவே இல்லை." வாயில் துணியை வைத்து அமுக்கிக் கொண்டும்கூட அழுகை குமுறிக் கொண்டுதான் வந்தது அனுவுக்கு.

"அனுசூயா இப்படி அழுது கொண்டிருந்தால்...நான் எப்படிச் சந்தோஷமாக இருக்க முடியும்? குழந்தை பிறக்காவிட்டால் போகிறது. போ. உனக்கு நான் குழந்தை, எனக்கு நீ குழந்தை என்று இருந்து விடலாம்." சிரித்தான் ரகு — போலியாக.

அவன் சிரிப்பு அவள் அழுகையைத்தான் அதிக மாக்கியது. "எனக்காக இப்படிப் போலியாகச் சிரிக்காதீர்கள் கண்ணா. இந்தச் செய்தி உங்கள் உள்ளத்தில் எத்தகைய அதிர்ச்

வறட்டு, மூச்சுவிட முடியாத, துன்பம் தரும்


இருமலிலிருந்து

விரைவாக , நிச்சயமாக

குணமளிக் கக்கூடிய வீட்டு மருந்து

Alembic **க்ளைகோடின்**

டெர்ப் வசாகா



GTV-590 EVEREST

லையை உண்டாக்கியிருக்கிறது என்பது எனக்குத் தெரியும்.''

தன் உள்ளத்தைப் புரிந்து கொண்ட அனுவை ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டே, ''அதற்காக வாழ்க்கையில் வெறுப்பையும் வேதனையையும் வளர்த்துக் கொள்ளுவதா? நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்று தேறுதலடைய வேண்டியதுதான்'' என்றான் ரகு.

''நீங்கள் ஆண் பிள்ளை. ஆறுதலடைந்து விடலாம். ஆனால் அபலையாகிய எனக்கு ஆறுதல் ஏற்படாது, கண்ணா. உங்கள் அன்பையும் இழந்து விடப் போகிறேன். ஐயோ, இதற்காகவா நான் பெண்ணாகப் பிறந்தேன்?''

கோவென்று அழும் அவளை அணைத்துக் கொண்டே, ''கண்ணே அனு, என் அன்பின் தரத்தை நீ இவ்வளவு கேவலமாகவா மதிப்பிட்டு விட்டாய்? என்றுமே நீ என் இதய ராணியாகத்தான் இருப்பாய். ந்த நிலையும் அதை மாற்றாது. நமக்கென்று குழந்தை இருந்தால் ஒன்றோ இரண்டோ. ஆனால் இப்போதோ உலகிலுள்ள குழ்ந்தைகள் எல்லாமே நம்முடையவைதானே? எங்கே கண்ணைத் துடைத்துக் கொண்டு என்னைப் பார்....தன் மார்பிலே முகம் புதைத்து உடல் குலுங்க விம்மிக் கொண்டிருந்த அனுவின் தலையை நிமிர்த்திக் கண்ணீரைத் துடைத்தான் ரகு.

''கண்ணா நான் ஒன்று சொல்லுவேன், கேட்பீர்களா?'' குரல் அடைக்கக் கேட்டாள்.

''சொல் அனு. நீ சொன்னது எதை நான் கேட்கவில்லை?''

''உங்களிடம் எதைச் சொல்லவும் இனி எனக்கு வாய் கிடையாது, கண்ணா!'' உதடு துடிக்கப் பேசினாள் அனு.

''பார்த்தியா பார்த்தியா? மறுபடியும் அழக்கூடாது...''

''அழுகை ஒன்றினால்தான் இந்தத் துக்கத்தைக் கரைக்கமுடியும், கண்ணா. ஒரு நல்ல குழந்தையாகப் பார்த்து ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டு விடுங்கள்.''

கலகலவென்று சிரித்தான் ரகு. ''எனக்குக் குழந்தை பிறக்காது என்பதினால் எங்கே என் அன்பு பறிபோய் விடுமோ என்று பயப்படுகிறாயா அனு?...அசடே அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்.''

ஃ ஃ ஃ

அப்படி அன்பினால் தன்னைத் திக்குமுக்காடச் செய்த அதே கணவனின் வாயினால் இன்றைக்கு எத்தனை ஏச்சுக்கள், எத்தனை உதாசீனமான பேச்சுக்கள்? வழிந்த கண்ணீர் வற்றவே இல்லை. அழுது அழுது முகமெல்லாம் வீங்கி விட்டது. அவர் அன்பை இழந்து வெறுப்புக்கு ஆளான பின் எதற்காக வாழ வேண்டும் என்ற விரக்தி பிறந்தது. காகிதத்தையும் பேனாவையும் எடுத்தாள். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளாகப் பரபரவென்று எழுதலானாள்.

ராஜிக்கு நினைவு திரும்ப வெகு நேரமாகும் என்று டாக்டர் சொல்லி விட்டார். குழந்தையின் அருகிலே உட்கார்ந்தபடி உள்ளத்தைப் போட்டுக் கசக்கிக் கொண்டிருப்பதை விட வீட்டுக்குப் போய்க் குளித்து உடைமாற்றிக் கொண்டு வரலாம் என்று கிளம்பினான் ரகு. வழியில் அவன் மனைவியின் தோழி சுசிலா எதிர்ப்பட்டாள்.

''அனு ஆஸ்பத்திரியில் இருக்கிறாளா? குழந்தைக்கு எப்படி இருக்கிறது?'' என்று கேட்டாள்.

''ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தாள். ஆனால் இப்போது அவள் அங்கே இல்லை'' என்றான் ரகு ஒட்டுதலில்லாமல்.

''அப்படியானால்...குழந்தையின் அருகில் யாருமில்லையா?''

''யார் இருக்க வேண்டும்? அழகிய என் எண்ணங்களுடன் அந்தச் சண்டாளி அனு அருகில் இருந்தால்தான் குழந்தைக்கு ஆபத்து'' என்றான். அவன் மீது கொண்டுள்ள வெறுப்பு அந்த முகத்தில் பளிச்சிட்டது.

''அனுசூயா இப்போது எங்கே இருக்கிறாள்?'' என்று கேட்டாள் சுசிலா. எதையோ அவனிடம் சொல்ல வேண்டுமென்று அவள் தவித்த தவிப்பை வேறு சந்தர்ப்பமாக இருந்தால் ரகுராமன் உணர்ந்திருப்பான்.

''யார் கண்டார்கள்? உன் தோழியைப் பற்றிப் பேசாதே, சுசிலா. நீ காட்டும் அன்புக்கு அருகதையற்றவள் அவள்'' என்று வெறுப்போடு கூறினான் ரகு.

''அனுசூயாவைப் பற்றி அப்படி எல்லாம் சொல்லாதீர்கள், ரகுராமன். இரவு நெடுநேரம் வரை நான் அவளுடன்தான் இருந்தேன். அன்றைக்கே மோகனாவைப் பற்றிய ரகசியத்தை உங்களிடம் சொல்லி விடும்படி கெஞ்சினேன். மறுத்து விட்டாள். குழந்தைக்கா ஏங்கித் தவிக்கும் நீங்கள் ஏமாந்து போவீர்கள் என்று அந்த விஷயத்தைத் தன் மனத்துக்குள்ளேயே புதைத்துக் கொண்டு மறுகினாள்.''

ரகுவை யாரோ பளீரென்று அடித்தது போலிருந்தது. ''என்ன சுசிலா, நீ என்ன சொல்லுகிறாய்? ஒன்றும் புரியவில்லையே!'' என்றான்.

''மோகனா நடத்தை கெட்டவள். காலேஜில் படிக்கும்போதே தன்னைச் சுற்றி மாணவர்கள் வட்டமிட்டுக் கொண்டிருப்பதை விரும்பும் குண முடையவள். எதற்கும் துணிந்த அவள் வாலிபர்களுடன் நடந்து கொண்ட விதத்தைப் பற்றிச் சொல்லவே என் உடல் கூசுகிறது. எந்தப் பெண்களுமே அவளுடன் பேச மாட்டார்கள். அவளுடைய விபரீத நடத்தை காரணமாகக் கல்லூரியிலிருந்து விலக்கக்கூடப் பட்டாள்.'' சுசிலா சொல்லிக் கொண்டு போனாள். ரகுவின் நெஞ்சை வலித்தது.

''கணவன் கார் விபத்திலே இறந்தான் என்பதெல்லாம் கட்டுக் கதை. வாழ்க்கையில் வழுக்கி விழுந்த அவளுக்குக் கிடைத்த பரிசுதான் இந்தக் குழந்தை. தான் நடத்தும் உதவாக்கரை வாழ்க்கைக்குக் குழந்தை இருந்தால் ஒத்து வராது என்று அதை உங்கள் தலையில் கட்டி விட்டு ஓடிவிட்டாள். அதுவும் அனுசூயா இல்லாத சமயம் தெரிந்துதான் வந்திருக்கிறாள். நீங்கள் நினைப்பதுபோல அவள் பரிதாபத்துக்கு உரியவள் அல்ல. பகட்டும் படாடோபமுமாகக் கடற்கரையிலே யாரோ ஒருவனின் கையைப் பிடித்துக் கொண்டு ஒய்யார நடை போட்டு அவள் போவதை நேற்றுக் கூடப் பார்த்தேன்'' என்றாள் சுசிலா.

''மோகனாவின் குழந்தை என்பதை அறிந்ததிலிருந்தே செய்யத்தகாத காரியத்தைச் செய்துவிட்ட தவிப்பு அனுவிடம் வளர ஆரம்பித்தது. மோகனாவின் குழந்தை ராஜி என்ற நினைவை அவளால் மறக்க முடியவில்லை. புழுவாகக் குடையும் அந்த எண்ணத்தை உங்களுக்காக-உங்கள் குழந்தை ஆசைக்காகத் தாங்கி வந்தாள். தனிமையில் 'ஈசுவரா, முன்பின் தெரியாத யாருடைய குழந்தையை யாவது எங்களுக்கு அளித்திருக்கக் கூடாதா?' என்று கண்ணீர் வடிப்பாள். குழந்தை வளர வளரத் தாயாரின் குணங்கள் பெண்ணிடம் இருந்துவிடக் கூடாதே என்று கவலைப்படலானாள். எப்படியெப்படி எல்லாமோ மனத்தைத் தேற்றிக் கொண்டாலும் மோகனாவின் நினைவே பூதாகாரமாக வளர்ந்து அவளை வதைக்கலாயிற்று. 'எப்படியானாலும் மோகனாவின் ரகசியத்தை உங்களிடம் தெரிவிப்பதில்லை' என்று உறுதி செய்து கொண்டாள். அதனால் வந்த வினைதான் இவ்வளவும். உங்கள் சந்தோஷத்தையே தன் சந்தோஷமாக மதிக்கும் அவளை இனியும் வெறுக்காதீர்கள்'' என்று விடைபெற்றுச் சென்றாள் கசீலா.

''ஐயோ!.... அப்படியானால்.... அப்படியானால்....?'' என்று தடுமாறினான் ரகு. அவன் தலை கழன்றது. இப்போது எல்லாமே அவனுக்குப் புரிந்துவிட்டது. இத்தனை காலமும் தன்னிடம் உணர்ச்சிகளை உள்ளடக்கிக் கொண்டு கண்ணாமூச்சியாடிய அனுவை நினைத்துப் பார்த்தான். அவள் அன்பைத் தான் உணராமல் உதாசீனமாகப் பேசியது நெஞ்சில் உறுத்தியது.

முதன் முதலில் ராஜியை அவனுக்குக் காட்டியபோது நிகழ்ந்த அந்தச்சம்பவம் நினைவுக்கு வந்தது.

அனுசூயா தாயார் வீட்டுக்குப் போயிருந்த போதுதான் குழந்தை ராஜி அவனுக்குக் கிடைத்தாள். அவள் திரும்பி வரும்போது அவளுக்கு ஓர் அதிசயம் காத்திருக்குமென்று மட்டும்தான் கடிதத்தில் எழுதி யிருந்தான். அடுத்த கடிதத்திலேயே அவள் அந்த அதிசயத்தைக்காண உடனே கிளம்பி வரப்போவதாகக் குறிப்பிட்டு விட்டாள். ரகுவைப் பிரிந்து அவளால் அதிக நாட்கள் இருக்க முடியாது.

ஸ்டேஷனிலிருந்து வீட்டுக்கு வருவதற்குள் 'அது என்ன அதிசயப் பொருள்?' என்று கேட்டுக் கணவனைத் துளைத்தெடுத்து விட்டாள் அனுசூயா.

ரகுவிற்கு அவளிடம் விஷயத்தைச்சொல்லாமல் குழந்தையைக் காட்டித் திகைக்க வைக்க வேண்டுமென்று ஆசை. வீட்டிற்குள் நுழைந்ததும், ''அதோ உன் அறைக்குள் எட்டிப் பார்'' என்றான். எட்டிப் பார்த்த அனுசூயா அசையாச் சிலையாகப் பேசாப் பதுமையாகிப் போனாள். வியப்பு அவள் விழிகளை மலர வைத்தது. திகைப்பு அவளைப் பேச முடியாமல் திக்கு முக்காட வைத்தது. ''குழந்தை...குழந்தை யல்லவா? தங்க விக்கிரஹம் போல...இது.....இது! இந்த ஆனந்த அதிர்ச்சியை என்னால் தாங்க முடியவில்லையே, கண்ணா! இந்தப் பொக்கிஷம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?'' வாரி எடுத்த குழந்தையைத் தன் உடலோடு அப்பிக் கொண்டாள் அனு.

அவள் ஆனந்த அவஸ்தையைக் கண்டு மகிழ்ந்த ரகு. ''இது இவன் இல்லை...இவள்! இவளை உனக்கு அறிமுகப் படுத்தி வைக்க வேண்டாமா? இவள் பெயர் ராஜி...ராஜி, இதுதான் உன் அம்மா அனு'' என்றான் குழந்தையின் பிஞ்சுக் கரங்களைப் பிடித்து ஆட்டியபடியே.

''கண்ணா...கண்ணா...சொல்ல மாட்டீர்களா? இது யார் குழந்தை? மூக்கும் முழியுமா என்ன அழகு? ரோஜா மொட்டுப் போன்ற இதன் வாயைப் பார்த்தீர்களா? ஆஹா! குழந்தையின் ஸ்பரிசத்திலேதான் எத்தனை இன்பம் கண்ணா? இப்போதுதான் உங்கள் முகத்திலே அந்தப் பழைய மகிழ்ச்சியை நான் பார்க்கிறேன்.''

''ராஜி பெரியவளானால் அவள் அம்மாவைப்போலவே அழகாக இருப்பாள். குழந்தையின் தாயாரிடம் கொஞ்ச நேரம் தான் பேசிக் கொண்டிருந்தேன். அந்தச் சிறிது நேரத்திலேயே அவள் என் அனுதாபத்துக் குரியவளாகி விட்டாள்.''

''யார் அவள்? எங்கேபார்த்தீர்கள்? அழகுப் பிம்பமான இந்த ஆறு மாதக் குழந்தையை விட்டுப் பிரிய மனந் துணிந்த அந்தத் தாயார் யார்? நம் அதிர்ஷ்டந்தான் இந்தக் குழந்தை நமக்குக் கிடைத்திருக்கிறது.''

''குழந்தையின் தாயாரும் உன் சிநேகிதி தான் அனு. அவள் கணவன் கார் விபத்தில் திடீரென்று இறந்து விட்டானாம். அநாதரவாக விடப்பட்ட அவளுக்கு உற்றார் உறவினர் யாரும் கிடையாதாம். உழைத்துத்தான்உயிர் வாழ வேண்டுமாம். இந்தக் குழந்தையையும் வைத்துக் கொண்டு சமாளிக்க முடியாதென்ற முடிவுக்கு வந்திருக்கிறாள். குழந்தையை அநாதை விடுதியில் விடவோ மனமில்லை. தன் குழந்தை ஒரு நல்ல இடத்தில் வளருவதைத்தானே எந்தத் தாயாரும் விரும்புவாள்? உன்னைப்பற்றி எப்படியோ கேள்விப் பட்டிருக்கிறாள். ஆதி நாளைய நட்பை மறக்காமல் நீ குழந்தையை ஏற்றுக் கொள்ளுவாய் என்று வந்தாளாம். நீ இல்லை. இருந்திருந்தால் கட்டாயம் நீ குழந்தையை வாரி அணைத்து வாங்கிக் கொள்ளுவாய் என்று எனக்குத் தெரியும். அதை நானே செய்து விட்டேன். நான்கு நாட்களாக நான்தான் அதற்குத் தாயார். அதோ பார் பீடிங் பாட்டில், பிளாஸ்கிலே வெந்நீர், கிளாக்ஸோ டப்பா'' என்று அவளுக்கு எல்லாவற்றையும் விளக்கினான் ரகுராமன்.

கதையின் சுவாரசியமான கட்டத்தில் தன்னை மறந்து மூழ்கி விடும் ரசிகனைப்போலச் செயலற்று உட்கார்ந்திருந்த அனு, ''என் சிநேகிதி என்று சொன்னாள்? என்னுடன் படித்தவளாமா? பெயர் என்ன என்று சொன்னாள்....?'' என்று கேட்டாள்.

''மோகனா என்று சொன்னாள்....''

''என்ன....என்ன மோகனாவா...ஐயோ! மோகனாவின் குழந்தையா இது? அடிப் பாவி'' அனுவின் உடல் நடுங்கியது. தன் கரத்தில் சிணுங்கிய சிசுவை அவள் பார்த்த பார்வை என்னவோ போலிருந்தது.

''என்ன அனு, திடீரென்று உன் உடல் ஏன் இப்படி நடுங்குகிறது? மெள்ளக் குழந்தையைத் தொட்டிலில் விடு. மோகனா

வனஸ்பதிக்கு வர்ணம் கொடுக்கக்கூடாது

என்பதற்கு மூன்று காரணங்கள்

பொது ஜனங்களுக்குப் பரிசுத்தமான நெய் கிடைக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் வனஸ்பதிக்கு வர்ணம் கொடுக்க வேண்டுமென்று சிலர் வற்புறுத்துகிறார்கள்— அப்படிச் செய்வதால் நெய்யில் வனஸ்பதி கலப்படம் செய்வதைத் தடுத்து விடலாமென அவர்கள் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கை தவறானது மட்டுமல்லாமல் வர்ணம் கொடுப்பது நடை முறையில் இயலக்கூடியதுமல்ல.

1. கொடுக்கப்படும் வர்ணம் அகற்ற முடியாததாய் இருக்கவேண்டும். இல்லாவிடில் வர்ணம் கொடுப்பதினால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. நிறமாக அகலாத கெட்டிச் சாயங்கள் விஷமாக மாறக்கூடியவை அல்லது புற்று நோயை உண்டு பண்ணக் கூடியவை என்று தெரிய வந்திருக்கிறது. அத்தகைய சாயங்கள் வனஸ்பதியில் சேர்க்கப்பட்டால் அன்றாட சாப்பாட்டில் வனஸ்பதியை உபயோகிக்கும் லக்ஷக்கணக்கான நம் மக்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

2. நம் நாட்டில் பல்வேறு பாகங்களில் தயாராகும் நெய்யிற்கே பல நிறங்கள் உள்ளன. இந்த இயற்கை நிறங்களில் சில வனஸ்பதிக்கு கண்ணைப் பறிக்கும் வர்ணம் கொடுத்தால்கூட அதை மறைக்கும் சக்திவாய்ந்தவை.. ஆகையால் வனஸ்பதிக்கு வர்ணம் கொடுப்பதினால் நினைத்தபடி எண்ணம் ஈடேறாது.

3. நெய்யில் கலப்படம் செய்வதற்கு வனஸ்பதி ஒன்று மட்டும் அல்ல உபயோகிக்கப்படுகிறது. ஆனால் மற்ற பொருள்களைப் போலில்லாமல், பரிசுத்த உணவுப் பொருளான வனஸ்பதியைக் கலப்படம் செய்வது முற்றிலும் அபாயமற்றது. மிருகக்கொழுப்பு போன்ற இதர பொருள்கள்பரிசுத்தமற்றவையாதலால்சேர்க்கத் தகாதவை. நெய்யில் கலப்படம் செய்யும் இரக்கமற்றவர்களுக்கு வனஸ்பதி கிடைக்காமல் போனால், நெய்யில் கலப்படம் செய்வதற்கு இந்தத் தகாத பொருள்களை இன்னும் அதிகமாக உபயோகப்படுத்துவார்கள்.

வனஸ்பதி அபாயமற்ற, ஆரோக்கியமான, போஷாக்கு வாய்ந்த ஆகாரம். வனஸ்பதியில் வர்ணம் சேர்ப்பதானது ஒரு சுத்தமான ஆகாரத்தில் கலப்படம் செய்வதை தடுப்பதற்காக இன்னொரு சுத்தமான ஆகாரப் பொருளில் கலப்படம் செய்வது போல் ஆகும்.

வனஸ்பதியிலேயே அபாயமற்ற, ஒரு மறைமுக வர்ணம் இருக்கிறது

வனஸ்பதியில் சேர்க்கப்படும் நல்லெண்ணெய் அபாயமற்ற, மறைமுக வர்ணத்தைப் போல் உதவுகிறது. ஒரு சுலபமான ரஸாயனப் பரீட்சை மூலம் இந்த வர்ணம் தவறாமல் தெரியவரும். ஆகையால் வனஸ்பதிக்கு வேறு வர்ணம் சேர்க்க அவசியமில்லை !



உலகம் பூராவும் வனஸ்பதி போன்ற கொழுப்புகள் உபயோகிக்கப் படுகின்றன

அமெரிக்கா - அயர்லாந்து-அர்ஜெண்டினு - அல்பேனியா - அல்ஜீரியா - ஆஸ்திரலேஷியா - ஆஸ்திரியா - இங்கிலாந்து - இத்தாலி - இந்தியா - இஸ்ரேல் - ஈராக் - ஈரான் - எத்தியோப்பியா - ஏமன் - கானடா - கிரீஸ் - செக்கோஸ்லவேகியா - டென்மார்க்-துருக்கி-தென் ஆப்பிரிக்கா யூனியன்-நார்வே - நெதர்லாண்ட்ஸ் - நைஜீரியா - பர்மா - பல்கேரியா - பாகிஸ்தான் - பிரான்ஸ் - பிரிட்டிஷ் கிழக்கு ஆப்பிரிக்கா - பிரேஜில் - பின்லாந்து - பெல்ஜியம் - போர்ச்சுகல் - போலந்து - மத்திய ஆப்பிரிக்க பெடரேஷன் - மலாயா - மெக்ஸிகோ - மொராக்கோ - யுனைடெட் அரபு ரிபப்ளிக் - யூகோஸ்லேவியா - ரஷ்யா - ருமேனியா - லிபியா - ஜப்பான் - ஜெர்மனி (கிழக்கு-மேற்கு) - ஸவூதி அரேபியா - ஸ்விட்ஜர்லாந்து - ஸ்வீடன் - ஹங்கேரி

அதிக விவரங்களுக்கு, இந்த விலாசத்துக்கு எழுதுங்கள் :

தி வனஸ்பதி மான்யுபாக்சரர்ஸ் அஸோஸியேஷன் ஆப் இந்தியா

இந்தியா ஹவுஸ், போர்ட் ஸ்டிரீட், பம்பாய் 1

JWT/VMA-2691

Iris INK ஐரிஸ் இங்க்

தங்கு தடையில்லாமல்
கவர்ச்சிகரமாக எழுத ...

5 மங்காத நிறங்களில்

ரிஸர்ச் கெமிகல் லாபரடரீஸ்
சென்னை & பங்களூர்.



விடமால்ட்

கிரண்ட விடமின் சத்துக்களடங்கியது



விடமின்-ஏ

விடமின்-பி-1.

விடமின்-ஸி

விடமின்-டி

நல்ல ருசியுள்ள, புஷ்டி தரக்கூடிய மால்ட் எக்ஸ்ட்ராக்ட் அடிப்படையில் மேற்கண்ட அத்யாவசியமான விடமின் சத்துக்கள் அடங்கியது. போஷாகைக் குறைவானவர்கள், நோயினின்றும் தேறுபவர்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் மிக உகந்தது என சிபார்சு செய்யப் படுகிறது.

தயாரிப்பாளர்:

தி மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரேடரி லிட்.
மல்லேஸ்வரம், பெங்களூர் - 3.

விற்பனை டிப்போக்கள்: 35/37, தம்புச் செட்டித் தெரு, சென்னை-1.
71/4, ஆர்க்காட் ஸ்ரீனிவாஸாசார் தெரு, பெங்களூர்-2.
விற்பனை ஏஜெண்டுகள்: மெஸர்ஸ். கர்னாடக் & டெக்கான் ஏஜன்ஸீஸ், ஹூப்ளி.
மெஸர்ஸ். டெக்கான் ட்ரக் ஏஜன்ஸி, ஹைதராபாத் (டெக்கான்)

ITL

HITZ 4 TM



தலைவலி, சளி, ஜீரம், இன்புளுயன்சா,
வயிற்றுப்போக்கு முதலியவைகளுக்கு

சிவபதி மருந்து

பாரத் இண்டஸ்டிரியல் ஒர்க்ஸ் 32 மஹால் 5வது தெரு மதுரை-1

*

இலங்கை ஏஜண்டு:
மாலா ஸ்டோர்ஸ்
184, செட்டியார் தெரு
கொழும்பு-11

*

MINERVA

வின் பெயரைக் கேட்டதும் உன் முகம் ஏன் இப்படி வெளுத்து விட்டது?''

சட்டென்று அனு தன்னைச் சமாளித்துக் கொண்டாள். ''ஒன்றுமில்லை...வந்து..... அவள்-அவளுக்கு நேர்ந்த இந்தக் கதியை நினைத்தபோது என்னால் தாங்க முடியவில்லை'' என்று சொல்லிக்கொண்டே உள்ளே சென்றாள். காரியங்களில் ஈடுபட-இல்லை, அவன் முன்னிலையிலிருந்து போக.

அந்தத் தடுமாற்றத்தின் உண்மைக் காரணம் இப்போதுதான் ரகுவுக்குப் புரிந்தது.

அன்று மாலை.....

ரகு காரியாலயத்திலிருந்து உள்ளே நுழைந்தபோது; கண்டதும் அள்ளி எடுத்து மகிழ்ந்த குழந்தை எதிரில் அழுது கொண்டிருக்கச் சுய நினைவே இல்லாதவள் போல; அழும் குழந்தையையே வெறித்துப் பார்த்துக் கொண்டு சித்திரமாக உட்கார்ந்திருக்கும் தன் மனைவியைக்கண்டு திகைப்பாகத்தான் இருந்தது அவனுக்கு.

''என்ன அனு பலமான யோசனையி லாழ்ந்து விட்டாயே?''என்று கேட்டபோது தான் அவள் திடுக்கிட்டவள்போலத் திரும்பினாள். போலியாகச் சிரித்துக் கொண்டே குழந்தையையும் எடுத்துக் கொண்டு, ''மோகனாவைப் பார்த்து அந்தப் பத்திரத்திலே கையெழுத்து வாங்கினீர்களா?'' என்று கேட்டாள்.

''கொடுத்திருந்த விலாசத்தில் அவளைக் காணோம். அதனால் என்ன? மோகனாவைப் பார்த்தால் அப்படியெல்லாம் நமக்குத் தொல்லை கொடுப்பவளாகத் தெரியவில்லை, அனு. நீ வீணாகக் கவலைப்படாதே. ராஜியை இனி உன்னிடமிருந்து யாராலும் பிரிக்க முடியாது'' என்று குழந்தையை அவளிடமிருந்து வாங்கிக் கொண்டு ஈஸிசேரில் போய் உட்கார்ந்தான்.

அவளோ குழந்தையிடமிருந்து விலகி ஜன்னலின் அருகில் போய் நின்றுகொண்டு, ''எதற்கும் அவளிடமிருந்து எழுதி வாங்கிக் கொண்டு விட்டால் நமக்குப் பலம்தானே? பெற்ற மனம் பின்னால் எப்படிப் பேசுமோ?''என்றாள்.

''நீயாக எதையாவது கற்பனை செய்து கொள்ளாதே. அவள் இனி இந்தப் பக்கமே திரும்ப மாட்டாள்.''

''உங்களுக்கு மோகனாவைத் தெரியாது'' என்று சொன்ன அனுவின் வார்த்தையில் இத்தனை ரகசியம் புதைந்து கிடக்கும் என்று அன்றைக்கு அவன் நினைக்கவே இல்லை. ஆனால் இன்றைக்கோ? இப்போதுதான் மோகனாவின் முழு உருவத்தையும் அவன் கண்டான். சுசீலா தான் அதை அவனுக்கு உணர்த்தியவள்.

குழந்தை ராஜியிடம் அனுசூயா இப்படி நடந்து கொண்டதற்கான உண்மையை அறிந்த போது ரகுராமனின் உள்ளம் . அனுவிற்குத் தான் இழைத்த கொடுமையை எண்ணிக் கோவென்று அழுதது. 'தன் கடுசொற்களைத் தாளாது அவள் ஏதாவது தாறுமாறாக நடந்து கொண்டு விட்டால்?' என்ற பீதி விரட்டவே வீட்டுக்கு ஓடினான்.

உள்ளே பேச்சுக்குரல் கேட்டு அப்படியே மூச்சைப் பிடித்துக்கொண்டு சுவரில் சாய்ந்த படி நின்று கவனிக்கலானான்.

''அம்மா...நீ எப்போதம்மா வந்தாய்?'' வியப்பும் அதனோடு அழுகையும் கலந்துவந்த கரகரப்பான குரல் அனுவினுடையதுதான்.

''இப்போதுதான். உள்ளே யார் வருகிறார்கள் என்றுகூடத் தெரியாமல் அப்படி என்ன எழுதிக் கொண்டிருக்கிறாய்? பேப்பரில் செய்தியைப் பார்த்தேன். எனக்கு இருப்பே கொள்ள வில்லை...இதென்ன முகமெல்லாம் அழுது அழுது வீங்கிக் கிடக்கிறதே.. குழந்தைக்கு....''

''அழத்தானே அம்மா என்னை நீ பெற்றாய்? அதைக்கண்டு இப்போது ஏன் கண் கலங்க வேண்டும்? இன்னும் சற்று நேரம் கழித்து வந்திருந்தாயானால் உன் மகளையே நீ பார்த்திருக்க முடியாது. இந்தக் கடிதம் தான் உன் புலம்பலைக் கேட்டுக் கொண்டு படபடத்திருக்கும்.'' அப்படியே ஓடிப் போய் அவளைக் கட்டி அணைத்துத் தேற்றவேண்டும் போலிருந்தது ரகுவுக்கு. இருந்தாலும் அவன் அடக்கிக் கொண்டான்.

''அசடு போல எதையாவது உளறாதே. போன மாசம் சுசீலாவைப் பார்த்தேன். அவ எல்லாம் விவரமாகச் சொன்னா. அப்பவே கிளம்பி வந்து உனக்குப் புத்தி சொல்லணும்னு நெனச்சேன். முடியல்லே. குழந்தையில் நீயும் ராஜியைப் போலத்தான் இருந்தாய். குழந்தைகளே அப்படித்தான் விதவிதமாக விளையாடும். அதற்காக...'' அவள் முடிக்க வில்லை. அனு குறுக்கிட்டாள்.

''நான் எப்படியம்மா இருந்தேன்?''

''எப்படி இருந்தாயா? அதை இப்போது நினைத்தாலே சிரிப்பு வருகிறது. என் புடவையை எடுத்து உடம்பு முழுதும் சுற்றிக் கொண்டு நிற்பாயே,மறந்துவிட்டதா? ஜானகி சீதா, இந்திரா எல்லோரும் தங்களுடன் பல்லாங்குழி ஆட உன்னைக் கூப்பிட்டுக் கெஞ்சுவார்கள். ஆனால் நீயோ ஆம்பிளைப் பசங்களோட பாண்டியாடப் பாய்ந்து ஓடுவே. விளையாட்டுக்கு யார் கேட்டாலும் அவாளையெல்லாம் கல்யாணம் பண்ணிக்கறேன்னு தலையாட்டுவே. ஆனா வயசானப்புறம் நீ அப்படி மாறுவேன்னு நான் நினைக்கவே இல்லே. ஆண்கள் பள்ளிக்கூடத்திலே சேர்ந்து படிக்க மாட்டேன்னு அடம் புடிச்சே. ஆம்பிளைப் பசங்களைக் கண்டாலே முகத்தைத் திருப்பிக் கொண்டு ஒதுங்கிப் போனதையும் நான் இதே கண்களாலே பார்த்தேன். வயசானா எல்லாம் மாறிவிடும். இதுக்காக வீணா மனசைப் போட்டுக் குழப்பிக் கொண்டு....'' பெருமூச்சுடன் பேச்சை நிறுத்தினாள் தாயார்.

''மோகனாவோட நினைவு அவளை நிம்மதியாகவே இருக்க விடல்லே மாமி'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தான் ரகு. ''அனு...அனு..உண்மை தெரியாமல் உன் மனம் புண்படும்படி ஏதேதோ பேசிவிட்டேன். சுசீலா இப்போதுதான் மோகனாவைப் பற்றிச் சொன்னாள்'' என்று சொல்லும் போதே அவன் குரல் கம்மியது. கண்ணீர் வழிந்தது. அனுசூயாவின் தாயார் இருக்கிறாள் என்பதையும் மறந்து உணர்ச்சிப் பெருக்குடன் அவளை அணைத்துக் கொண்டு குழந்தை போல அழலானான் ரகு.

''அழாதீர்கள் கண்ணா!'' என்றாள் . அனு. ஆனால் அவளால் அழாதிருக்க முடியவில்லை.

''அசட்டுப் பெண் ஏதேதோ கற்பனை செய்து கொண்டு எல்லாருக்கும் கஷ்டத்தைக் கொடுத்துவிட்டாள்....குழந்தை ராஜி எப்படியிருக்கிறாள்?'' என்று குரல் கொடுத்து அவர்கள் நிலையை உணர்த்தினாள் அனுவின் தாயார்.

இருளிலே உருவங்கள் உலாவுவதாகப் பயந்த குழந்தை விளக்கைப் போட்டதும் ஏதும் காணாது பயம் நீங்கிச் சிரிக்குமே அப்படிச் சிரித்தாள் அனு. பிறகு ''குழந்தைக்கு நினைவு திரும்பி விட்டதா?'' என்று கணவனைப் பார்த்துக் கேட்டாள்.

பிறகு எல்லோருமே ஆஸ்பத்திரிக்குப் போனார்கள். ராஜி கண்ணை விழித்துப் பார்த்தாள். டாக்டர் இனிப் பயமில்லை என்று சொல்லி, குழந்தை அமைதியாகத் தூங்க வேண்டுமென்றும் அதனால் அங்கு யாரும் இருக்கக்கூடாது என்றும் சொல்லி எல்லோரையும் போகும்படி கேட்டுக் கொண்டார்.

வீட்டிற்குள் நுழையும் போது ''குழந்தை ராஜி பெரியவளானால் உன்னைப் போலவே இருப்பாள் அனுரூபா'' என்றாள் அனுவின் தாயார் மங்களம்.

''அதெப்படி?'' என்ற குரல்கேட்டு எல்லோரும் திரும்பினார்கள். கையில் டம்பப் பையுடன் நைலான் புடவை பறக்க ஒயிலுடன் அங்கு நின்று கொண்டிருந்தாள் மோகனா. அவள் வரவை அங்கு யாரும் அந்த நேரத்தில் எதிர்பார்க்கவில்லை என்பதை ஒவ்வொருவரின் முகமுமே சொல்லிற்று.

''என் குழந்தை, அனுவைப்போல எப்படி இருப்பாள்? குழந்தைக்கு உடம்பு சரியானதும் அவளை நான் என்னுடன் அழைத்துப் போகப் போகிறேன்'' என்றாள் மோகனா உள்ளே வந்து கொண்டே.

''குழந்தை எங்களுடைய சொத்து. அவளை எங்களிடமிருந்து நீ பிடுங்கிச் செல்ல முடியாது''என்றாள் அனு உறுதியான குரலில்.

''உங்கள் சொத்தா? எப்படி? என் குழந்தையை நான் உங்களிடம் விற்று விட்டுப் போனேனா? கொஞ்ச நாளைக்கு அவளை எனக்காகக் காப்பாற்றிக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டேன், அவ்வளவுதானே?''

ரகுவின் முகம் தொங்கிப் போயிற்று. அன்றைக்கே அவளிடம் எழுதி வாங்கிக் கொள்ளும்படி அனு சொன்னதைத் தான் நிறைவேற்றியிருந்தால் இன்றைக்கு இப்படியொரு இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்காதல்லவா?

''நாங்கள் பாடுபட்டு வளர்த்துப் பருவமாக்கியதும் பக்குவமாக வாங்கிப் போக உரிமை கொண்டாடிக் கொண்டு வந்து விட்டாயோ? கேட்டீர்களா இவள் சொல்வதை? ராஜி நம்முடையவள். அவளை நாம் இழந்தால் பிறகு இந்த உலகில் நமக்கு எதுவுமே இல்லை.'' கண்களில் நீர் பளபளக்கக் கணவனிடம் கூறினாள் அனு.

''நான் என் குழந்தையைக் கூட்டிக் கொண்டுதான் போவேன். என்னைத் தடுக்க யாராலும் முடியாது. பெற்றவளுக்கு இல்லாத உரிமையா வளர்த்தவளுக்கு?'' விவகாரம் பேசினாள் மோகனா.

விவகாரம் தெரிந்த ரகு நிதானமான குரலில் எவ்விதச் சலனமும் இல்லாமல் ''மோகனா, நீ உன் குழந்தையைத் தாராளமாக அழைத்துச் செல்லலாம்'' என்றான். எல்லோரும் திகைத்தார்கள்.

''ஐயோ, என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? ராஜியைப் பிரிந்து நீங்கள் எப்படி இருப்பீர்கள். என்னாலும் முடியாது'' என்று துடித்தாள் அனு. ஆனால் அனுவின் கண்ணீரோ, கதறலோ, விம்மலோ, விவகாரமோ எதுவும் சட்டத்தின் முன் செல்லாது என்பதை ரகு உணர்வான். தவிர மோகனாவின் உண்மை ஸ்வரூபத்தை அறிந்த பிறகு முதலில் அனு எந்த மனோ நிலையில் இருந்தாளோ, அதே நிலையில் இப்போது அவன் இருந்தான். அதை வெறுப்பென்று சொல்ல முடியாது. ஆனால் முன்பிருந்த பாசத்தில் பிளவு விழுந்துவிட்டது. ஆகவே மௌனமாக ஜன்னல் அருகில் போய் நின்று கொண்டு சூனியத்தை நோக்கலானான்.

ஒருவினாடி அனுவிற்கு உலகமே சுழன்றது: கணவனின் மௌனம் அவளுக்கு எல்லாவற்றையும் உணர்த்தி விட்டது. அவன் கண்ணீரிலிருந்து அவன் உள்ளம் படும்பாட்டையும் உணர்ந்து கொண்டாள். மின்னலென உள்ளே ஓடினாள். திரும்பி வந்த அவள் கையில் ஒரு பெட்டி இருந்தது. அவள் கைகளும் கழுத்தும் வெறிச்சென்றிருந்தன.

பொங்கி வழியும் கண்ணீருடன் மோகனாவின் அருகில் போனாள் அனுரூபா. அவள் முன் அந்தப் பெட்டியை நீட்டினாள். இதில் என் நகைகள் அத்தனையும் இருக்கின்றன. ஏன், எங்கள் ஆஸ்தியையே இதில் அள்ளிக் கொண்டு வந்து விட்டேன். இதை எடுத்துக் கொள். குழந்தையை எங்களுடையதாக்கி விடு, மோகனா. குழந்தை இல்லாமல் உன்னால் வாழமுடியும். எங்களால் முடியாது. மோகனா உன்னை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்—மறுக்காதே'' என்று அவள் காலைப் பிடித்துக் கொண்டு விம்மலானாள் அனுரூபா.

அகம்பாவமே உருவாக உட்கார்ந்திருந்த மோகனாவை அனுவின் செய்கை ஒரு விநாடி அப்படியே உலுக்கி விட்டது. அவளையுமறியாமல் அவள் விழிகளில் நீர் ததும்பியது. சட்டென்று எழுந்திருந்தாள். ''அனுரூபா இங்கு வரும்போது என் குழந்தையை மீட்டுக் கொண்டு போவது என்றுதான் வந்தேன். ஆனால் உன் குழந்தைப் பாசம் என் இரும்பு நெஞ்சையும் மெழுகாக்கிவிட்டது. உன் கண்ணீர் எனக்குப் பெண் மனத்தைக் கொடுத்து விட்டது. ராஜி இனி என்றுமே உன் குழந்தைதான். என்னைவிட நீ அவளை நன்றாக நல்லவளாக வளர்ப்பாய். இனி உங்கள் வாழ்க்கையில் நான் குறுக்கிடவே மாட்டேன்.'' மோகனாவின் குரலே மாறுபட்டு ஒலித்தது. சட்டென்று மறுபுறம் திரும்பிக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தன் காலடியிலிருந்த நகைப்பெட்டியை எடுத்து, ஸ்தம்பித்து நிற்கும் அனுரூபாவின் கையில் வைத்து, ''அனு, உன் சௌபாக்கியங்களுக்காக நான் ராஜியை உன்னுடையவளாக்க விரும்பவில்லை. நீ ஒரு நல்ல தாயார் என்பதற்காகவே அவளை உன் குழந்தையாக்கி விட்டுச் செல்கிறேன். இவைகளை நீயே வைத்துக் கொள்'' என்று சொல்லிவிட்டுப் பதிலை எதிர்பாராமல் வேகமாக வெளியேறினாள்.

ஈறு உபாதை மற்றும் பற்சிதைவிலிருந்து குணமடைந்ததைப்பற்றிய

வியக்கத்தக்க செய்திகள்

தாமாகவே விரும்பி எழுதப்பட்ட அத்தாட்சிக் கடிதங்கள்

போர்ஹான்ஸ்

பற்பசையின் பிரத்தியேகமான மதிப்பை நிரூபிக்கின்றன.

"எனக்கு இப்போது 55 வயதாகிறது.

என்னுடைய எல்லாப் பற்களும் சீராகவே இருக்கின்றன. ஆனால் 1943 ல் என்னுடைய இரண்டு பல்வரிசைகளிலும் உள்ள முன்புற மற்றும் பக்கவாட்டிலுமுள்ள பற்கள் அசையத் தொடங்கின. அவை விழுந்துவிடுமென்றே நான் நினைத்தேன். 1943-ல் ஒரு நாள் போர்ஹான்ஸைப்பற்றிய குறிப்புகளைக் கண்டேன். நான் அதை உபயோகிக்கத் தொடங்கினேன். இப்போது போர்ஹான்ஸ் என் பற்களைக் காப்பதுடன் அவற்றை வலுவுள்ளதாகவும் செய்திருக்கிறதென்பதைக் கூற மகிழ்கிறேன்."

"நான் எப்பொழுதும் போர்ஹான்ஸையே குறிக்கிறேன்.

பற்கள் அல்லது ஈறுகளிலுள்ள கோளாறுகளுக்காக என்னிடம் சிகிச்சைபெறுபவர்களும் எப்பொழுதும் அதற்காக நன்றி கூறுகிறார்கள். சிகிச்சைபெறும் குழந்தைகளைக்கூட போர்ஹான்ஸ் உபயோகிக்கும்படி நான் சிபார்சு செய்கிறேன். மேலும் என்னுடைய ஆஸ்பத்திரிக்கு வருபவர்களில் பலர் அவர்களின் குழந்தைகளுக்குப் போர்ஹான்ஸையே உபயோகிக்கிறார்கள்."

"நான் மிகச் சிறந்த பலனை அடைந்திருக்கிறேன்.

போர்ஹான்ஸ் உபயோகிப்பதால், என் தகப்பனார்மூலம் நான், போர்ஹான்ஸ் ஈறுகளுக்குப் பலனளிக்கக் கூடியது என்று கேட்டிருக்கிறேன். ஆதலால், எனக்கு ஈறுகளில் உபாதை ஏற்பட்டவுடன், என் தந்தையின் புத்திமதிப்படி போர்ஹான்ஸ் உபயோகிக்கத் தொடங்கினேன். அன்றிலிருந்து இன்றுவரை போர்ஹான்ஸையே உபயோகித்து வருகிறேன்."

போர்ஹான்ஸ்

ஒரு பல் வைத்தியரால் உருவாக்கப்பட்ட பற்பசை.



GEOFFREY MANNERS & CO., LIMITED

"நாளைக்குத்தான் அது ஏற்பாடாகியிருக்கிறது, ராஜேசுவரன்! உன்னை நான் அங்கு அழைக்கிறேன்'''


இரண்டு விரல்களால் கண்ணாடியைப் பிடித்து மூக்கின்மேல் பொருத்தியபடி ஸ்ரீநிவாசன் என்னைக் கண்டு புன்முறுவல் பூத்தார். அவருடைய பெருந்தன்மையான தோற்றத்தில் அந்தப் புன்னகை கலந்தபோது எங்கள் இருவரின் தூரம் இன்னும் குறைந்து, என் உள்ளத்தில் ஒரு மத்தாப்பூப் பொறி போன்ற வெளிச்சம் பூத்தது. நாளைக்கு நான் கீர்த்தியைச் சந்திக்கத் தீர்மானித்திருந்தேன். ஆனால் இவர் கூப்பிடும் போது என்னால் மறுக்க முடியவில்லை. மறுக்க முயற்சி செய்தால் அது முடியுமா என்பதும் சந்தேகமே.

''அப்போது 'லீவ்' எழுதிக் கொடுத்து விடுகிறேன், சார்!'' என்றேன்.

''நாளைய மத்தியானத்துக்குத்தான். பிற்பகல் முழுதும் வாங்கிக் கொள்ளேன்'' என்றார்.

எதிரில் அடுத்த பீரியட் ஆசிரியர் நான்கு வகுப்புகளுக்கு அப்பால் நிதானமாக வந்து கொண்டிருந்தார். ஸ்ரீனிவாசன் தம் புன்னகை கலையாமல் என்னிடம் பார்வையிலேயேவிடை பெற்று நடந்தார். நான் வகுப்புக்குள் சென்று உட்கார்ந்தேன். சிறிது நேரத்தில் பாடங்கள் ஆரம்பமானபோதிலும் என் மனம் அதில் லயிக்கவில்லை. அங்கே ஆசிரியர் ஸ்ரீனிவாசனைக் குறித்து ஓர் உருவமில்லாத உவகை அலை வீசிக் கொண்டிருந்தது. அவரை நான் மதிக்கிறேன்: கைபெடுத்துக் கும்பிடுகிற ஸ்தானத்தில் வைத்துப் போற்றுகிறேன் என்பதை இப்போது நினைக்க முடியவில்லை. சமமான ஒரு சிநேகிதனின் அன்னியோன்யத்துக்கு அவர் நெருங்கி வந்து விட்டார். அதற்காக நான் குதூகலித்தேன். ஆனால் இந்த மகிழ்ச்சியில் விறுவிறுப்பான கிளர்ச்சி கலந்திருந்தது. அதன் அடி வேரை நினைவில் தேடிப் பார்த்தால் சிக்கலாம்; எனக்குத் தேட விருப்பமில்லை. அடடா...? மகிழ்ச்சிகளில்தான் எத்தனை ரகம்?

நாளைக்குக் கீர்த்தியைப் போய்ச் சமாதானப்படுத்த முடியாது. ஏற்கெனவே பதினைந்து தினங்களாகப் பரீட்சைத் தொல்லையில் உழன்று, பார்க்கவே முடியவில்லை. எனக்கும் ஒரே தவிப்புத்தான். பரவாயில்லை. நாளை ஸ்ரீனிவாசனின் வாழ்க்கையில் ஒரு முக்கிய தினம். அவர் பெண் பார்க்கப் போகிறார்; அவருடைய எளிமையான, தனிமையான வீட்டில் விளக்கேற்றக் கூடிய ஒரு கரம் வந்து விடும் என்று நினைக்கவே ஆச்சரியமாக இருக்கிறது. என்னிடம் இரண்டு நாட்களுக்கு முன்னால்தான் அதைப் பற்றிப் பேசினார்: மாலைக்குள் இவ்வளவு சீக்கிரம் அது ஏற்பாடாகிவிடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.



அவருடைய திருமணத்தைக் குறித்து நினைத்ததுமே என் நினைவுகள் எங்கேயோ தாவின. என் உதடுகளில் ஓர் இளநகை பூத்ததை என்னாலேயே உணர முடிந்தது. நிச்சயமாகக் கீர்த்திதான் ஞாபகத்துக்கு வந்தாள். அதன் பொருளை நான் யோசித்தேன். அவளுக்கும் எனக்குமிடையில் இருந்து வரும் நட்புறவில் வேறு வர்ணக் கலப்பு இல்லை. அவளும் நானும் தன்னந்தனியாகக் கடற்கரையில் அமர்ந்தபடி பேசிக்கொண்ட நாட்கள்....மன உருக்கத்தில் பரஸ்பரம் பரிமாறிக் கொண்ட எண்ணங்கள்...எல்லாவற்றிலும் தேடுகிறேன். சலனம் இல்லை; ஆனால் அவள் ஓர் உயிர் நண்பனைப்போல் என் வாழ்வுக்கு இன்றியமையாதவளானாள்:

ஓ. நான் சிரித்துக் கொண்டேன்: அவள் பெண் என்பதை விட உயிருக்குயிரான சிநேகிதன் அல்லது தாயார் என்ற அந்தஸ்தில்தான் எங்கள் உறவின் கட்டிடம் எழுந்திருந்தது. ஒரு சந்தர்ப்பத்திலும் உன்னை நான் காதலிக்கிறேன் என்று சினிமாவைப் போலச் சொல்வது அதிக்கிரமமாகப் பட்டது. கீர்த்


திக்கும் இந்த விஷயத்தில் அதே அபிப் பிராயம்தான். அவள் வாழ்வுக்கு நான் இன்றியமையாத அங்கம் என்பது வாஸ் தவமாகத் தெரிந்தது. ஆனால் என்னிலே எப் படியோ அப்படியே, அந்த அவசியம் காதலின் காரணமாக ஏற்பட்டதன்று. இந்த விஷயங் களை வேறு யாரிடமும் தெரிவிக்க இயலாது. மனிதன் தம் இருதயத்தின் கதவுகளை ஏறெ இறுகச் சாத்திக் கொள்கிறார். ஸ்ரீனிவாசன் அவர்களிடம் கூட எத்தனையோ நாட்கள் பழகிய பின்பும், மனம் விட்டுப் பூரண அன் பைப் பெற்றும் தந்தும் நடந்து வந்த போதி லும் இந்த விஷயத்தை என்னால் சொல்ல முடியவில்லை. ஆசிரியரின் ஸ்தானத்திலிருந்து சிநேகிதனாகிக் கொண்டு வருகிறார். ஒரு பெண்ணும் ஓர் ஆணும் நெருங்கிப் பழகினால் என்ன நினைக்கப் படுகிறதோ, அதுதான் களங்கமற்றவனுக்குக் கூட கவலை தருகிறது.

கீர்த்தியிடம் அதைச் சொல்ல வேண்டிய நேரம் நிச்சயம் ஒரு முறை நேரும். அதைக் கற்பனை செய்து பார்த்தால் எனக்குக் கூச்சம் வருகிறது. அவள் எப்படி இதை வர வேற்பாள்? தலை தாழ்ந்தபடியா, கன்னங்கள் சிவப்பேறவா? விழிகளில் நாணம் நிலவுமா? சிரித்தபடியா? அந்தத் தோற்றம் கைக்குக் கிடைக்கவில்லை. போகட்டும். எங்கள் வாழ்க்கை எப்படி யிருக் கும்? வாழ்க்கை என்று எடுத் துக் கொண்டு கீர்த்தியைப் பொருத்திப் பார்க்கும்போ தெல்லாம், அவளை ஒரு நர் ஸாகத்தான் என்னால் அறிய முடிகிறது. அதாவது 'ஸெண்டிமெண்டல்' என்று சொல்லுகிறார்களே, அந்த வகைய உணர்ச்சிகள் ரொம்ப இருக்காது. உயிர் நண்பர் கள் இருவர் சேர்ந்து மேற் கொள்ளும் ஒரு காரியம் போலத்தான், எங்கள் வாழ்க்கை தென்படுகிறது. என்னைக் கேட்டால் காதல் என்பது பேசக் கூடாத விஷயம் என்றுதான் சொல் வேன்: அதாவது பேசி பாடி, சிரித்து, அழுது தீர்த்துவிட்டால் வாழ்க்கையில் அப்புறம் ரசம் குறையும் என்பது என் அபிப்பிராயம்.

''ராஜேசுவரன், ராஜேசுவரன்'' என்று வகுப்பில் ஆசிரியர் உரத்த குரலில் கூப்பிட் டார். மாணவர்கள் கொல்லென்று சிரித் தனர். என் நினைவின் நெசவு நின்றது.

காலையிலேயிருந்து பரபரப்புக்குக் குறைச்ச லில்லை. மத்தியானம் கல்லூரி விட்டதும் ஒரு வழியாக எல்லாவற்றையும் ஒழித்துக் கட்டிக் கொண்டு இருக்கிறதில் நல்ல துணிகளை எடுத்து அணிந்தேன். ஸ்ரீனிவாசனின் வீட் டுக்குப் போகும்போது எனக்கே சிரிப்பு வந்தது. ஆசிரியரின் திருமணத்துக்குப் பெண் பார்க்க, மாணவன் துணையாகப் போவதா? இதைப்பற்றி நான் ஏன் யோசிக்க வேண்டும்? அவருக்கே விருப்பமிருந்ததால் என்னைக் கூப் பிட்டிருக்கிறார். அவருக்கும் நண்பர்கள் குறைவு. அவரது கண்ணியம் நிறைந்த சுபாவத்துக்கும் போக் குகளுக்கும் ஒத்தவ ராக அவரது ஒரு நண்பரையும் என்னால் அங்கீகரிக்க முடிய வில்லை. பெற்றோரைக் குறித்து அவர் பேசி யும் நான் கேட்ட தில்லை. ஒரு தீவி லிருந்து வந்தவர் மாதிரி அவர் இருந் தார். எனக்கும் அவ ருக்கும் இடையில் இருந்த இணைப்புச் சங்கிலி, ஒத்த மனோபாவம்தான். ஒரு டாக்ஸியைப் பிடித்துக் கொண்டு, பெண் பார்க்கப் புறப்பட்டோம். டாக்ஸி போய்





வையவன்

நின்றதும், "வாங்கோ வாங்கோ, அடடே ராஜுவா, வாப்பா!" என்று சிரித்துக் கொண்டே என் தோளைத் தட்டி வரவேற்றார் ராமநாதன்.

"ராஜேசுவரனை உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா?"

"அதென்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள்? ராஜு நம்ம வீட்டுப் பிள்ளை மாதிரி. அவனுடைய அப்பா என் கிளாஸ்மேட். நம்ம இரண்டாவது பையன் பிரபு இருக்கான் பாருங்கோ. அவனும் இவனும் ஹைஸ்கூல் வரைக்கும் ஒன்றாகப் படித்தவர்கள். இப்பத்தான் அவன் திருச்சிக்குப் போய்விட்டான்."

"அப்படியா?" என்று ஸ்ரீனிவாசன் சிரித்தவாறு என்னைப் பார்த்தார். நிமிர்வதற்கு எனக்குத் தைரிய மில்லை.

நடையில் மாட்டியிருந்த கடிகாரம் மூன்று தடவை அடித்தது.

"ரைட்! முகூர்த்தம் இப்போ அருமையாயிருக்கு. பெண்ணை அழைத்து வரலாமா?" என்றார் ராமநாதன்.

"ஓ எஸ், என்ன ராஜேசுவரன்?"

நான் கைக்குட்டையால் முகத்தைத் தேய்த்துக் கொண்டே "சரிதான் சார்!" என்று ஆமோதித்தேன். ராமநாதன் உள்ளே சென்றார். கடிகாரத்தின் மணி மெல்ல அதிர்ந்து கொண்டிருந்தது, என் உள்ளத்தைப் போல. நான் கூச்சல் போட்டு விடுவேனோ என்ற அர்த்தமற்ற சந்தேகம் என்னைக் கவ்வியது. ஸ்ரீனிவாசனுக்கும் எனக்கும் மத்தியில் விழுந்திருந்த மௌனத் திரை என்னைக் குத்திக் காட்டுவது போல் பட்டும், அவருடன் நான் பேச முயலவில்லை. கண்ணாடி முத்துக்கள் கோத்து அறை வாசற்படிக்கு அலங்கரித்திருந்தது. என் நிம்மதியற்ற விழிகள் அங்குமிங்குமாய் அலைந்து, அந்தச் சம்பவத்தை எதிர்பார்த்து நடுங்கின. உட்கார விரித்திருந்த பாயின் ஓரங்களைப் பிய்த்துக் கொண்டிருந்தேன்.

பின்னால் அம்மாவும் வலப்புறம் ராமநாதனும் தொடரப் பெண் தலை குனிந்தவாறு வந்து கொண்டிருந்தாள். சந்தன மேனியில் தீப் பிடித்தாற் போன்று சிவப்புச் சேலை. பாதங்கள் மெல்லடி எடுத்து வைக்க, அதன் தாளகதிக்கு ஏற்றாற்போல் கன்னங்களில் தொங்கட்டங்கள் பட்டு ஊசலாடின. நெற்றியின் சிவப்புச் சாந்தும், கண்களின் மைக் கறுப்பும் ரத்தத் துளிகள் போல் என் நெஞ்சில் விழுந்தன. அவள் என்னையும் பார்க்கவில்லை; இன்னும் ஸ்ரீனிவாசனையும் பார்க்கவில்லை.

"நமஸ்காரம் பண்ணும்மா!" கூடத்தை ஒட்டியிருந்த கம்பத்துக்குப் பின்னாலிருந்து தாயினுடைய பெருமை நிறைந்த குரல் மரியாதையோடு கூறியது.

பெண் முழந்தாளிட்டு நமஸ்கரிக்கக் குனிந்தாள். முதுகில் பட்டு வழவழப்பிலிருந்து நழுவிக் கூந்தல் என் பாதங்களுக்குச் சற்றருகில் அபயம் என்பதுபோல் தரையின் மீது விழுந்தது. நான் கைக்குட்டையை எடுத்து வாயைப் பொத்திக் கொண்டேன்.

"சங்கீதம் ஏதோ கமாராச் சொல்லி வைச்சிருக்கோம். வீணையும் வரும். கேட்கப் பிரியப் படறேளா?"

அவள் நமஸ்கரித்து எழுந்திருப்பதற்குள் ராமநாதன் அவசரக் குடுக்கைபோல் கேட்டு விட்டார். ஸ்ரீனிவாசன் என்னைப் பார்த்தார். நான் தலையசைத்தேன். அவருடைய விருப்பம் அவர் கண்களில் வெளிப்படும்போது என்னால் என்ன செய்ய முடியும்? அதற்குள் உள்ளேயிருந்து வீணை வந்து விட்டது. அவள் மெல்ல எழுந்து வீணையின் அருகில் சென்றாள். ஜரிகை விட்ட கறையின் கீழே அந்தச் சிவந்த பாதம் தள்ளாடுவதும், அந்த மென் மனத்தின் பூகம்பங்களும், என் உள்ளத்துள் கூக்குரல்போல் ஏற்கப்பட்டன.

அவள் வீணையைக் கையில் எடுத்துச் சௌகரியப்படி அதை மாற்றிக் கொண்டு என்னை நிமிர்ந்து பார்த்தாள். பராதீனமாக நிற்கும் அந்தப் பார்வையின் சோகம், வலுவான அம்புபோல் என்னைத் தைத்தது. என் கீர்த்திதானா இவள்? அலைகளின் எச்சில் போன்ற நுரைகளின்மீது கோலம் போட்டுக் கொண்டே, இரைச்சலான கடற்கரையில் தன் பேச்சில் உன்னிப்பாக ஒரு பெரிய மனுஷி போல் பேசிய என் கீர்த்திதானா இவள்? எங்கள் இருவர் நெருக்கத்தின்போதும் தென்படாத எல்லாக் காதல் உணர்வுகளும், பிறர் மத்தியில் இரண்டு பெரிய விழிகளிலும் இடம் போதாமல் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்தன. ஆனால் அதன் அறிவிப்பு சோகத்தின் பாஷையிலே இருந்து என் நெஞ்சைப் பிழிந்தெடுத்தது. நான் என்ன செய்வேன்? என்னை எவ்வளவு சிரமத்துடன் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறேன் என்பது யாருக்குத் தெரியப் போகிறது?

பின் வீணை வழியே ஓர் இதயநாதம், தன் எண்ணற்ற கனவுகளையும் எதிர்காலத்தையும் குறித்து, துக்கத்தின் ஓர் உச்சியிலிருந்து முறையிட்டு ஒலிக்கத் தொடங்கியது. என் சர்வாங்கத்தின் மீதும் அதன் சிலிர்ப்பு சுற்றிக் கொண்டது. அவள் மெதுவாக வீணையோடு இழைந்தபடியே பாட ஆரம்பித்தாள். பாட்டு முடிந்ததும், நிறைந்துபோன விழிகளோடு என்னை மீண்டும் ஒரு தடவை பார்த்து

கோடம்பாக்கம் வடபழனி ஆண்டவர் கோயிலில்



22-12-61 வெள்ளிக்கிழமை

ஆர்த்ரா தரிசனம்

'டெட்டால்'



தொற்றுநோயிலிருந்து அவனைப் பாதுகாத்துக்கொள்ள உதவுகிறது



அவன் மிகவும் சுத்தமாகத்தான் இருக்கிறுன். ஆனல், அவன் வசிக்குமிடத்தின் தரை எப்படி இருக்கிறது? போதிய அளவிற்கு சுத்தமாகக் காணப்பட்டபோதிலும், கோடிக்கணக்கான, கண்ணுக்குத் தெரியாத விஷக்கிருமிகள் தயாராகப் பதுங்கி இருக்கின்றன. அசட்டை செய்து விடாதீர்கள். உலகத்திலேயே மிகவும் நம்பிக்கை வாய்ந்த கிருமிநாசினி 'டெட்டாலை,' தரைகளை அலம்பிவிடவோ துடைக்கவோ உபயோகிக்கப் படும் தண்ணீருடன் கலந்துகொள்ளுங்கள். 'டெட்டால்' விஷக்கிருமிகளை கொல்ல கூடியது.

DL. 47

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

JWTAEL 3660



சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் செலவழிக்கக்கூடாது. முன்யோசனையுடன் வருங்காலத்திற்கு வகை செய்யவேண்டும். இன்று சேமிப்பதுதான் வருங்கால வளத்தின் அஸ்திவாரமாகும்.

குழந்தைகளின் கல்வி, அவர்களின் எதிர்கால க்ஷேமநலம், சொந்தத்தில் ஒரு வீடு, எதிர்பாராமல் ஏற்படும் வியாதிகள்...வருங்காலத்தில் இவைகளை சமாளிக்க இன்றைய உங்கள் சேமிப்புகள் கைகொடுக்கிறது.

சேமிப்பை முதலீடு செய்வதையும் விவேகத்துடன் செய்யவேண்டும். தேசீய சேமிப்புகளில் முதலீடு செய்வதால் உங்களுக்கும் நன்மை; நாட்டின் முன்னேற்றத்திற்கும் உதவியாக இருக்கும்.

உங்கள் சிறு சேமிப்புகள் உங்களுக்கும் நாட்டிற்கும் உதவட்டும்.

தேசீய சேமிப்பு ஸ்தாபனம்

வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தின் எல்லா விவரங்களையும் உங்கள் போஸ்ட் மாஸ்டர் மகிழ்வுடன் தந்து உதவுவார்.

DA 61/403

கோவை மாவட்ட சுதந்திரக்கட்சி

இளைஞர் முன்னணி மகாநாடு

டிசம்பர் 24ல் கோவை ஆர். எஸ் புரம் சவிதா ஹாலில் நடைபெறும்.

வட இந்திய திரைப்பட நடிகர் திரு பிரேம்நாத், திரு சசிவர்ணத்தேவர் எம். எல். ஏ., திரு எஸ். எஸ். ராமசாமிப் படையாச்சி எம். எல். ஏ., திரு ஜி. கே. சுந்தரம், திரு எல். கே. பி. லக்ஷ்மணன், திரு கே. வி. வீரராகவன், திரு ராம்தாஸ் பாரதி முதலியோர் இம் மகாநாட்டில் கலந்து கொள்வார்கள். கோவை மக்கள் இம் மகாநாட்டில் திரளாகக் கலந்து கொள்ளக் கோருகிறோம்.

விட்டு அவள் எழுந்து உள்ளே சென்ருள்.

நாங்கள் வீட்டை விட்டு வெளிவரும்போது ராமநாதன், என் முதுகைத் தட்டிக் கொடுத்தபடியே சிரித்தார். ''என்ன ராஜு! கொஞ்ச நாளா வர்றதே யில்லையே! நீ வராமே என்னமோபோலேஇருக்கப்பா. நாளைக்கு வர்றயா?'' . அவர் பார்வையின் அர்த்தம் தெளிவாகத் தெரிந்தது. 'இந்தச் சம்பந்தத்துக்கு உன்னைத்தான் நம்புகிறேன்.'

''பெண் எப்படி, ராஜேசுவரன்? நீ என்னிடம் சொல்லவே யில்லையே, இவர்கள் எல்லாம் பரிச்சயமென்று?''

''சொல்வதற்குச் சந்தர்ப்பமில்லை.''

''பெண் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறதென்று சொல்லி விடு, ராஜேசுவரன்! பொதுவாகப் பெண்மையைக் குறித்து நமக்குள் இருக்கிற அபிப்பிராயம் முழுக்க அமைந்த மாதிரியே அது இல்லே?''

''ஆமாம் சார்! ரொம்பப் பொருத்தம்'' என்றேன். என் கட்சியை எடுத்து எப்படிச் சொல்வது என்று எனக்குப் புரியவில்லை. 'ஓ'வென்று அழுதுவிடலாமா என்று கூட யோசித்தேன். அவர் அதை நம்ப வேண்டுமே! அவரோ என் ஆசிரியர்!

அவர் வீட்டின் வாசற்படி மீது ஏறுகையில் தொண்டையைக் 'கூட்டி, ''அப்போ இப்படியே நான் வரட்டுமா ஸார், கொஞ்சம் வேலே இருக்கு!'' என்றேன்.

''ரைட் ராஜேசுவரன்! நீ நாளைக்கு அவர்களைப் பார்க்கப் போகையில் என் சார்பில் சம்மதத்தைச் சொல்லிவிடு.''

''சரி, ஸார்!''

அதே கடற்கரைதான். கீர்த்தியும் நானும் பேசிப் பேசி இன்னும் அலுக்காத அதே கடற்கரைதான். மயங்கிய சாயங்கால வேளையும், இனம் விளங்கா இதயதாபம் போன்ற அலைகளின் கோஷமும், எங்கோ நெடுந்தூரத்துக்கு அப்பால் நீலவானின் ஒரு கோடியில் சாம்பல் மேகங்களின் மீது அஸ்தமனத்தின் ஒரு சொட்டு வெப்புக் கண்ணீர் விழுந்திருப்பதும் நான் தனித்து விட்டதை ஸ்தாபித்தன. ஸ்ரீனிவாசனை மீண்டும் நான் சந்திக்கவில்லை. மனப்பூர்வமாக அவரைக் கீர்த்தி கவர்ந்து விட்டாள். நான் கீர்த்தியைக் காதலித்தேனு? அந்தத் தினங்களில் இல்லாத அவ்வுணர்வு இன்று என்னை மெழுகுபோல் உருக்குகிறது. அவளை நான் இழந்து விட்டது நிச்சயமாகவில்லை என்ருலும், நான் துக்கமுறுகிறேன். எங்களுக்கிடையில் காதலின் கிரணங்கள் உதயமாகாத சந்தர்ப்பம் பார்த்து யாரோ குறுக்கிட்டுச் செய்த சதிபோல் இது எனக்குப்பட்டது. இப்போது நான் விருப்பப்படாமலே புதிய ஊற்றின் பெருக்குப்போல் என்னுள் காதல் நிரம்புகிறது.

ஸ்ரீனிவாசனுக்காக நான் எதையும் இழக்கலாம். அவர், என் வாழ்வின் இருண்ட சிந்தனைகளின் வெளிச்சமாக இருக்கிருர். எல்லாம் பெரிதில்லே. அவர் என்னிடம் உண்மையாக நடந்து கொண்டார். அவருடைய இதயத்தின் எல்லாக் கதவுகளும் எனக்குத் திறந்திருந்தன. அதற்குப் பாத்திரமானவன் நான் என்று அவர் கருதினர். ஒரு வார்த்தையில் அவரிடம் நான் இதை விளக்கிவிட முடியும். அந்த மெல்லிய மனம், காலங்கடந்த பின்பு இதைத் தெரிவிப்பதைச் சகித்துக் கொள்ளும் தான்! ஆனல் அப்படிச் செய்யவொட்டாமல் அவருடைய மேன்மையான நட்பு எனக்குப் பூவிலங்கு இட்டது. அபாக்கியமான அவருடைய வாழ்வில் கீர்த்தியின் புன்னகை! ஓர் அயலானைப்போல் இதைக் கற்பனைசெய்து பார்க்கையில் அது சம்மதிக்கத் தகுந்த நியாயம்தான். என்ன? கீர்த்தி என் மனக் கண்ணெதிரே தனித்து வரவில்லை. ஸ்ரீனிவாசனும் அவளும் சேர்ந்தே வருகிருர்கள்.

எனக்கு ஆற்ருமையின் பதைப்பு வருகிறது. அதைக் காணப் பிரியப்படாத மனேபாவம் மேலெழுகிறது.

ஆனல் பழைய நாட்களில் அவளுக்கும் எனக்குமிடையே தாம்பத்தியத்தைப்பற்றி ஓர் இனிய காட்சியின் கனவுகூட நிகழவில்லே. மனம் விட்டு உருகிப் பழகி, பிரேமையின் தண்ணிய சுகங்களில் லயித்த சம்பவம் ஒன்றுமில்லே. இன்று நான் அவளைக் காதலிக்கிறேன்; ஸ்ரீனிவாசனுக்காக அவளைப் பார்த்து விட்டு வந்த பின்! இது எப்படி ஒப்புக்கொள்ளக் கூடிய தர்மமாகும்?

நீல ஆகாயத்தில் ஒன்றன் பின் ஒன்ருய் நக்ஷத்திரங்களின் புன்னகை தோன்றத் தொடங்கியது. என் சித்தவானில் நக்ஷத்திரங்கள் ஒன்றென்ருய் மங்கிப் பின்வாங்கின. நான் ஒரு முடிவுக்கு வர வேண்டும். சந்தேகமில்லாமல் நானறிவேன், ஸ்ரீனிவாசன் கீர்த்திக்கு என்னைவிடப் பலமடங்கு தகுதியானவர். அதற்காக அவளை நான் இழக்கட்டுமா? நான் விருட்டென்று எழுந்து கடற்கரை மணலை உதறியபடியே நடக்கலானேன்.

கீர்த்தி மாடி யறையில் ஏகாந்தமாக அமர்ந்திருந்தாள். மேஜையின்மீது இரண்டு கைகளையும் கட்டியபடி அவற்றின்மீது முகத்தைச் சாய்த்தபடி பூரணமான யோசனையில் ஆழ்ந்திருந்தாள். என் காலடிகளின் மெல்லோசை கேட்டு என்னைத் திரும்பிப் பார்த்தாள். அவ

ளுடைய எழில் அதிசயமான கவர்ச்சியுற்றுத் தென்பட்டது.

அவள் சரேலென்று எழுந்து கொண்டாள். என்னை வரவேற்க வேண்டுமென்று அவளுடைய செல்விதழ்கள் செய்யும் பிரயத்தனம் எனக்குத்தெரிந்தது. அந்தக் கண நேரத்துக்கு நிலவிய சூன்ய உணர்ச்சிகள், என் வாழ்நாளில் என்றும் ஆறாத ரணமாக எனக்குப் பட்டுவிட்டன.

''பரவாயில்லை. உட்காருங்கள் கீர்த்தி!'' என்றேன். எதிரில் கிடந்த நாற்காலியில் நான் அமர்கிறவரை அவள் நின்று கொண்டிருந்தாள். அப்புறமும் அவள் பேசவில்லை.

''உங்களைப் பார்க்க வேண்டுமென்று கொஞ்ச நாட்களாக ரொம்ப முயற்சி செய்தேன்; வேலைத் தொல்லைகள் அதிகம். அதனால் முடியவில்லை.'' என்றேன்.

''ஹும்'' என்று மெல்லச் சொன்னாள். அதற்கப்புறம் என்ன பேசுவது? வெகு தூரம் பிரயாசைப்பட்டுத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டேன்.

''என் ஆசிரியர் ஸ்ரீனிவாசன் உத்தமமானவர். என் நாட்களில் அவரை மறக்க முடியாது. நல்ல குணவான். மேதாவி.''

அவள் என்னை நிமிர்ந்து நோக்கினாள். அவள் மனசில் தைத்த அம்புகளின் வேகம் அங்கு தெரிந்தது. மெல்ல வாய் திறந்து ''இன்னும் என்னென்ன சொல்லப் போகிறீர்கள்?'' என்று அமைதியாக என்னைக் கேட்டாள். என் உணர்ச்சிகள் அலைபோல் குமுறிக் கொண்டு கிளம்பின. ஓடிச்சென்று அவளுடைய இளந் தோள்களில் என் முகத்தைப் புதைத்து அந்த அற்புதமான இருளில், குழந்தைபோல் விம்மிவிம்மி அழலாமா என்று கொந்தளித்தது. ஆனால் அவ்விதம் நான் செய்ய இயலாது. எனவே சுவரின் பக்கம் திரும்பியபடி அவளோடு பேசத் தொடங்கினேன்.

''இன்னும் சொல்வதற்கு இருக்கிறது. நீங்கள் வருத்தப்படாமல் கேட்பீர்களா?''

அவள் மௌனமானாள்.

''உங்கள் வாழ்க்கையின் மீது நான் அக்கறை யுடையவனாய் இருப்பதால் இதைச் சொல்ல வேண்டியவனாகிறேன். உங்கள் சுபாவத்துக்கும் தகுதிக்கும் ஏற்றவர் ஸ்ரீனிவாசன். அரிய வஸ்துவைப் போற்றத் தெரிந்தவர். நீங்கள் இதற்குச் சம்மதிக்க வேண்டும்.''

அவளுடைய மெல்லிய விம்மல் கேட்டது. நான் அவளைத் திரும்பிப் பார்க்க அஞ்சினேன். என் மனோநிலைக்கு அப்போது நேரடியாகவே பேசி விடுவது உசிதமெனத் தோன்றியது.

''அவர் உங்களைத்தான் பார்க்க வருகிறார் என்று எனக்குக் கடைசி நிமிஷம் வரையில் தெரியாது. தெரிந்தாலும் அவரை எப்படி நான் தடுக்க முடியும்?''

விம்மல் ஒலி நின்றது; பின் விசித்திரமான குரலில் அவள் பேசினாள். ''நாம் ஒருவரையொருவர் நேசிக்கவில்லையா? என் வாழ்க்கைக்கு நீங்கள் எவ்வளவு அவசியம் என்பதை நீங்கள் மெய்யாகவே மறந்து விட்டீர்களா?''

இந்தக் கேள்விக்கு முன் என் உள்ளம் சல்லடையாயிற்று. அதை அவள் உணர மாட்டாள். இதற்கு நான் பதில் சொல்லவேண்டியது அவசியம். மனப்போராட்டத்தோடு சற்று நேரம் யோசித்தேன்.

''நீங்கள் சொல்வதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நம் நட்பில் எந்தக் களங்கமும் இதுவரை படவில்லை. உங்களைப்பற்றிய மிருதுவான நினைவுகள் என்றென்றும் என்னுள் நிலைத்து நிற்கின்றன. ஆனால் சிநேகிதத்தின் உயர்ந்த நோக்கத்திலிருந்து தாழ்ந்து நாம் முடிவு செய்யலாமா? என்றும் நாம் அசட்டுத்தனமாகப் பேசியதில்லை. இன்று அந்தச் சந்தர்ப்பம் வருகிறது. நீங்கள் மனசைத் தொட்டுச் சொல்லுங்கள், என்னை நீங்கள் கணவனாக வரித்த பின்புதான் என்னோடு பழகினீர்களா?''

கீர்த்தி உடனே பதிலொன்றும் சொல்லவில்லை. அவளைத் திரும்பிப் பார்க்க வேண்டுமென்று இப்போது நான் ஆசைப்பட்டேன். முகத்தில் பேராச்சர்யமும் பெருந் துக்கமும் சூழ, கனவிலிருந்து கலைந்தெழுந்தவன்போல் அவள் என்னை நோக்கினாள்.

''நீங்கள் சொல்வது நிஜம்தான்! நாம் அந்த நாட்களில் தூய்மையோடுதான் பழகினோம். ஹூம்ம்...என்மேல் நீங்கள் வைத்திருக்கிற உயர்ந்தபட்சமான அன்பின் சாட்சியாக உங்கள் ஆசிரியரை நான் மணந்துகொள்வேன்'' என்றாள். அது எனக்குப் பெருத்த அதிர்ச்சியைத் தந்தது. அதை நான் அவள் வாயிலிருந்து எதிர்பார்க்கவில்லை. அந்த வார்த்தைகள் என் சிந்தனையின் மர்மத்தில் பாய்ந்து விவரிக்க இயலாத வேதனை தந்தன.

''நீங்கள் என்றென்றும் என் மனத்தில் அழியாது நிற்பீர்கள். என்று நீங்கள் என்னை வெறுத்துத் தள்ளுகிறீர்களோ அன்று நான் மனத்தில் இறந்தவனாகிறேன். உங்கள் அன்புக்கு நான் கடமைப் பட்டவன். இந்தச் சிநேகிதனைத் தயவுசெய்து மறந்து போகாதீர்கள்'' என்று கைகூப்பி நமஸ்கரித்து விட்டு நான் மாடியிலிருந்து கீழிறங்கினேன். நிலவும் நட்சத்திரங்களுமற்ற நீலவானின் கீழே, பெரிய சோகம்போல் விரிந்த கடற்கரை மணலில் தன்னந் தனியாக நடந்து செல்லும் பிரயாணிபோல் நான் துக்கங் கொண்டேன். அமிர்தமான காதலின் சாசுவதச் சித்திரம் என் நெஞ்சில் தொங்குகிறது. அதை நான் யாரிடமும் தெரிவிக்க மாட்டேன்; அது உருவங் கொண்டதையும் என் அன்புக்குரியாளிடமே நான் மறைத்து விட்டேன். அதுவே அதன் பேரெழில் வடிவம்.



''தினம் ஒரு சினிமாவைப் பார்க்கறீங்களே, அலுத்துப் போகலியா உங்களுக்கு?''

''ஆமாம்! இது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''தினம் உங்களுக்குப் பின் ஸீட்டில்தானே நான் உட்காருகிறேன்!''



குளுமை... இதம்...
சௌகரியம்...

இயற்கையான குளுமையைப்
பெற மிகச் சிறந்த சாதனம்

ஒரு டிராபிகல்
மின்சார விசிறி



ஒரு B.E.I. தயாரிப்பு

Tropical

DE LUXE

ட்ராபிகல் டீலக்ஸ்

டபிள் பால்பேரிங்குகளோடு கூடியது

★

ஏஜண்டுகள் :

தி ஓரியண்டல் மெர்க்கண்டைல்
கம்பெனி லிமிடெட்

கல்கத்தா, பம்பாய், கான்பூர்,
டெல்லி, சென்னை



உறுதிக்கும்
உழைப்பிற்கும்
உத்திரவாத
முள்ளவை

நடராஜா

பிராண்ட்
விளக்கு சிம்னிகள்

AGI

ஆத்தூர் கிளாஸ்
இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட்
ஆத்தூர் — சேலம் ஜில்லா.

AG-6



தோல் அட்டைத் தொழிற்சாலை

தொழில் உலகுக்குத் திரு ஏ. நாகப்பச் செட்டியார் புதியவர் அல்லர். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே நமது அண்டையிலுள்ள இலங்கையில் தோல் வியாபாரத்தில் ஈடுபட்டுப் பரந்த அநுபவம் பெற்றவர்.

திரு ஏ. நாகப்பச் செட்டியார் அவர்கள் 1948ம் ஆண்டில் இந்தியா தோல் கார்ப்பரேஷன் கம்பெனியைச் சிறிய அளவில்தான் ஆரம்பித்தார். தென்னகத்துக்கு எப்போதுமே தோல் தொழிலில் உயர்ந்த இடம் உண்டு. இதைப் பயன்படுத்திக் கொண்டு தமது ஸ்தாபனத்தை விரிவாக்கினார். திரு செட்டியார் தோல் பதனிடும் சாலைகள் பலவற்றைத் தமது மேற்பார்வைக்குள் கொண்டு வந்தவுடன், அயல்நாட்டினருக்குத் திருப்தியளிக்கும் விதத்தில் சரக்கின் தரத்தையும் உயர்த்தியிருக்கிறார். அயல் நாடுகளுக்கெல்லாம் சென்று தமது வர்த்தகத்தைப் பெருக்கிக் கொள்ள என்னென்ன வாய்ப்புக்கள் இருக்கின்றனவோ அவ்வளவையும் நேரில் கண்டறிந்து வந்து அவ்வநுபவத்தைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

சில ஆண்டுகளுக்கு முன் சென்னைக்கடுத்த புழல் என்னும் கிராமத்தில் 25 ஏக்கர் நிலப் பரப்பில் ஒரு தொழில் பட்டறையை ஆரம்பித்து, தோல் பதனிடும் தொழிலுக்குச் சம்பந்தப்பட்ட எல்லா அம்சங்களிலும் ஆர்வமுள்ளவர்களுக்கு அவர் பயிற்சி அளித்து வருகிறார். நாகப்பா தொழில் பட்டறை என்று அவர் பெயரையே தாங்கி நிற்கும் இவ்விடத்தில் தோல் பதனிடும் பகுதி, தச்சுப் பட்டறை, யந்திரப் பகுதி, ஆராய்ச்சிப் பகுதி முதலியவை இயங்கி வருகின்றன. இதில்தான் மற்றொரு பகுதியாகத் தோல் அட்டை உற்பத்தித் தொழிலை டிசம்பர் 3ம் தேதியிலிருந்து திரு நாகப்பச் செட்டியார் மேற்கொண்டிருக்கிறார்.

ஏற்கெனவே ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கும் பொருள்களுடன் இனி தோல் அட்டைகளும் அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துக் கொடுக்கும்.

தோலிலிருந்து அட்டைகள் செய்வது இந்தியாவிலேயே முதன் முதலாக இப்போதுதான் மேற்கொள்ளப்படுகிறது. வீணாகப் போகும் தோல் துண்டுகளையும் கழிவுகளையும் உபயோகப்படுத்திப் பிரத்தியேகமான பெரிய யந்திரங்களைக் கொண்டு தோல் அட்டைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த அட்டைகள் செருப்புகள் செய்யவும் செருப்புகளைக் கனப்படுத்தவும் கைப் பெட்டிகள் செய்யவும் உபயோகமாகின்றன. கண்கவர் வர்ணங்கள் ஊட்டப்பெற்றுத் தேவையான கனத்தில் இவை தயாரிக்கப்படுகின்றன. குப்பையில் போட வேண்டிய துண்டுத் தோல்களை யந்திரத்தில் பொடியாக்கினால் அவை பஞ்சுபோல் ஆகின்றன. பிறகு தேவையான கலவைகளுடன் சேர்த்துத் தோல் அட்டைகள் செய்யப்படுகின்றன.

இத்தொழிலின் ஆரம்ப விழாவை மத்திய அரசாங்க அமைச்சர் திரு மனுபாய் ஷா நடத்திக் கொடுத்தார். பாட்டா கம்பெனியின் தலைவரும், தோல் அபிவிருத்திக் கௌன்சிலின் தலைவருமான திரு எம். எல். கைத்தான் இத்தொழிற்பகுதியை ஆரம்பித்து வைத்தார். சென்னை அமைச்சர் திரு பக்தவத்சலம் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

மேலேயுள்ள படத்தில் மாவாக்கப்பட்ட தோல், அட்டைகளாகத் தயாரிக்கப்படும் விதத்தைத் திரு நாகப்பா விவரிப்பதை அமைச்சர் திரு பக்தவத்சலமும் திரு மனுபாய் ஷாவும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஆல்மன்டைன்
பல விருத்தி லேகியம்
கூலெக்ஸ்
உஷ்ண சமன ஸ்நான தைலம்
டோனடெல்
பிரசவத்திற்குப் பிறகு உதவும் லேகியம்
காஸ்மல்
கன்றுக் மாத்திரை
பாட்டில் 0.40
சாதாரணம்
நஞ்சன்கூடு-பல்பொடி
பாக்கெட்டில்
I.D.L-61 உயர்தரம் (டப்பியில்) பல் உபாதைகளைகுணப்படுத்த
காஜன்
கோரோஜனை மாத்திரை
பாட்டில் 0.50
ஜிஞ்சிப்
அஜீரண, பித்த சமனி
நீலா தைலம்
இளநரை தடுக்க, கூந்தல் செழிக்க
டிகாக்கோ
ஆரோக்ய சர்பத்
பாலக்ஸ்
பேதியாக மாத்திரை
பாட்டில் 0.40
சோல் ஏஜண்டு: யுனைடெட கன்ஸான் 54, பந்தர் தெரு, சென்னை-1
(மதுரையில் சௌந்திரபாண்டியன் செட்டியார், கீழச் சித்திரை வீதி)



மகாராணி
சந்தன சோப்

அழகுசாதன
சோப்புக்களில்
அரசியர்க்கரசி

வாதுமை எண்ணெய் கலந்துள்ள சோப்

செல்வச் சந்தன மரம் தந்த சத்தும், சரும நெகிழ்ச்சிக்கான மிகத் தூய தாவரத் தைலங்களும் இணைந்து உருவாகியுள்ளது மகாராணி. அன்னச் சிறகு போன்ற மென்மைப் பொலிவையும், சல்லாத் துகில் போன்ற சருமத் தெளிவையும் நமக்கு அருள்வது மகாராணி சந்தன சோப்...

MHR 4A-X52 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு



பாங்க் தொழில்
நாட்டின் செல்வத்தைப்
பெருக்குகிறது



பஞ்சாப் நேஷனல் பாங்க்
நாட்டின் தொழிலுக்கும்,
விவசாயத்திற்கும்,
வாணிபத்திற்கும் பணி
யாற்றுகிறது



எல்லாவித பாங்க்
பணிகளும் அளிக்கிறது.



தி
பஞ்சாப் நேஷனல்
பாங்க் லிட்.

ஸ்தாபிதம் 1895
தலைமைக் காரியாலயம்: புது டில்லி.

இது சிறந்தது
இது அழகானது
இது வியக்கத்தக்கது
இது ஷிமாடா

SHIMADA

—உலகப் புகழ்பெற்ற
வாக்குவம்
பிளாஸ்க்.

ஷிமாடா
கிளாஸ் &
பிளாஸ்க்
பாக்டரி
பிரைவேட்
லிட்.,
மதருஸ்–23.



MPS-TAM

சப் ஏஜண்டுகள்:
தென் இந்தியா மற்றும் மத்திய பிரதேசம்:
போப்பட் ஜமால் & சன்ஸ், 182, பிராட்வே, மதராஸ்-1

மங்காத நட்சத்திரங்கள்



குன்றுமணி

இந்திய கிரிக்கெட் உலகம் என்றும் மனத்தில் பசுமையாக நினைத்திருக்கக் கூடிய பெயர் ரஞ்சித் சிங். அவர் பெயராலேயே வருஷத்துக்கொரு தடவை ரஞ்சித் கோப்பைப் பந்தயம் நடைபெற்று வருவது அனைவருக்கும் தெரியும். ரஞ்சித் சிங் ரன்களை சதம் சதமாக எண்ணிக் குவிப்பதில் அசகாய சூரர் மட்டுமல்ல; தம் உடல்நிலை குன்றியிருந்த போதிலும் 1896-ம், வருஷம் அந்த ஆட்டத்தில் நன்றாக ஆடி நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொண்டவர்.

ஒரு சமயம் ரஞ்சித் சிங் இங்கிலாந்தில் உடல் அசௌகரியத்தினால் படுக்கையில் படுத்துக் கிடந்தார். ரஞ்சித் சிங் தங்கள் கோஷ்டியில் ஆடுவார் என்ற தைரியத்தில் அவர் கோஷ்டியினர் டிராண்ட்பிரிட்ஜில் கிரிக்கெட் பந்தயத்துக்கு ஏற்பாடு செய்து விட்டனர்.

விளையாட்டுப் பந்தயத்தன்று வந்து பார்த்தால் ரஞ்சித் சிங் உடல் நிலைக் கோளாறில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டனர். ரஞ்சித் இல்லாமல் போய் ஆட முடியுமா? என்ன செய்தார்கள் தெரியுமா? அவருக்கு உடை உடுத்தி, அவரைக் காருக்குத் தூக்கிச் சென்று விட்டனர். கிரிக்கெட் மைதானத்துக்கு வந்ததும் ரஞ்சித்துக்குச் சூடு பிறந்து விட்டது. அந்த உடல்நிலையிலும் அன்று சத ஓட்டங்கள் எடுத்தார்.

அன்று பனிப் புயல் வீசியதால் மைதானம் முழுதும் மப்பும் மந்தாரமுமா யிருந்தது. இந்த நிலையிலும் ஆடவே, அவருக்கு உடல்நிலை இன்னும் கெட்டுப் போய் விட்டது. அவரைக் கம்பளியால் மூடி அவர் இல்லத்தில் கொண்டு போய்ப் போட்டு விட்டார்கள். கிரிக்கெட் ஆட்டத்தின் மேலுள்ள ஆசை, ஆர்வம், ஈடுபாடு உடல்நிலை சரியாயில்லாத போதிலும் அவரை நன்றாக ஆட வைத்து விட்டன. இன்று அவர் கிரிக்கெட் உலகில் மங்காத நட்சத்திரமாகப் பிரகாசித்து வருகிறார்.



பத்து வயதுச் சிறுவன் அவன். மரத்தின் மீது அவன் ஏறி விளையாடிக் கொண்டிருந்தான். திடீரென்று தவறி மரத்திலிருந்து விழுந்து விட்டான் அச்சிறுவன். அவனுக்குக் கை ஒடிந்து விட்டது. உடனே டாக்டர் வந்து பரிசோதித்து வேண்டிய வைத்திய சிகிச்சைகள் அளித்தார்.

அந்தச் சிறுவன் 'ஹோ'வென்று கண்ணீர் விட்டு அழுதான். டாக்டர், "என்ன! கை வலிக்கிறதா?" என்று கேட்டார்.

"இல்லை, டாக்டர்! கை ஒடிந்து விட்டதே! இனிமேல் என்னால் கிரிக்கெட் ஆட முடியாதே!" என்று வருந்தினான் அச்சிறுவன் கண்ணீர் மல்க.

"கை சரியாகி விடும் என்று கவலைப் படுவாயா? விளையாட்டு போய் விட்டதே என்று வருத்தப் படுகிறாயே?" என்று ஆச்சரியப்பட்டார் டாக்டர்.

ஒவ்வொரு வருடமும் அவன் டாக்டரிடம் சென்று "டாக்டர்! நான் இப்பொழுது கிரிக்கெட் ஆடலாமா?" என்று வினவுவான்.

டாக்டர் கூடாது என்று தலையசைத்து விடுவார். ஆனாலும் சிறுவனின் ஆவலும் ஆர்வமும் மங்கி விடவில்லை. கடைசியில் அவன் கல்லூரியில் சேர்ந்த பிறகுதான் அவன் கிரிக்கெட் ஆட அநுமதி கிடைத்தது. அதன் பின் அவன் முழு மூச்சோடு அதில் ஈடுபட்டு விட்டான். அந்தச் சிறுவன் யார் என்கிறீர்கள்? கான்பூரிலே ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்கும் நடந்த கிரிக்கெட் டெஸ்ட் பந்தயத்திலே பந்து வீச்சினால் இந்தியாவுக்கு வெற்றியைத் தேடித்தந்த ஜேசு பட்டேல் தான். கான்பூர் டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிந்ததைப் பார்க்கும் போது அந்தவெற்றிநினைவுக்குவருகிறது.

உங்கள் சிந்தனைக்கு...

மின்சாரத்தைக் கண்டுபிடித்தவர் யார் ?

வோல்டா என்ற இத்தாலிய பௌதிக நிபுணர். இவர்தான் முதன் முதல் மின்சார 'செல்'லைச் செய்தார். உப்புக் கரைசலில் வைத்த இரு வேறு உலோகங்களை ஒரு கம்பி கொண்டு இணைத்தால் மின்சாரம் உண்டாகிறது என்று காட்டினார். இவர் செய்த 'செல்'லில் ஒரு துத்தநாகக் கம்பியும் ஒரு வெள்ளிக் கம்பியும் உப்பு நீரில் வைக்கப்பட்டன. இரு உலோகங்களையும் கம்பி மூலம் இணைத்தபோது மின்சாரம் உண்டாயிற்று.

பாக்டீரியாவை முதலில் பார்த்தது யார் ?

லூயி பாஸ்டியூர் என்ற விஞ்ஞானி. பால் புளித்துப் போகக் காரணம் பாக்டீரியாதான் என்று அவர் சொன்னார். பாக்டீரியா காற்றில் பரவும் என்றும் சூடு படுத்தி அவற்றைக் கொல்லலாம் என்றும் அவர் சொன்னார். பெரும்பான்மையான வியாதிகள் பரவக் காரணம் காற்றில் மிதக்கும் நுண்ணிய பாக்டீரியாவே என்று அவர் கூறிய கொள்கை மருத்துவத் துறையில் ஒரு பெரும் புரட்சியையே ஏற்படுத்தியது

தெர்மாஸ் பிளாஸ்க்கின் அமைப்புப் பற்றித் தெரியுமா ?

டீவார் 1892ல் தெர்மாஸ் பிளாஸ்கைச் செய்தார். காற்றைத் திரவமாக்கி அதை வைப்பதற்காக முதலில் செய்யப்பட்ட கருவி இது. பக்கச் சுவர்கள் இரண்டு உடைய கண்ணாடிக் குப்பியில் சுவர்களுக்கிடையில் உள்ள காற்றை நீக்கி உட்புறத்தில் வெள்ளி முலாம் பூசியிருக்கும். இந்தக் கண்ணாடிப் பாத்திரம்தான் தெர்மாஸ் பிளாஸ்க்.

குளோராபாரத்தைத் தயாரித்தது யார்?

ஜேம்ஸ் சிம்ப்சன் என்ற மருத்துவர். இவர்தானே அந்த ஆவியைத் தம் மீதே சோதித்துப் பார்க்க நினைத்து ஆவியைச் சுவாசித்தார். குளோரோபாரத்தை 'லீபிக்' கண்டுபிடித்த சில நாட்களிலேயே இந்தப் பரீட்சையை அவர் செய்தார். இதனால் இவர் இறந்திருக்கக் கூடும். இவரது துணிவும், வீரமும், மருத்துவ உலகுக்கு வலியில்லாத ரண சிகிச்சையை வழங்கின.

அண்ட வெளி நிலையம் என்றால் என்ன ?

ராக்கெட்டுகளில் ஏறிக் கொண்டு பூமியிலிருந்து நேரே செவ்வாய்க் கோளுக்கோ, பிற கோளுக்கோ போய் விட முடியாது. ஏனெனில் அவ்வளவு தொலைவுக்குச் செல்ல வேண்டிய எரி பொருளையும் பிற பொருளையும் ராக்கெட்டில் எடுத்துச் செல்ல முடியாது. ஆகவே பூமியின் புவியீர்ப்புச் சக்திக்கு அப்பால் - அண்ட வெளியில் ஒரு நிலையத்தை அமைத்துக் கொண்டு அங்கு பொருளைக் கொண்டு சேமித்துப் பின் அங்கிருந்து பிற இடங்களுக்குப் பயணம் செய்யலாம் என்பது வான வெளி ஆராய்ச்சியாளர்களின் திட்டம்.

வானம் ஏன் நீலமாயிருக்கிறது ?

சூரியனிலிருந்து வரும் வெள்ளை ஒளியில் ஏழுவித வண்ணங்கள் இருக்கின்றன. சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் தூசிகள் மிதக்கின்றன. இத் தூசிகள் மற்றெல்லா ஒளி நிறங்களையும் எடுத்துக் கொண்டு சிதறா. நீல ஒளியை மாத்திரம் பரப்புகின்றன. இதனாலேயே வானம் நீல நிறமாயிருக்கிறது.

நோபல் பரிசு பெற்ற முதல் தமிழர் யார் ?

சர். சி. வி. ராமன். தமிழ் நாட்டில் பிறந்து தமிழ் நாட்டுக்குப் பெருமையும் புகழும் தேடித் தந்த மாபெரும் விஞ்ஞானி. பொருள்களுக்குள்ளோ, திரவங்களுக்குள்ளோ ஒளிக் கதிரைப் பாய்ச்சினால் திரவத்துக்குள் இருக்கும் அணு அமைப்பைப் பொறுத்து வெளி வரும் ஒளிக் கதிர் மாறுபடுகிறது. அதிலிருந்து பொருள்களின் அணு அமைப்பை அறியலாமென்பது அவர்கண்ட உண்மை.

வைத்திய உலகிற்கு இன்னும் புதிராக இருக்கும் நோய் எது ?

புற்றுநோய். புற்று நோயைக் குணப்படுத்தப் பல முறைகள் கையாளப் படுகின்றன. கதிரியக்க கோபால்ட் சிகிச்சை முறை ஒன்று. இருந்தும் புற்று நோய் ஒரு புதிரே. நம் உடலில் செல்கள் இன விருத்தி செய்கின்றன. அந்தச் செல் வளர்ச்சி ஓர் ஒழுங்கில் நடைபெறுகிறது. இந்த ஒழுங்கு கெட்டுச் செல் வளர்ச்சி அசாதாரணமாகி விட்டால் அதைப் புற்று நோய் என்கிறார்கள்.

எண்ணெய்க் கிணறு இறக்கி முதன் முதலில பெட்ரோலியத்தை வெளிக் கொணர்ந்தவர் யார் ?

கர்னல் ட்ரேக். ஒரு நாள் ஓர் அமெரிக்கப் பொருளதிபர் உப்பெடுக்கக் குழாய் இறக்கப்படுவதைத் தினத்தாளில் படித்தார். அதற்கு அருகிலேயே ''பூமியிலிருந்து எண்ணெய் கசிகிறது'' என்ற செய்தியும் வந்திருந்தது. பணக்காரர் யோசித்தார், ''உப்பெடுக்கப் பூமியைத்தோண்டும்போது எண்ணெய் எடுக்க ஏன் பூமியைத் தோண்டக் கூடாது ?'' என்று. பென்சில்வேனியாவில் இன்ஜினியராக இருந்த ட்ரேக் இதை மேற்கொண்டார். எல்லோரும் பரிகாசம் செய்தனர். பல நாட்கள் கஷ்டப்பட்டுக் குழாயிறக்கி 69வது அடியில் 1859ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் தேதி எண்ணெயை வெளிக் கொணர்ந்தார்.

தொகுத்தவர்

உதயமூர்த்தி

டாக்டர்கள் மில்க் ஆப் மக்னீஷியாவையே சிபாரிசு செய்கிறார்கள் — மிதமாக பேதி ஆவது, அமிலத்தை எதிர்த்து, பூர்ண நிவாரணமளிப்பதில் சக்தி வாய்ந்தது.

உலகத்திலுள்ள ஆயிரக்கணக்கான டாக்டர்களையும், சிசு வைத்திய நிபுணர்களையும், பிரசவ வைத்தியர்களையும், ரண சிகிச்சை வைத்தியர்களையும் "நீங்கள் உங்கள் நோயாளிகளுக்கு பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியாவை சிபார்சு செய்கிறீர்களா?" என்று கேட்டதற்கு அவர்களில் அனேகர் "ஆம்!" என்று பதிலளித்தார்கள்.

ஆம், குழந்தைகளுக்கும், பிரசவம் மற்றும் ரண சிகிச்சை பெற்ற நோயாளிகளுக்கும் கூட பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா மிகவும் பலன் தரக்கூடியது என்று டாக்டர்கள் கருதுகிறார்கள்.

இதில் ஆச்சர்யமொன்றுமில்லை!

பேதி மருந்து ஆனாலும் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா நிதானமாகவும், செம்மையாகவும் இதமாகவும் வேலை செய்கிறது; ஜீரண உறுப்புகளை பலவக்தப்படுத்துவதில்லை. அமிலங்களை அடக்கும் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா வயிற்றுக் கோளாறு, வாயு, நெஞ்செரிச்சல் மற்றும் மலச்சிக்கலுடன் வரும் இதர அமில உபாதைகளிலிருந்தும் நிவாரணமளிக்கிறது.


எந்தவிதமான பேதி மருந்தும் இம்மாதிரி சுமமான பரிபூரண நிவாரணமளிக்காது!

உங்கள் டாக்டரைக் கேளுங்கள்! ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்கவேண்டியது




பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா

REGD. TRADE MARK



இரைப்பையில் மித மிஞ்சிய அமிலத்தால் ஏற்படக்கூடும் அஜீரணத்திலிருந்து உடனடியாக நிவாரணம் பெற எங்கும், என்றும் இன்பமான, இனிப்பான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா வில்லைகளை உட்கொள்ளுங்கள். 4 வில்லைகள் கொண்ட கையடக்கமான பாக்கெட்களிலும், 75, 150 கொண்ட புட்டிகளிலும் கிடைக்கும்.



பூரண வினியோகஸ்தர்கள்:
டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் பிரைவேட் லிமிடெட்]

தங்க விக்கிரகம்

சரஸன்



தங்க விக்கிரகம்! ஆம், தங்க விக்கிரகம் என்றால் தங்க விக்கிரகந்தான்- அந்தக் குழந்தை! சேற்றிலே செந்தாமரை முகிழ்த்தாற் போல, குப்பையிலே மாணிக்கம் தோன்றினாற்போல அந்தக் குடும்பத்திலே வந்து பிறந்து தொலைந்துவிட்டது அந்தத் தங்க விக்கிரகம். அது பிறந்திருக்க வேண்டிய இடமே வேறு. ஒரு வேளை படைப்பவன் புரிந்துவிட்ட தவறு காரணமாகத்தான் அது அந்தக் குடும்பத்திலே பிறந்துவிட்டதோ?

குழந்தை பிறந்துவிட்டால், கும்மாளம் போடுபவர்களைத்தான் காண்கிறோம். எத்தனை குழந்தைகள் முன்னதாகப் பிறந்திருப்பினும் அந்த நேரத்திலே தன்னை மறந்து, பிறந்துவிட்ட புது ஜீவனைக் கண்டு களிக்கிறாள் தாயார். அதுவும் பிறந்திருக்கும் குழந்தை மற்றவைகளைவிட அழகுப் பதுமையாய் இருந்து விட்டால், கேட்கவும் வேண்டுமா வறுமையை மறக்கின்றாள்! எல்லாவற்றையும் மறக்கிறாள் அதனால் அன்றோ, செல்வங்களில் சிறந்தது மக்கட்செல்வம் என்று வழக்கிலே வந்து விட்டது!

தங்க விக்கிரகம் தோன்றிய குடும்பத்தின் வரலாறு இதுதான். முத்துசாமிக்கு ஒரு பெரிய வர்த்தகர் வீட்டிலே கார் ஓட்டி வேலை. கணிசமாகச் சம்பளம் அறுபது ரூபாய் கிடைத்து வருகிறது. ஏற்கெனவே நான்கு குழந்தைகளுக்குத் தந்தையானவன் அவன். மூத்தவள் பெண். வயது பதினொன்று இலவசப் பள்ளியிலே ஐந்தாவது படிக்கின்றாள் அடுத்தவளும் பெண். வயது ஒன்பது. நான்காவது வகுப்பில் வாசிக்கிறாள். மூன்றாவது பிறந்தது இரட்டைக் குழந்தைகள் ஓர் ஆணும் பெண்ணும். வயது ஆறு. பள்ளியிலே இரண்டாவது வகுப்பிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்த இரட்டைக் குழந்தைகளை வளர்க்க அவர்கள் படும் பாடு! அம்மம்மா சொல்லி முடியாது.

மூத்த பெண் அட்டைக்கரி. இரண்டாமவளுக்கு ஒரு காது மூளி. இடது காதுப்பக்கம் சுத்தமாய் வழித்து விடப் பட்டிருக்கிறது: மூன்றாவது இரட்டையர்களுடைய போக்கு விசித்திரமானது அழகும் இல்லை; அந்த முகம் கிடையாது.

மூத்த குழந்தை பிறந்தபோது, முத்துசாமி, அந்த வீட்டிலே ஒரு தோட்டக்காரனாகத்தான் பணி புரிந்து வந்தான். அப்போது அந்த வீட்டிலே காரோட்டியாக இருந்த சங்கரன் நாயர் மிகவும் நல்லவன் ... ஓழிந்த நேரங்களிலே முத்துசாமிக்குக் காரோட்டக் கற்றுக் கொடுத்தான். சுமார் ஒரு வருஷம் பழகிக் காரோட்டக் கற்றுக் கொண்டு, லைசென்சும் எடுத்துவிட்டான் முத்துசாமி.

சங்கரன் நாயர் திடீரென்று தன் சொந்த ஊரான திருச்சூருக்குச் செல்ல நேர்ந்தது. அப்போது, தாற்காலிகமாகக் கார் ஓட்டும் பொறுப்பை முத்துசாமி ஏற்றுக் கொண்டான். பின்னால் சங்கரன் நாயர் திருச்சூரில் காலமாகிவிட்ட தகவல் வந்தது. எனவே, அவனே அந்த வீட்டிலே நிரந்தரமாகக் கார் ஓட்டத் தொடங்கி விட்டான்.

தோட்ட வேலை செய்தபோது, முத்துசாமிக்கு இருபது ரூபாய்தான் சம்பளம்

கிடைத்தது. பிறகு கார் ஓட்டுகிற வேலை ஏற்பட்டதும், அது முப்பது என்று உயர்ந்து விட்டது. குடும்பம் படிப்படியாய்ப் பெருகு வது போல் அவனுடைய சம்பளமும் படிப் படியாய் உயர்ந்தது. இப்போது அறுபதில் வந்து நிறுத்தியிருக்கிறது. இனி உயர இட மில்லையோ? அறுபது ரூபாயில் எட்டு ஜீவன்கள் காலட்சேபம் செய்தாக வேண்டும் பட்டணத்திலே. முத்துசாமியின் கிழத் தந்தை யும், வேறு திக்கில்லாத தள்ளாத அத்தைக் கிழவியும் அவனுடைய குழந்தைகளோடு ஏழாவது எட்டாவது அங்கத்தினர்கள்.

அவலட்சணமான இரண்டு பெண்கள், தொல்லை கொடுக்கும் இரட்டையர்கள், இரண்டு வயதானவர்கள், இவர்களுடன் குடும்ப வறுமை நிலையும் சேர, முத்துசாமி தம்பதியினர் எப்படித்தான் வாழ்க்கையிலே உற்சாகத்தைப் பெற்றிருக்க முடியும்?

அவர்களுடைய இரண்டாவது பெண் மூளிக்காதி இருக்கிறாளே! அவளுடைய பொல்லாத்தனத்தை ஏட்டிலே வரையவே முடியாது. அண்டை அயலார்களின் குழந் தைகளுடன் அவள் சச்சரவு இட்டுவிட்டு வராத நாளே இல்லை. மூத்த பெண் 'கறுப்பி' யைப் போன்ற அசட்டுப் பெண்ணையும் அந்த வட்டாரத்திலே யாரும் கண்டிருக்க முடி யாது. கடைக்கு அனுப்பினால், சாமான்கள் வாங்கிக் கொண்டு சில்லறையைப் பெற மறந்து விட்டு வந்து நிற்பாள். பெற்றோர் இட்ட அழகிய பெயர்கள் 'சரஸ்வதி' 'லக்ஷ்மி' என்று இருக்க, அந்தச் சிறுமிகள் இருவரையும், அக்கம் பக்கத்தார் 'கறுப்பி' என்றும் 'மூளிக்காதி' என்றுமே அழைப்பது மரபாகிவிட்டது. மற்றவர்கள் இருக்கட்டும், பெற்றவர்களே அப்படித்தான் அழைக்கின் றார்கள் என்றால்?

மூத்தவள் தன் அசட்டுத்தனத்துக்காகவும் அடுத்தவள் தன் பொல்லாத்தனத்துக்காக வும் பெற்றோர்க ளிடம் உதை பெற்ற வண்ணம் இருப்பார்கள். இரட்டையர் களோ அலாதி. கிழங்கள் இரண் டும் அவர்களுக்கு ஒரு சுமையாகவே கரு தப்பட்டனர். மனித னுக்கு வறுமை ஏற் பட்டு விடும்போது அதன் கொடுமை, பந்தம் பாசம் மற்றும் எல்லாவற்றையும் ஒரே அமுக்காக அமுக்கி விடுகின்றது போலும்! இல்லாவிட் டால், தன்னைப் பெற்ற தந்தையை "உனக்கு இன்னும் வேளைவரவில்லையா?" என்று பச்சையாகக் கேட்கத் தோன்றுமா



மூத்துசாமிக்கு! தன் அத்தைக் கிழவியைப் பார்த்து ''உனக்கு முன் ஜன்மத்திலே எந்த வழியிலே நான் கடன் பட்டிருந்தேனோ!'' என்று குமுறிக் கூற வாய் வருமா?

முத்துசாமியின் கடுசொற்கள் தாங்காமல் ஓர் இரவு கொல்லேப்புறக் கிணற்றிலே விழுந்து விட்டார் தந்தை. ஆனால் சும்மாவா சொல்லியிருக்கிறார்கள் நம் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதும், மாய்த்துக் கொள்வதும் நம் கையிலா இருக்கிறது என்று? சத்தம் கேட்ட முத்துசாமி கிணற்றிலே விழுந்த தந்தையைக் கரை சேர்த்துவிட்டான்.

''அப்பா! என்ன காரியம் செய்துட்டீங்க?'' என்று கண்ணீர் விட்டுக் கதறி விட்டான். வறுமையிலே தந்தையை அவமதித்துவிட்ட பெரும் தவறும் அவனுக்கு அப்பொழுதுதான் புலப்பட்டது.

எனினும் அந்தப் பாசம் மீண்டும் முருங்கைமரத்தில் அல்லவா ஏறிக் கொண்டுவிட்டது! கிழங்கள் இரண்டும் மூலேக்கொன்ருகச் சுருட்டிக் கொண்டு கிடந்தன. அவர்கள்தான் புரிந்துகொண்டு விட்டனரே வாழ நினைப்பவன் தன் விருப்பத்துக்கு மாருகச் சாகிருன்; சாவை விரும்புகிறவன் தன் விருப்பத்திற்கு மாருக வாழ்கிருன் என்ற தத்துவத்தை!

இத்தனை தொல்லைகளிலும் முத்துசாமிக்கும் அவன் மனைவி கமலவேணிக்கும் ஏற்பட்டிருக்கிற ஒரே சமாதானம் என்னவெனில், ஏதோ இந்த மட்டும். தங்களுடைய இரட்டைக் குழந்தைகளுக்குப் பிறகு ஆண்டவன் தங்களை மீண்டும் சோதிக்காமல் விட்டானே என்பதுதான். இரட்டைக் குழந்தைகள் ஏறக்குறைய ஆருண்டுகள் கழிந்துவிட்டன அல்லவா?

இருவருடைய சமாதானத்துக்கும் வந்தது வினே அன்று இரவு எட்டு மணி சுமாருக்கு வீடு திரும்பிய முத்துசாமி, தன் மனைவி சுருண்டு படுத்துக் கிடப்பதைக் கண்டு பதறிப் போய்விட்டான்.

''முத்து! கமலவேணி முழுசி நாலு மாசம் ஆகிறது போலிருக்கு. காலேயிலிருந்து அவள் வாந்தி எடுத்துக்கிட்டே இருந்தாள்!'' என்று அத்தை கூறியதைக் கேட்ட முத்துசாமிக்கு எப்படி இருக்கும்?

அவன் மட்டுமென்ன? கமலவேணிக்கே அது சகிக்க ஒண்ணுததாய் இருந்தது. ''ஐயோ! இது இல்லே என்று யார் அழுதாங்க! இருக்கிற துங்களேயே வைத்துக் காப்பாற்ற வக்கில்லே. ஹூம்! ஏன்தான் என்னே இந்த ஆண்டவன் சோதிக்கணுமோ!'' என்று தலையில் அடித்துக் கொண்டாள் அவள்.

தன் நிலேயை வெறுத்த கமலவேணிக்கு, ஓர் அசட்டு எண்ணம்கூடத் தோன்றியது ஒரு கணம்! ஆனல் அடுத்த கணம், ''சீ! என்ன எண்ணம் இது? மரம் வைத்தவன் தண்ணீரை ஊற்ற மாட்டாஞ?'' என்ற விவேக எண்ணமும் தோன்றியது.

ஆருண்டுகள் இடைவெளிக்குப் பிறகு, மீண்டும் தாயானுள் கமலவேணி. பிறந்தது ஒரு பெண் குழந்தை. பிரசவம் நடந்தது ஆஸ்பத்திரியிலே தான். குழந்தையைக் கண்டவுடன் கமலவேணிக்குத் தன் கண்களேயே நம்ப முடியவில்லே. இது தன் குழந்தைதாஞ?

ஆஸ்பத்திரியிலே உள்ள அத்தனே பேரும் கமலவேணியின் குழந்தையைப் பார்த்து அதே வியப்பை வெளியிட்டார்கள். குழந்தை அத்தனே அழகுடன் ஜொலித்தது. தங்க விக்கிரகம். ஆம், தங்க விக்கிரகமேதான்! கமலவேணி தன் குடும்ப வறுமையை மறந்து குதூகலப் பட்டாள். இரண்டு அவலட்சணங் கொண்ட பெண்களேயும், விசித்திரப்போக்கையுடைய குமாரான இரட்டைக் குழந்தைகளேயும் பெற்றுவிட்டவளுக்கு, இந்தத் தங்க விக்கிரகம் பெற்றெடுத்த பெருமை பிடிபடாமல் போவதில் வியப்பென்ன? ஒரு புதையல் கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் துள்ளினுள் தாயார்.

ஆஸ்பத்திரியின் பெரிய டாக்டர் கூடக் குழந்தையை வந்து பார்த்துவிட்டு, ''ஓ! ஓர் ஏழைக் காரோட்டியின் மனைவியா இதன் தாய்? அதிருஷ்டந்தான்!'' என்று கூறியவாறே சென்ருர்.

குழந்தையைக் கண்ட முத்துசாமி கூட ஒரு கணம் அயர்ந்து போனுன். ''ஒருவேளே வேறு யாருடைய குழந்தையாவது மாருக வந்து விட்டதோ!'' என்று ஐயப்பட்டான்.

மற்றக் குழந்தைகளுக் கெல்லாம், தங்கள் வீட்டிலும் ஒரு தங்க விக்கிரகம் தோன்றிவிட்



டதால் எல்லையற்ற இன்பந்தான். எவ்விதக் காரியத்தையும் மறக்க அடித்தது அந்தத் தங்க விக்கிரகத்தின் மோகன வடிவம் குழந்தை வயது இன்னும் முழுசாய் ஒரு மாதம் கூட நிறையவில்லை.

அன்று சோர்வுடன் வீடு திரும்பினுன் முத்துசாமி. தங்க விக்கிரகத்துடன் கொஞ்சிக் கொண்டிருந்த கமலவேணி, கணவன் முகத்தைக் கண்டு பதறி ''என்னங்க?'' என்று கேட்டாள்.

''என் கார் ஓட்டும் லைசென்சு கான்ஸல் ஆகிவிட்டது!''

''ஆ! என்ன சொல்றீங்க?''

''கமலவேணி! ஒரு மாட்டின்மேல் மோதி, மாடு இறந்துவிட்டது. அஜாக்கிரதையுடன் ஓட்டிவிட்டேன் என்று லைசென்சைப் பிடுங்கிக் கொண்டு போய் விட்டார்கள்!''

''ஐயோ! நம் பிழைப்பிலே மண் விழுந்திருச்சுதே!'' குழந்தை தாயார் கையிலே தன் பொக்கை வாய்ச் சிரிப்பை உதிர்த்தவாறு நெளிந்து கொண்டிருந்தது. அதை வேதனையுடன் நோக்கினுள் தாயார்!

மகன் கூறுவதைக் கேட்டுக் கொண்டுதான் முடங்கி யிருந்தார் தந்தை.

''ஹூம்! பெரிய பெண் சரஸ்வதி பிறந்ததும், தோட்டக்கார வேலையிலிருந்து டிரைவர் வேலை கிடைத்தது. அடுத்தவள் லக்ஷ்மி பிறந்தாள். தகப்பனின் சம்பளம் முப்பதிலிருந்து உயர்ந்தது. பிறகு இரட்டைக் குழந்தைகள் பிறந்தபிறகு, அது படிப்படியாய் உயர்ந்து இன்று அறுபதுக்கு வந்திருக்கு. இந்தத் தங்க விக்கிரகம் பிறந்து, பிழைப்பின் வாயிலேயே மண் விழுந்துவிட்டது. அட, கடவுளே!'' என்று அவர் முணுமுணுப்பது முத்துசாமியின் காதில் விழத்தான் செய்தது. தந்தையின் கூற்றைச் சிந்தனையில் ஓடவிட்டான் முத்துசாமி. அது நியாயமாகவே பட்டது.

தங்க விக்கிரகத்தை வெறுப்புணர்ச்சியுடன் பார்த்துவிட்டு அப்பால்சென்றுன் முத்துசாமி. அவனுக்கு மட்டுமல்ல; கமலவேணிக்குங்கூட அந்தக் குழந்தை இப்போது உற்சாகத்தை அளிக்கவில்லை. மற்றக் குழந்தைகள் அவலட்சணமாய் இருந்தாலும், அதிருஷ்டமுள்ள ராசிக் குழந்தைகள் என்று பெயரெடுத்து விட்டன. இந்தக் குழந்தை தங்க விக்கிரகமென்றாலும், பிழைப்பே போய்விட்டதே!

முத்துசாமி தன் பழைய எஜமானரிடமே சென்று வேறு வேலை கேட்கச்சென்றுன். அவர் அவனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்; காரணம் அவருக்கே வர்த்தகத்திலே பெரு நஷ்டம் ஏற்பட்டுவிட்டது.

சென்னையிலே அவன் அலையாத இடம் இல்லை. குடும்பம் நடத்த அவன் பட்ட தொல்லைகள் சொல்லும் தரமன்று. சோர்ந்துவரும் தந்தையிடம், தங்க விக்கிரகத்தைத் தூக்கிக்கொண்டே வந்து நீட்டிய கருப்பி; ''அப்பா! கொள்ளைச் சிரிப்பு சிரிக்குது இது. பாரப்பா!'' என்பாள்.

''சே! இந்தச் சனியனைத் தரையிலே உருட்டு போ!'' என்று 'சள்' என்று எறிந்து விழுவான் முத்துசாமி.


கடன் சுமை ஏறிக் கொண்டே வந்தது. வீட்டிலே வறுமையின் கோர தாண்டவம் சொல்லி முடியாது. இந்த நிலையிலே அன்று முத்துசாமியை ஒரு கம்பெனியிலே பியூன் வேலைக்காக வரச் சொல்லி யிருந்தார்கள்! புறப்படும் சமயம், குழந்தை வீறிட்டழுதது.

''என்னங்க! கொஞ்சம் ஆசுபத்திரி வர்றீங்களா? இந்தச் சனியன் உடம்பு சரியில்லாம தவிக்குதே, அழுகுதே?'' என்றுள் கமலவேணி.

வேறு வழியின்றி, ஆசுபத்திரியில் அவளை விட்டுவிட்டு, வரச் சொல்லியிருந்த கம்பெனிக்குப் போவதற்குள், நேரம் கடந்து விட்டது.

''உன்னைப் பத்தரை மணிக்கு வரச் சொன்னும் அரை மணி கழித்துத் துரைபோல வருகிறுய்! போய் வா! போய் வா!'' என்று அனுப்பி விட்டார்கள் அந்தக் கம்பெனியிலே.

வீட்டுக்கு வந்த முத்துசாமிக்கு, குழந்தையைக் கண்ணுற்றதும் அதன் கழுத்தை நெரித்து விடலாமா என்றுகூடத் தோன்றியது....கையில் கிடைக்கவிருந்த வேலை, நழுவிப் போய்விட்டதற்குக் காரணமே அந்தத் தங்க விக்கிரகம்தானே? தன் ஆத்திரத்தைக் கட்டுப் படுத்திக் கொள்ள வெகு சிரமப் பட்டான். போன விஷயம் காயா பழமா என்பதை அவன் முகக் குறிப்பிலிருந்தே உணர்ந்து கொண்டாள் கமலவேணி.




கிளியர்டோன் லாம்புகள், ப்ளுரசண்ட் ட்யூபுகள் மற்றும் உபகரணங்கள்
கிளியர்டோன்
குக்கிங் ரேஞ்சு
கிளியர்டோன் ஹாட் ப்ளேட்
கிளியர்டோன்
ஹாட் கபோர்டு
கிளியர்டோன்
வாட்டர் பாய்லர்
கிளியர்டோன்
இம்பீரியல் டோஸ்டர்
கிளியர்டோன்
எலெக்ட்ரிக் கெட்டில்
கிளியர்டோன்
வாட்டர் ஹீட்டர்
கிளியர்டோன் வெகுமதி...
அன்பின் அறிகுறி
அன்றுடம் வீட்டில் உபயோகிக்கக்கூடிய கிளியர்டோன் தயாரிப்புக்கள் வெகுமதியளிக்கச் சிறந்தவை!
கிளியர்டோன் தயாரிப்புக்கள் சம்பசமானவை, விலை மலிவானவை! இவை உங்கள் அருகிலுள்ள கிளியர்டோன் அல்லது ஜேஷனல்-எக்கோ வியாபாரிகளிடம் கிடைக்கும்.
என்றும் நினைவில் நிற்கக்கூடியது
கிளியர்டோன்
பிளாஸ்டிக் சாதனங்கள்
கிளியர்டோன்
மடக்கு நாற்காலிகள், மேஜைகள்
கிளியர்டோன்
இம்பீரியல் இஸ்திரிப் பெட்டி
கிளியர்டோன்
தெர்மஸ் ஜார்
கிளியர்டோன்
எலெக்ட்ரிக் கடிகாரம்
Kleertone
கிளியர்டோன்...
மேலான வாழ்க்கைக்கு
மேன்மையான
பொருள்கள்
கிளியர்டோன்
டேபிள், சீலிங் விசிறிகள்
GRA
ஜெனரல் ரேடியோ அண்டு அப்ளையன்ஸஸ் லிமிடெட்
பம்பாய் . கல்கத்தா . பாட்னா . மதராஸ் . பெங்களூர் . டில்லி . செகந்திராபாத்


உங்கள் குடும்பத்துக்கு...
அன்பின் அறிகுறியாக
விசேஷ வெகுமதி
ஒரு
நேஷனல் எக்கோ
ரேடியோ
இது குதூகலம் நிறைந்த பண்டிகை காலம்...நீங்கள் விரும்பும் பிரத்தியேக வெகுமதியை, உங்களுக்கு மிகவும் பிடித்த நேஷனல்-எக்கோ ரேடியோவை, உங்கள் குடும்பத்துக்கு அளிக்க ஏற்ற காலம் ... நன்கு தடையின்றி சீரிய இசை இன்பத்தை அனுபவிக்க சிறந்த வாய்ப்பு!
நேஷனல்-எக்கோ ரேடியோக்கள், மின்சாரத்தில் இயங்குபவையும் பாட்டரியால் இயங்குபவையுமாக 9 சிறந்த மாடல்களில் கிடைக்கின்றன... மிகக் குறைந்த விலை ரூ. 125.00 லிருந்து பல்வேறு விலைகளில் உள்ளன.
மாடல் U-764 : 5 வால்வுகள், 3 பாண்டுகள், பொன்னிற வேலைப்பாடமைந்த அழகிய பிளாஸ்டிக் பெட்டி. ரூ. 280.75
மாடல் B-764 : பாட்டரி செட், 4 வால்வுகள், 3 பாண்டுகள். ரூ. 280.75
மாடல் U-756 : 3 'நோவல்' வால்வுகள், 2 பாண்டுகள், குறைந்த விலையில் பெரிய செட்டின் தரம் கொண்டது! கரும் சிவப்பு பிளாஸ்டிக் பெட்டி. ரூ. 125.00
மாடல் B-751 : 9 வால்வுகளின் வேலையைச் செய்யும் 3 டிரான்ஸிஸ்டர்களுடன் 4 வால்வுகள், 4 பாண்டுகள், வனப்பு மிகுந்த பிளாஸ்டிக் பெட்டி. ரூ. 430.00
மாடல் A-744 : 4 பாண்டுகள், 9 வால்வுகளின் வேலையைச் செய்யும் 6 'நோவல்' வால்வுகள், அழகிய பிளாஸ்டிக் பெட்டி. ரூ. 430.00
மாடல் B-755 : 5 'நோவல்' வால்வுகள், 8 பாண்டுகள், அழகான மரப்பெட்டி, பாட்டரி செட். ரூ. 351.00
மாடல் 730 : 9 வால்வுகளின் வேலையைச் செய்யும் 6 'நோவல்' வால்வுகள், 8 பாண்டுகள், கண்ணைக் கவரும் மரப்பெட்டி. ரூ. 574.25
மாடல் U-755 : 6 'நோவல்' வால்வுகள், 9 பாண்டுகள், உயர் ரக மரப்பெட்டி. ரூ. 351.00
விலைகள் எல்லாம் எக்ஸைஸ் வரி உட்பட; இதர வரிகள் தனி
JWT-GRA 2866
நேஷனல்-எக்கோ ரேடியோக்கள் தரத்தில் சிறந்தவை—
அவை 'மான்ஸூன்ட்' செய்யப்பட்டவை
GRA
ஜெனரல் ரேடியோ அண்டு அப்ளையன்ஸஸ் லிமிடெட்
பம்பாய் • கல்கத்தா • பாட்னா • மதராஸ் • பெங்களூர் • டில்லி • ஸெகந்திராபாத்

இந்த நிலையிலே நிடும் என்று அத்தைக் கிழவி வாயைப் பிளந்து வைத்தாள். அன்றிரவு கையிலே ஒரு காசு கிடையாது. என்ன செய் வான் பாவம் முத்துசாமி? அனுதாபத்தின் காரணமாய், எதிர் வீட்டுக்காரர் கொடுத்த ஐம்பது ரூபாயைக் கொண்டு, ஈமச் சடங்கு முடிந்தது. அடுத்து வேலைக்கு வேறு எங்கு அலைவது என்றுகூடப் பிடிபடாமல் தவித் தான் முத்துசாமி.

அன்று காலை ஒன்பது மணி இருக்கும். முத்துசாமி வேலை தேடி வெளியே போய் விட்டான். கமலவேணி குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள். அப்போது எதிர்வீட்டுக்காரரின் மனைவி அஞ்சுகம் பட படப்புடன் வந்தாள்.

''கமலவேணி! ஒரு நல்ல சேதி!'' என்று கூறியபடியே, கமலவேணியின் மடியில் உள்ள தங்க விக்கிரகத்தை அணைத்து எடுத்துக் கொண்டாள். தொடர்ந்து, ''வா! என்னு டன் என் வீட்டுக்கு! சொல்கிறேன்'' என்று கூறி, கமலவேணியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள் தன் வீட்டுக்கு.

ஒன்றும் விளங்காத நிலையிலே அஞ்சுகத் தின் பின்னால் சென்றாள் கமலவேணி. அஞ்சுகத் தின் வீட்டு வாயிலில் ஓர் அழகிய புதுக்கார் நின்று கொண்டிருந்தது. இரண்டு பிரமு கர்கள் அஞ்சுகத்தைக் கண்டவுடன் உரை யாடிக்கொண் டிருந்தார்கள். அஞ்சுகம், கமலவேணியின் தங்க விக்கிரகத்தை, எதிரில் உள்ள மேஜையின்மீது படுக்க வைத்தாள்.

''இதோ, இந்தக் குழந்தையைத்தான் குறிப்பிட்டேன்'' என்று கூறிவிட்டு, பின்னால் நிற்கும் கமலவேணியைச் சுட்டிக்காட்டி, ''குழந்தையின் தாயார் இவள்தான்!'' என்று குறிப்பிட்டாள்.

அஞ்சுகத்தைக் கண்டவுடன் பேசிக் கொண் டிருந்தவர்களில் ஒருவர் அஞ்சுகத்தின் அண் ணன். மற்றொருவர் பிரபல பட முதலாளி— டைரக்டர் காமத் என்பவர்.

குழந்தையைக் கண்ட காமத் உண்மையில் வியப்படைந்து காணப்பட்டார். ''ஆகா! ஆகா! பிரமாதம்! இம்மாதிரி ஒரு குழந்தைக் காகத்தான் ஆறு மாதங்களாக நான் தேடி அலைகிறேன்!'' என்று அவர் வாய் முணு முணுக்க, முகம் மலர்ச்சியிலே பொங்கியது.

அஞ்சுகத்தின் கணவர், ''அம்மா கமல வேணி! இதோ இவர் ஒரு புதுப்படம் எடுக்க ஏற்பாடு செய்து வருகிறார். படக்கதை யிலே முக்கிய பாகத்தில் வருகிறது ஓர் அழகிய குழந்தை. அழகிய குழந்தைகள் எத்தனையோ கிடைக்காமல் இல்லை. ஆனால் இவர் விரும்பும் அழகுடைய ஒரு குழந்தை கிடைக்காமல் படப்பிடிப்பு தள்ளிக் கொண்டே வருகிறது. உன் குழந்தை இவருக்கு வேணும். பிடித்து விட்டது என்று இவர் முகமே சொல்கிறது. 'ஒரு வாரம் உன் குழந்தையை நீ ஸ்டுடி யோவுக்கு அனுப்பி வைக்க வேண்டும். கார் அனுப்புவார்கள். குழந்தையுடன் நீயும் போய் வரலாம். உன் கணவனுடன் சேர்ந்து பேசி இன்று மாலைக்குள் சொல், போதும்.''

''ஆமாம், அம்மா! உங்கள் குடும்ப நிலை யைப் பற்றியும் இவர் குறிப்பிட்டார். நீங்கள் சம்மதிக்கத் தயங்கமாட்டீர்கள் என நினைக்கிறேன். பத்தாயிரம் ரூபாய்வரை தரச் சித்தமாய் இருக்கிறேன். சம்மதம் தெரிவித்த மறு நிமிஷம் இரண்டாயிரம் ரூபாய் முன் பணம் கிடைக்கும். மிகுதியும் குழந்தை சம் பந்தப்பட்ட படப்பிடிப்பு முடிந்தவுடன் கொடுத்துவிடுவேன்'' என்று கூறினார் காமத்.

கமலவேணிக்குத் தான் எப்படி வீட்டுக்குத் திரும்பினாள் என்றே தெரியவில்லை. பத் தாயிரம் ரூபாய் வருமானம்! பிறந்து ஆறு மாதமே ஆகியுள்ள தன் பச்சிளம் தங்க விக்கிரகத்தின் மூலம் பத்தாயிரம் கிடைக்கப் போகிறது? ஆண்டவனே! இது கனவா? அல்லது நினைவா?

தங்க விக்கிரகத்தை உற்று நோக்கினாள் கமலவேணி. அவளைப் பார்த்து அது சிரித்தது. 'அம்மா என்னை நீயும் அப்பாவும் ஏசி வெறுக் கிறீர்களே! என்னால் பெரிய அதிருஷ்டம் அடிக்கப் போகிறது பார்! அம்மா!' என்று கூறுவது போலிருந்தது அதன் சிரிப்பு.

செய்தி கேட்ட முத்துசாமி துள்ளிக் குதித் தான். தங்க விக்கிரகத்தை அள்ளி எடுத்து முத்தமிட்டான். ''என் செல்வமே! உன்னை அர்த்தமில்லாமல் வெறுத்து விட்டேனே!''

தங்க விக்கிரகத்தைப் படத்தில் தோன்றச் செய்யச் சம்மதம் தந்து விட்டனர் பெற் றோர். முன் பணம் இரண்டாயிரம் கிடைத்து விட்டது. தினமும் பிரம்மாண்டமான கார் ஒன்று வந்து குழந்தையையும் அதன் தாயை யும் அழைத்துச் செல்லும் கமலவேணி குழந்தையுடன் காரில் செல்லும்போது, அவள் அடையும் பூரிப்பு அளவிடமுடியாது.

குழந்தை சம்பந்தப்பட்ட காட்சிகள் எல் லாம் ஒரு வாரத்திலே முடிந்து விட்டன. குழந்தை சம்பந்தப்பட்ட காட்சிகளைப் பிரத் தியேகமாய்ப் போட்டுக் காட்டினார்கள் ஸ்டுடியோவிலே. குழந்தையின் பெற்றோர் அசந்து விட்டார்கள் அந்தப் படத்துக்குப் பெயரே தங்க விக்கிரகம் என்று வைக்கப் போவதாய்க் கூறினார் காமத்.

அன்று முத்துசாமியைக் காமத் தம் கம் பெனிக்கு அழைத்திருந்தார். ஒப்பந்தப்படி பாக்கி எட்டாயிரத்துடன் இன்னும் ஆயிரத் தையும் மகிழ்ச்சியுடன்சேர்த்து ஒன்பதாயிரத் துக்கு ஒரு செக்கை அவரிடம் கொடுத்துத் தம் காரிலேயே அவனைத் திருப்பியனுப்பினார்.

வீட்டையடைந்த முத்துசாமி காரிலிருந்து இறங்கித் துடிதுடிப்புடன் உள்ளே சென்றான்; செக் அவன் கையிலேயே மொடமொடத்தது.

அவனைக் கண்ட கமலவேணி 'ஓ'வென்று கதறினாள். குழந்தைகள் ஒன்றும் புரியாமல் தாயையும் தாயின் மடியில் உள்ள குழந்தை யையும் மாறி மாறி நோக்கின.


''என்ன கமலவேணி! குழந்தைக்கு என்ன?'' என்றான் முத்துசாமி பதறியவாறு.


''ஐயோ! திடீரென்று ஒரு கோணல் பார்வை பார்த்து விட்டு....'' கமலவேணி முடிக்கவில்லை.

முத்துசாமி குழந்தையைத் தொட்டுப் பார்த்தான். அடுத்த நிமிஷம் அவன் கையில் உள்ள செக் நழுவித் தரையிலே விழுந்தது

பதினோராயிரம் ரூபாய் சம்பாதித்துத் தன் பெற்றோரின் வறுமையைப் போக்கிய அந்தத் 'தங்க விக்கிரகம்' பேச்சு மூச்சற்றுக் கிடந்தது தாயின் மடியிலே!

இருமல் மற்றும் ஜலதோஷத்திலிருந்து பூர்ண நிவாரணம் பெற





ஸிரோலின் ‘ரோஷ்’ அருந்துங்கள்



இருமலுக்கும் ஜலதோஷத் திற்கும் ஏற்ற இந்தியாவின் குடும்ப மருந்து

இருமல் அல்லது ஜலதோஷமிருந்தால் அசட்டை செய்யாதீர்கள்—ஸிரோலின் அருந்தி அபாயமின்றி துரிதமாக பூர்ண நிவாரணம் பெறுங்கள். ஸிரோலின் இருமலை நிறுத்துவதோடு மட்டுமல்லாமல் இருமலை உண்டுபண்ணும் கிருமிகளைக் கொல்லவும் செய்கிறது. ஸிரோலின் தொண்டைப் புண்களுக்கு சமனமூட்டுகிறது, கபம் மற்றும் சளியை போக்குகிறது. அது எவ்வளவு கடுமையான இருமலிலிருந்தும் அபாயமின்றி துரிதமாக நிவாரணமளிக்கிறது. அபாயமற்ற, நிவாரணமளிக்கும் தன்மையையும் மற்றும் இனிய ருசியையும் ஸிரோலின் பெற்றிருப்பதால் குடும்பத்திலுள்ள அனைவரும் அதைப்பெரிதும் விரும்புகிறார்கள். ஸிரோலின் என்றால் குழந்தைகளுக்கு ஒரே குஷி!

உங்கள் வீட்டில் எப்பொழுதும் ஸிரோலின் வைத்திருங்கள்

சோல் டிஸ்டிரிப்யூட்டர்கள்:

‘ரோஷ்’ தயாரிப்பு வால்டாஸ் லிமிடெட்.




சீரான ஆகாரமில்லாததால்
நீங்கள்
மெலிந்திருக்கிறீர்களா?

ஆல்போஸாங்
சாப்பிடுங்கள்

மிகச் சிறந்தது
சாதாரண உணவுடன் சேர்ந்து,
சிக்கலமான, விஞ்ஞான முறையில்
ஊட்டமளிப்பது

தேநீர், காப்பி, பால், கஞ்சி, பழரசம் முதலியவைகளுடன் சேர்த்து அருந்தினால் மிக ருசியாக இருக்கும். சிறு குழந்தைகளுக்கும், வளரும் பிராயத்திலும், பிரசவகாலத்தில் தாய்மார்களுக்கும், சிந்திக்கும் தொழிலாளிகளுக்கும், முதியவர்களுக்கும், பலவீனம் இரத்தமின்மை மற்றும் நோயிலிருந்து தேறி வரும் போதும் ஆல்போ-ஸாங் சிறந்த டானிக் உணவாகிறது.



பௌடர் மற்றும் மாத்திரைகளாகவும் கிடைக்கிறது.

ஜே. & ஜே. டீஷேன்,
ஹைதராபாத்—டெக்கான்



பக்தி நெறி

யாகங்களை ஐந்து வகையாகப் பிரித்துச் சொன்னார்கள் நமது முன்னோர்கள். அவற்றுக்குக் கர்ம யாகம், தபோ யாகம், ஜப யாகம், தியான யாகம், ஞான யாகம் என்று பெயர் சூட்டினார்கள். கர்ம யாகம் என்பது இறைவனை விதிப்படி பூஜித்து அக்கினி காரியம் முதலியன செய்தல். ஜப யாகமாவது மந்திரங்களை விதிப்படி உச்சரித்தல். தியான யாகம் என்பது தெய்வ தியானத்திலே மனம் லயப்பட்டு நிற்றல். ஞான யாகம் என்பது இறைவனைப் பற்றிய திவ்விய நூல்களைக் கற்றலும் பிறருக்குக் கற்பித்தலும் ஆகும். நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆறுமுக நாவலர் என்ற பெரியார் இந்த யாகங்களின் சிறப்புக்களையெல்லாம் விரிவாக எழுதினார். அப்படி எழுதும்போது இந்த ஐந்து யாகங்களிலும் ஞான யாகமே முதன்மையானது என்பதற்கு ''ஞானாமிர்தம்'', ''வேதருமோத்தர யாக இயல்'' முதலிய நூல்களிலிருந்து பல ஆதாரங்களைக் காட்டி நிரூபித்தார். அப்படிப்பட்ட ஞானயாகத்தை இந்தக் காலத்தில் எல்லா மக்களுக்கும் ஆன்மநலம் ஏற்படும் வண்ணம் செய்து வருகிறவர் நமது மதிப்புக்குரிய தலைவர் ராஜாஜி அவர்களாகும்!

இறைவனைப் பற்றிய நூல்களைப் பழுதறக் கற்று அவற்றின் நுட்பங்களையும் அழகுகளையும் சாமானிய மக்களும் நன்றாக உணரும்படி திகரற்ற தெளிவோடு விளக்கக்கூடிய அரிய திறமை படைத்தவர் ராஜாஜி அவர்கள். அதோடு இக்காலப் பொது வாழ்வின் பல கோணங்களையும் அலசி ஆராய்ந்து இன்றைய மக்களின் மன நிலையைப் பூரணமாக அறிந்து இந்தக் காலத்துச் சூழ்நிலைக்கு ஏற்பப் பழைய நூல்களைப் புதிய வடிவிலே வழங்கக் கூடிய ஆற்றலும் தத்துவ உணர்வும் நிரம்பியவர். நம் காலத்தில் வாழ்கிற ஒரு நாயனார், ஓர் ஆழ்வார் என்றே அவரை அழைப்பது பொருந்தும். அப்படிப்பட்ட பெரியவர் 'கல்கி'யில் எழுதி வந்த 'பக்தி நெறி' என்ற தொடர் கட்டுரைகளைத் தொகுத்து அழகியதொரு நூலாக அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள் பாரதி பதிப்பகத்தார்.

நம்மாழ்வார் என்ற மகான் ''நம்'' என்று உரிமையோடு அழைக்கப்படும் பெருமையும், தெய்வத அருளும் நிரம்பிய அருட் கவிஞர். அவருடைய பாடல்கள் பாடப் பாட ஊனும் உள்ளமும் உருகக்கூடிய பக்திப் பண்பு கொண்டவை. அவற்றிலே பொதிந்துள்ள உபதேசங்கள் எல்லாம் வேதசாரம்.

இப்படிப்பட்ட நம்மாழ்வார் பக்தி நூலுக்கு நமது காலத்திலே வாழ்ந்து வருகிற நம்மாழ்வாராகிய ராஜாஜி உரை எழுதி வெளியிட்டது தமிழர்களாகிய நமது பாக்கியமேயாகும்.

''பகவானிடம் செலுத்திய அன்பு வரவரக் காதலைப் போன்ற ஆர்வமாகி வளர்ந்து முதிர்கிறது. அதுவே பக்தி. பக்தி நெய் போல் மனத்தில் ஏறிச் சுடர் விட்டு எரியும்போது ஞானம் ஆகிறது.''

இது ராஜாஜியின் விளக்கம்.

''எல்லா ஜீவன்களிலும் அந்தராத்மாவாக இருக்கும் நிலையை வைத்துக் கொண்டு கோயிலில் அர்ச்சாவதார மூர்த்தியாக இருப்பதின் வைபவத்தை மறத்தல் குற்றமாகும். அதற்காகக் கோயில்களைக் கூடக் கூடச் சேர்த்துப் பாசுரங்கள் உபதேசிக்கின்றன. அர்ச்சனையில் பக்தியும் தியானமும் குறையாமல் இருக்க வேண்டும். இல்லாவிடில் உள்ளத்தில் ஈசன் இருப்பது வெறும் அகங்காரமாக முடியும்!''

ராஜாஜியின் உரையிலே சுடர் விடுகிற மற்றொரு விளக்கம் இது.

''பக்தர்களின் ஆசையைக் காட்டிலும் பகவானுடைய ஆசை, பக்தர்களை அடைய வேண்டும் என்கிற ஆசை, மிகப் பெரிது. பகவான் நம்மைப் பிடிக்கப் பார்க்கிறான். உலக வாழ்க்கையால் தூண்டப்பட்டு நாம் அவனுக்கு அகப்படாமல் ஓடிப் போகிறோம். அவன் நம்மைத் துரத்தி வருகிறான். நாம் நின்றால் போதும். அவன் பிடித்துக் கொள்வான். பகவானுடைய அவா, ராமச்சந்திரன் சீதாதேவியைத் தேடிக் காடும் மலையும் கடலும் கடந்து சென்ற அவாவைப் போன்றது. பக்தர்களுடைய அவா அந்தச் சீதாதேவியின் ஆசையைப் போன்றது.''

ராஜாஜியின் உரையிலிருந்து இப்படி எத்தனையோ உதாரணங்களை எடுத்துச் சொல்லலாம். அங்கங்கே ஈடு வியாக்கியானத்திலிருந்தும், கீதையிலிருந்தும், திருக்குறள் முதலிய நீதி நூல்களிலிருந்தும் மேற்கோள் சொல்லி, ஒப்பிட வேண்டிய இடங்களில் ஒப்பிட்டுக் காட்டி, படிப்பவர் உள்ளத்திலே நன்றாகப் பதியும்படி எழுதப்பட்டுள்ள நேர்த்தியான நூல் பக்தி நெறி.

பாடல்களுக்குத் தனித்தனியாக உரை சொல்லுவதற்கு முன்பு, அந்தந்தப் பாடல்களை அறிமுகப்படுத்துகிற முறையும், பாடலை முழுதும் சொல்லிப் பிறகு அதன் கருத்தை விளக்குகிற பாங்கும் யாவரும் படித்துப் புரிந்து கொள்ளக் கூடிய விதத்தில் அமைந்திருக்கின்றன.

ராஜாஜியின் 'பக்தி நெறி' என்ற இந்த அற்புதமான புத்தகத்தின் மூவர்ண அட்டை

விலே கண்ணன் புல்லாங்குழல் ஊதிக் காட்சி தருகிறான். அந்தப் புல்லாங்குழலின் இன்னிசை நூலினுள்ளே ஒவ்வொரு பக்கத்திலும் ஒலிக்கிறது. இதன் விலை ஒரே ஒரு ரூபாய்தான்!

—சிவமணி

பிரசுரம்: பாரதி பதிப்பகம்; தியாகராய நகரம், சென்னை 17.

ஸ்ரீ துலா புராணம் (ஸ்ரீ காவேரி மகிமை)

இம்மைக்கு நன்மை பயக்கும் சாதனங்களில் தெய்வ சாந்நித்தியத்தைக் கண்டு, அவற்றை மறுமைக்கும் வழிவகுப்பனவாக வழிபடுவதே நமது மதம். இதற்கேற்ப உடலைக் கழுவும் காவிரியை உள்ளம் கழுவும் புண்ணிய நதியாகவும், பயிர் பச்சைகளைச் செழிக்க வைக்கும் அந்த ஆற்றினை, சித்த சுத்தியை முளைக்க வைத்துத் தழைக்கச் செய்யும் ஆன்மீக சாதனமாகவும் கண்டு கூறுவதே துலா புராணம். பாபம் செய்த பலரைக் கடைத்தேற்றுவித் திருக்கிறாள் காவேரி. அரிச்சந்திரன், அர்ஜுனன், இந்திரன் ஆகியோரும் நீராடிப் பயனடைந்த புனித நதி இது. இவர்களைக் குறித்த கதைகளுடன் காவேரியின் சுவாரசியமான சரிதையையும், கற்பு, ஈகை, பக்தி முதலியவற்றின் பெருமைகளையும் அழகுபட விரித்துக் கூறுகிறது இந்நூல். காவேரி பூஜா விதி, அஷ்டோத்தரம், விஷ்ணு கவசம், யமஸ்துதி, ஸ்ரீ ரங்கராஜ நாமரத்ன ஸ்தோத்திரம், லக்ஷ்மி ஹிருதயம் முதலியனவும் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. சமய உணர்ச்சியைத் தோற்றுவிக்கும் நூல்கள், சமய உணர்ச்சி உள்ளவர்கள் மட்டுமே சுவைத்துப் படித்துப் பயன்பெறும் நூல்கள் என்பதாக மத கிரந்தங்களைப் பாகுபடுத்தினால் இந்தப் புத்தகம் பிந்தைய வகுப்பில் சேரும்.

இன்று பதினெண் புராணங்களுக்குப் பிரமாண புருஷராக விளங்கும் ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்களின் தமிழாக்கம் இது என்பதே ஆஸ்திக உலகுக்கு இதன் அவசியத்தை உணர்த்துகிறதல்லவா?

வெளியீடு: மாம்பலம் குருகுலம், 2, ஸ்டேஷன் ரோடு, சென்னை-33; விலை ரூ. 2-50

குடிசை வாழ்வோருக்குக் குடியிருப்பு

சென்னை நகரிலுள்ள முந்நூற்று இருபது சேரிகளில் வாழும் மூன்றரை லட்சம் ஏழை மக்களின் இன்னல்களைப் பற்றி எவ்வளவோ பேசப்பட்டாலும் காரியத்தில் எதுவும் நடைபெறவில்லை. சென்னை நகரின் குடிசை வாழ்வோர் பிரச்னை என்ற சிறு நூலில் இந்தப் பிரச்னையைத் தீர்க்கச் சில நல்ல யோசனைகளைக் கூறி யிருக்கிறது மயிலை, நொச்சி நகரிலுள்ள தென் சென்னை குடிசை வாழ்வோர் சங்கம். சிக்கனமான முறையில் போலீஸ் சேவகர் விடுதிகளில் காணப்படுவது போல் ஆஸ்பால்ட் கூரை வேய்ந்த குடியிருப்புக்கள் கட்டுவதானால் ஒன்றே கால் கோடி ரூபாயில் இத்தனை சேரிகளையும் சீர்ப்படுத்தி விடலாம் என்று இதில் கூறப்பட் டிருக்கிறது. இது சர்க்கார் பரிசீலிக்க வேண்டிய விஷயமாகும். ஆனால் சாந்தோமில் சர்க்கார் கட்டிய குடியிருப்புக்கள் இந்த மக்களுக்குப் பயனாகாமல் போன விவரத்தைப் பற்றி இந்த நூலில் படித்தபின்னர், இந்தப் பிரச்னையில் உண்மையாகவே தீர்வு காணச் சர்க்கார் விரும்புகிறதா என்ற ஐயம்தான் உண்டாகிறது.

பிரசுரம்: தென்சென்னை குடிசை வாழ்வோர் சங்கம், நொச்சி நகர், சென்னை. விலை தெரியவில்லை.

தாகூரின் கவி உள்ளம்

தாகூரின் நூற்றாண்டு விழாவை உலகெங்கும் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் அவருடைய இலக்கியத்தைப் பற்றி மலர்ந்து கொண்டிருக்கும் நூல்களும் பலவாக உள்ளன.

தமிழில் இந்தச் சந்தர்ப்பத்தில் வெளிவந்துள்ளவற்றில் திரு கே. இராமநாதன் எழுதிய 'தாகூரின் கவி உள்ளம்' என்ற நூல் சிறப்பாக அமைந்துள்ளது. கவி உள்ளத்தைப் பற்றி இந்த ஆசிரியரின் உள்ளம் சிந்திக்கும் போது பாரதி-தாகூர் இருவரையும் ஒரு சமனாக இணைத்துச் சிந்திப்பது பெரிதும் போற்றத் தக்கது. அறுபதுக்கு மேற்பட்ட பக்கங்களில் எடுத்துக் கொண்ட விஷயத்தை அழகாகவும் உணர்ச்சியோடும் சொல்லி யிருக்கிறார் இதன் ஆசிரியர். நல்ல முயற்சி.

ஆசிரியர்: கே. ராமநாதன்; வெளியீடு: என்.சி.பி.எச். பிரைவேட் லிட்., சென்னை-2. விலை ரூ. 1-00.

மனக்கோயில்

சிறுகதைகள் நம் நாட்டில் எவ்வளவு வளர்ச்சி யடைந்திருக்கின்றன என்று அறிய வேண்டுமானால் இந்தக் கதைத் தொகுதியைப் படித்துப் பார்க்க வேண்டும். இனம் பார்த்துத் தேர்ந்தெடுத்துக் கோத்த நவரத்தின மாலையைப் போல் தரத்திலும், வேலைப்பாட்டிலும் உயர்ந்துநிற்கிறது இக் கதைக்கோவை.

எல்லாவற்றையும் துறந்து, அரண்மனை வாழ்வை உதறித் தள்ளி விட்டுச் சென்ற சித்தார்த்தன் ஞான ஒளி பெற்று, புத்தர் பிரானாகி மீண்டும் யசோதரையைச் சந்திக்கும் கட்டத்தை ஒரு புனித நினைவாகச் சித்திரிக்கிறது முதல் கதை 'புத்தன் வந்தான்.' சினிமா உலகத்தின் நிழல் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகிறது 'நட்சத்திர மனைவி'.

'மனக்கோயில்' சிறந்த கதை. அதில் வரும் ராதை ஓர் உன்னதப் படைப்பு. ராதையின் எண்ணம் ஈடேறி விடவில்லைதான். ஆனால் அவளது மனக் கோயில் ....! அதில் தெய்வ சாந்நித்தியம் ஏற்பட்டு விட்டதே!

'மறுவாழ்வு' நெஞ்சை நெகிழ்த்தும் நல்ல கதை. கைப்பிடித்த மனைவியைத் திருமணத்தன்றே கைசோர விட்டுப் பல்லாண்டு கழித்துச் சந்தித்த கணவன் மறுவாழ்வு தொடங்க விரும்பினான். ஆனால் அவள் மறு உலகம் சென்று விட்டாளே!

மாதிரிக்காகச் சில கதைகள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. நூலிலுள்ள மற்றக் கதைகளும் குன்றாத சுவையுடன் பழகுதமிழில் அழகு நடையில் பவனி வருகின்றன.

எழுதியவர்: கி. ரா.; பிரசுரம்: மல்லிகைப் பதிப்பகம், சென்னை — 17; விலை: ரூ. 2.

Printed & Published by R Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.



குதூகலம் கொண்டாடுவோம்—
லைப்பாய் சோப்பினால் நீராடுவோம்...
ஆஹாஹா, கிளுகிளுக்கும்
உல்லாச நயம்... 'எல்லாம் இன்ப மயம்!'
அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக்
களைவது லைப்பாய்; குடும்ப முழுமைக்கும்
குன்றாத காப்பு!

லைப்பாய் இருக்குமிடம்
அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்

L. 26-X29 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

யாரோ இவள்

என யாரும் கேட்க, எவரும் வியக்க...



...உங்கள் மேனியெழிலை மிளிரச் செய்வது

செங்கமல வண்ண ப்ரீஸ்

